
# பொன் விழா மலர்



1949 - 1999

யாழ். மாநகராட்சி மன்றம். 2002

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாநகராட்சிமன்றம்
யாழ்ப்பாணம்

# பொன்விழா மலர்

1949-1999

வெளியீடு - விழாக்குழுவினர்

அச்சுப்பதிப்பும்
அட்டைப்பதிப்பும் - போஸ்கோ ஆட்ரோன் பிறிண்டர்ஸ்

ஓவியம் - 'ஓவியர்' ரமணி

காலம் - 10.04.2002



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆசிரிய பீடம், உதயன் பத்திரிகை.
T/800/10,001

யாழ்ப்பாணம் மாநகராட்சி மன்றம்

# மன்ற கீதம்

ராகம்: மோகனம்

ஈழத்தமிழர்தம் இணையிலா நகரம்
யாழ் நகர் நீடு வாழியவே
யாழ்நக ராட்சி மன்றம் வாழ்க
எம் தமிழ் வாழ்க வாழியவே (ஈழத் தமிழர்)

ஆதியில் தமிழர் ஆண்டதொல் ந
ஆரியச் சக்கர வர்த்திகள்
பூதலம் புகழும் சங்கிலி மன்ன
பொருபகை வென்ற புகழ்பெறு நகரம (ஈழத் தமிழர்)

ஏழிசை வல்லோன் யாழிசைப் பாணன்
இனியநற் பரிசாய்ப் பெற்ற யாழ்ப்பாணம்
ஆழி சூழ் உலகம் புகழ்கலைக் கூடம்
அறிஞர்கள் கலைஞர்கள் அவதார பீடம் (ஈழத் தமிழர்)

தமிழர்கள் முஸ்லீம் மற்றுள பேரும்
தாயிவள் பேணும் சோதரராவர்
நமதரும் பண்பு கலைகலாச் சாரம்
நல்விருந் தோம்பிக் காப்பவள் வாழ்க (ஈழத் தமிழர்)

கடலலை வீசும் மீன்வளம் பொங்கும்
கழனிகள் தோறும் கனிவளம் தங்கும்
மடல் வரி தென்னை கமுகுகள் வாழை
மண்வளஞ் சிந்திப் பொலிபவள் வாழ்க (ஈழத் தமிழர்)

அழகிய வீதி கடைத் தெரு கல்வி
அளித்திடு கூடும் தொழில் நிலையங்கள்
எழிலுறு கோட்டை கோபுரம் கோயில்
இனியநற் சோலை கொணடவள் வாழ்க (ஈழத் தமிழர்)

தேவ மந்திர கீத மொலிக்கும்
விளக்கிடு குர் ஆன் நாதமொலிக்கும்
ஓதிடு பைபிள் போத மொலிக்கும்
ஓங்கிய கோபுர மணிகள் ஒலிக்கும். (ஈழத் தமிழர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org
60065

100.01/0094/T

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிகஞானசம்பந்த
பரமாச்சார்ய ஸ்வாமிகள்
அவர்களின்

# அருளாசிச் செய்தி

**அன்புசார் பெருந்தகையீர்,**

யாழ்ப்பாணம் மாநகரசபை தனது பொன்விழா கொண்டாடு வதையிட்டு மகிழ்ச்சியடைகின்றோம். யாழ்ப்பாண மக்களின் தேவைகளை ஐம்பது வருட காலமாக நிறைவேற்றிக் கொண்டிருக்கும் மாநகரசபை காலத்தின் தேவைக்கேற்ப சேவைகளைச் செய்துள்ளமை பாராட்டுதற்குரியது. பல நெருக்கங்களுக்கு மத்தியிலும் சுகாதாரப்பணி, அபிவிருத்திப்பணி, சுத்திகரிப்புப்பணி அனைத்தையும் செய்து கொண்டிருக்கும் யாழ். மாநகரசபை, மக்கள் ஒவ்வொருவருடைய நெஞ்சத்திலும் நிலைகொண்டுள்ளது. ஐம்பது வருடங்கள் இப்பணிக் காக கடமையாற்றிய முதல்வர்கள், பிரதி முதல்வர்கள், ஆணையாளர்கள், ஊழியர்கள் அனைவரையும் வாழ்த்துகின்றோம். இந்நாட்டில் பல உள்ளூராட்சி சபைகள் இருந்தாலும் யாழ். மாநகர சபைக்கென்று ஒரு தனிச்சிறப்பு உண்டு. அரசர்களும், அறிஞர்களும், ஞானிகளும் இந்நகரை அலங்கரித்த பெருமையினால் இந்நகருக்குத் தனிச்சிறப்பு அமைந்துள்ளது. இந்நகரினுடைய சின்னமாக யாழ். இருப்பது ஏனைய சபைகளிலும் பார்க்க தனித்துவமான பெருமை யுடையது. இந்நகரசபை இன்னும் பல விழாக்களைக் கண்டு மக்களின் தேவைகளைப் புரிந்து தொண்டாற்ற இறைவனைப் பிரார்த்திக் கின்றோம்.

**"வாழ்க மாநகரசபை! வளர்க இவர்களின் பணிகள்!"**

**"என்றும் வேண்டும் இன்ப அன்பு"**

**ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிகஞானசம்பந்த**
**பரமாச்சார்ய ஸ்வாமிகள்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கலாநிதி செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி
அவர்களின்

# வாழ்த்துரை

மாநகரசபை தாம் மேற்கொண்ட பணிகளிலே ஐம்பது ஆண்டு நிறைவைக் காண்கிறது. இது ஒரு மகிழ்ச்சியான நிகழ்வாகும். சிறிது காலங்கடந்த நிலையிலும் எழுச்சியாகக் கொண்டாடப்பட இருக்கும் இப் பொன்விழாவை நல்லபடி வரவேற்கிறோம். மாநகரசபை என்பது பிரதான நகரங்கள் தோறும் அமைக்கப்படும் ஒரு நிறுவனமாகும். இச்சபையின் மூலம் மண்ணுக்கும் மக்களுக்கும் ஆற்றக்கூடிய சேவைகள் அதிகம் உண்டு. நிறுவனங்களின் பணி சீராகவும் செம்மையாகவும் அமையும்பொழுது அதன் பயன் முழுமையாக மக்களை விழிப்படையச் செய்கிறது. அதுமட்டுமன்றி நகர்ப்புறக் கடமைகள் செவ்வனே அமைவதற்கும் மாநகரசபையின் பங்களிப்பு முதன்மையானது. அரசியல், சுகாதாரம், கல்வி மற்றும் அனைத்துக் கடமைகளையும் சீராகவும், செம்மையாகவும் நிகழ்த்துவது மாநகரசபையின் இன்றியமையாத ஒழுங்காகும்.

மாநகரசபை ஆணையாளர் திரு. இ. இராமலிங்கம் அவர்கள் பொன்விழா நிகழ்விற்கு பூரண ஆதரவு வழங்குவது வரவேற்கத்தக்க செயலாகும். ஒற்றுமையும், கடமையுணர்வும், பக்தி நெறியும் ஒன்றுபடும்போது அனைத்தும் சீராக அமைகிறது. எனவே பொன்விழாக் காணும் யாழ். மாநகரசபையை வாழ்த்துகின்றேன். ஆணையாளர், தலைவர் மற்றும் சபையை அணிசெய்யும் உறுப்பினர்கள் அனைவரையும் வாழ்த்தி வணங்கி அமைகின்றேன்.

**தங்கம்மா அப்பாக்குட்டி**
சமாதான நீதிபதி,
தலைவர், ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்
தெல்லிப்பழை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இலங்கை சித்த ஆயுள்வேத மத்திய வைத்தியசாலை புதிய கட்டிட திறப்புவிழா.
நகரபிதா, ந.ரவிராஜ், த.சுபத்திரன், த.முகுந்தன், டாக்டர் திரு வீ.வேதநாதன்



நவாலியூர் செல்லத்துரை அவர்களை கௌரவ உறுப்பினர் ம.மங்கநேசன் கௌரவித்தில்
அருகில் க.குணராசா [செங்கை ஆழியான்]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# MESSAGE

## From President of Sri Lanka

I am very much pleased to send a message of congratulations to the Jaffna Municipal Council on the occasion of celebrating it's Golden Jubilee.

As a Nation with an un-interrupted history dating back to millennia, Sri Lankans can be justly proud of their indigenous systems of local governance. History reveals that Sri Lanka attained an advanced state of civilization with a rich and varied background in development and administration.

An examination of early historical source books reveal that the village as the smallest unit of administration was governed by gamsabhavas.

However under the British period gamsabhavas were re-modelled and municipal councils came into being to administer larger urban areas. Under the Municipal Councils Ordinance No. 17 of 1865, Jaffna Council was set up soon after independence in 1949. Between then and now 23 Mayors have performed yeomen service to the people in the Peninsula under trying circumstances.

I am glad to note that after years of turmoil and amidst serious hazards, Jaffna community has reposed faith in their elected representatives in the Municipal Council to re-vamp the peninsula. In doing so two Mayors lost their lives. I salute those brave mayors who laid down their lives in the preformance of public duties.

In conclusion I wish the present Council and its members many more years of dedicated service and the Jaffna Municipal Commissioner and his staff the very best in their future endeavours.

Chandrika Bandaranaike Kumaratunga
H.E. the President

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Prime Minister of Sri Lanka

# MESSAGE

It is with great pleasure that I send this message of felicitation to the Municipal Council of Jaffna on the occasion of its Golden Jubilee.

The Municipal Council of Jaffna was first constituted in the year 1949 and thus became the fourth oldest Municipal Council of the country. During my visit to Jaffna in the late seventies as a Minister of Government, I have observed with great pleasure the heights of economic prosperity that the city has achieved. I was privileged to receive the warmth and friendliness of the people of Jaffna who are traditionally known for their hospitality, industry and educational achievements.

Though the unfortunate events of the recent past have changed the face of the city, I am confident that with the atmosphere of peace and understanding which my government is committed to establish, the situation will soon see a remarkable change for the better. I fervently hope that the Municipal Council of Jaffna will play a pivotal role in bringing about peace and prosperity to this great city and be successful in overcoming its present challenges.

I congratulate the Council on this historic occasion and commend His Worship the Mayor, the Municipal Councillors and the staff of the Council for their dedication and hard work, in the midst of the utmost hardship, for the betterment of the people of Jaffna.

**Ranil Wickremesinghe**
**Prime Minister**
February 12, 2002

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாநகரசபை முதல்வர்

# செல்லன் கந்தையன் அவர்களின் வாழ்த்துச் செய்தி



யாழ்ப்பாணம் மாநகராட்சி மன்றம் சமாதான பொற்காலத்துள் பிரவேசிக்கின்ற இந்த வேளையில் பொன்விழாக் கொண்டாடப்படுதல் மிகப் பொருத்தமானதாக அமைகிறது. இப் பொன்விழா மலருக்கு ஆசியும் வாழ்த்தும் உரைப்பதில் பேரானந்தம் அடைகின்றேன்.

ஈழத் தமிழ்ச் சமுதாயத்தின் வரலாறு, அரசியல், கலை, பண்பாடு, மதம், பொருளாதாரம் அனைத்தினதும் தொட்டில் யாழ். நகரம்தான் என்றால் அதில் மிகையொன்றும் இருக்காது. ஈழத்தமிழினத்தின் இதயநகரம் இதுதான். ஈழத் தமிழினத்தின் வீரத்தை இறுமாப்போடு குறியீடு செய்யும் தாய் நகரம் இதுதான். உலகத்தின் திசையெங்கும் அகதியாய், அனாதையாய் அலைகின்ற ஒவ்வொரு தமிழனும் தனது தாகம், பசி, களை தீர ஆறி உறங்கத் துடிக்கும் தாய்மடிக்கு ஈடிணையான எங்கள் புராதன நகரத்தின் வளர்ச்சிக்கு சில நூற்றாண்டுகளுக்கு மேற்பட்ட வரலாறு உள்ளது எனினும், நிர்வாக அலகு என்ற ரீதியில் மாநகரசபை என்ற முறைமை சரியாக ஏற்படுத்தப்பட்டு அரை நூற்றாண்டு சென்றுள்ளது. இக்காலத்தைக் கருத்தில் எடுத்து பொன்விழா கொண்டாடுகின்றோம்.

இந்த அரைநூற்றாண்டு கால வரலாற்றின் ஒரு கட்டத்தில் இலங்கையின் முதல்தர மாநகரசபையான கொழும்பு மாநகரசபையோடு ஒப்பிட்டுப் பேசப்படக்கூடிய வகையில் எங்கள் யாழ். நகரம் இருந்திருக்கிறது என்பது மூத்த சந்ததிக்குத் தெரிந்த உண்மையாகும். தமிழனின் வரலாற்று நகரம் வளர்ச்சியுறுவதை விரும்பாது பேரினவாத சக்திகளும், அச்சக்திகளுக்குத் துணை போனவர்களும் தமிழாராய்ச்சி மாநாட்டுப் படுகொலைகள், யாழ். நூலக எரிப்பு என்றவாறாக வரலாற்றில் பல துயரமான இருண்ட அத்தியாயங்களைத் திறந்துவிட்டனர். இதனால் பரிணாம வளர்ச்சி கண்ட விடுதலைப் போரின் தாக்குதல்களும் சண்டைக் களங்களும் யாழ்ப்பாண நகருள் புயல்களாக மையம் கொண்டிருந்தன. 1983இல் நிகழ்ந்த கந்தர்மடம் தாக்குதலிலிருந்து 1990களின் ஆரம்பப் பகுதியில் நிகழ்ந்த யாழ். கோட்டைச் சமர், 1995இல் சூரியக்கதிர் என்ற அரசபடைகளின் நடவடிக்கைகளாக புத்தாயிரமாம் ஆண்டில் நிகழ்ந்த அரியாலைச் சமர்வரை ஏறத்தாழ இரண்டு தசாப்த காலமாக யாழ்ப்பாண நகரம் போர்க்கோலமே பூண்டிருந்தது. அவ்வப்போது வெற்றிச் செய்திகள் தெரிந்தாலும் இந் நகரத்தின் சராசரி வாழ்வு, இடப்பெயர்வுகளும் இன்னல்களும் நிறைந்த அவல நாடகமாகவே அமைந்தன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனினும் 2002இல் தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைமைக்கும் ஸ்ரீலங்கா வினது பிரதமருக்கும் இடையில் கைச்சாத்தாகியுள்ள புரிந்துணர்வு உடன்படிக்கையை யடுத்து யாழ்ப்பாண மாநகரம் உட்பட தமிழர் பாரம்பரிய பூமி யெங்கும் இயல்புவாழ்வு திரும்பக்கூடிய சாத்தியக் கூறுகளும் நம்பிக்கைகளும் தெரிகின்றன. போரினால் சீரழிந்துள்ள எமது யாழ். நகரத்தை இலங்கைத் தீவின் தலைசிறந்த நகரங்களுள் ஒன்றாக கட்டி எழுப்புவதற்கு மாண்புமிகு தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் அவர்களும் மாண்புமிகு பிரதமர் ரணில் விக்கிரமசிங்கா அவர்களும் திடசங்கற்பம் பூணுவதற்கு இறையருள் வேண்டி மன்றாடுகிறேன். அவர்கள் இருவரதும் சமாதானப் பேச்சுக்கள் நடைபெறப் போகின்ற அதே வேளையிலேயே நல்லெண்ண நடவடிக்கை களுள் மாபெரும் நல்லெண்ணமாக எமது நகரம் புனர்நிர்மாணம் செய்யப்பட வேண்டும் என இத்தருணத்தில் இறை ஆசியை வேண்டிநிற்கிறேன். சமாதானப் பேச்சுக்கள் வெற்றிகரமாக முற்றுப் பெறும்போது கட்டியெழுப்பப்பட்டிருக்க வேண்டும் என்பதே தமிழ் மக்களின் ஏகோபித்த எதிர்பார்ப்பாகும் என்பதை பொன்விழா காணும் இந்நாளில் வலியுறுத்த விரும்புகிறேன்.

மேலும் இக்கட்டான காலகட்டத்துள் யாழ்ப்பாண மாநகரம் தன்னால் இயன்ற அளவுக்கு செயற்படுவதற்கு நிர்வாக ரீதியாக பங்களிப்புச் செய்த அனைத்து உத்தியோகத்தர்களுக்கும், சபை உறுப்பினர்களுக்கும், மாநகர மக்களுக்கும் பொன் விழாக்கால வாழ்த்துக்கள் தெரிவிப்பதோடு இறை ஆசியையும் வேண்டி நிற்கின்றேன்.

எல்லாவற்றுக்கும் மேலாக பொன்விழாக் காலத்தில் மாநகர முதல்வராக இருப்பதற்கு பாக்கியமளித்த இறைவனுக்கு நன்றி நல்கி நிறைவு காணுகின்றேன்.

நன்றி

**செ. கந்தையன்**
முதல்வர்,
யாழ். மாநகரசபை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ். ஆயர் திரு. தோமஸ் சவுந்தரநாயகம் அவர்களின்

# ஆசிச் செய்தி

அன்புச் சகோதரங்களே,

யாழ் மாநகரசபை பொன்விழா எடுக்கும் இத்தருணத்தில் எனது வாழ்த்துக்களையும், இறையாசிகளையும் தெரிவிப்பதில் மிக்க மகிழ்ச்சி கொள்கிறேன்.

சமாதானத்தின் காற்றுக்கள் எமது நாட்டில் வீசத்தொடங்கியிருக்கும் வரலாற்றுச் சூழலில் யாழ் மாநகரசபை சமாதானப்பணியை முன்னெடுக்கும் அம்சங்களைப் பேணவேண்டும். எமது வரலாற்றுச் சின்னங்கள் பல அழிவுற்ற வேளையிலும் தளராத நம்பிக்கையோடு பணி தொடரவேண்டும். எமது அரும்பெரும் சொத்தான நூலகம் எரிக்கப்பட்டது. உடைந்துபோன கட்டிடங்களை நாம் அழகாக மீளமைக்கலாம். எரிந்து போன பழம்பெரும் ஏடுகளைப் பெறமுடியாது.

இரண்டாவது உலக யுத்தத்தின்பின் மக்கள், பல இனங்கள் ஒன்றுபட்டு அழிவுற்ற நாடுகளையும், வளங்களையும் மீளக் கட்டியெழுப்பியதுபோல போரினால் அழிவுற்ற யாழ் நகரைக் கட்டியெழுப்புவதே எமது பொன் விழாவிற்கு அர்த்தமாகும்.

இறைபணியில்

இ. தோமஸ் சவுந்தரநாயகம்

யாழ் ஆயர்.

ஆயர் இல்லம்,

யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜனநாயகம் நிலைபெற வழிகாட்டட்டும்!



யாழ்ப்பாண மாநகரசபை பொன்விழாவைக் கொண்டாடுவதை அறிந்து மிக்க மகிழ்ச்சி. இலங்கைத் திருநாட்டின் ஏனைய மாநகரசபைகளைவிடக் கசப்பான - சோகமான பல நிகழ்ச்சிகளைச் சந்தித்தது இம் மாநகரசபை. இருபது ஆண்டுகளுக்கும் மேலான காலப்பகுதியில் வெவ்வேறு ஆணையாளர்களால் நிர்வகிக்கப்பட்ட வரலாற்றைக் கொண்டது. இம் மாநகரத்தில் வாழும் மக்களின் ஜனநாயக உரிமைகளை நிலை நிறுத்துவதற்காக மிகுந்த சங்கடங்களை எதிர்நோக்கியிருந்தது. இவற்றுக்கு ஈடு கொடுத்து பொன்விழா வரை வந்துள்ளது ஒரு சாதனையே!

மேலும் இந்த மாநகரத்தின் முதல்வராக இருந்த அல்பிரட் துரையப்பாவின் படுகொலையில் ஆரம்பித்த துப்பாக்கி அரசியல் கலாச்சாரம், திருமதி சரோஜினி யோகேஸ்வரன், பொன். சிவபாலன் போன்ற முதல்வர்களையும் விட்டு வைக்கவில்லை. அதே போல எமது கட்சியின் சார்பாக இச் சபையில் அங்கம் வகித்த வைரமுத்து, அன்ரன் சிவலிங்கம் போன்றவர்களினதும் உயிர்கள் பறிக்கப்பட்டன. இவை கவலையுடன் நினைவுகூர வேண்டிய சோகம் ஆகும். எனினும் இந்த மண்ணில் வாழும் சாதாரண மக்களின் துணிவு, தன்னம்பிக்கை என்பனவற்றின் காரணமாகவே ஜனநாயக ரீதியாகத் தெரிவுசெய்யப்பட்ட உறுப்பினர்களைக் கொண்டதான நகர சபை செயற்படுகின்றது எனலாம். ஆனாலும் மக்கள் தமது வாக்குகளால் மாநகரசபைக்கும், ஏனைய உள்ளூராட்சிசபைக்கும் பிரதிநிதிகளை தெரிவுசெய்யும் ஜனநாயக நடைமுறைகள் தமிழ் மண்ணில் ஆபத்தை எதிர்நோக்கலாம் என்னும் அச்சம் தென்படுகிறது என்பதையும் மறுப்பதற்கில்லை.

ஆனால் யாழ்ப்பாண மாநகரசபையானது பிரதேசத்தின் அபிவிருத்தி, சமூக முன்னேற்றம் என்பவற்றில் கவனம் செலுத்துவதோடு மட்டும் நிற்காமல் தமிழ் பேசும் மக்களின் ஜனநாயக அரசியல் உரிமைகளை நிலைநாட்டுவது குறித்தும் கவனம் செலுத்த வேண்டியுள்ளது. எனவே யாழ்ப்பாண மாநகரசபையின் பொன்விழாவானது தமிழ் பேசும் மக்களின் ஜனநாயக உரிமைகள் தமிழ் மண்ணில் நிலைபெறுவதற்கு வழிகாட்டுவதாக அமைய வாழ்த்துகின்றேன்.

நன்றி வணக்கம்.

என்றென்றும் மக்கள் சேவையிலுள்ள
**கே. என். டக்ளஸ் தேவானந்தா**
செயலாளர் நாயகம்,
பா. உ. யாழ். மாவட்டம்
ஈழமக்கள் ஜனநாயகக் கட்சி (ஈ.பி.டி.பி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



முதல்வர், பிரதிமுதல்வர், ஆணையாளர்களுடன் உத்தியோகத்தர்கள் [ஆண்]



முதல்வர், பிரதிமுதல்வர், ஆணையாளர்களுடன் உத்தியோகத்தர்கள் [பெண்]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜெபநேசன் அவர்களின்

# வாழ்த்துச் செய்தி

யாழ் மாநகரசபைக்கு 50 வயது பூர்த்தியாகிவிட்டது. கடந்த 50 வருடங்களில் யாழ்ப்பாணம் அடைந்த மாற்றங்களைப் போல வேறெந்த நகரமாவது மாற்றம் அடைந்திருக்குமோ என்பது சந்தேகமே.

1949-ம் ஆண்டு யாழ் நகரசபை, மாநகரசபையாக தரம் உயர்த்தப்பட்டது. அதன் முதலாவது மேயராக பேராயர் சபாபதி குலேந்திரனின் தமையனார் உயர்திரு. சாம் சபாபதி பதவியேற்றார். அதன் பின்னர் யாழ். மாநகரசபை பல சிறந்த தலைவர்களைக் கண்டது. ஹாஜி எம். எம். சுல்தான், எம். எம். அபுசாலிஹ் ஆகிய இஸ்லாமியப் பெரியார்களும் மேயர்களாகப் பணியாற்றியிருக்கின்றனர்.

1981-ம் ஆண்டு யாழ் மாநகரசபையின் மிகச்சிறந்த அணிகலனாகிய பொதுசன நூலகம் எரியூட்டி அழிக்கப்பட்டது. 1983-ம் ஆண்டு தொடக்கம் இந்த அழகிய நகரம் மீண்டும் மீண்டும் சிதைக்கப்பட்டது. ஆனால் யாழ் மாநகரசபை மக்கள் சோர்ந்து போகவில்லை. தமது மாநகரத்தின் மீது கொண்டிருந்த பற்றுதலினால் அதனை மீண்டும் மீண்டும் புனருத்தாரணம் செய்தனர்; அழகுபடுத்தினர்; கட்டியெழுப்பினர்.

இப்பொழுது ஏற்பட்டுள்ள சமாதானச் சூழல் மாநகரம் சிறப்புற வழிவகுக்கும். இந்த அரிய சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி மாநகரசபை பிதாக்கள் சிறந்ததொரு மாநகரத்தை உருவாக்க முன்வரவேண்டும். மகாகவி பாரதி கூறியதைப்போல-

"ஆயுதம் செய்வோம் நல்ல காகிதம் செய்வோம்
ஆலைகள் வைப்போம் கல்விச் சாலைகள் வைப்போம்
ஓயுதல் செய்வோம் தலை சாயுதல் செய்யோம்
உண்மைகள் சொல்வோம் பல வண்மைகள் செய்வோம்."

இரண்டாவது உலக மகா யுத்தத்தின் சீரழிவுகளின்பின்னர் ஜேர்மன் மக்கள் பேர்ளின் மாநகரத்தை மிகுந்த ஆர்வத்தோடு புனரமைத்தனர். அவர்கள் முதலாவதாகக் கட்டியெழுப்பியது அவர்களின் கலை நிகழ்ச்சிகள் நடைபெறும் கலாமண்டபத்தையே யாகும். அதுவே மக்கள் கூடுவதற்கும் அமைதியடைவதற்கும் பீதியில் நின்று விடுதலை பெறுவதற்கும் வழியென அவர்கள் கருதினார்கள். யாழ் மாநகரை புனர் நிர்மாணம் செய்ய முனைபவர்கள் இதனை மனதில் கொள்ள வேண்டும். யாழ் மாநகரசபையின் இன்றைய நகர பிதாக்களுக்கு எனது அன்பான வாழ்த்துதல்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**எஸ். ஜெபநேசன்**

பேராயர், தென் இந்திய திருச்சபை,

யாழ் ஆதீனம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செந்தில்நந்தனன் அவர்களின்

# வாழ்த்துச் செய்தி

வரலாற்றுச் சிறப்புமிக்க நகரம் யாழ்ப்பாணம். இசைபட வாழ்ந்த தமிழர் தொன்நகரம். தமிழ்நாட்டு அரசர்களும் அரசிகளும் வருகை தந்து வரம்பெற்ற நாடு யாழ்ப்பாணம்.

ஒரு நிறுவனத்தின் ஐம்பதாண்டு நிறைவு பெருமைக்குரிய சாதனை. அதிலும் அசாதாரண சூழ்நிலையிலும், சவால்களை முகம்கொண்டு மக்கள் சேவை புரிவது வரலாற்று ஏடுகளில் இடம்பெறக்கூடிய அரும்பெரும் சாதனையே.

பல்வேறுபட்ட சேவைகளுக்காக மக்கள் ஏங்கி நிற்கும் இக்காலகட்டத்தில் யாழ் மாநகரசபை தொடர்ந்தும் தன் அயராத சேவையைச் செய்யும் என்ற நம்பிக்கை உடையேன்.

மாநகர சேவையாளரின் தொண்டில் நகரமக்கள் பார்வையாளர்களாக மட்டும் இருந்துவிடாமல் பங்காளிகளாகவும் உதவ வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

யாழ் பிரதேச செயலர் என்ற நிலையில் உரியவர்களை வாழ்த்தக் கிடைத்த வாய்ப்புக்கு மகிழ்ச்சி. நன்றி.

**பா. செந்தில்நந்தனன்**
பிரதேசசெயலர்,
யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மாநகரசபை ஆணையாளரின்

# வாழ்த்துச் செய்தி



இலங்கையின் தலைசிறந்த நகரங்களில் ஒன்றான யாழ். நகரத்தை நிர்வகிக்கும் உள்ளூராட்சி மன்றம் மாநகர அந்தஸ்தைப் பெற்று ஐம்பது வருடங்கள் பூர்த்தியடைந்துவிட்டது. இச்சந்தர்ப்பத்தில் சபை பொன்விழா கொண்டாட தீர்மானித் துள்ளது. இந்த ஐந்து தசாப்த காலத்தில் இச்சபை நிறைவு செய்த மக்கள் சேவைகளை இச்சந்தர்ப்பத்தில் நினைவு கூருவது மிகப் பொருத்தமானதாக இருக்கும்.

யாழ்ப்பாண மாநகரசபையானது முதலாவது முதல்வரான, திரு. சாம்.ஏ. சபாபதியிலிருந்து இன்றைய முதல்வர் திரு. செ. கந்தையன் வரை 24 முதல்வர்களாலும், பல விசேட ஆணையாளர்களாலும், நிர்வகிக்கப்பட்டு வந்துள்ளது. இவ் அரை நூற்றாண்டு காலத்தில் இம்மாநகரசபை நகர மக்களுக்கு ஆற்றிய அளப்பரிய சேவைகளை எவரும் மறந்துவிட முடியாது. 7½ சதுரமைல் விஸ்தீரணமும் 15 வட்டாரங்களையும் கொண்ட இச்சபையானது தனது வளர்ச்சிப் பாதையில் 8½ சதுரமைல் விஸ்தீரணமும் 23 வட்டாரங்களைக் கொண்ட சபையாகவும் விரிவாக்கப்பட்டது. இம்மாநகரத்தில் 1,18,000 மக்களுக்குத் தேவையான அனைத்து சேவைகளையும் இச்சபை வழங்கி வந்துள்ளது. இச்சேவையில் குறிப்பிடக்கூடிய பலவற்றை ஆற்றியமை பெருமைப்பட வேண்டும். இக்காலத்தில் 'கொலரா' எனும் கொடிய தொற்றுநோய் நகரத்தில் பரவி பல மனித உயிர்களைக் காவு கொண்ட நேரத்தில் மாநகரசபையின் சுகாதாரப் பிரிவினர் செயற்பட்ட வேகம் பாரிய அழிவிலிருந்து தடுத்து நிறுத்தப்பட்டது. மண் வீதிகளாக இருந்த பல வீதிகள் தார் வீதிகளாக இவ் அரைநூற்றாண்டு காலத்திலேயே உருப்பெற்றன. 1934ம் ஆண்டு கடைக் கட்டடம் ஒன்றில் உருவான மத்திய இலவச வங்கியில் பொறுப்பேற்று பொது நூலகமாக மாற்றி தென்கிழக்காசியாவிலேயே சிறந்த நூலகமாக வளர்த்தெடுக்கப்பட்டதும் இவ் அரை நூற்றாண்டுதான். காலத்திற்குக் காலம் இடம்மாறி மக்களிற்கு இடையூறாக இருந்த மத்திய பேருந்து நிலையத்தை நிரந்தர இடத்தில் அமைத்தது போன்று பல மக்களுக்கு அன்றாடம் அவசியமான சேவைகளை முன்னெடுத்து வந்துள்ளது.

சபையின் வெள்ளி விழாக் காலத்தில் நகரை அழகுபடுத்தவும், மக்களை நல்வழிப்படுத்த வழிகாட்டிய பெரியார்களை கௌரவிக்கவும் பல பெரியார்களுக்கு நகரின் பல பகுதிகளில் சிலைகள் நிறுவி பெருமை சேர்த்ததும் இம் மாநகர சபையே. திராவிட பாரம்பரியத்திற்கு அமைவாக நிர்மாணிக்கப்பட்ட தனது நிர்வாக செயலகம் 1985ல் அழிக்கப்பட்ட பின்னரும் தமது வரியிறுப்பாளர்களுக்கு எவ்வித தடையுமின்றி கிடைக்கும் வளங்களைக் கொண்டு அனைத்துச் சேவைகளையும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வழங்கி வருகின்றது. இரண்டு தசாப்தத்திற்கு மேலாக நடைபெறும் யத்தத்தால் நகரம் முற்று முழுதாக சீரழிக்கப்பட்டது. ஆனால், மாநகரசபை மக்களிற்கான சேவையை பெரும் பிரயத்தனங்களிற்கு மத்தியில் எடுத்துச் செல்வதை அனைவருமே பாராட்டுகிறார்கள். இச்சபையின் செயற்பாடுகளை அவதானித்தால் அழிவிலிருந்து ஆக்கப்பணி உத்வேகம் பெறும் என்ற சிந்தனை ஏற்படும்.

மாநகரசபைக்குச் சொந்தமான நவீன சந்தை, விளையாட்டரங்கம், திறந்த வெளியரங்கம், பொது நூலகம் போன்றன அழிக்கப்பட்ட போதும் அவற்றின் சேவைகளை இடையூறின்றி மேலும் திறம்பட வழங்குவதற்கு உறுதுணையாக இருந்த அனைவருக்கும் நன்றியைத் தெரிவிப்பதில் பெருமகிழ்ச்சி அடைகின்றேன்.

அழிந்துபோன மாநகரசபைக் கட்டடங்கள் மீண்டும் அதே நிலைக்கு கலாசார அமைப்பு மாறாமல் புனரமைப்பு செய்யப்பட்டு, இலங்கையில் ஒரு தலைசிறந்த நிர்வாகத்தைக் கொண்ட மாநகரசபையாக எமது சபை மிளிர வேண்டுமென பிரார்த்திக்கின்றேன்.

**திரு. இராமலிங்கம்**
மாநகர ஆணையாளர்,
யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நல்லூர் பிரதேச செயலரின்

# வாழ்த்துச் செய்தி

யாழ்ப்பாண மாநகரசபையின் பொன்விழா மலரிற்கு வாழ்த்துச் செய்தி அனுப்புவதில் மிக்க மகிழ்ச்சியடைகிறேன். கடந்த ஐம்பது ஆண்டுகளாக பல இன்னல்கள், அழிவுகள் எல்லாவற்றிற்கும் முகம் கொடுத்து சிறந்த சேவையை ஆற்றி வருகின்றது. இடம்பெயர்வுகள், அசாதாரண சூழ்நிலைகள் மத்தியில் சேவையாற்றி வருகின்ற யாழ் மாநகரசபையின் பணி மகத்தானது. அரசியல் காரணங்களுக்காக புறக்கணிக்கப்பட்ட போதெல்லாம் தன்னுடைய சேவையைத் தளர விடாது தன்னால் ஆன கடமைகளைச் சிறப்புடன் செய்து வந்தமையை யாவரும் அறிவர்.

எமது பிரதேச செயலகப் பிரிவின் ஒருபகுதி யாழ் மாநகரசபையின் எல்லைக்குள் இருப்பது மிகுந்த மகிழ்ச்சியை அளிக்கிறது. யாழ் மாநகரசபையின் உறுப்பினர்களினதும், உத்தியோகத்தர்களினதும் அயராத உழைப்பினால் தனது சேவைகளை திறம்பட வழங்கி வருகின்றது. இப்பொன்விழா காண்பதற்கு காலம் காலமாய் உழைத்த உறுப்பினர்களும் உத்தியோகத்தர்களும் போற்றப்படவேண்டியவர்கள். இப் பொன்விழாவைக் கொண்டாடுகின்ற வேளையிலே இச்சபையின் கௌரவ மேயர், உறுப்பினர்கள், உத்தியோகத்தர்கள் ஆகியோரின் பணியைப் பாராட்டுவதோடு தொடர்ந்து சிறந்த சேவையை வழங்கவும் இப் பொன்விழா சிறப்பாக அமையவும் எல்லாம் வல்ல இறைவனை வேண்டி வாழ்த்துகிறேன்.

**நா. வேதநாயகன்**
பிரதேச செயலர்,
நல்லூர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிருஷ்ணமூர்த்தி அவர்களின்

# வாழ்த்துச் செய்தி

யாழ்ப்பாடி பரிசாகப் பெற்ற நகரம் வடஇலங்கையின் தலைநகராகும். இந்நகரம் 01-01-1949-ல் மாநகர அந்தஸ்தைப் பெற்று 50 ஆண்டுகளைப் பூர்த்தி செய்துள்ளது. கடந்த 50 ஆண்டுகளில் இம் மாநகரசபை ஆற்றிய தொண்டுகளை எவராலும் மறக்க முடியாது. இவ் 50 ஆண்டுகள் சிறந்த சேவையை வரியிறுப் பாளர்களுக்கு அயராது உழைத்த நகர பிதாக்கள் பாராட்டப்பட வேண்டியவா களாவர்.

உள்ளூராட்சிச் சபை ஒன்று தனது நிர்வாக பிரதேச வாழ் மக்களிற்குத் தேவையான தொட்டில் முதல் சுடுகாடு வரையான அனைத்து சேவைகளையும் வழங்குவதிலும் சிறப்படைகிறது. 8¾ சதுரமைல் விஸ்தீரணத்தையும், 23 வட்டாரங்களையும் உள்ளடக்கிய யாழ். மாநகர சபை கடந்த 50 ஆண்டுகளில் அனைத்து சேவைகளையும் தனது வரியிறுப்பாளர்களிற்கு வழங்கி உயர்ந்து நிற்கின்றது. இவ்வைந்து தசாப்தங்களில் யாழ். நகர மக்களிற்கு சுகாதாரம், சுற்றுச்சூழல் பாதுகாப்பு, நோயத் தடுப்பு, கல்வி, குடிநீர், மின் விநியோகம் போன்ற இன்னோரன்ன சேவைகளை வழங்கியமையைப் பாராட்டுவதில் பெருமகிழ்வடைகின்றேன். குறிப்பாக போர்க்காலத்தில் இச் சேவைகள் யாவும் எதுவித இடையூறுமின்றி பலதடைகளின் மத்தியில் வரியிறுப்பாளர்களிற்கு வழங்கியமையைப் பாராட்டவேண்டும்.

கடந்த 50 ஆண்டுகளில் நகர மக்களைத் தாக்கிய பல்வேறு தொற்றுநோய் களைக் கட்டுப்படுத்தி பெரும் உயிரழிவைக் கட்டுப்படுத்தியமை, தென்கிழக் காசியாவின் தலைசிறந்த நூலகம் அழிக்கப்பட்ட போதும்கூட அதே மாதிரியான சேவையை வழங்க பல்வேறு நூலக சேவைகளை உருவாக்கியமை, வட பகுதியிலேயே பாரிய குடிநீர்த் தாங்கியை அமைத்து நகர மக்களின் மிக அவசியமான குடிநீர் தேவையை நிறைவேற்றியமை, வடபகுதிக்கு மின்விநியோகம் தடைப்பட்டபோதும் குப்பி விளக்குகள் மூலம் தெருவிளக்குகள் அமைத்த பெருமை பெற்ற மாநகரசபை என்ற புகழ் பெற்றமை போன்ற சிறப்பான சேவைகளைத் தனது நிர்வாக அலுவலகக் கட்டிடத்தை இழந்தும்கூட வரியிறுப்பாளர்களுக்கு வழங்கியமையைப் போற்ற வேண்டும்.

இவ்வாறான பல சிறப்புச் சேவைகளை வழங்கும் இம் மாநகரசபை மேலும் பலவேறுபட்ட புதிய சேவைகளையும் வழங்க பல நூற்றாண்டுகள் சிறப்புற வளர வேண்டுமென வாழ்த்துகின்றேன். பொன்விழா நிகழ்வின் ஞாபகார்த்தமாக வெளியிடப்படும் மலரிற்கு இவ்வாழ்த்துச் செய்தியை வழங்குவதில் பெருமகிழ் வடைகின்றேன். பொன்விழா நிகழ்வுகள் சிறப்புடன் நிறைவேற இறை ஆசி வேண்டுகின்றேன்.

ஜி. கிருஷ்ணமூர்த்தி
தலைமைச் செயலகம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுகாதாரக்குழுத் தலைவர்

## மனுவல் மங்களநேசன் அவர்களின்



# வாழ்த்துச் செய்தி

யாழ் மாநகரசபையின் 50ஆவது ஆண்டைப் பூர்த்தி செய்து பொன்விழாக் காணும் இந்நேரத்தில், யாழ் மாநகரசபை உறுப்பினராகவும், விசேடமாக சுகாதாரக்குழுத் தலைவராகவும் இருப்பதையிட்டு நான் மிகவும் சந்தோஷமடைகின்றேன். இலங்கையில் உள்ள உள்ளூராட்சி சபைகளில், பல பகுதிகளை உள்ளடக்கிய சிறப்பான சபையாக அமைந்திருப்பது மாநகர சபையாகும். அதிலும், யாழ் மாநகரசபை இன்னும் சிறப்பானதாகும். பல கல்விமான்களின் வழிநடத்தலில், 50 வருட காலத்தின் யாழ் மாநகரசபையின் ஒரு சிற்றூழியன் இன்று மாநகர முதல்வராக இருப்பது, இச்சபையின் ஜனநாயகத்தை எடுத்துக்காட்டுகிறது.

1984ஆம் ஆண்டு அரசியல் வாழ்வில் 'அறிவாளி' எனும் பத்திரிகை மூலம் பிரவேசித்த நான், வெண்தாமரை இயக்கத் தலைவராகவும் இன்று மாநகர சபை உறுப்பினராகவும் இருந்து மக்களுக்கு ஆற்றும் சேவையினை நினைத்து பெருமையடைகின்றேன். பல தடவைகள் பாராளுமன்றத் தேர்தலில் நின்று வெற்றி பெறாவிட்டாலும் மாநகரசபையில் உறுப்பினராக இருந்து மக்களோடு மக்களாக நின்று செய்கின்ற சேவை உண்மையில் புனிதமானது என்பது எனது எண்ணம்.

இச்சபையில் நான் பல வேலைத் திட்டங்களை முன்வைத்து, அது முன்னெடுக்கப்பட்டன. சுகாதாரக்குழுத் தலைவராகத் தெரிவுசெய்யப்பட்டு, சமூகச் சீர்கேடுகள் ஒழிப்புத் தினம், நடமாடும் சுகாதார சேவை போன்ற முன்னோடியான நிகழ்வுகளை நடாத்திக்கொண்டிருக்கின்றேன்.

அந்த வகையில், இன்று பொன்விழாக் கண்டுகொண்டிருக்கும் எமது யாழ் மாநகரசபை மேலும் வளர்ந்து பல விழாக்களைக் காணவேண்டும் என வாழ்த்தி, யாழ் மாநகரசபை அதிகாரிகள், ஊழியர்கள், வரியிறுப்பாளர்கள் தங்கள் கடமைகளைச் சரிவரச் செய்ய வேண்டுமெனவும் தாழ்மையுடன் கேட்டுக்கொள்கின்றேன்.

நன்றி.

**மனுவல் - மங்களநேசன் J.P.**
யாழ். மாநகரசபை உறுப்பினரும்,
சுகாதாரக்குழுத் தலைவரும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## யாழ். மாநகரசபை
## உறுப்பினர் பரராஜசிங்கம்
## அவர்களின்

# வாழ்த்துச் செய்தி



உலகம் போற்றும் அறிஞர் பலர் அவதரித்த ஈழத் தமிழரின் தாயகமான யாழ்நகரின் நிர்வாகமையமாம் யாழ் மாநகரசபையின் பொன்விழா நிகழ்வு எமது காலத்தில் கொண்டாட அருள் பாலித்த நல்லைக்குமரனின் தாழ்பணிந்து சிவ விழாவின் ஓர் அங்கமாக வெளிவர இருக்கும் பொன்விழா மலருக்கு எனது வாழ்த்தினைத் தெரிவிப்பதில் மட்டற்ற மகிழ்ச்சியடைகிறேன்.

எமது யாழ் மாநகரசபை எதிர்வரும் காலத்தில் இன்னும் பல சேவைகளையாற்றி எமது யாழ் மாநகரை பார்புகழும் தமிழீழத் தாயகமாக மாறி நிமிர்ந்து நிக்க வகை செய்ய வேண்டுமென்று மனமார வாழ்த்துகின்றேன்.

க. பரராஜசிங்கம்
யாழ். மாநகரசபை உறுப்பினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பரமலிங்கம் அவர்களின்

# வாழ்த்துச் செய்தி

தற்போது இந்நாட்டில் உள்ள உள்ளூராட்சி நிர்வாக அமைப்பானது பண்டைக் காலம் முதல் இந்நாட்டிலே நிலவிவந்த கிராம மட்ட நிர்வாக ஆட்சியின் பரிணாம வளர்ச்சி என்று கூறலாம். கிராம மட்டத்தில் அமைந்திருந்த மக்களது தன்னாதிக்கம் கொண்ட ஆட்சியாக கிராம மன்றங்கள் இயங்கி வந்தது. நிர்வாக அமைப்புடன் தொடர்பு பட்டிருந்ததையும் சரித்திர வாயிலாக அறியக்கூடியதாக வுள்ளது. ஆரம்பத்தில் கிராமங்களின் எல்லைகள் வரையறுக்கப்பட்டு கிராம மன்றங்களாக இருந்த இந்த நிர்வாக அமைப்பானது பின்னர் ஒன்றுக்கு மேற்பட்ட கிராமங்களை தமது நிர்வாக அலகுகளாகக் கொண்டிருந்தன.

இந்த நிர்வாக அலகுகள் விவசாய, பொருளாதார நடவடிக்கைகளிலும், நீர்ப்பாசன வரிகளை அறவிடுதல், பயிர்ச் செய்கைக்காக நீர் வழங்கல், கிராமத்தில் நிகழ்கின்ற சில்லறைப் பிரச்சினைகளுக்குத் தீர்வு வழங்குதல், சமயச் சடங்குகள் நடாத்துதல், அதற்கு உதவி அளித்தல், வைத்திய சேவைகளைச் செய்து கொடுத்தல், தேசிய பூங்காக்களைப் பாதுகாத்தல் மற்றும் குற்றவாளிகள் போன்றவர்களைக் கண்டுபிடித்தல் என்பவைகளில் ஈடுபட்டிருந்தன.

இந்நாட்டில் மன்னர் ஆட்சி நிலவிய காலத்தில் பாரம்பரியமாக நிலவிவந்த கடமைகளும், நடைமுறைகளும், மன்னர்களினால் விதிக்கப்பட்ட கட்டளைகளினாலும், கல்வெட்டுகளில் பதிக்கப்பட்ட பணிப்புகளுக்கமையவும் செயற்பட ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன. அதன் பின்னர் அந்நிய ஆட்சி இந்நாட்டில் ஏற்பட்ட காலத்திலிருந்து இந்த கிராம சபைகளானது, பிரிட்டிஷ் ஆட்சி காலத்தில் மேலும் சீர்திருத்தம் பெற்று தற்போதைய உள்ளூராட்சி அமைப்புக்கு மிக உறுதியாக வித்திட்டது எனலாம்.

1865ம் ஆண்டு இயற்றப்பட்ட 17ம் இலக்க கட்டளையானது கொழும்பிலும், கண்டியிலும் மாநகரசபை அமைப்பதற்கான உண்டாக்கப்பட்ட முதலாவது சட்டம், உள்ளூராட்சி அமைப்பின் வரலாற்றில் ஒரு திருப்பத்தை ஏற்படுத்திய சட்டமாகக் கொள்ளலாம். இந்த மாநகர ஆட்சி அமைப்பதன் மூலம் அவற்றுக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களை செவ்வனே நிறைவேற்றுவதன் மூலம் ஏனைய பட்டினங்களுக்கும் இத்தகைய அமைப்பை ஏற்படுத்துவதற்கு இவை ஊக்கமளிப்பவையாக இருக்க வேண்டுமென இச்சட்ட மூலத்தை அறிமுகம் செய்து ஆளுநர் சேர் சேக்குலின் ரொபின்சன் தெரிவித்திருந்தார்.

ஆரம்பத்தில் அந்தந்த மாகாண அரசாங்க அதிபரே இம்மாநகர சபையின் முதல்வராகவும் இருந்து வந்திருக்கின்றார்.

இதன் பின்னர் காலிப் பட்டினமும் மாநகரசபையாக உருவாக்கப்பட்டு சுதந்திரம் அடைந்த 1948ஆம் ஆண்டில் இந்நாட்டிலே 03 மாநகர சபைகள் மாத்திரம் இருந்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வந்தது. சுதந்திரம் அடைந்த காலத்திலிருந்து கடந்த 50 ஆண்டு வரலாறு என்பது இலங்கையின் அரசியல் வரலாற்றில் பொன் எழுத்துக்களால் பொறிக்கக்கூடியது எனலாம். தேசிய மட்டத்திலான அரசியல் தலைவர்களை உருவாக்குகின்ற ஆரம்ப மட்ட அரசியல் பள்ளியாக உள்ளூராட்சி மன்றங்கள் அமைந்துள்ளன என்று கூறினால் அது மிகையாகாது.

அந்த வகையில் யாழ்ப்பாண இராஜ்ஜியம் என வரலாற்று ரீதியாகக் குறிப்பிடப்படும் தமிழ் இராஜ்ஜியத்தின் தலைப்பட்டினமாக யாழ்ப்பாணம் இருந்த காரணத்தினால் தமிழ் பேசும் மக்களுக்கு வரலாற்று சிறப்புமிக்க மாநகர சபையாக யாழ்ப்பாணம் அமைந்தது சிறப்பு மிக்க ஒரு சம்பவமாகும். 1949ம் ஆண்டு யாழ்ப்பாணத்திற்கென அமைந்த மாநகரசபையானது கடந்த 50 ஆண்டு காலத்தில் யாழ். நகர மக்களின் அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்கின்ற நிர்வாக அமைப்பாக அமைந்து தற்கால தேவைகளைப் பூர்த்தி செய்கின்ற மக்கள் ஆட்சி மன்றமாக வளர்ந்த காலத்தை எண்ணிப்பார்க்கும்போது இம்மாநகரசபையின் பங்களிப்பானது சமூக, பொருளாதார, கல்வி வளர்ச்சியில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியிருக்கின்றது எனலாம். தென்கிழக்கு ஆசியாவிலேயே சிறந்த நூலகமாக இருந்தது யாழ். நூலகமாகும். அதுமாத்திரமன்றி நவீன சந்தை வசதி, வீதி புனரமைப்பு, சிறுவர் பூங்கா, குடிநீர் வசதி, சுகாதார சேவைகள் போன்றவற்றைத் தமது சக்திக்கேற்ப நகர மக்களுக்கு வழங்கி வந்திருக்கின்றது.

இவ்வாறு யாழ். மாநகரசபை பெரும் பணியாற்றிவந்த காலகட்டத்தில் இந்நாட்டில் ஏற்பட்ட யுத்த சூழ்நிலையில் கடந்த இருபது ஆண்டுகள் இதனது சேவை பல சிக்கல்களுக்கும், சிரமங்களுக்கும் மத்தியில் செய்யப்படவேண்டிய தானதுடன், பல பின்னடைவுகளையும் கண்டுள்ளது. மாநகரசபைக்குச் சொந்தமான அழகிய அலுவலகம், நூல்நிலையம், மக்கள் சந்தை என்பன நொடிப் பொழுதில் தீக்கிரையானதுடன் பேணிக்காக்கப்பட்ட பல்வேறு ஆவணங்கள் அழிந்து போயின. இந்த இக்கட்டான காலத்தில் மக்களின் அன்றாட அடிப்படைச் சேவைகளை ஓரளவுக்கேனும் ஆற்றக்கூடியதாக நிர்வாகம் செயற்பட்டது பாராட்டுக்குரியதாகும்.

ஐம்பது ஆண்டுகளைப் பூர்த்திசெய்து அதனை நிறைவுசெய்யும் இவ்வேளையில் ஆற்றிய சேவைகளையும், அதற்கேற்ப இழப்புக்களையும் மனங் கொள்ளும்போது யாழ்ப்பாண மாநகரசபை இந்நாட்டு வரலாற்றில் நிச்சயமாக தனக்கென ஒரு இடத்தை எதிர்காலச் சந்ததியினருக்கு உணர்த்தும் நிறுவனமாக இருக்குமென்பதில் ஐயமில்லை.

யாழ்ப்பாண மாநகரசபையின் கடந்த ஐம்பது ஆண்டு கால வரலாற்றில் தம்மை அர்ப்பணித்த சகல மக்கள் பிரதிநிதிகட்கும் அவர்களுக்குப் பக்கபலமாக விளங்கிய எல்லா அலுவலர்களையும் இந்நேரத்தில் மனதில் இருத்தி இதன் எதிர்காலச் சேவை வளம்மிக்கதாக அமைய எனது வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**க. பரமலிங்கம்**

செயலாளர்,

மாகாண பொதுநிர்வாக, உள்ளூராட்சி, கூட்டுறவு, கிராம அபிவிருத்தி, வீதி அபிவிருத்தி, கைத்தொழில் அமைச்சு, வ.கி. மாகாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கௌரவ மாநகராட்சி மன்ற உறுப்பினர்

# மு.தவநாதன்

அவர்களின்

# வாழ்த்துச் செய்தி

ஈழமணித் திருநாட்டின் இன்தமிழர் திருநகராம் யாழ்ப்பாணத்தில், மக்கள் சேவையில் 50 வருடங்களைப் பூர்த்தி செய்து இன்று பொன்விழா காணும் யாழ்ப்பாண மாநகராட்சி மன்றம் பல இன்னல்களுக்கு மத்தியிலும் அதன் சேவைகளை மேற்கொண்டு வருகின்றது. நிதிப்பற்றாக்குறை, ஆளணி பற்றாக்குறை, போதிய இயந்திரம், இடவசதிகள், தொழில்நுட்ப வசதிகள் போன்ற குறைபாடுகள் இருந்தும் பல வேலைத் திட்டங்கள் மூலம் மக்கள் பணிகளை மேற்கொண்டு வருவது உத்தியோகஸ்தர்களின் மதிநுட்பத்தினையும், கடமையுணர்வுகளையும் எடுத்துக் காட்டுகின்றது.

யுத்தத்தினால் சிதைந்து போன நவீன சந்தைக் கட்டிடத்தின் ஒருபகுதி, எவ்வித மாற்றமும், வேறுபாடும் தென்படாது மறுபகுதியை ஒத்ததாக வடிவமைத்து மீளவும் கட்டியெழுப்பப்பட்டுள்ளமை, நெறிப்படுத்திய அதிகாரிகளினதும், தொழிலாளர்களினதும் திறமையினை சான்றுபடுத்துவதாக அமைந்துள்ளது.

நீண்ட காலமாக மக்கள் பிரதிநிதிகள் அல்லாது ஆணையாளர்களின் கீழ் இயங்கி வந்த இம்மாநகராட்சிமன்ற நிர்வாகம் 1998ம் ஆண்டிலிருந்து மக்களால் தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதிகளோடு முரண்பாடுகளின்றி கருத்துப் பரிமாறல்களோடும், புரிந்துணர்வோடும் செயற்பட்டு வருவது பணியாளர்களது பண்பினை வெளிப்படுத்துகின்றன. மாற்றுக் கருத்துக்களை கொண்டுள்ள கட்சிகளாக இருந்தாலும் சபை அமர்வுகளின் போது தீர்மானங்கள் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டு வருவதும் மன்றத்தின் சிறப்பிற்கு மேலும் பெருமை சேர்க்கின்றது.

**ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு**
**ஒற்றுமை நீங்கிடில் அனைவர்க்கும் தாழ்வு**

**பொன்விழா மலர் சிறப்புற வேண்டுமென ஆசிகூறி வாழ்த்துகின்றேன்.**

முத்துக்குமாரு தவநாதன்
எதிர்க்கட்சி தலைவரும்
நிதிக்குழு உறுப்பினரும்,
யாழ்.மாநகராட்சி மன்றம்,
03.03.2002.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## துரைரத்தினம் அவர்களின்

# வாழ்த்துச் செய்தி

யாழ்ப்பாணம் மாநகரசபை ஐம்பதாம் ஆண்டைத் தொட்டு பொன்விழா காண்பது குடாநாட்டு மக்கள் மகிழத்தக்க ஒரு நல்விழா ஆகும். ஒரு நாள், இரண்டு நாள் அல்ல, ஐம்பது ஆண்டுகள் சாதனைக்காக பொன்விழா மலர் எடுக்கிறோம்.

ஐம்பது ஆண்டு காலத்தில் யாழ்ப்பாணம் மாநகரசபை சந்தித்த சோதனைகளும் ஏராளம். செய்த சாதனைகளும் ஏராளம். சோதனைகளை வெல்லவும் சாதனைகள் புரியவும் பெருந்துணையாக இருந்த, இருந்துவரும் நிர்வாகத்தையும் ஊழியர்களையும், சகமாநகரசபை உறுப்பினர்களையும் பாராட்டுகின்றேன்.

பொன்விழா காணும் மாநகரசபைக்கு யாழ்ப்பாண மக்களைச் சுகமாக மட்டுமன்றி சுயமரியாதையுடனும் வாழவைக்க வேண்டும் என்ற பொறுப்பும் கடமையும் உண்டு. அந்த வகையில் வழிகாட்டும் ஒளிவிளக்காக மாநகரசபை முதல்வர் உயர்திரு. செல்வன் கந்தையன் புகழ் ஓங்கவும் தொண்டாற்றவும் வாழ்த்துகிறேன்.

பொன்விழாக் காணும் யாழ்ப்பாணம் மாநகரசபை மணிவிழாக் களையும், வைரவிழாவினையும், நூற்றாண்டு விழாவினையும் எய்தி காலாகாலத்திற்கும் நிலைத்து நிற்கும் என்பதில் ஐயமில்லை.

பொன்விழா மலர் தமிழ் மக்களின் நெஞ்சங்களில் என்றும் மணம் வீச வாழ்த்துகிறேன்.

நன்றி.

**க. துரைரத்தினம்,**
(யாழ். மாநாகரசபை உறுப்பினர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒற்றுமையே ஓரினத்தின் உயர்வைக் காட்டும்



பாரெல்லாம் புகழ் பரவும் யாழ் நகரில்
பழம் பெருமை காக்கும் தமிழ் மக்கள் வாழும்
உளரதிலே மையாமான நல்லூர்க் கந்தன்
உறைவிடத்தின் முன்புறத்தில் அமைத்து நிற்கும்.

சீரான மாநகர சபையின் சேவை
சென்ற பத்தைத்தாண்டு தன் சேவை காத்து
பாராட்டு புகழ் பெற்றுப் பொன்விழாவை காண
பல்லறிஞர் கல்விமான்கள் ஒன்று கூடி.

இனிவரும் காலங்களிச் சபையின் சேவை
ஏற்றத்தாழ்வில்லா நம் மக்களுக்காய்
கனிவோடு அயர்வு காணச்சேவை செய்யக்
காத்து நிற்பதே நமது கடமையாகும்.

ஒற்றுமையே ஓரினத்தின் உயர்வைக் காட்டும்
உயர்வுதான் உழைப்பதற்குத் துணிவு கூட்டும்
வீணர்களின் அடிமைகளாய் விளங்கி விடாமல்
வீறுகொண்ட வீரர்களாய் விளங்க வேண்டும்.

இமைத பேதம் என்றில்லாமல்
கடந்தபல நிகழ்வுகளை முற்றும் மறந்து
இச் சபையில் நாமெல்லாம் ஓர் இனமே
என்ற மனப்பாங்கை இனிக் கடைப்பிடிப் போல.

எல்லோரும் வாழ்த்துரைகள் எழுதுகின்ற வேளையில் நான்
கல்லாயிருப்பதுதான் தகுமா?
பல்லாண்டு மாநகரசபை வளர்க வாழ்த்துகின்றேன்
எல்லாம் வல்ல இறைவனை நினைத்து.

**மி. ஜேசுதாசன்** ஜே.பி.
யாழ் மாநகரசபை உறுப்பினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



யாழ். மாநகரசபை உறுப்பினர்

## தங்கமுகுந்தன் அவர்களின்

# வாழ்த்துச் செய்தி

யாழ்ப்பாண மாநகர சபையின் பொன்விழா ஆண்டு தொடர்பான கொண்டாட்டங்கள் நடைபெறும் வேளையில் அது தொடர்பாக வெளியிடப்படும் மலருக்கு வாழ்த்துச் செய்தியை சபையின் அங்கத்தவன் என்ற வகையில் தெரிவிப்பதில் பெருமனநிறைவு அடைகின்றேன்.

பழம்பெரும் இராசதானியின் ஆட்சிக்குட்பட்ட ஒரு முக்கிய சபையின் பொன்விழாக் காலத்தில் நாமும் அந்த சபையில் ஒரு பதவியில் இருக்கச் சந்தர்ப்பத்தை அளித்த நல்லூர்ப் பெருமானின் திருவருளை எண்ணி மனதாரப் போற்றித் துதிக்கின்றேன். அன்றைய யாழ்ப்பாண நகரம், அதுதொடர்பான சில எண்ணங்களை மீட்டுப்பார்க்க இந்தச் சந்தர்ப்பத்தை நான் பயன்படுத்த விரும்புகின்றேன்.

பட்டணம் என்று சிறுவயதில் எமது கிராமத்தில் குறிப்பிடும் யாழ் நகருக்கு குறைந்தது மாதத்தில் இருதடவை வந்து போவது கிராமமான நிகழ்வு. விடுமுறை தினங்களில் அது சனி, ஞாயிறு அல்லது பௌர்ணமி எதுவாயினும் சரி எமது குடும்பத்தவர்கள் பட்டணத்திற்கு காரில் வந்து தமிழ்த் திரைப்படமொன்றை ராஜா, வின்சர், மனோகரா, லிடோ, வெலிங்டன், ராணி ஏதாவதொரு திரையரங்கில் பார்த்து சுபாஸில் ஐஸ்கிறீம் குடித்து தாமோதர விலாஸில் வடையும் போளியும் கட்டிக்கொண்டு போவது வழக்கம்.

1974இல் நடைபெற்ற தமிழாராய்ச்சி மாநாடு இன்றும் எனது மனத்திரையில் நீங்காமலிருக்கின்றது. அலங்கார நுழைவுப் பந்தல்கள் மின்விளக்குகளால் அலங்கரிக்கப்பட்டு யாழ் நகரம் தேவலோகம்போலக் காட்சிதந்தது. விதவிதமான காட்சிகளைக் கொண்ட அலங்கார ஊர்திகளின் அணிவகுப்பு லேசான மழைத்தூறலிலும் பல மணிநேரம் தொடர்ந்தவண்ணமிருந்தது. மக்கள் கூட்டம் எண்ணிலும் சொல்லிலும் அடக்கமுடியாது. சாதி மத பேதமின்றி அனைத்து யாழ்ப்பாணக் குடாநாட்டு மக்களும் ஏன் வெளிநாட்டாரும் கூடக் கலந்து சிறப்பித்த அந்த மாநாட்டு நிகழ்வுகளே எனக்கு சிறுவயதில் அனைவருடனும் சரிசமமாகப் பழகும் பாங்கை வளர்த்ததுமட்டுமல்ல இன்று பல நண்பர்களை நான் கொண்டிருக்கவும் காரணமாயிருக்கிறது.

மாநகரத்தின் ஒவ்வொரு கட்டங்களின் அமைப்புப் தனித்தன்மை கொண்டு விளங்கியிருந்தது. எமது மாநகரசபையிருப்பினும் சரி பொது நூலகமாயினும் சரி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தபாற் கந்தோர், புகையிரத நிலையம், வீரசிங்கம் மண்டபம், நாவலர் மண்டபம், திறந்த வெளியரங்கு அனைத்தும் தனித்தனி சிறப்புப் பெற்றிருந்தன. முற்றவெளி மைதானத்தில் நிகழ்ந்த களியாட்ட விழாக்கள், மாட்டுவண்டிச் சவாரிப் போட்டிகள் மறக்க முடியாதன. மணிக்கூட்டு வீதியால் நடந்து சென்று சுப்பிரமணியம் பூங்காவில் சுழல் இராட்டினத்தில் விளையாடியதும் ஊஞ்சலாடி மகிழ்ந்ததும் பசுமையான நினைவுகள். இவை மீண்டும் திரும்ப எப்போது வருமென அங்கலாய்க்கின்றேன்.

இன்று வண்ணை வைத்தீஸ்வரன் கோவில் ராஜகோபுரம் புனரமைக்கப்பட்டு கும்பாபிஷேகம் நிறைவடைந்துள்ள வேளையில் - சமாதான ஒளி பரவ ஆரம்பிக்கின்ற ஒரு விடிகாலைப் போதில் - எமது சபையும் தனது பொன்விழாவைக் கொண்டாட ஏற்பாடுகளைச் செய்வதும் எப்பவோ முடிந்த காரியம் - சிவயோக சுவாமிகள் குறிப்பிட்டதுபோல தெய்வ நிகழ்வென்றே கருதுகின்றேன். மீண்டும் யாழ் நகர் தனது பழைய பொலிவைப் பெற்றால் அந்த மன நிறைவை - நீண்ட நாட் கனவை அடையும் ஒருவனாக நானும் இருப்பேன். கனவு நனவாவது காலத்தின் கடமை.


நான் பெற்ற இன்பம் பெறுக இவ் வையகம் என்ற மூலரின் மந்திரத்தை தெய்வம்தான் நிலை நிறுத்த வேண்டும் என்று வேண்டி மாநகரத்தின் பொன் விழா நிகழ்வுகள் சிறக்க மனதார வாழ்த்தி - இறைவனைப் பணிந்து நிற்கின்றேன்.

நன்றி.

**திரு. தங்கமுகுந்தன்**

யாழ். மாநகரசபை உறுப்பினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## யாழ் மாநகராட்சி மன்ற உறுப்பினர்
## ம. கருணாநிதி அவர்களின்
# வாழ்த்துச் செய்தி

ஐம்பது ஆண்டுகளைப் பூர்த்தி செய்து இன்று பொன்விழாக்காணும் எங்கள் மாநகராட்சி மன்றம் இன்னும் பல சாதனைகள் படைத்து மேன்மேலும் வளர்ச்சி பெற வேண்டுமென வாழ்துவதில் மட்டற்ற மகிழ்ச்சியடைகிறேன்.

ஈழத்தமிழர்களின் இதயமாக விளங்கும் எங்கள் மாநகராட்சி மன்றம் யாழ் மாநகரின் வளர்ச்சிக்காக பல இடர்பாடுகளுக்கு மத்தியிலும் சேவைகள் புரிந்து சாதனைகள் படைத்துள்ளது.

இரண்டு முதல்வர்களை பலி கொடுத்தும் தம் உயிரை பணயம் வைத்தும் அர்ப்பணிப்புடன் மக்கள் சேவையாற்றிய கௌரவ உறுப்பினர்களைக் கொண்டது யாழ் மாநகராட்சி மன்றம்.

1999ஆம் ஆண்டிலே கொண்டாடப்பட வேண்டிய பொன்விழா இவ்வாண்டிலே யாவது பொன்விழா நிகழ்வு இடம் பெறுவது எனக்கு மகிழ்ச்சியைத் தருகிறது.

எமது மாநகராட்சி மன்றம் பல இடர்பாடுகளைச் சந்தித்தும் தலை வணங்காமல் மக்கள் சேவையை ஆற்றிவரும் இச்சந்தர்ப்பத்தில் நானுமோர் உறுப்பினர் என்னும் கௌரவத்தை பெறுவதில் ஆனந்தம் கொள்வதுடன் தொடர்ந்து பல சாதனைகள் படைக்க வேண்டுமென வாழ்த்துகிறேன்.

**நன்றி வணக்கம்.**

**ம. கருணாநிதி**
உறுப்பினர்,
மாநகராட்சி மன்றம்,
யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திரு. இரத்தினசபாபதி அவர்களின்

# வாழ்த்துச் செய்தி



இந்து சமுத்திரத்தின் நித்திலமாகிய ஈழத்தின் வடபால் தமிழராட்சியின் தனிப்பெரும் தலைநகராம் யாழ்ப்பாண மாநகரின் நிர்வாகசபையாம் பெருமைபெறு மாநகரசபை பொன் விழாக் காண்பதையிட்டு உள்ளம் உவகை கொள்கின்றது. யாழ்நகர் சங்கிலி மன்னனால் ஆளப்பட்ட சிறப்புடையது. வரலாற்றுப் புகழ்மிக்க கல்விச்சாலைகளும், நூல்நிலையங்களும், அறப்பணி ஆற்றும் ஆதீனமும், அழகுறு நல்லைக்கந்தனும், ஆலயங்களும், அங்காடிகளும், குளங்களும், கடற்பரப்பும், கனிவுறு மரங்களும் நிரம்பப்பெற்ற மாநகரை நிர்வகிக்கும் இச்சபை சிறப்புற பணியாற்றி வந்துள்ளது. சித்தர்கள் பலர் வாழ்ந்து தடம் பதித்துச் சென்ற சிறப்புடையதும் இம் மாநகரசபைப்பகுதி. இத்தனைச் சிறப்புறு பதியை போரின் உக்கிரமும் விட்டுவைக்க வில்லை. அதன் அரவணைப்பில் அழிந்தவை கோடி. அதனை மீட்டெழுப்பி அழகு செய்ய கடந்தகால அரசும், அமைச்சும் தவறிவிட்டது. அரசியல் நிர்வாக பாதிப்பின் மத்தியிலும் தமிழர் விடுதலைக் கூட்டணியின் அரசியல் அர்ப்பணிப்புக்கள், தியாகங்களின் மத்தியில் பொன் விழாவை இச்சபை சிறப்புற காண்கின்றது. தன்னலம் கருதாத புதிய முதல்வர் நிர்வாகத்தின் கீழ் பொன்விழா சிறப்புற நிகழ்வதையிட்டு மனம் உவகை கொள்கின்றது. எத்தடைகள், எவ்விடர்கள் வரினும் உறுதியுடன் எதிர்கொண்டு சபை வளரவும் தமிழர் தாயகம் மிளிரவும் அடலேறு அண்ணல் ஆலாலு வழியில் நின்று வாழ்த்துகின்றேன்.

**வாழ்க சபை; வளர்க அதன் பணி.**

**இரத்தினசபாபதி**
மாநகரசபை உறுப்பினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# செல்லையா விஜயரட்ணம்
## அவர்களின்
# வாழ்த்துச் செய்தி

ஐம்பது ஆண்டுகளைப் பூர்த்திசெய்து இன்று பொன்விழாக் காணும் எங்கள் மாநகராட்சி மன்றம் இன்னும் பல சாதனைகள் படைத்து மேன்மேலும் வளர்ச்சி பெற வேண்டுமென வாழ்த்துவதில் மட்டற்ற மகிழ்ச்சியடைகிறேன்.

அன்பு, அகிம்சை, வீரம், மானம் என்னும் பண்பாட்டு கலாச்சாரங்களை தன் உயிரிலும் மேலாக மதித்து வாழும் ஈழத் தமிழர்களின் இதய ஸ்தானமாக விளங்கும் எங்கள் மாநகராட்சி மன்றம் யாழ் மாநகரின் வளர்ச்சிக்காக பல சாதனைகள் புரிந்துள்ளது. சென்ற இரு சதாப்தங்களில் சொல்லொணா பல இடர்ப்பாடு களையும் சந்தித்துள்ளது.

தமிழர் விடுதலைக் கூட்டணி யாழ் மாநகராட்சி மன்றில் மக்களாட்சியை ஏற்படுத்த யாரும் முன்வராத காலகட்டத்தில் அதன் தலைமையை ஏற்று நடாத்திய பேராற்றல்மிக்க திருமதி சரோஜினி யோகேஸ்வரன், பொ. சிவபாலன் போன்ற முதல்வர்களைப் பலிகொடுத்தும், மற்றும் மாநகராட்சி மன்ற உறுப்பினர்கூட சுதந்திரமாக நடமாட முடியாத காலகட்டத்திலும் தம் உயிரைப் பணயம் வைத்து அர்ப்பணிப்புடன் சேவையாற்றிய உறுப்பினர்களைக் கொண்டது எங்கள் மாநகராட்சி மன்றம்.

1999ஆம் ஆண்டிலேயே கொண்டாடப்பட வேண்டிய இப் பொன்விழா நாட்டின் அன்றைய சூழ்நிலை காரணமாக ஒத்திவைக்கப்பட்டு உதயசூரின் பார்வையிலே தமிழினம் விழித்துக் கொண்ட இவ்வேளையிலே சமாதான ஒளிக்கீற்று தென்படும் இச்சந்தர்ப்பத்தில் கொண்டாடப்படுகின்றது.

இம் மன்றில் ஓர் சிற்றூழியனாகக் கடமையாற்றிய ஒருவரை மாநகர முதல்வராக பதவி வகிக்க சந்தர்ப்பம் வழங்கிய தமிழர் விடுதலைக் கூட்டணியின் சிரேஷ்ட உபதலைவரும் யாழ் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமாகிய எனது தலைவர் மதிப்புக்குரிய வீ. ஆனந்தசங்கரி (சத்திய ஆணையாளர்) அவர்களுக்கும் எனது மனமுவந்த நன்றிகளைத் தெரிவிப்பதில் மகிழ்ச்சியடைகின்றேன்.

மாநகர முதல்வர் திரு. செல்லன் கந்தையன் தலைமையில் இப் பொன்விழா நிகழ்வு இடம்பெறுவது மேலும் ஓர் சிறப்பம்சமாகும். எமது நிர்வாகத்தில் (தமிழர் விடுதலைக் கூட்டணி) இவ்விழாக் கொண்டாட சந்தர்ப்பம் கிடைத்ததையிட்டு மிகுந்த மனநிறைவுடன் இவ்விழாச் சிறப்புறவும் எமது யாழ்ப்பாண மாநகரம் மேன்மேலும் வளர்ச்சி பெறவும் வாழ்த்துகின்றேன்.

நன்றி

**வாழ்க தமிழ்; வளர்க மக்கள் சேவை!**

**செல்லையா விஜயரட்ணம்**

(சமாதான நீதவான்) மாநகராட்சி மன்ற உறுப்பினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ்ப்பாண மாநகரசபை உறுப்பினர்

# திரு. எட்வேட் அவர்களின்



# வாழ்த்துச் செய்தி

பொன் மலராய் பூத்துக்குலுங்கி பொலிவுற்றிருக்கும் யாழ்ப்பாண மாநகரசபை, வைரமாய் ஒளிவீச வாழ்த்துகிறேன்.

மக்கள் சேவையில் யாழ்ப்பாண மாநகரசபையின் பணியும், சிறப்பும் பல்லாண்டு மேலும் தொடர - வெற்றி நடைபோட - எனது உளமார்ந்த நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

வளர்க யாழ்ப்பாண மாநகரசபை, அளவிலாப் புகழோடு!

**மோ. எட்வேட்,**
யாழ்ப்பாண மாநகரசபை
உறுப்பினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



“புளொட்” அமைப்பு மாநகரசபை உறுப்பினர் நிதி ஒதுக்கீட்டிலிருந்து அமைக்கப்பட்ட 4வது உலகத் தமிழாராட்சி மாநாட்டு நினைவுத் தூபியின் பெயர் முகப்பு வளைவு



வரவேற்க ஆளில்லாது வாடி நிற்கும் யாழ் வரவேற்பு வளைவு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாநகரசபை உறுப்பினர்

## ச. அரவிந்தன் அவர்களின்

# வாழ்த்துச் செய்தி



ஈழத்தமிழரின் இதயமெனவும் தமிழ் ஈழத் தாயகம் எனவும் கருதப்படும் யாழ். நகரின் நிர்வாக மையமாக விளங்கும் யாழ் மாநகரசபை தனது 50ஆவது ஆண்டுகால சேவையை நிறைவு செய்து இன்று பொன்விழாக் கொண்டாடுவது குறித்து மிகுந்த மகிழ்ச்சி அடைகின்றேன்.

சென்ற அரை நூற்றாண்டில் முதல் 30 வருடங்களாக மேற்கொள்ளப்பட்டிருந்த நகர அபிவிருத்திகள் யாவும் சென்ற 20 வருடங்களாக எமது மண்ணில் இடம்பெற்ற பேரினவாதப் போரினாலும், திட்டமிடப்பட்டு மேற்கொள்ளப்பட்ட நாச வேலைகளாலும் அழித்தொழிக்கப்பட்டு இந்த மண்ணின் வளங்கள் யாவும் அழிக்கப்பட்டு யாழ்நகர் இன்று களை இழந்து காணப்படுகிறது.

யாழ்நகரில் தமிழர்களின் கட்டடக்கலையை பறைசாற்றி நின்ற யாழ். மாநகரசபை கட்டிடம். ஆசியாக் கண்டத்திலேயே அதி சிறந்த நூலகம் எனப்போற்றப்பட்ட யாழ் பொதுநூலகம், யாழ்நகரின் ஒரு வரலாற்றுச் சின்னமாக திகழ்ந்த கோட்டை, போன்ற இன்னும் பல வரலாற்றுச் சிறப்புக்களை எல்லாம் இழந்து நிற்கும் இந்நிலையில் மீண்டும் சமாதான ஒளி தென்படும் இவ்வேளையில் யாழ். மாநகரசபை தனது பொன்விழாவை கொண்டாடுகிறது. இவ் வேளையில் இச்சபையின் ஓர் அங்கத்தவனாக இருக்கும் வாய்ப்பு கிடைத்துள்ளதையிட்டு மிகுந்த மகிழ்ச்சி அடைகிறேன்.

எங்கள் இரு கண்களென நம்தமிழர் போற்றும் எழில் தமிழும் சைவமும் இங்கு ஏற்றம் பெற இவ் விழா வழிசமைக்கவேண்டுமென்று எங்கள் குலதெய்வமாம் நல்லைக்குமரனடி பணிந்து வேண்டுகிறேன்.

நன்றி

**அரவிந்தன் ஜே. பி.**
மாநகரசபை உறுப்பினர்,
யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டேவிட் தம்பிராஜா அவர்களின்

# வாழ்த்துச் செய்தி

யாழ் மாநகரசபை பொன்விழா மலருக்கு இக் கட்டுரையை சமர்ப்பிப்பதில் நான் பெருமகிழ்ச்சி அடைகின்றேன். யாழ் மாநகரசபையின் வரலாற்றில் அமரர் திரு. அல்பிறட் துரையப்பாவின் காலம் பொன் எழுத்துக்களால் பொறிக்கப்பட வேண்டியவையாகும். யாழ் நகரைப் பல வகையிலும் அலங்கரித்தமை அல்பிறட்டையே சாரும். பல திணைக்களக் கட்டடங்களை, பாதைகள் அபிவிருத்திகளை, பல வேலைத் திட்டங்களை உருவாக்கித்தந்த மக்கள் திலகம் அல்பி என்று கூறினால் அது தவறில்லை. ஏழை மக்களின் தோழன், எல்லோரதும் இனிய நண்பன், பிரபல்யம் வாய்ந்த வழக்கறிஞர், விளையாட்டுத்துறையில் மிக்க ஆர்வமுடையவர் அல்பி.

குழந்தைகள் மகிழ்ந்து விளையாட, கூடி உறவாட, சிரித்து மகிழ, சிறந்து திகழப் பல சிறுவர் விளையாட்டு அரங்குகள், பூங்காக்கள் போன்றவற்றை தன் நேரடிக் கண்காணிப்பில் சிறப்புற அமைத்த பெரியார். வருங்காலத் தமிழினம் வளங்கொளிக்க தன் காலப் பிள்ளைகள் எழுச்சியுறும் இனிய நிலையைத் தன் மனக் கண்ணால் பார்த்து மகிழ ஆவல் கொண்டிருந்தார் அல்பி. குழந்தைகளின் உடல் தரத்தை, உடல் திறத்தை, உடல் பலத்தை வளர்த்துவிட உளநலத்தை, உளவளத்தை, உளவலிமையை மிகுதிப்படுத்த எண்ணிய எம் அல்பி பல விளையாட்டுத்துறை உத்தியோகஸ்தர்களை நியமனம் செய்தார்.

தமது பொறுப்புணர்தல், கடமைகளைப் புரிந்துகொள்ளுதல், சுயநலம் அறிதல், சில தியாகங்களை மேற்கொள்ள முயலுதல், பிறருக்கு உதவுதல், வழிகாட்டுதல் போன்ற உயர்ந்த குணங்களை அல்பியில் காணமுடிந்தது. மற்ற மாநகர அங்கத்தவர்களோடு கூடிப்பழகும் குணங்களுக்கு அடிப்படையாக உள்ள தனிப்பட்ட குணங்களான அடக்கம், கடமை, கண்ணியம், கட்டுப்பாடு, உணர்வு, வீரம், தியாகம், மற்றவர்களை மதித்தல், தன்னம்பிக்கை போன்றவற்றை மிகுதியாக வளர்த்து மேன்மைகொண்ட பெரியார்.

இப்படிப்பட்ட ஏற்றமிகு குணாதிசயங்களை வளர்த்து வீட்டிற்கும், நாட்டிற்கும், வளமான பணியாற்றும்வாய்ப்பு, வசதிகள் அளித்து பலமிக்க நம் தாய்மண்ணை புகழ்மிக்கதாக உருவாக்கிக்கொண்டிருக்கும் நேரத்தில் காலன் அவரை கவர்ந்து கொண்டு நம்மை நிற்கதியில் நிறுத்திச் சென்றான்.

அல்பினால் பயன்பெற்ற அனைவரும் இதை உணர்வார்கள் என நம்பி அவர் மீண்டும் நம் தமிழ் மண்ணில் பிறந்து, இடையில் விட்டுச்சென்ற தம் பணியைத் தொடர இறைவனை வேண்டி நிற்கின்றேன்.

'தாவீதின் மைந்தன்'
ம. டேவிட் தம்பிராஜா
விளையாட்டுத்துறை விற்பன்னர்
யாழ்நகர்.

22/11 பாரதிலேன்,
சுண்டிக்குளி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# MESSAGE FROM HON. MINISTER OF HOME AFFAIRS PROVINCIAL COUNCILS AND LOCAL GOVERNMENT

I am very pleased to send this message of felicitation on the occasion of the golden jubilee celebrations of the Municipal Council of Jaffna. Achieving 50 years is an important milestone in the history of an institution such as Jaffna Municipal Council. Therefore, I congratulate the Council and all its members and the staff for their co-operation and dedication towards the achievement for the betterment of the living conditions of the people.

Though, the city of Jaffna which has for long years in the past been the citadel of culture of social renaissance of our people, presently disordered by the unfortunate disharmonies among our own people.

I am confident that the atmosphere of peace and understanding created by the new Government will mark a remarkable change for the better. I hope that the Municipal Council of Jaffna will do its best possible to bring about peace and prosperity to the city and its people. I sincerely wish that Golden Jubilee celebration will be a success.

ALICK ALUWIHARE
Minister of Home Affairs, Provincial
Councils and Local Government.

Ministry of Provincial Councils and Local Government,
330, Union Place,
Colombo.
25-02-2002.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## துரைரத்தினம் அவர்களின்

# வாழ்த்துச் செய்தி

யாழ்ப்பாணம் மாநகரசபை ஐம்பதாம் ஆண்டைத் தொட்டு பொன்விழா காண்பது குடாநாட்டு மக்கள் மகிழத்தக்க ஒரு நல்விழா ஆகும். ஒரு நாள், இரண்டு நாள் அல்ல, ஐம்பது ஆண்டுகள் சாதனைக்காக பொன்விழா மலர் எடுக்கிறோம்.

ஐம்பது ஆண்டு காலத்தில் யாழ்ப்பாணம் மாநகரசபை சந்தித்த சோதனைகளும் ஏராளம். செய்த சாதனைகளும் ஏராளம். சோதனைகளை வெல்லவும் சாதனைகள் புரியவும் பெருந்துணையாக இருந்த, இருந்துவரும் நிர்வாகத்தையும் ஊழியர்களையும், சகமாநகரசபை உறுப்பினர்களையும் பாராட்டுகின்றேன்.

பொன்விழா காணும் மாநகரசபைக்கு யாழ்ப்பாண மக்களைச் சுகமாக மட்டுமன்றி சுயமரியாதையுடனும் வாழவைக்க வேண்டும் என்ற பொறுப்பும் கடமையும் உண்டு. அந்த வகையில் வழிகாட்டும் ஒளிவிளக்காக மாநகரசபை முதல்வர் உயர்திரு. செல்வன் கந்தையன் புகழ் ஓங்கவும் தொண்டாற்றவும் வாழ்த்துகிறேன்.

பொன்விழாக் காணும் யாழ்ப்பாணம் மாநகரசபை மணிவிழாக் களையும், வைரவிழாவினையும், நூற்றாண்டு விழாவினையும் எய்தி காலாகாலத்திற்கும் நிலைத்து நிற்கும் என்பதில் ஐயமில்லை.

பொன்விழா மலர் தமிழ் மக்களின் நெஞ்சங்களில் என்றும் மணம் வீச வாழ்த்துகிறேன்.

நன்றி.

க. துரைரத்தினம்,
(யாழ். மாநாகரசபை உறுப்பினர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "பொன்விழாவே பெருவிழாவாய் வாழீ"

இலங்கையின் சென்னியாயிலங்கு வட புலத்தில்
குடையும் கொடியும் கோலோச்சி
குலங்கொடியோம்பி முடி புனைந்தாண்ட
சுவடழியா திருவூரில்
துலங்கு மகர யாழ்தாங்கி தூய பணியில்
நெறியினுயர் மாநகரசபையே
ஞாலங்களிப்ப ஞாயிற்றாயொளிரும் நின்
பொன் விழாவைப் போற்றினோம் வாழி.

பண்பான தொண்டாற்றும் மகப்பேற்று விடுதியை
சித்த மருத்துவ வைத்திய சேவைகளை
புண்ணிய மீதென்று புவனம் முழுதும் புகழும்
குடிநீர் வழங்கும் சீரை
நுண்ணறிவூட்டும் நூலக சேவகத்தை
தமிழ் கூறுமுலகம் பாராட்டும்
மண்டலத் திசைகள் கிராமத்து வேலைகள்
செயல்படு முறையை வாழ்த்தும்.

நிலங்களைந்தும் நீள் விசும்பும் யாவும்
வணங்கு தெள்ளு தமிழ் வாழி!
சீலங்கொள் தமிழ் மகளின் சிரமுயர
ஒலிக்கும் மகர யாழும் வாழி!
நலங்காக்க நாளுமுழைக்குமுயர்
பல்துறை பணியாளரும் வாழி!
கலங்கரை விளக்காய் காலமெலாம் சுடர்
பரப்பும் மாநகராட்சி மன்றமே வாழி!

கண்ணியம் துணையாய் கடமைகளுயிராயுரைத்த
நகர மன்றின் முன்னொடிகள் வாழி!
திண்ணிய நெஞ்சினராய் திறனுடை மன்றின்
முதல்வரும் வாழி! சக உறுப்பினரும் வாழி!
மண் வாழி பொங்கு மறவர் குலம் வாழி
நகர மக்களும் திருவோங்க வாழி
எண்ணரும் சேவைகள் வாழி ஏற்றமாயென்றும் வாழி!
பொன் விழாவே பெரு விழாவாய் வாழி!

**கந்த தியாகராசா ஜே.பி.**
கோண்டாவில் கிழக்கு,
கோண்டாவில்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சரசாலை இந்துமன்ற செயலாளர்

# திரு. சிவசங்கரநாதன் அவர்களின்

# வாழ்த்துச் செய்தி

**பேரன்புடையீர்!**

பொன்விழாவினைக் கொண்டாடும் செய்தியினை அறிந்து சந்தோஷம். யாழ்ப்பாண மாநகரசபை மேலும் பல்வேறு பணிகளை பல்லாண்டு காலம் செய்ய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

பணியிலுள்ள மாநகரசபை முதல்வர், பிரதிமுதல்வர், உறுப்பினர்கள், ஆணையாளர், செயலாளர், சலக உத்தியோகத்தர்கள் அனைவரதும் பணியினை பொன்விழா ஆண்டில் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

வணக்கம்.

மன்றத்தின் சார்பில்,
**க. சிவசங்கரநாதன்**
செயலாளர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



முன்னாள் நகரமாதா அமரர் திருமதி சரோஜினி யோகேஸ்வரன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



முன்னாள் நகரபிதா அமரர் பொன். சிவபாலன் அவர்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புனர்வாழ்வளிப்பு, அகதிகள் மீள்குடியமர்த்துகை அமைச்சர்

# கௌரவ வைத்திய கலாநிதி ஜெயலத் ஜெயவர்த்தன

அவர்களின்

## வாழ்த்துச் செய்தி

யாழ்மாநகரசபை தனது பொன்விழாவை இவ்வாண்டு கொண்டாடுவதையிட்டு நான் மிகவும் மகிழ்ச்சியடைகிறேன்.

இலங்கையில் யாழ் மாநகரசபை ஏனைய மாநகரசபைகளுக்கு முன்மாதிரியாக பல்வேறு செயற்பாடுகளிலும், நிர்மாணவேலைகளிலும் ஈடுபட்டுவந்ததை பலரும் அறிந்த உண்மையாகும். பிரமாண்டமான யாழ் மாநகரநபை மண்டபம், தெற்காசியாவிலேயே மிகவும் பிரபல்யம் வாய்ந்த பொது நூல் நிலையம், திறந்த வெளியரங்கம், விளையாட்டரங்கம், நவீன சந்தை தொகுதி ஆகியவை யாழ் மாநகரசபையின் செயற்பாடுகளை வெளிக்காட்டியவையாகும்.

கடந்த இரு தசாப்தங்களுக்கு மேலாக அண்மைக் காலம் வரை இடம்பெற்று வந்த உள்நாட்டு யுத்த சூழ்நிலையால் யாழ் மாநகரசபையின் பிரமாண்டமான கட்டடத்தொகுதி முற்றாக அழிவுற்றது, பிரசித்தி பெற்ற பொது நூல் நிலையம் எரிக்கப்பட்டது, திறந்த வெளியரங்கு, விளையாட்டரங்கு, நவீன சந்தைத் தொகுதி அனைத்தும் சேதமாக்கப்பட்டன. யாழ்ப்பாண நகரின் அடையாளச்சின்னமான மணிக்கூட்டுக்கோபுரமும் சேதமாக்கப்பட்டது. இவை அனைத்தும் எமது நாட்டில் இடம் பெற்ற துர்ப்பாக்கிய நிகழ்வுகள் ஆகும்.

இன்றைய அரசு வடக்கை புணரமைத்து மீளக்கட்டியெழுப்புவதில் மிகவும் அக்கறையுடன் செயற்பட்டு வருகிறது. விரைவாகக் கட்டியெழுப்புவதில் எனது அமைச்சு முழுமையாக ஈடுபட்டுள்ளது. வெகு விரைவில் யாழ் நகரின் முன்னைய சிறப்பான கோலங்கள் மீளக் கொண்டுவரப்படும் என்பதில் எமது அரசுக்கு உறுதியான நம்பிக்கையுண்டு.

பொன்விழாக்காணும் யாழ் மாநகரசபைக்கு எனது அமைச்சின் ஆதரவு தொடர்ந்தும் தரப்படும். யாழ்ப்பாண மாநகரசபையின் பொன்விழா நிகழ்வு சிறப்பாக அமைய எனது வாழ்த்துக்கள்.

**வைத்தியகலாநிதி ஜெயலத் ஜெயவர்த்தனா,**
புனர்வாழ்வளிப்பு, அகதிகள், மீள்குடியமர்த்துகை
அமைச்சர்,
04-04-2002.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாராளுமன்ற உறுப்பினர் ஆனந்தசங்கரி

*அவர்களின்*

# வாழ்த்துச் செய்தி



யாழ். மாநகரசபை தனது 50வது வயதை பூர்த்தி செய்து பொன்விழாக் கொண்டாடும் இவ்வேளையில் சபையும், மாநகர முதல்வர், உறுப்பினர்கள், ஊழியர்கள் அனைவரையும் வாழ்த்துவதில் பெருமிதமடைகிறேன்.

பல சோதனைகள் மத்தியிலும், யாழ். நகர அபிவிருத்தியில் அக்கறை கொண்டு உழைக்கும் அத்தனை பேரும் பாராட்டுக்குரியவர்கள். கடந்த நான்கு ஆண்டுகளும் மிகப் பெரிய சோதனையான காலம். சோக சம்பவங்கள் நிறைய இடம்பெற்ற நேரம். யாரும் துணிச்சலுடன் பொறுப்புக்களை ஏற்கத் தயங்கிய வேளையில், துணிச்சலுடன் செயற்பட்ட செயல் வீரர்களைப் பாராட்டாமல் இருக்கமுடியாது.

சாதி, மத பேதமற்ற ஒரு முற்போக்கு சமுகமாகச் செயற்பட்ட யாழ். மாநகரசபை, சரித்திரம் படைத்துள்ளது என்பது எமக்கு பெருமைதரும் விடயமே. இந்த நிலையை உருவாக்கிய அனைவரும் பாராட்டுக்குரியவர்களே. யாழ். மாநகர சபை வளர்ச்சியில் அக்கறை கொண்டு உழைத்த அனைவரையும் பாராட்டி வாழ்த்துகிறேன்.

**வீ. ஆனந்தசங்கரி**
பாராளுமன்ற உறுப்பினர்,
யாழ். தேர்தல் மாவட்டம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கௌரவ உறுப்பினர் எஸ்.ஜெயச்சந்திரன் அவர்களின் வாழ்த்துச் செய்தி



யாழ் மாநகராட்சி மன்றத்தின் 50 வருடகாலம் பூர்த்தியடைந்து பொன்விழாக் காணும் இவ்வேளையில் எனது வாழ்த்துக்களைத் தெரிவிப்பதில் அகமகிழ்கின்றேன். இச்சபை மாநகரத்து மக்களின் குடிநீர், சுகாதார, போக்குவரத்துக்கான வீதி வசதிகள் மட்டுமல்லாது, வர்த்தகர்களினது சேவைக்குத் தனது அளப்பரிய பங்களிப்பினைச் செய்கின்றது.

சனசமூக நிலையங்களின் முன்னேற்றம், சமய அறிவுகளை வளர்க்கும் நோக்கில் அறிவுப் போட்டிகள் நடாத்தல், பாலர்கல்வி மேம்பாட்டிற்கான முன்பள்ளிச் சேவைகள், குடும்பநல சேவைகள், தீயணைப்பு சேவை போன்ற பணிகளில் ஈடுபட்டு மக்களிற்கு பெரும் பயன்பாடான சேவைகளை வழங்கி வருகின்றது.


இம்மாநகராட்சி மன்றம் தனது சேவைகளை மேலும் தொடர்ந்து அபிவிருத்திப் பணிகளை மேற்கொண்டு நகரை மேம்படுத்த வேண்டும்.

வரலாற்று நிகழ்வான இப்பொன்விழாவினை முன்னிட்டு வெளிவரும் பொன்விழா மலர் சிறக்க எனது வாழ்த்துக்களும், ஆசிகளும் உரித்தாகுக.

எஸ். ஜெயச்சந்திரன்
மாநகரசபை உறுப்பினரும்,
சுகாதாரகுழு உறுப்பினரும்,
யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கௌரவ உறுப்பினர் ஜெ.எம்.பசீர் அவர்களின் வாழ்த்துச் செய்தி



வடஇலங்கையின் வளம்கொழிக்கும் நன்நகராம் யாழ்ப்பாணத்தின் மாநகராட்சி மன்றத்தின் பொன்விழாவினை முன்னிட்டு வெளிவரும் மலரில் எனது வாழ்த்துச் செய்தியும் இடம்பெறுவதில் பூரிப்படைகின்றேன்.

மாநகராட்சி மன்றம் மக்கள் பிரதிநிதிகளைக் கொண்ட சபையாக இயங்கிய காலம் தொட்டு முஸ்லீம் சமூகத்திலிருந்தும் பிரதிநிதிகள் அங்கத்தவர்களாக இருந்து வந்துள்ளனர். யுத்த சூழல் காரணமாக யாழ்ப்பாண முஸ்லீம்கள் இடம்பெயர்ந்து வெளிமாவட்டங்களில் வாழ்ந்துவரும் இவ்வேளையிலும் முஸ்லிம் உறுப்பினர் ஒருவர் சபையிலே அங்கம் வகிப்பது பெருமைப்பட வேண்டிய விடயமாகும்.

மீண்டும் யாழ்ப்பாணத்தில் முஸ்லீம்கள் வாழக்கூடிய சூழ்நிலை உருவாக்கப்பட்டு, தமிழ் பேசும் அனைத்து மக்களும் ஒற்றுமையாக வாழ வேண்டும் எனவும் கேட்டு இப்பொன் விழா மலர் சிறப்பாக அமைவதற்கு எனது ஆசிகளை வழங்குகின்றேன்.

**ஜெ.எம்.பசீர்**
**மாநகரசபை உறுப்பினர்,**
**மராமத்துகுழு உறுப்பினர்,**
**யாழ்ப்பாணம்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மாநகராட்சி மன்ற உறுப்பினர்
## விக்னேஸ்வரன்
### அவர்களின்



# வாழ்த்துச் செய்தி

50ஆண்டுகள் சேவைகள் வழங்கி இன்று பொன்விழாக் காணும் யாழ். மாநகராட்சி மன்றத்தின் பொன்விழா மலரில் எனது வாழ்த்துக்கள் இடம்பெறுவதையிட்டு மகிழ்ச்சி அடைவதோடு, மாநகராட்சி மன்றத்தின் பணிகள் மென்மேலும் சிறப்பாக மக்களுக்குக் கிடைக்க வேண்டுமென எல்லாம் வல்ல நல்லூர் முருகனை வேண்டி பொன்விழா மலர் சிறப்புற எனது வாழ்த்துக்களையும் ஆசிகளையும் வழங்கி நிற்கின்றேன்.

**க. விக்னேஸ்வரன்**
மாநகராட்சி மன்ற உறுப்பினர்,
மராமரத்துக் குழு உறுப்பினர்,
யாழ்ப்பாணம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

pாராளுமன்ற உறுப்பினர்

திரு. சிவசிதம்பரம்

அவர்களின்

# வாழ்த்துச் செய்தி



தமிழீழத்தின் முக்கிய நகரான யாழ்ப்பாணத்தின் மாநகரசபை 50ஆவது ஆண்டு நிறைவைக் கொண்டாடும் வேளையில் ஒரு வாழ்த்துச் செய்தி அனுப்புவதில் பெருமகிழ்ச்சி அடைகின்றேன்.

மக்கள் நலனுக்காக இயங்கும் ஒரு ஸ்தாபனம் 50ஆண்டுகள் சிறப்பாகச் செயற்பட்டது பாராட்டுக்குரிய விடயம். மாநகரசபையின் தலைவர்களாக சிறந்த செயல் வீரர்கள் இருந்திருக்கின்றார்கள். சாம் சபாபதி, வைத்திய கலாநிதி தர்மலிங்கம், சுல்தான், அல்பிரட் துரையப்பா, நாகராஜா, விஸ்வநாதன் போன்றவர்களைப் பாராட்டக் கடமைப்பட்டுள்ளேன்.

வைத்தியசாலைகள், சிறுபிள்ளைப் பள்ளிக்கூடங்கள், வாசிகசாலைகள் யாழ்நகரின் பல பகுதிகளிலும் நிறுவி மக்களுக்கு நல்ல சேவை செய்திருக்கிறது மாநகரசபை.

சாதி, மத, உயர்ந்தோர், தாழ்ந்தோர் என்ற வித்தியாசமில்லாது சேவை செய்திருப்பதும் போற்றப்பட வேண்டியது. N. T. செல்லத்துரை, திரு. சேவயர் போன்றோர் உதவி முதல்வர்களாகத் தெரிவுசெய்யப்பட்டது.

இம் மாநகரசபையின் போற்றத்தக்கதொரு அம்சம்.

ஆயுதப்படையினரால் சீரழிந்த யாழ். மாநகரை மீண்டும் கட்டியெழுப்ப வேண்டிய கடமை மாநகரசபைக்கு உண்டு. இதற்கு மத்திய அரசு போதிய பண உதவி செய்ய வேண்டியது தார்மீகக் கடமை. ஜனநாயக வழியிலே சென்று யாழ். மாநகரசபை மேலும் பல ஆண்டுகள் மக்களுக்கு சேவை செய்ய வாழ்த்துகின்றேன்.

அன்புடன்


**மு. சிவசிதம்பரம்**

பாராளுமன்ற உறுப்பினர்,

தலைவர்,

தமிழர் விடுதலைக் கூட்டணி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கௌரவ வன்னிமாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் தர்மலிங்கம் சித்தார்த்தன் அவர்களின்

# வாழ்த்துச் செய்தி

மக்கள் சேவையில் அரைநூற்றாண்டை நிறைவு செய்து பொன்விழாவினைக் கொண்டாடும் யாழ்ப்பாண மாநகராட்சி மன்றத்தின் பொன்விழா மலருக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் பெருமகிழ்ச்சி அடைகின்றேன்.

போர் மேகம் சூழ்ந்திருந்த காலங்களிலும் மாநகராட்சி மன்றம் தனது சுகாதார வைத்திய பணிமனை மூலம் அளப்பரிய சேவைகள் ஆற்றியிருந்தமை பாராட்டப்பட வேண்டிய தாகும்.

நீண்ட நெடுங்காலமாக விசேட ஆணையாளர் நிர்வாகத்திலிருந்த மாநகராட்சி மன்றம் 1998இல் மக்களால் தெரிவு செய்யப்பட்ட சபையிடம் கையளிக்கப்பட்டது. முன்னைய காலங்களில் மாநகரசபையில் முஸ்லீம் மக்களால் தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதிகளும் அங்கம் வகித்திருந்தனர். எமது கட்சி சார்பில் முஸ்லீம் ஒருவர் சபை அங்கத்தவராகப் பதவி வகித்தமை தற்போதைய சபையின் விசேட தன்மையாகும். பாரிய அபிவிருத்தித் திட்டங்கள் முன்னெடுக்கப்படாதிருந்தாலும் இயன்றளவு உறுப்பினர்கள் தமது சேவையினை மக்களுக்கு வழங்கியிருக்கின்றனர். தொடர்ந்தும் தனது சேவைகளை மக்களுக்கு வழங்கவும் பொன்விழா மலர் சிறக்கவும் எனது ஆசிகளையும் மனமார்ந்த வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**த. சித்தார்த்தன்**
**வன்னிமாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும்**
**ஜனநாயக மக்கள் விடுதலை முன்னணி (புளொட்)**
**தலைவரும்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்த்துச் செய்தி



S.A கந்தசாமி சிங்ஸ்லி கணேசன் J.P
கௌரவ மாநகராட்சி மன்ற
உறுப்பினரும் பொன்விழா ஏற்பாட்டாளரும்

யாழ் மாநகரசபை இன்று தனது 50வது வயதைப் பூர்த்தி செய்து பொன்விழாவைக்கொண்டாடுவதையிட்டு பெரிதும் மகிழ்ச்சியடைகின்றேன். இற்றைக்கு இரண்டு வருடங்களுக்கு முன்னதாகக் கொண்டாடப்படவேண்டிய நிகழ்வானது, காலம் சீரற்ற காரணத்தினால் கொண்டாடப்படவில்லை என்பதை யாவரும் அறிந்த உண்மையே.

இந்தச் சபையை 1998ம் ஆண்டு பொறுப்பேற்ற காலத்திலிருந்து இன்றுடன் 4வது முதல்வரைக் கண்டுள்ளது. தற்பொழுது பதவி வகித்துக் கொண்டிருக்கும் மாண்புமிகு செல்லன் கந்தையன் அவர்கள் இதே மாநகராட்சி மன்றத்தில் ஒரு சாதாரண தொழிலாளியாக தன்னை இணைத்துக் கொண்டவர். இதே மாநகராட்சி மன்றத்தில் ஒரு மாநகராட்சி மன்ற உறுப்பினராகிப் பின்னர் பிரதி முதல்வராகி இன்று மாநகர பிதாவாகவும், பொன்விழா நாயகனாகவும் இருப்பதையிட்டு நானும் நான் சார்ந்த ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியும் பெருமிதமும் மகிழ்ச்சியும் அடைகின்றது.

இலங்கைத் திருநாட்டின் வடக்கில் உள்ள உள்ளூராட்சி மன்றங்களில் பெரிய மன்றம் எமது யாழ் மாநகராட்சி மன்றமாகும். விஞ்ஞான ஆய்வாளர்களின் ஆய்வுகளின்படி ஒரு நாட்டின் வடக்குப் பகுதியில் வாழக்கூடியவர்களை கல்விமான்கள், புத்திஜீவிகள், நிபுணர்கள் என அவர்களின் ஆய்வுகள் கூறுகின்றன. ஆனால் கிட்டத்தட்ட இருபது ஆண்டுகளாக இந்த உள்ளூராட்சி மன்றங்களை இந்தச் சபை நிர்வகிக்கவில்லை என்பது வருந்தத்தக்க செயலாகும். தொடர்ந்து வரப்போகும் காலங்களில் இந்த மன்றங்களை மக்கள் நிர்வகிக்க வேண்டும். அதன் மூலம் வரியிறுப்பாளர்களின் தேவைகளையும் நகரின் அபிவிருத்தியையும் பூர்த்தி செய்ய முடியும். இதுவே மக்களினது விருப்பமும். எனது விருப்பமும் என்றே நான் கருதுகின்றேன்.

யாழ் மாநகராட்சி மன்றத்தின் முதலாவது நகரபிதா காலஞ் சென்ற திரு.சாம் சபாபதி அவர்களாகும். அவரைத் தொடர்ந்து பல முதல்வர்கள் வந்துள்ளனர். வெள்ளிவிழாவின் முதல்வராக காலஞ்சென்ற திரு.அல்பிரட் தங்கராசா துரையப்பா அவர்கள் இருந்தார்கள். இவர் தன்னுடைய காலத்தில் யாழ் மாநகர சபைக்கு அளப்பரிய சேவைகளைச் செய்துள்ளார்.

குறிப்பாக நியூமாக்கற் பமொடேன் மாக்கற், என்பவற்றை சந்தர்ப்பங்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிடைக்கும்போது, அதனைப் பயன்படுத்தி செயல்படுத்தினார். அந்த வகையில் அவரை இந்த இடத்தில் நினைவுபடுத்த வேண்டியது எமது தலையாய கடமையாகும்.

எங்களுடைய இந்தச் சபையில் நான்கு அரசியல் கட்சிகளைச் சேர்ந்த உறுப்பினர்கள் பிரதிநிதித்துவம் செய்து வருகின்றோம். ஆனால் ஜனநாயக மரபுகளுக்கு அமைவாக மிகச் சிறந்த முறையில் ஜனநாயகம் பேணிப் பாதுகாக்கப்படுகின்றது. மேலும் ஜனநாயகம் ஆளமாக வேரூன்ற வேண்டுமென இந்த பொன்விழா செய்தியில் கோடிட்டு காட்ட விளைகின்றேன்.

எனவே, இந்தச் சபையின் பொன்விழாக் கொண்டாட்டங்களில் அனைத்து மக்களும் கலந்து கொண்டு சிறப்பிக்க வேண்டுமென வேண்டிக்கொண்டு, பொன்விழாவையொட்டி வெளியிடப்படும் மலருக்கு நான் வாழ்த்துச் செய்தி வழங்குவதில் மட்டற்ற மகிழ்ச்சி அடைகின்றேன்.

**எஸ். ஏ. சுந்தசாமி கிங்ஸ்லிகணேசன்,**
**யாழ் மாநகர சபை உறுப்பினர்,**
**பொன்விழா ஏற்பாட்டாளர்,**
**சமாதான நீதவான்,**
**யாழ்மாநகர சபை.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உள்ளூராட்சி ஆணையாளரின் வாழ்த்துச் செய்தி



காலங்கடந்த நிலையிலும் மாநகரசபையின் பொன்விழாவைக் கொண்டாடவும், அதனை முன்னிட்டு மலர் ஒன்றினை வெளியிடவும் தற்போதைய சபையினர் எடுக்கும் முயற்சியைப் பாராட்டுகின்றேன்.

யாழ் மாநகரசபையை ஏறத்தாழ 12 வருடங்கள் நிர்வகித்தவன் என்ற ரீதியில் அதன் சேவை மற்றும் ஆளணி பற்றி முழுமையாக அறியும் வாய்ப்பு ஏற்பட்டது.

விசேட ஆணையாளராகப் பதவி வகித்த எனக்கு பிற்காலத்தில் மக்கள் பிரதிநிதிகளுடன் சேர்ந்து பணியாற்றும் சந்தர்ப்பம் கிடைத்தது, எனது பதவிக்காலத்தில் 03 முதல்வர்களைச் சந்தித்துள்ளேன். அவர்கள் பெரும்பாலும் சேவை மனப்பான்மை கொண்டவர்களாகச் செயற்பட்ட காரணத்தினால் அவர்களுடன் நெருக்கமாகப் பழகிப் பணிபுரிந்த நாட்கள் எனது சேவைக்காலத்தின் மிக முக்கியத்துவம் வாய்ந்தவையாகவே நான் கருதுகின்றேன்.

நான் தனியொருவனாகச் செயற்படாது அனைவரையும் அரவணைத்து அன்புடன் பழகி மாநகரசபையை நிர்வகித்ததன் காரணத்தினால் நெருக்கடி மிகுந்த யுத்த காலத்திலும் என்னால் திறம்பட செயலாற்ற முடிந்தது குறித்து பூரண திருப்தியடைந்துள்ளேன்.


வடக்கு, கிழக்கில் பாரிய உள்ளூராட்சி நிறுவனமாகிய யாழ்ப்பாண மாநகரசபையை நீண்டகாலமாக நிர்வகித்த அனுபவம், தற்போது வடக்கு-கிழக்கிலுள்ள உள்ளூராட்சி மன்றங்கள் அனைத்தையும் திறம்பட மேற்பார்வை செய்வதற்கு உதவுகிறது.

பொன்விழாவை நல்ல முறையில் கொண்டாடவும், வெளிவரும் மலர் நறுமணம் வீசவும் அன்புடன் வாழ்த்துகின்றேன்.


**(வே. பொ. பாலசிங்கம்)**
**உள்ளூராட்சி ஆணையாளர்,**
**வடக்கு – கிழக்கு மாகாணம்,**
**திருகோணமலை.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



யாழ் மாநகரசபை சிறுவர்பாடசாலை விளையாட்டுப்போட்டி நிகழ்வில் நகரபிதா செ.கந்தையன்,பா.உ. த.ரவிராஜ், கௌரவ உறுப்பினர்கள் கனகரட்ணம், சு.சுபத்திரன்



முன்னாள் முதல்வர் பொன். சிவபாலன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மாநகர முதல்வரின் செயலாளரின் வாழ்த்துச் செய்தி

மக்கள் சேவையில் 50 ஆண்டுகளை நிறைவு செய்துள்ள எங்கள் யாழ்ப்பாண மாநகராட்சி மன்றம் இன்று பொன்விழா கொண்டாடுவதையிட்டு மிகுந்த மகிழ்ச்சி அடைகின்றேன்.

வரையறுக்கப்பட்ட உள்ளூராட்சி மன்றக் கடமைகளுக்கு மேலதிகமாக மக்கள் நலன் கருதியும், வரியிறுப்பாளர் வசதி கருதியும் பல சேவைகளிலும் எம் மாநகராட்சி மன்றம் ஈடுபட்டு வந்துள்ளது.

ஆயினும் சென்ற 20 ஆண்டுகளாக எம்மண்ணில் இடம்பெற்ற பேரினவாதப் போரினால், எமது மாநகராட்சி மன்றம் பல பின்னடைவுகளையும் சந்தித்து வந்துள்ளது.

தமிழரின் கட்டிடக் கலைக்கு சான்று பகர்ந்து நின்ற, இந்தியக் கட்டிடக் கலைஞர் திரு.நரசிம்மனால் வடிவமைக்கப்பட்ட யாழ் மாநகராட்சி மன்றக் கட்டிடம், ஆசியக்கண்டத்திலேயே மிகச் சிறந்ததாகக் கருதப்பட்ட யாழ் பொதுநூலகம், யாழ் பொதுச் சந்தைக் கட்டிடம் ஆகியவற்றை இழந்துள்ளோம்.

யாழ் பொதுநூலகம் மறுசீரமைக்கப்பட்டு இயங்கத் தொடங்கும் சூழ்நிலை இன்று மீண்டும் ஏற்பட்டுள்ளது.

யாழ் மாநகராட்சி மன்ற கட்டிடம், யாழ் பொதுச் சந்தை ஆகியவை மறுசீரமைக் கப்படக்கூடிய சூழ்நிலை ஏற்பட்டுள்ளது. சென்ற 20 ஆண்டுகளாக ஏற்பட்டு வந்த அனர்த்தங்களுக்கெல்லாம் விடிவு கிட்டும் என்ற நம்பிக்கை ஒளி மக்கள் மனதில் ஏற்பட்டுள்ள இவ்வேளையில், பொன்விழாக் கொண்டாடப்படுவது மிகவும் பொருத்தமான தாகும்.

விழா இனிதே நடைபெற மனதார வாழ்த்துகின்றேன்.

நன்றி.

**க. பூலோகரட்ணம்**
**முதல்வரின் செயலாளர்**
**மாநகராட்சி மன்றம்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# முன்னாள் வட-கிழக்கு முதலமைச்சரின் வாழ்த்துச்செய்தி

பல்வேறு நெருக்கடிகளினூடாக ஐம்பது ஆண்டுகளைக் கடந்து நிற்கும் யாழ் மாநகர சபையை மனதார வாழ்த்துகின்றேன்.

யாழ் மாநகரத்துக்கு ஒரு கம்பீரமான தோற்றத்தைத் தந்ததில் யாழ் மாநகர சபைக் கட்டிடத்துக்கும் பெரும் பங்குண்டு. அது யுத்தத்தால் தரை மட்டமாக்கப்பட்டமை யுத்தத்தின் பேரழிவுகளுக்கு ஓர் எடுத்துக்காட்டாகும். மாநகர சபைக் கட்டிடம் இருந்த இடம் தெரியாமல் அழிக்கப்பட்டிருப்பினும், யாழ்ப்பாணத்தின் அபிவிருத்தியில் மாநகரசபை வழங்கியுள்ள பங்கை யாழ்ப்பாண மக்கள் மறந்துவிடமாட்டார்கள்.

யாழ்ப்பாண மாநகர சபை அரசியற் காரணங்களுக்காக மூன்று மேயர்களைப் பலி கொடுத்திருக்கிறது. 1983ம் ஆண்டு தொடக்கம் மாநகர சபைக்கு அரசியற் தலைமை இல்லாத போதிலும் அதன் நிர்வாகிகள் மக்களுக்கான சேவைகளைத் திறம்பட செயற்படுத்திக் கொண்டிருந்தமையும் இவ்வேளை நினைவு கூரத்தக்கதாகும். 1998ல் இருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளால் மாநகர சபை ஆளப்பட்டு வருகின்றமை மகிழ்ச்சிக்குரியதாகும். அரசியல் நெருக்கடி, நிதிநெருக்கடி எனப் பல்வேறு சிரமங்களின் மத்தியிலும் மாநகர சபையைத் திறம்பட செயற்படுத்தி வரும் மேயருக்கும் உறுப்பினர்களுக்கும் எனது பாராட்டுக்களைத் தெரிவித்துக் கொள் கின்றேன்.

யாழ்ப்பாண நகர மையத்தை அண்மித்த கிராமப் பிரிவில் பிறந்து வளர்ந்தவன் என்பதால் நாற்பத்தைந்து ஆண்டுகளாக யாழ்ப்பாணத்தின் நகரத்தில் ஏற்பட்ட ஒவ்வொரு மாற்றங்களையும் நன்கு அறிவேன். யாழ்ப்பாண நகரின் அபிவிருத்திக்காக யாழ் மாநகர சபை தொடர்ச்சியாக மேற்கொண்டு வந்துள்ள முயற்சிகளையும் அவற்றின் பலாபலன்களையும் சாதிக்க முடியாமற் போனவைகளையும் கண்டறிவேன்.

போர் அழிவுகளின் காரணமாக யாழ் மாநகர சபைக்கு மேலும் பல மடங்கு பொறுப்புக்கள் அதிகரித்திருக்கின்றன. இன்றைய சூழ்நிலையில் யாழ்ப்பாண மக்கள் மாநகர சபையிடமிருந்து பெருமளவு சேவைகளை எதிர்பார்ப்பது இயல்பே. மக்களின் எதிர்பார்ப்பிற்கிணங்க சேவையாற்றக் கூடியதாக யாழ் மாநகர சபை சட்டங்களாலும், நிதி ஒதுக்கீடுகளாலும் வலுவேற்றப்படுதல் வேண்டும்.

யாழ்ப்பாண நகரம் காலத்தின் மாற்றங்கள் தேவைகளுக்கேற்ப நவீன நகரமாக புதுப்பொலிவு பெற வேண்டும். அவ்வாறு ஆக்குவதில் யாழ் மாநகர சபை பெரும் பங்காற்ற வேண்டும். பழைய கம்பீரத்தோடும் மேலும் பல வசதிகள் கொண்டதாகவும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புதிய மாநகர சபைக் கட்டிடம் விரைவில் கட்டியெழுப்பப்பட வேண்டும்.

மாநகர சபையின் இந்தப் பொன்விழாச் சந்தர்ப்பத்தில் யாழ் நகரபிதாவிற்கும் சபை உறுப்பினர்களுக்கும், சபை நிர்வாகிகளுக்கும், ஊழியர்களுக்கும் எனது மனமார்ந்த வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**அ. வரதராஜப் பெருமாள்,**
**வடக்கு– கிழக்கு மாகாண முன்னாள் முதலமைச்சர்**
**01.04.2002.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# முந்நாள் மாநகர முதல்வரின் வாழ்த்துச் செய்தி

யாழ்ப்பாண மாநகரசபையின் பொன்விழா கொண்டாட்டத்தினை கடந்த 1999ஆம் ஆண்டு கொண்டாடுவதற்கு நாம் எடுத்த முயற்சிகள் அப்போது கைகூடவில்லையெனினும், அது இப்போது செயல்வடிவம் பெறவுள்ளதையும், அதனையொட்டி வெளியிடப்படவிருக்கும் மலருக்கு வாழ்த்துக் கூறுவதையும் பெரும் பேறாகக் கருதுகின்றேன்.

யாழ். மாநகரசபையின் பிரதி முதல்வராக, பதில் முதல்வராக, முதல்வராகப் பதவி வகித்த நான் என்னால் முடிந்தவரை மக்களுக்கு சேவைவழங்கியதன் பயனாகவே இன்று யாழ்.மாவட்ட பாராளுமன்ற உறுப்பினராக தெரிவாகியுள்ளேன். இதனால் மக்களது சேவையே எனது குறிக்கோளாகவுள்ளது.


எனது பதவிக்காலத்தில் என்னுடன் கட்சி வேறுபாடின்றி ஒன்று சேர்ந்து உழைத்த கௌரவ அங்கத்தவர்கள், மாநகர ஆணையாளர், நிர்வாக உத்தியோகத்தர்கள் மற்றும் பணியாளர்கள் அனைவரும் வியந்து பாராட்டப்படவேண்டிவர்களே.

நிதிவளம் இல்லாத நிலையிலும் கிடைக்கப்பெற்ற வளங்களைப் பயன்படுத்தி இயன்றளவு சேவையை மக்களுக்கு வழங்கியமை அனைவரும் நன்கறிந்தமையே. தற்போது பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத் திட்டத்திலிருந்து பாராளுமன்ற உறுப்பினர்களுக்குக் கிடைக்கப்பெறவுள்ள நிதியில் கணிசமான தொகையினை யான் மாநகரசபைக்கு வழங்கி அதன் சேவையை வளம்படுத்த உறுதிபூண்டுள்ளேன்.

பொன்விழாக் கொண்டாட்டங்கள் சிறப்பாக நடந்தேறவும், பொன்விழா மலர் பொலிவுற்று மிளிரவும் உளமார வாழ்த்துகின்றேன்.

**நடராஜா இரவிராஜ்**
**முந்நாள் மாநகர முதல்வரும்**
**இந்நாள் யாழ். மாவட்ட பாராளுமன்ற**
**உறுப்பினரும்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பொன்விழாக் காணும் யாழ். மாநகர சபைக்கு எமது வாழ்த்து

'எண்சாண் உடம்புக்கு சென்னி சிறந்ததென்றே அழைப்பர். அதுபோல பொன் சேர் இலங்கைச் சிரமெனவே வரும் புண்ணியமோங்கிடும் யாழ்ப்பாணம்'

என்ற நவாலியூர் சோமசுந்தரப்புலவரின் கவிதை வரிகள் இலங்கைத் தீவில் யாழ்ப்பாணம் வகிக்கும் முக்கியத்துவத்தைக் காட்டுகின்றன.

அந்தகக் கவிக்கு வழங்கப்பட்ட மணற்றிடர் என்ற எளிமையான ஐதீகம் அல்ல யாழ்ப்பாணத்தின் உண்மையான வரலாறு. யாழ்ப்பாணம் 5000 வருடங்களுக்கு மேற்பட்ட நாகரீக வரலாற்றைக் கொண்டது என்பதனை ஆனைக்கோட்டையில் கண்டெடுக்கப்பட்ட தொல்பொருட் சான்றுகளும் இன்னும் பல ஆராய்ச்சிகளும் ஆதாரபூர்வமாக எடுத்தியம்புகின்றன.

தென்னிந்தியாவில் பௌத்த மதம் பரம்பியதோடு யாழ்ப்பாண மக்கள் மத்தியிலும் பௌத்தமதம் பரவியிருந்த காலம் ஒன்று உண்டு. இன்று இலங்கையில் பௌத்தம் சிங்களவர்களுக்கே உரிய மதமாக சித்திரிக்கப்படுகின்றது. ஆனால் யாழ்ப்பாணத்தில் தமிழர்கள் பௌத்தர்களானதே ஆரம்பம்.

யாழ்ப்பாணமானது இந்தியாவுடன் சமூகபொருளாதார கலாச்சார வர்த்தக உறவுகளைப் பல ஆயிரம் ஆண்டுகளாகப் பேணி வந்திருக்கிறது. அத்துடன் சீனா, தென்கிழக்காசிய நாடுகள் மற்றும் அரபு நாடுகளுடனும் பல நூற்றாண்டுகள் வாணிப உறவுகளைக் கொண்டிருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

16ஆம் நூற்றாண்டில் ஐரோப்பியர்கள் இலங்கையில் வர்த்தக உறவுகளை ஆரம்பித்தபோது இங்கிருந்த முக்கியமான இராச்சியங்களில் ஒன்றாக யாழ்ப்பாணமும் இருந்தது.

மேற்கத்திய நாட்டவரின் வருகையின் பின்னர் மிசனரிகளின் உருவாக்கம், நவீன கல்விக்கூடங்கள் நிறுவப்பட்டமை என்பதன் பின்புலத்தில் புதிய கல்விப் பாரம்பரியம் ஒன்று யாழ்ப்பாணத்தில் உருவாகியது. ஆறுமுகநாவலர், சி. வை. தாமோதரம்பிள்ளை, சுவாமி ஞானப்பிரகாசர் போன்ற கல்வி, மொழி, ஆன்மீகத் துறைகளில் பெரும் பங்களிப்பைச் செலுத்தியவர்களைப் பெற்ற மண் யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுமார் 800 வருடங்களுக்கு மேலாக முஸ்லீம் மக்களும் இங்கு இரண்டறக் கலந்து வாழ்ந்து வந்திருக்கிறார்கள். பல மத நம்பிக்கைகளைக் கொண்ட சமூகங்களின் வண்ணக் கலவையாக அமைதியும் எளிமையும் இயற்கையோடு உறைந்த வாழ்வும் அதேவேளை நவீன தொடர்புகளோடும் யாழ்ப்பாணம் திகழ்ந்து வந்தது.

படித்தவர்கள் சமூகத்தில் மேல்தட்டிலுள்ளவர்கள் தொடக்கம் சாமான்ய மனிதர்கள் வரை எளிமையாக, ஆரவாரம் இல்லாமல் பிரகாசமாகவும் திருப்தியாகவும் வாழ்ந்தார்கள்.

யாழ்ப்பாணத்தின் புவியியல் அமைப்பு சமூகப் பரம்பல் ஆகியன ஒரு இலகுவான சமூக, பொருளாதார வாழ்க்கைக்கு ஏதுவாகத் திகழ்ந்தன.

குறைந்த ஆழத்தில் கிடைக்கும் நீர், சிறு துண்டு நிலத்தில் கிடைக்கும் உச்ச பயன், சூழவுள்ள பரவ கடலின் வளங்கள், புயலில்லை, வெள்ளமில்லை, கொதிவெயிலில்லை, கடுங்குளிரில்லை, நிலநடுக்கமில்லை, மண்சரிவுகளில்லை போன்றனவெல்லாம் யாழ்ப்பாணத்திற்கு இயற்கை அளித்துள்ள வரப்பிரசாதங்களாகும்.

இத்தகைய யாழ்ப்பாணத்தின் இன்றைய நிலை மிகுந்த மன வேதனையையும் ஏக்கத்தையும் ஏற்படுத்துவதாகவே இருக்கிறது.

1930களிலேயே யாழ்ப்பாணத்தில் உள்ளூராட்சிச் சபைகள் செயற்படத் தொடங்கின. பாடசாலைகள், தேவாலயங்கள், சினிமாக்கொட்டகைகள், பஸ்நிலையங்கள், கடைத்தெருக்கள், வைத்தியசாலைகள், நீதிமன்றங்கள், உணவுக்களஞ்சியம் என்பன ஒல்லாந்தர் கட்டிய யாழ்ப்பாணக் கோட்டையைச் சூழவே அமைந்தன. அதுவே யாழ்ப்பாண மாநகரமானது. 1940 முற்பகுதியில் அது நகரசபை நிர்வாகத்தின் செயற்பாட்டுடன் புதுப் பொலிவுறத் தொடங்கியது. 1949இல் அது யாழ் மாநகரசபையாக உருவெடுத்தது.

யாழ் மாநகரசபை உருவாக்கப்பட்டு 50 வருடங்கள் உருண்டோடி விட்டன. நகர நிர்மாணம், சுகாதாரம், குடும்பநலம், வீதிகள் பராமரிப்பு, மின்சார நிர்வாகம், நகர சுத்திகரிப்பு, நூலகசேவை, இன்னோரன்ன துறைகளில் யாழ் மாநகரசபை தனது முத்திரையைப் பதித்துள்ளது.

முன்னைய காலத்தில் இந்த நிறுவனத்தின் மக்களால் தெரிவுசெய்யப்பட்ட உறுப்பினர்களும், அவர்களால் தெரிவுசெய்யப்பட்ட மாநகர முதல்வர்களும் பெரும் பாலும் பிரபல சட்டத்தரணிகளாகவும், கல்விமான்களுமாகவே இருந்தார்கள்.

முதல் மேயராக திரு. சாம் சபாபதி அவர்களின் தலைமையில் செயற்பட ஆரம்பித்தது. இவர்தான் யாழ் நூல் நிலையத்திற்கு அடிக்கல் நாட்டியவராவார். அவருக்குப் பின்னர் திரு. மகாதேவா, திரு. துரைராசா, திரு. அல்பிரட் துரையப்பா, திரு. நாகராசா, திரு. விஸ்வநாதன் என 1983 வரை பல மேயர்களை யாழ் மாநகரசபை கண்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ் மாநகரசபையின் அப்போதைய கட்டிடம் திராவிடக் கலை அழகுடனும், பொலிவுடனும், கம்பீரத்துடனும், சுப்பிரமணியம் பூங்காவை முன்னால் கொண்டதாகக் காட்சியளித்தது. தற்போது அது வரலாற்றில் ஒரு காலகட்டத்தின் சுவராய். கற்குவியலாய் மாறியிருப்பதைப் பார்க்கும்போது மனதில் கவலைகளே நிறைகின்றன.

யுத்த அனர்த்தங்களுக்கு முன்பிருந்த யாழ் நகர வீதிகள், வடிகால்கள், நூல்நிலையம், திறந்தவெளியரங்கு, சுப்பிரமணியம் பூங்கா, விளையாட்டரங்கு, சந்தைக் கட்டிடம், குடிநீர் விநியோகம் மற்றும் நடைபாதை அமைப்புக்கள் யாவும் அப்போதைய மாநகரசபையின் நகர பிதாக்கள் மற்றும் உறுப்பினர்களின் சிறந்த நிர்வாகத்தை எடுத்துக்காட்டின. ஆனால் 20 வருடமாக நடந்து வரும் நெடிய யுத்தம் யாழ் நகரத்தை அழிவுகளும் சிதைவுகளும் நிறைந்ததொரு நகரமாக நலிவடைய வைத்துவிட்டது.

1983 - 1997 வரை யாழ் மாநகர சபைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்கள் இருக்கவில்லை. ஆணையாளர்களாலேயே நிர்வகிக்கப்பட்டன.

1997இல் மீண்டும் தேர்தல் மூலம் திருமதி சரோஜினி யோகேஸ்வரன் அவர்கள் மேயராகத் தெரிவுசெய்யப்பட்டார். துடிப்பும் ஆற்றலும் மிக்க இளைஞர்கள் பல்வேறு கட்சிகளில் இருந்தும் அங்கத்தவர்களாகத் தெரிவு செய்யப்பட்டார்கள்.

யாழ் மாநகரசபையானது இடிபாடுகளாகிப் போன நகரத்தைக் கட்டியெழுப்புவதற்கு பல சவால்களை எதிர்நோக்க வேண்டியிருந்தது. ஆனால் துரதிர்ஷ்டவசமாக சரோஜினி யோகேஸ்வரன் அவர்கள் பதவியேற்று குறுகிய காலத்தில் படுகொலை செய்யப்பட்டார். அவருக்குப் பின்னர் மேயராகத் தெரிவுசெய்யப்பட்ட திரு. சிவபாலன் அவர்களும் படுகொலை செய்யப்பட்டார். நல்லூரில் அமைந்திருந்த மாநகரசபைக் கட்டிடமும் குண்டு வெடித்து தகர்க்கப்பட்டது. இவ்வாறு பல்வேறு நெருக்கடிகளையும் சவால்களையும் எதிர் நோக்கியபடி எமது மாநகரசபை இயங்கவேண்டி இருந்தது. எனினும் மேயர் ரவிராஜின் தலைமையில் மாநகரசபை தொடர்ந்து செயற்பட்டமை மகிழ்ச்சிக்குரிய தொன்றாகும். இளைஞர்களான மேயர் மற்றும் மாநகரசபை உறுப்பினர்களின் உறுதியிலும், அர்ப்பணிப்பிலும் தான் தொடர்ந்து இச்சபை தக்கவைக்கப்பட்டது.

பல்வேறு இடர்பாடுகளுக்கு மத்தியிலும் எரியூட்டப்பட்ட நூலகம் மீண்டும் புதுப்பொலிவுபெறும் வகையில் கட்டப்பட்டது. நகரின் நவீன சந்தைக் கட்டிடங்கள் ஓரளவு திருத்தியமைக்கப்பட்டு இயங்கும் நிலைக்குக் கொண்டுவரப்பட்டுள்ளன. வடிகால்கள் சீர் செய்யப்பட்டுள்ளன. சுகாதார சேவைகள் முன்னெடுத்துச் செல்லப்பட்டுள்ளன.

தற்போது இன்னுமொரு முக்கிய நிகழ்வு, இந்த மாநகர சபையின் தொழிலாளியாக வேலை செய்த திரு. செல்லன் கந்தையன் அவர்கள் மாநகர சபை உறுப்பினராகி மாநகரசபை முதல்வராகியுள்ளமை யாழ் மாநகரசபையின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வரலாற்றில் பெருமைக்குரிய ஒரு முக்கியத்துவம் வாய்ந்த ஒன்றாகும். இது ஒரு சமூக மாற்றத்தின் அடிக்கல்லாக அமையவேண்டும் என்பதே எமது விருப்பம்.

பல்வேறு சவால்களுக்கும் நெருக்கடிகளுக்கும் முகம் கொடுத்து தனது 50 வருட கால அசைவியக்கத்தை காட்டி வந்துள்ள யாழ் மாநகரசபை பொலிவு பெற்று நீடுழிவாழ்க எனவும் அதன் பணிகள் புதிய வீச்சுடன் தொடரவேண்டும் எனவும் இந்த பொன்விழா காலகட்டத்தில் எமது மனமார்ந்த வாழ்த்துக்களை தெரிவித்துக்கொள்கின்றோம்.

அத்துடன் யாழ்ப்பாண நகரை நவீன மாநகரமாக்குவதற்கான நிர்மாணத் திட்டம் ஒன்று வரையப்பட்டு அதன் அடிப்படையிலேயே எதிர்காலத்தில் புனர்நிர்மாணப் பணிகளும், வீதி அமைப்புக்களும், புதிய கட்டிய அமைப்புக்களும், வீட்டுத்திட்டங்களும் மேற்கொள்ளப்பட வேண்டும். அதுவே பொன்விழாக் காணும் யாழ்ப்பாண மாநகரசபைக்கு நாம் வழங்கும் புதிய ஆரம்பமாக அமையட்டும்.

**திரு. தம்பிராஜா சுபத்திரன்**
யாழ் மாநகரசபை உறுப்பினா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**யாழ் மாநகர சபையின் பொன்விழா கொண்டாட்டத்திற்கு நிதி உதவி வழங்கிய யாழ்.வர்த்தகப் பெருமக்களின் பெயர், விபரம் வருமாறு:—**

01. சிவா நறுமணப் பூங்்கா
02. ஈ.எஸ்.லிங்கநாதன்
03. எஸ்.வி.முருகேசு
04. வேணி களஞ்சியம்
05. அம்பிகை களஞ்சியம்
06. சிவராதா புடவையகம்
07. வி.எஸ்.பி.குறூப்
08. ஈ.எஸ்.பேரம்பலம்
09. குகன் களஞ்சியம்
10. குபேரன் களஞ்சியம்
11. சியானாஸ் புடவையகம்
12. த.குமாரசாமி புடவையகம்
13. மகாநதி புடவையகம்
14. கல்யாரி கிறீம் ஹவுஸ்
15. ராஜா கிறீம் ஹவுஸ்
16. லிங்கன் கூல் பார்
17. சாரங்கா நகை மாடம்
18. அலங்கார் நகை மாடம்
19. சிறீ கருமாரி நகை மாடம்
20. இந்திரன் ஜுவலர்ஸ்
21. லலிதா நகைமாடம்
22. தயா நகை பூங்கா
23. அசோகா நகைமாடம்
24. கலைவாணி நகைமாடம்
25. பி.ராஜகோபால் நகைமாடம்
26. கரன் நகைமாடம்
27. கோ.புவனேந்திரம் நகைத் தொழிலகம்
28. வி.எம்.கே.நகைமாடம்
29. ஜனனி நகைப்பூங்கா
30. நந்தினி நகைமாடம்
31. சானுகா நகைமாடம்
32. சிறிநதியா நகைமாடம்
33. புதிய நதியா நகைமாடம்
34. வினோ நகைப் பூங்கா
35. நியூ நகுலா நகைமாடம்
36. சுயானாஸ் புடவையகம்
37. எம்.எம்.யூசப்
38. மோகன் வர்த்தக நிலையம்
39. சரவணாஸ்
40. அம்மாள் களஞ்சியம்
41. சிறிராம கிருஸ்ணா
42. ராசம் தொலைத்தொடர்பு நிலையம்
43. யாழ்.பாட்டா
44. சூரியன் களஞ்சியம்
45. சாறி சென்ரர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

46. நியூ வசந்தாஸ்
47. அபிராமி புடவையகம்
48. இளவரசி பட்டுச்சோலை
49. ஆதவன் புடவையகம்
50. லக்சிகா ரெக்ஸ்
51. டாட் என்ரபிறைஸ்
52. சிறி கணேஸ் புடவையகம்
53. அண்ணா கோப்பி
54. ஜோகு ரேடிங் கோ
55. நியூ அப்பன் களஞ்சியம்
56. றொலக்ஸ் கோட்டல்
57. வைத்திலிங்கம் அன் கம்பனி
58. சிவலோகநாதன் அன் கம்பனி
59. யாழ்ப்பாண மின்னகம்
60. றூ.பா.பல்பொருள் வாணிபம்
61. அருள்விநாயகர் மோட்டஸ்
62. கந்தவேலன் ரேடர்ஸ்
63. முரகன் மோட்டர்ஸ்
64. சேகர் மோட்டர்ஸ்
65. ராசம் மோட்டர்ஸ்
66. ஆட் என்ரபிறைஸ்
67. யசோ மோட்டர்ஸ்
68. ஈஸ்வர் கோப்பரேசன்
69. ரி.இராசையா அன்சன்ஸ்
70. ஏ.எஸ்.ஆறுமுகம் அன்சன்ஸ்
71. குலம் அன்சன்ஸ்
72. சித்தி ஹாட்வெயர்
73. கோபிகா ஆடையகம்
74. மகா சில்க்ஸ் புடவையகம்
75. அம்பிகாவதி பான்ஸி
76. சிங்கம் இன்டஸ்றீஸ்
77. ஜோகி ஹாட்வெயர்ஸ்
78. ரட்ணா மோட்டர்ஸ்
79. சாருஜன் பான்ஸி
80. அல்டி எலக்ரோனிக்
81. வெங்கடேஸ்வரா
82. கபிலா காலணியகம்
83. பாலவிநாயகர் மோட்டர்ஸ்
84. லைடன் புடவை நிலையம்
85. சிறீகாந் எசன்ஸ்
86. ராஜேந்திரா ஸ்ரோர்ஸ்
87. ஜசி பல்பொருள் வாணிபம்
88. வரணி மிஷன் பண்ணை
89. பஷன் ஹவுஸ்
90. பொஸ்கோ புத்தகசாலை
91. சபாஸ் ஸ்ரூடியோ
92. சி.யோ.செல்வநாயகம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ் மாநகர சபையின் அபிவிருத்தி

## பேராசிரியர் பொ.பாலசுந்தரம்பிள்ளை

இலங்கையில் யாழ்ப்பாண மாநகரம் மக்கள் தொகையிலும் சேவை வசதிகளிலும் பல காலமாகக் கொழும்பு நகரத்திற்கு அடுத்து இரண்டாவது இடத்தைப் பெற்றிருந்தது. ஆனால் இன்று யாழ்ப்பாண நகர் மக்கட் தொகையிலும், சேவை வசதியிலும் ஒப்பீட்டு ரீதியில் முன்னைய இடத்திலிருந்து பின் தள்ளப்பட்டிருப்பதைக் காணலாம். தெகிவளை கல்கிசை 174,375 மக்களையும், மொறட்டுவை 135,210 மக்களையும் 1981இல் கொண்டிருந்தன. கோட்டை 101,561 மக்களையும் கண்டி 101,281 மக்களையும் காண்டிருந்ததுடன் குறித்த இரு நகர்களும் பொருளாதார ரீதியிலும், அந்தஸ்து ரீதியிலும், பௌதீக ரீதியிலும் யாழ்ப்பாண நகரிலும் பார்க்கக் கடந்த இரு தசாப்தங்களில் கூடுதலான வளர்ச்சி பெற்றிருப்பதைக் காணலாம். யாழ்ப்பாண நகர் 1977க்குப் பின் ஏற்பட்ட இனக்கலவரங்களால் பெரிதும் பாதிப்புக்குள்ளாகியது. 1977இல் யாழ்ப்பாண நகரச் சந்தையும், 1981இல் யாழ்ப்பாண நகர நூல்நிலையமும் மற்றும் வீடுகள் சிலவும் அழிவுக்குள்ளாகின. 1984ஆம் ஆண்டு ஏப்பிரலிலிருந்து 1985ஜூன் வரைப்பட்ட காலப்பகுதியில் நடைபெற்ற சம்பவங்களினால் யாழ்ப்பாண நகரக் கூட்டுறவுச் சங்கக் கட்டடம், ஆஸ்பத்திரி வீதிக் கட்டடங்கள், பலத்த சேதத்திற்குள்ளாகின. குருநகரிலிருந்து யாழ்ப்பாண நகரக் கோட்டைக்கு இராணுவம் இடம்பெயர்ந்த பின்னர் கோட்டையைச் சூழவுள்ள பிரதேசம் செயலிழந்ததுடன் அப்பகுதியைச் சூழவுள்ள பல கட்டடங்கள் பெரும் சேதத்திற்குள்ளாயின. தபாற்கந்தோர், வீரசிங்கம் மண்டபம், தொலைத் தொடர்பு நிலையம், சத்திரச்சந்தியிலுள்ள கட்டடங்கள், ஆஸ்பத்திரி வீதி, கஸ்தூரியார் வீதிச சந்தியிலிருந்து நாவாந்துறை வரையுள்ள கரையோரப்பகுதி பாதிப்புக்குள்ளாயின. நகரில் குறிப்பிடத்தக்க கட்டடங்கள், வாழிடங்கள், மின்சார விநியோகம், தொலைத் தொடர்புகள் போன்றன பாதிப்புக்குள்ளாயின. யாழ்ப்பாண நகர் பௌதீக ரீதியில் மாத்திரமன்றி, சமூக பொருளாதார ரீதியிலும் பெரும் பாதிப்புக் குள்ளாகியது. பிற பகுதிகளிலிருந்து சேவை, பொருட்களைப் பெற யாழ்ப்பாண நகருக்கு வரும் மக்களின் எண்ணிக்கை மிகவும் குறைவடைந்ததனாலும், ஷெல் பயம் காரணமாகவும் யாழ்ப்பாண நகரப் பகுதியிலிருந்து பல வர்த்தக நிறுவனங்கள் புற நகர்களுக்கும் இடம் பெயர்ந்தன. யாழ்ப்பாண நகரில் ஆரம்ப வளர்ச்சி நிலையிலிருந்த கைத்தொழில் நிறுவனங்கள் சில செயலிழந்தன. சில உற்பத்தித்திறன் குறைந்து விளங்கின. யாழ்ப்பாண நகரக் கரையோரப் பகுதியில் 6 மீன்பிடிக் குடியிருப்புக்கள் இருக்கின்றன. கோட்டை முகாம், மண்டைதீவு மினிமுகாம் அமைக்கப்பட்டதன் விளைவாக கடனீரேரிப் பகுதியில் மீன்பிடித் தொழில் பெரிதும் பாதிப்புள்ளாகியது. பல துறைகளில் நகரப் பொருளாதாரம் பின்னடைந்த நிலையில் இப்பகுதி சார்ந்த இளைஞர்கள், முயற்சியாளர்கள், வசதியானவர்கள் பெருமளவில் தென்பகுதிக்கும், பிற நாடுகளுக்கும் செல்ல, பாதிக்கப்பட்ட பிற இடங்களிலிருந்து மக்கள் யாழ்ப்பாண நகருக்குள் இடம்பெயர்ந்தனர். இந்நிலையில் இந்நகரை எவ்வாறு கட்டியெழுப்பலாம் என்றும் வருங்காலத்தில் வடகிழக்கு மாகாணத்தின் வளர்ச்சிக்கு இந்நகர் எத்தகைய பங்கினை ஆற்றலாம் என்றும் நோக்குவது எமது முக்கிய பணியாகும்.

ஒரு பிரதேசத்தின் வளர்ச்சிக்கு அடிப்படையாக, அப்பிரதேசத்திலுள்ள நகர்கள், குறிப்பாக முதல் நகர் இயக்கமானதாகவும், வளர்ச்சிப் போக்கைக் கொண்டதாகவும் இருக்க வேண்டும். இத்தகையதொரு நிலையில் தான் குறித்த நகரமும் அதில் தங்கியுள்ள பிரதேசமும் வளர்ச்சி பெற முடியும். நகரப் பிரதேச வளர்ச்சி ஒன்றுடன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒன்று மிகவும் நெருக்கமான உறவு கொண்டுள்ளது. யாழ்ப்பாண நகரம், இந்த நிலையில் வடக்கு, கிழக்கு இலங்கையின் பொருளாதார அபிவிருத்ததிக்கும் இலங்கையின் தமிழ் பேசும் மக்களின் கல்வி கலாசார அரசியல் மேம்பாட்டிற்கும் குறிப்பித்தக்க பங்களிப்பினைச் செலுத்தக் கூடிய திறனைப் பெறும். இந்நகரின் மூலமே காலத்துக்குக் காலம் குறிப்பிடத்தக்க புதுமைகளை ஏனைய தமிழ்ப் பகுதிகளுக்குப் பரவச் செய்யலாம்.

யாழ்ப்பாண நகரில் மக்கள் தொகை, அடிப்படையான பொருளாதாரம், வேலைவாய்ப்பு போன்றன எவ்வாறு அமையலாம் எனப்பார்ப்போம். யாழ்ப்பாண நகர் ஏற்கெனவே 1.25 லட்சம் மக்களையும் நெருக்கமான குடியடர்த்தியையும் கொண்டு இருப்பதாலும் குடாநாட்டிற்குள் வலிகாமம் பகுதியில் அமைந்திருப்பதனாலும் நகரின் குடித்தொகை அதிகரிப்பு மேலும் விரும்பத்தக்கதல்ல. குடிஉள்வரவைக் குறைக்கக்கூடிய நடவடிக்கை கள் மேற்கொள்ளப்படுவதுடன் குறிப்பிடத்தக்க குடிவெளி அகல்வு ஊக்குவிக்கப்பட வேண்டும். பெரிய யாழ்ப்பாணம் (*Greater Jaffna*) 1981இல் 1லட்சத்து 59ஆயிரம் மக்களைக் கொண்டிருந்தது. இன்று அத்தொகை 2இலட்சத்தை எட்டிக்கொண்டிருக்கிறது. குடாநாட்டின் சனத்தொகையில் 25% மக்கள் பெரிய யாழ்ப்பாணத்தில் இருப்பது கவனிக்கற்பாலது. யாழ்ப்பாண நகரின் பொருளாதாரம், வேலை வாய்ப்பை நோக்கும்போது இந்நகரம் சேவைத் தொழில்களிலும், வெளிப் பொருளாதாரத்திலுமே தங்கியிருக்கக்கூடிய நிலைமைகள் தென்படுகின்றன. மேலும் இந்நகரம் புதிதாக அமைக்கப்படவிருக்கும் மாகாண சபையின் தலைமை நிர்வாக மையமாக அமைய முடியாது என்பது தெளிவு. இதன் இடஅமைவு மாகாணத்தின் ஒரு அந்தத்தில் இருப்பதே இதன் முக்கிய காரணமாகும். இம்மாகாணத்தின் தலைமை நிர்வாகம் கிழக்கு மாகாணத்தின் மத்திய இடமான திருகோணமலையில் அமைவதுதான் பொருத்தமாகும். இதையே வடக்கு, கிழக்கு மக்கள் விரும்புவர். மேலும் யாழ்ப்பாண நகரம் வடபகுதியின் நிர்வாக மையமாக இருப்பதும் பொருத்தமன்று. வடபகுதியின் நிர்வாக மையம் இப்பகுததியின் மையத்தில் அமைந்துள்ள மாங்குளத்திலேயே நிறுவப்படவேண்டும். போக்குவரத்து, நிலம், நீர், மற்றும் ஏனைய நகரங்கள் மாங்குத்திலிருந்து அமைந்திருக்கும் தூரங்கள், என்னும் அடிப்படையில் மாங்குளத்தை நிர்வாக மையமாக வைப்பது வடபகுதியின் அபிவிருத்திக்குச் சிறந்ததொரு முடிவாக இருக்கும். வடபகுதியில் 75வீதமான மக்கள் குடாநாட்டுக்குள்ளும், மிகுதி 25வீதமானோர் பெருநிலத்திலும் வாழ்கின்றனர். மாங்குள நகரின் வளர்ச்சி, வட-இலங்கையின் குடிசன மீள் பரம்பலை ஊக்குவிக்கக் கூடியதொன்றாக இருக்கலாம். ஆகவே நிர்வாக அந்தஸ்தில் யாழ்ப்பாண நகர் தொடர்ந்தும் யாழ்ப்பாண மாவட்டத்தின் தலைநகராக மாத்திரமே விளங்க முடியும்.

அடுத்து, யாழ்ப்பாண நகரம் பாரிய கைத்தொழில் மையமாக விளங்கமுடியுமா? என நோக்குகையில், ஏற்கெனவே மக்கள் நெருக்கமாக வாழ்வதனாலும் நிலப்பற்றாக்குறை நிலவுவதனாலும், சூழல் மாசடைதல் போன்ற காரணங்களினாலும் இங்கு பாரிய கைத்தொழிலாக்கம் விருத்தியடைவது கடினம், விரும்பத்தக்கதுமல்ல. எனினும் நகரில் குறிப்பாக இலகு கைத்தொழில்களான உடுபுடவை, நகை, அச்சுத்தொழில், தளபாடஞ் செய்தல் போன்றனவும், நவீன இலத்திரனியல் தொழில்கள் போன்றனவும் விருத்தியாக்க வாய்ப்புண்டு. நகரப் பொருளாதாரத்தில் கைத்தொழில்துறை சிறிய பங்கினையே வகிக்கமுடியும். இதனால் நகரப் பொருளாதாரத்தின் எதிர்காலம் கல்வி மருத்துவம் மற்றும் சேவைத் துறைகளின் வளர்ச்சியிலும், மீன்பிடியிலுமே தங்கியுள்ளது. இலங்கையின் சுற்றுலாத்துறையில் யாழ்ப்பாண நகரத்தை முக்கிய இடமாக வளர்த்தெடுக்க கூடிய வாய்ப்புகள் உண்டு.

யாழ்ப்பாண நகரின் பௌதீகத் திட்டமிடலை நோக்கும்போது, தற்போதைய மாநகரசபை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எல்லையை விஸ்தரிப்பதும் நல்லூர்ப் பிரதேச சபைப் பகுதியை மாநகரசபை எல்லைக்குள் கொண்டு வருவதும் விரும்பத்தக்கது. (எனினும் இவ்வாலோசனையையிட்டு திருநெல்வேலி, கொக்குவில், கோண்டாவில் பகுதி மக்களின் விருப்பத்தைப் பெறுவது சாலச் சிறந்தது) மாநகர சபை எல்லை மாறுமிடத்து இதன் சனத்தொகை 1இலட்சத்து 59ஆயிரமாகும். நிலப்பரப்பு 202கிலோ மீற்றராகும். மாநகர சபை எல்லையை விஸ்தரிப்பதன் மூலம் மக்கள் தொகை அதிகரிப்பதிலும் பார்க்க நிலப்பரப்பு அதிகரிப்பு கூடுதலாகவிருப்பது அபிவிருத்தி நடவடிக்கைகளுக்கு உதவியாகவிருக்கும்.

திருநெல்வேலி, கொக்குவில், கோண்டாவில் கிராமங்கள் நெருக்கமான குடியிருப்புக் களைக் கொண்டும் கூடுதலான நகரப் பண்புகளைப் பெற்றும் காணப்படுகின்றன. செயளவில் இவை யாழ்ப்பாண நகருடன் ஒன்றிணைந்துள்ளதைக் காணலாம் நகரங்கள் முன்னர் வட்டாரங்களாகப் பிரிக்கப்பட்டிருந்தன. வட்டாரங்கள் தேர்தல் தொகுதிகளாகவிருந்தன. தற்போதைய தேர்தல் முறையில் வட்டார முறை நீக்கப்பட்டு நகரம் முழுவதும் ஒரு தேர்தல் அலகாக இருப்பது கவனிக்கத்தக்கது. இதனால் நகர நிர்வாகம் நகர அபிவிருத்திக் கண்ணோட்டங்களில் நகரத்தை உப பிரிவுகளாகப் பிரிக்க நடவக்கைகள் மேற்கொள்ளப்படவேண்டும். இப்பிரிவுகள் நகரச் செயற்பாடுகளின் இடஞ்சார் ஒழுங்குகளைப் பிரதிபலிக்கலாம்.

ஒரு நகரின் வளர்ச்சிக்கு அதன் மத்திய வியாபாரப் பகுதி துடிப்புடையதாக அமைதல் வேண்டும். யாழ்ப்பாண நகரின் மத்திய வியாபாரப் பகுதி பல குறைபாடுகளைக் கொண்டிருக்கின்றது. இது இந்நகரின் வளர்ச்சியைப் பெரிதும் பாதித்து வருகின்றது. இந்நகரிற்கு வருவோர் தமக்குத் தேவையான பொருட்களையும் சேவைகளையும் இலகுவாக அலைச்சலின்றிப் பெறமுடியாதிருக்கின்றது. நகரின் மத்தியல் நல்லதொரு சந்தையின்மை நகரின் வளர்ச்சிக்கு வழிகோலவில்லை. கண்டி நகரின் வளர்ச்சிக்கு அந்நகரின் மத்திய சந்தை பெரும் பங்கினை அளித்து வருவதைக் காணலாம். ஆகவே சிறந்த சந்தையொன்று நகரின் மையப்பகுதியில் அமைவது விரும்பத்தக்கது. மத்திய வியாபாரப் பகுதியில் போக்குவரத்து நெரிசல், ஒடுக்கமான வீதிகள், பொருத்தமில்லாத பழைய கட்டிடங்கள் அமைந்திருப்பது வர்த்தக வளர்ச்சிக்குப் பெருங் குறைபாடு களாகும். மேலும் நகரின் மையப்பகுதிகளை அங்காடி வியாபாரிகள் தமதாக்கிக் கொண்டிருப்பதும் பல பிரச்சினைகளைத் தோற்றுவிக்கின்றன. இங்கு வீதி வலைப்பின்னல் குறைவாகவிருப்பதனால் போக்குவரத்திற்கு இடைஞ்சலாக இருப்பதுடன், இப்பகுதியில் இருக்கும் காணிகளையும் நன்கு பயன்படுத்த முடியாதிருக் கின்றது. இங்கு காணப்படும் ஒரு சில பெருஞ்சாலைகளைத் தவிர ஏனையவை ஒடுக்கமான ஒழுங்கைகளாக இருக்கின்றன. இவற்றுள் பல குருட்டு ஒழுங்கைகளாக உள்ளன.

யாழ்ப்பாண நகர வர்த்தக சேவைத்துறை விருத்திக்கு இப்பிரதேசத்தில் போதியளவு போக்குவரத்து, கட்டடம் மற்றும் அடிப்படை வசதிகள் விருத்தி செய்யப்பட வேண்டும். யாழ்நகர மத்திய வியாபாரப்பகுதி அபிவிருத்திக்கு முதலில் எவ்வெவ் பகுதிகள் இவற்றுள் அடங்கலாம் என வரையறை செய்ய வேண்டும். பின்வரும் வீதிகளுக்குள் உள்ளடங்கும் பரப்பினை மத்திய வியாபாரப் பகுதியாகக் கருத வேண்டும். வடக்கு நாவலர் வீதியையும் கிழக்கு பருத்தித்துறை வீதியையும், மேற்கு சிவன் பண்ணை- மானிப்பாய் வீதியையும், தெற்கு புல்லுக்குளம்- பண்ணை -கொட்டடி வீதியையும் எல்லைகளாகக் கொள்ளலாம். மேற்குறிப்பிட்ட வீதிகள் உள்ளடங்கும் பரப்பினை மத்திய வியாபார உள்வலயம், மத்திய வியாபார வெளிவலயம் என ஒரு பகுதிகளாகப் பிரிக்கலாம். உள்வலயம் பின்வரும் வீதிகளை எல்லைகளாகக் கொள்ளலாம். அவையாவன:- காங்கேசன்துறை வீதி, மானிப்பாய் வீதி, சிவன்கோவில் வடக்கு வீதி,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கன்னாதிட்டி வீதி, மணிக்கூட்டுக்கோபுர வீதி, ஸ்ரான்லி வீதி, பருத்தித்துறை வீதி, ஆஸ்பத்திரிவீதி ஆகியனவாகும்.

மத்திய பகுதி அபிவிருத்திக்குக் காணி பற்றாக்குறையாக இருப்பது ஒரு பொது நிலைப்பாடு. இதன் காரணமாகத்தான் நகர் மத்தி, குத்தான வளர்ச்சி பெறுவது இயல்பாகவுள்ளது. யாழ்ப்பாண நகரில் அரசாங்கத்திற்கும் மாநகர சபைக்கும் சொந்தமாகக் காணிகள் குறைவாக இருக்கின்றன. ஆனால் வர்த்தக நிறுவன சேவைகளை விருத்தியாக்கக் கூடிய காணிகள் தனியார் துறையினரிடம் கூடுதலாக இருப்பதனைக் காணமுடிகின்றது. எனினும் வீதி வலைப்பின்னல் அடர்த்தி மிகக் குறைவாக இருப்பதனால் பின்புற நிலங்களை வர்த்தக நிலைப்பயன்பாட்டிற்குக் கொண்டுவர முடியாதுள்ளது. இதனால் முகப்பின்றி இருக்கும் காணிகளை விருத்தியாக்குவதற்குச் சில புதிய பாதைகள் அமைப்பது பிரதான பணியாக அமைய வேண்டும். இவ்வகையில் ஸ்ரான்லி-மின்சார நிலைய வீதி, கஸ்தூரியார் வீதி, மணிக்கூட்டுக் கோபுர வீதிகளுக்கிடைப்பட்ட செவ்வகத்துண்டுப் பகுதியினை அபிவிருத்தி செய்வதற்கு இப்பிரதசத்திற்குள் ஒரு சில வீதிகள் வடக்குத் தெற்காக அமையின், ஸ்ரான்லி வீதி, பஸ் நிலையத்துடன் தொடர்பு பெறும். இதன் மூலம் புதிய காணிகளை வர்த்தகப் பயன்பாட்டிறகுள் கொண்டுவர வாய்ப்பு ஏற்படுவதுடன் கஸ்தூரியார் வீதியின் போக்குவரத்து அமுக்கமும் குறைவடையலாம். காங்கேசன்துறை வீதி, மானிப்பாய் வீதி, சிவன் பண்ணை வீதி, ஆகியவற்றை எல்லையாகக் கொண்ட பகுதிக்குள் தற்பொழுது வீதிகள் போதியளவு இல்லை. ஆகவே காங்கேசன்துறை வீதியிலிருந்து மானிப்பாய் வீதி, ஆஸ்பத்திரி வீதிக்குச் சமாந்தரமான வீதியொன்று நடுவில் அமைக்கப்படுமாயின் கோணாந்தோட்டப் பகுதிக் காணிகளை நகர வர்த்தகப் பயன்பாட்டிற்குப் பயன்படுத்தலாம். இது போன்று ஆஸ்பத்திரி வீதிக்கும், புல்லுக்குளத்திற்கும் இடையே வியாபார நிலையங்களுக்குப் பின்புறமாகவுள்ள காணிகளை புதிய வீதிகள் திறக்கப்படின் வர்த்தக சேவைக்குப் பயன்படுத்த முடியும். ஆகவே யாழ்ப்பாண நகருள் போக்குவரத்து வீதிகள், வியாபார முகப்புகள் இன்மையால் பயனற்றுக்கிடக்கும் தனியார் காணிகளை விருத்தியாக்க முயற்சிகள் மேற்கொள்ளப்பட வேண்டும். பெரிய வர்த்தக நகரங்களில் நகரின் 2ஆம் 3ஆம்தர வர்த்தக சேவை நிலையங்கள் இருப்பது வழக்கம். இந்நிலையங்கள் குறிப்பாக, அந்நகரப் பகுதியில் வாழும் மக்களின் அன்றாடத் தேவைகளைப் பூர்த்தி செய்யும் நிலையங்களாகவுள்ளன. இது போன்று யாழ்ப்பாண நகருள்ளும் தெரிவு செய்யப்பட்ட நிலையங்கள் படி முறையமைப்பில் வர்த்தக சேவை நிலையங்களாக விருத்தி செய்தல் வேண்டும். சுண்டிக்குளி, அரியாலை, கல்வியங்காடு தட்டாதெரு போன்ற நிலையங்கள் இவ்வாறு விருத்தி செய்யப்படலாம்.

யாழ்ப்பாண நகரப் பகுதியில் வீடில்லாப் பிரச்சினை குறிப்பாக கரையோரப் பகுதியில் அமைந்துள்ள கரையூர், பாசையூர், நாவாந்துறை ஆகிய மீன்பிடிக் குடியிருப்புக்களில் காணக்கூடியதாகவுள்ளது. யாழ்ப்பாண சோனகதெருவும் இப்பிரச்சினையை எதிர்நோக்கு கின்றது. இது தவிர யாழ்ப்பாண நகரின் பல இடங்களில் சமூக- பொருளாதார நிலையில் பின்தங்கியுள்ள மக்கள் சிறு சிறு பகுதிகளில் நெருக்கமாக வாழ்கின்றனர். கரையோரப் பகுதியில் பல இடங்களில் ஒழுங்கற்ற குடியிருப்புகள் தோன்றியுள்ளன.

யாழ்ப்பாண நகரப் பகுதியில் இன்று ஏற்பட்டுள்ள வீட்டுத்தட்டுப்பாட்டை எவ்வாறு சமாளிப்பது, என்பது ஒரு கேள்வியாக அமைந்துள்ளது. நகரப் பகுதியில் குறைந்த வருமானம், நடுத்தர வருமானம் உடையவர்களுக்கு வீடு கட்டிக் கொடுக்கக் கூடிய அல்லது தாமே வீடு கட்டக் கூடிய காணித் துண்டுகள் கிடைப்பது கடினமாகவுள்ளது. கடற்பகுதியிலிருந்து காணி மீட்க்கப்பட்டு குருநகர் வீட்டுத்திட்டம் அமைக்கப்பட்டுள்ளது. அண்மைக்காலத்தில் நாவாந்துறை, கண்ணாபுரம் பகுதிகளில் குடியேற்றத் திட்டங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. பாஷையூர் கடற்கரையோரப் பகுதியில் ஓரளவு காணி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடற்பகுதியிலிருந்து மீட்டெடுக்கக் கூடிய வாய்ப்புண்டு. வீடில்லாப் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண மூன்று உப நகர்கள் யாழ்ப்பாண நகரைச் சூழ அமைக்கப்பட வேண்டும். நாவற்குளி, அல்லைப்பிட்டி, கல்லுண்டாய் ஆகியனவே இவ் உப நகர்கள். நாவற்குளியிலே ஏற்கெனவே வீடுகள் அமைக்கப்பட்டிருப்பினும், அண்மைக்காலப் பிரச்சினைகளால் இத்திட்டம் நன் முறையில் நிறைவேற்றப்படவில்லை. அது மீண்டும் கைத்தொழில், குடியிருப்பு நிலையமாக வளரவாய்ப்புண்டு. கல்லுண்டாய்ப் பகுதி தாழ் நிலமாகவும் உவர்த்தன்மையான நீரைக் கொண்டிருப்பினும் யாழ்ப்பாண நகருக்கு அண்மையில் இருப்பதனால் அதனைக் குடியிருப்புப் பகுதியாக விருத்தி செய்வது கடினமல்ல. தாழ்நிலங்கள் குடியிருப்புக்களாக, மேட்டு நிலங்களாக மாற்றப்படுவது வழக்கம். குடிநீர், குழாய் மூலம் எடுத்துச் செல்லப்படலாம். வீட்டுத் தேவைக்குப் போதியளவு நீர் எங்கும் உண்டு. இந்நிலையே அல்லைப்பிட்டிக்கும் பொருந்தும். எனினும் அது தூரத்தில் இருப்பதால் அபிவிருத்தி ஒழுங்கில் அதனைப் பின்னுக்குச் சேர்த்துக் கொள்ளலாம்.

இன்று யாழ்ப்பாண நகரில் வாகனங்கள் குறைவாக இருந்துமே இருக்கும் வீதிகளால் போக்குவரத்து நிலையைச் சமாளிக்க முடியாதுள்ளது. ஆகவே, போக்குவரத்து மேலும் அதிகரிக்குமிடத்து இப்பிரச்சினை மேலும் அதிகரிக்கும், வீதிகள் பற்றாக்குறையும், இருப்பவை ஒடுக்கமாகவிருப்பதும், வாகனம் நிறுத்துமிடம் மிகவும் குறைவாகவிருப்பதும் பிரச்சினைக்குரிய காணிகளாகவிருக்கின்றன. வாகனமோட்டுபவர்கள், பாதசாரிகள் வீதி ஒழுங்குகளைச் சரிவரக் கடைப்பிடிக்காமையால் இப்பிரச்சினை மேலும் அதிகரித்துள்ளது. தற்பொழுது வீதி விருத்தியில் அபிவிருத்தியடைந்த ஒடுக்கமான வீதிகளை அகலமாக்குவதற்குப் பதிலாக, மாற்று வீதிகளை அமைத்து, போக்குவரத்துப் பாய்ச்சலைச் சீராக்கிப் பிரச்சினைக்குத் தீர்வு காணலாம். வீதி விருத்தியை ஏற்படுத்தி நகருக்கு அழகு கொடுக்கும் அலங்கார வளைவுகள், சுற்று வளைவுகளை அமைக்கலாம். சுற்று வளைவுகளின் மையப் பகுதியில் உருவாகும் தீவுகளில் எமது வரலாற்றுக் கலாசார ஞாபகச் சின்னங்களை நிறுவலாம்.

யாழ்ப்பாண நகருள் எற்கெனவே குறிப்பிட்டுள்ளது போன்று கைத்தொழில்கள் இடவமைவு பெறுவது விரும்பத்தக்கதல்ல. ஒரு சில இலகு கைத்தொழில்களைத் தவிர ஏனையவை நாவற்குளி, காங்கேசன்துறைப்பகுதியிலேயே அமைய வேண்டும். நகரின் அழகிற்கும், பொழுது போக்கிற்கும் நல்லவிளையாட்டு மைதானம், பூங்காக்கள், கடற்கரைகள், கலையரங்குகள், சினிமாக்கள் தேவை. நகரில் இருக்கும் பூங்கா பரப்பளவில் சிறியதொன்றாகும். பெரியளவிலான பூங்காக்கள் ஒரு சில நகரின் வெவ்வேறு பகுதிகளில் அமைய வேண்டும். யாழ்ப்பாண நகர் நீண்ட கடற்கரையைக் கொண்டிருந்தும், பல காரணங்களால் மக்கள் இக் கடற்கரையை பொழுதுபோக்கிற்குப் பயன்படுத்த முடியாதுள்ளது. இக்கடற்கரைப் மணலற்று சேற்றுப் பகுதியாக இருப்பதும், கரையோரத்தில் மீன்பிடிக் குடியிருப்புக்கள் காணப்படுவதும் சுகாதாரமற்ற நிலைகள் இருப்பதும் கடற்கரையைப் பயன்படுத்துவதில் பெரிதும் வசதியீனங்களை எதிர்கொள்ள வேண்டியுள்ளது. இதற்குரிய மாற்று நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும்.

யாழ்ப்பாண நகருக்கும் குடாநாட்டு நகரங்களுக்கும், கிழக்குக் கரையோர நகரங்களுக்கும், தென்னிலங்கை நகரங்களுக்கும் தென்னிந்திய நகரங்களுக்குமிடையே சிறந்த போக்குவரத்து நிலவினால்த் தான் நகரின் வளர்ச்சி உறுதிப்படுத்தப்படும். குடாநாட்டுப் போக்குவரத்தில் பெரியதொரு மாறுதலை ஏற்படுத்த வேண்டுமாயின் குடாநாட்டிலுள்ள முக்கிய நகரங்களை இணைத்த ஒரு சுற்றுப் புகையிரதப்பாதை அமைக்கப்பட வேண்டும். மேற்குறிப்பிட்ட சுற்றுப்பாதையில் காங்கேசன்துறை-யாழ்ப்பாணம், யாழ்ப்பாணம்-கொடிகாமம், ஏற்கெனவே பாதை அமைக்கப்பட்டு போக்குவரத்து இடம்பெறுகிறது. கொடிகாமம்-நெல்லியடி-பருத்தித்துறை, பருத்தித்துறை-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தெரிவு செய்யப்பட்ட உறுப்பினர்கள் ஏதாவது காரணத்திற்காக ஓர் உறுப்பினராக தொடர்ந்து பதவி வகிக்காது விடலாம். அவ்வாறு அவர் தீர்மானிப்பின் தமது தெரிவுக்குப்பின் சபையின் 1வது கூட்டத்திற்கென நியமிக்கப்பட்ட திகதிக்கு முன்னர் தாம் பதவி ஏற்ப மறுப்பதாக முதல்வருக்கு அறிவிப்பதன் மூலம் அல்லது 1வது கூட்டத்திற்கு பின் எந்நேரத்திலும் தாம் பதவியிலிருந்து விலகுவதைக் குறித்து ஆணையாளருக்கு நேராகவோ அல்லது முதல்வர் மூலமோ எழுத்திலான அறிவித்தல் மூலம் தம் பதவியிலிருந்து விலகிக்கொள்ளலாம். அத்துடன் உறுப்பினர் ஒருவர் சபையின் 3 தொடரான சாதாரண கூட்டங்களுக்கு சபையிடமிருந்து விருப்பம் பெறாது சமூகமளியாது விடின் அந்நிகழ்ச்சி கொண்டே தம் பதவியை வெற்றிடமாக்குதல் வேண்டும்.

## முதல்வர்

மாநகரசபையின் நிறைவேற்று அதிகாரம் கொண்ட தலைவராக முதல்வர் காணப்படுகிறார். சபையினால் எடுக்கப்படுகின்ற தீர்மானங்கள் எதனையும் தனித்து நின்று செயற்படுத்துவதற்கான முழு அதிகாரமும் இவருக்கு வழங்கப்பட்டுள்ளது. அத்துடன் சில வரையறைக்குட்பட்ட வகையிலான தீர்மானங்களை எடுப்பதற்கும் அதனை நடைமுறைப்படுத்துவதற்கும் முதல்வருக்கு அதிகாரமுண்டு. ஆயினும் கொள்கைரீதியான தீர்மானங்கள் எதனையும் தனித்துநின்று எடுப்பதற்கு அதிகாரம் வழங்கப்படவில்லை. அவ்வகையில் எந்தவொரு விடயம் தொடர்பாகவும் எடுக்கப்படு கின்ற தீர்மானம் என்பது சபை உறுப்பினர்களின் பெரும்பான்மையோரின் தீர்மானமாகவே இருக்கும்.

முதல்வரால் எடுக்கப்படவிருக்கும் எந்த ஒரு நடவடிக்கையும் அல்லது விடயமும் பொதுக்கூட்டம் ஒன்றில் அல்லது அதற்கான விசேட கூட்டம் ஒன்றில் சபைக்குத் தெரிவிக்கப்பட்டு சபையின் பெரும்பான்மையோரின் சம்மதத்தைப் பெற்றதன் பின்னரே செயற்படுத்தப்படுகிறது. இந்நிலைமை முதல்வரது எதேச்சாதிகாரப் போக்கினை கட்டுப்படுத்தி ஜனநாயகத்தை பேணி வளர்ப்பதற்கு உதவியாக இருக்கிறது என்று கூறமுடியும்.

சபையின் தலைவர் என்ற ரீதியில் முதல்வரே அனைத்து கூட்டங்களுக்கும் தலைமை தாங்குதல் வேண்டும். தாம் விரும்பியபோது விசேட கூட்டங்களை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூட்டுவதற்கு முதல்வருக்கு அதிகாரமுண்டு. மேலும் கூட்டங்களுக்கான நிகழ்ச்சிக் குறிப்பை தயார் செய்தல், உத்தேச வரவு, செலவுத் திட்டத்தை தயாரித்து சபைக்கு சமா்ப்பித்தல், மாநகரசபையின் சாா்பில் ஒப்பந்தங்களுக்கு கைச்சாத்திடல், ஊழியா் மத்தியிலுள்ள பிரச்சினைகளை தீா்த்துவைப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளல் என்பன முதல்வரின் முக்கிய கடமையாகும்.

மேலும் முதல்வா், மாநகரசபை அமைந்துள்ள சூழ்நிலையில் பதவிவழிச் சமாதான நீதவானாகவும், பதவிப்பற்றற்ற நீதவானாகவும் இருத்தல் வேண்டும்.

## முதல்வா் தெரிவு

வீதாசார அடிப்படையில் கூடுதலான பிரதிநிதித்துவத்தைப் பெற்றுக்கொண்ட கட்சியிலிருந்தே முதல்வா் தெரிவுசெய்யப்படுவாா். குறித்த அக்கட்சியின் பெயா்ப்பட்டியலில் முதலாவதாக இடம்பெற்றுள்ள பெயருக்குரியவரே அக்கட்சியினால் முதல்வராகத் தெரிவு செய்யப்படுகிறாா்.

## ஆணையாளா்

மாநகரசபையில் முதல்வராக அடுத்தபடியாக அதிகாரமுள்ள நிறைவேற்று உத்தியோகத்தராக ஆணையாளா் கருதப்படுகிறாா். இவா் சபையின் ஒரு பிரதிநிதியாக அன்றி அரசாங்கத்தால் நியமிக்கப்பட்ட உத்தியோகத்தா் ஆகவே சேவையாற்றுகிறாா். ஊழியா் நிா்வாகத்தின் பிரதம அதிகாரியாக இருந்தாலும்கூட சபை நடவடிக்கைகளில் ஈடுபாடு உடையவராகவும், சபையின் 'பிரதம ஆலோசகராகவும்' கடமையாற்றுகிறாா். ஆனாலும் கூட்டங்களில் வாக்களிக்கும் உரிமை ஆணையாளருக்கு கிடயாது.

சபையின் கூட்டங்கள் மற்றும் நடவடிக்கைகளைப் பொறுத்தவரையில் அங்கு சட்டம் ஒழுங்கு ஆகியவற்றை பாரபட்சம் அற்றமுறையில் அமுல்படுத்தவேண்டிய பொறுப்பு ஆணையாளருடையதே. அத்துடன் சபையினால் எடுக்கப்படுகின்ற தீா்மானங்களை ஊழியா்களுடாக செயல்முறைப்படுத்துவது இவரின் முக்கிய கடமையாகும். ஊழியா் நிா்வாகத்தின் அதிகாரி என்ற வகையில் ஊழியா்களின் தன்னிச்சையான ஒத்துழைப்பை பெற்றுக்கொள்ளும் விதத்தில் அவா்களை சிறந்த முறையில் வழிப்படுத்தி நெறிப்படுத்தி வருகிறாா். சபையையும் ஊழியா்களையும் இணைக்கும் 'பாலமாக' இருந்து இவ்விரண்டு பிரிவுகளுக்குமிடையே இயைபாக்கல் ஏற்படுத்தும் வகையில் ஆணையாளா் தொழிற்படவேண்டியவராவாா்.

## பகுதித்தலைவா்கள்

ஆணையாளரின் நேரடி மேற்பாா்வையில் 7 செயற்பாட்டுப் பகுதிகள் இருக்கின்றன. இப்பகுதிகள் ஒவ்வொன்றுக்கும் பகுதித்தலைவா்கள் அமா்த்தப்பட்டுள்ளாா்கள். ஆணையாளருக்கு அடுத்ததாக அதிகாரமுள்ளவா்களாக பகுதித்தலைவா்கள் காணப்படுகிறாா்கள். ஆணையாளரினால் வழங்கப்பட்ட அதிகாரக் கையளிப்புக்கும் எல்லைக்கும் உட்பட்டவகையில் பகுதித் தலைவா்கள் ஒவ்வொருவரதும் கடமைகளை தனித்தனியே பாா்ப்போம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| செயலகப்பகுதி | - | ஆணையாளர் |
| கணக்குப்பகுதி | - | கணக்காளர் I |
| வருமானப்பகுதி | - | கணக்காளர் II |
| சுகாதாரப்பகுதி | - | சு. வை. அதிகாரி |
| வேலைப்பகுதி | - | பொறியியலாளர் 2 |
| நூலகம் | - | பிரதம நூலகர் |
| மின்சாரம் | - | பொறியியலாளர் |

## ஆணையாளர்

செயலகப்பகுதியில் தலைவராக ஆணையாளரே கடமையாற்றிக் கொண்டிருக்கிறார். பொதுசன தொடர்புபகுதி, ஸ்தாபனப்பகுதி, உள்ளகக் கணக்காய்வுப் பகுதி, பதிவேட்டகம், அலுவலக பாதுகாப்பு பகுதி ஆகியவற்றின் திறமையான நடவடிக்கைகளை மேற்பார்வை செய்து வழிநடத்தி வருகிறார். பொதுசன தொடர்பு அதிகாரி, நிர்வாக உத்தியோகத்தர், உள்ளூராட்சி உத்தியோகத்தர், உள்ளகக் கணக்காய்வாளர்கள் ஆகியோர் ஆணையாளருக்கு உதவியாக அவரால் கொடுக்கப்பட்ட கடமைகளை தமக்குக் கீழுள்ள ஊழியர்களின் உதவியுடன் நிறைவேற்றி வருகிறார்கள்.

## பொதுசன தொடர்பு அதிகாரி

பொதுமக்களுடனான தொடர்புகளைப் பராமரித்தலும், ஆணையாளரின் கடிதத் தொகுப்புக்கள் சம்பந்தமான நடவடிக்கைகளை மேற்கொள்ளல் என்பன இவரின் கடமைகளாகும். இவற்றைவிட சீ. சீ. (ஏ) பகுதியின் இலிகிதர் என்ற வகையில் பின்வரும் சபை நடவடிக்கைகளையும் ஆற்றிவருகிறார்.

1. சபையின் கூட்டங்களுக்கு ஏற்பாடு செய்தல்
2. கூட்டங்களுக்கான அறிவித்தல்களை அனுப்புதல்
3. கூட்ட அறிக்கைகளை தயாரித்தல்
4. பொது வைபவங்களுக்கு ஏற்பாடு செய்தல்
5. குழுக்கூட்டங்களை நடாத்துவதற்கான ஏற்பாடுகளை மேற்கொள்ளல்.

## உள்ளூராட்சி உத்தியோகத்தர்

ஆணையாளரின் கருமங்களை ஆற்றும் பகுதிக்கு (சீ.சீ.பி) பொறுப்பாக இருக்கிறார். இக்கருமம் தொடர்பாக பின்வரும் கடமைகளை நிறைவேற்ற வேண்டியவராக உள்ளார்.

1. சாதாரண தபால் தொடர்புகளை மேற்கொள்ளல், பதிவுத் தபால்களை பதிவுசெய்து பகுதிகளுக்கு அனுப்புதல்
2. ஆணையாளரிடம் இருந்து வருகின்ற சகல விதமான பத்திரங்களையும் பதிந்து அனுப்புதல்.
3. சனசமூக நிலையங்கள் சம்பந்தமாக விடயங்களை கவனித்தல், அவற்றைப் பதிவு செய்தல், அவற்றுக்கு நன்கொடைப் பணங்களை அனுப்புதல்.
4. மாநகரசபையால் நடாத்தப்படும் இரண்டு சிறுவர் பாடசாலைகள் சம்பந்தமான விடயங்களைக் கவனித்தல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

5. வாடகைக் கட்டுப்பாடு வாடகைகளை ஏற்றுக்கொள்ளுதல், அவற்றை உரியவர்களுக்கு மீளளிப்புச் செய்தல்.
6. தொலைபேசி வாடகைகளை அறவிடுதல்
7. உள்ளூராட்சி மன்ற புள்ளிவபரங்களைத் தயாரித்தல்
8. மாநகரசபைக்கு வருகின்ற பத்திரிகைகளை பதிவுசெய்து, மாநகரசபை சம்பந்தமான செய்திகளைச் சேகரித்த வைத்தல்.

## நிர்வாக உத்தியோகத்தர்

இவர் செயலகப் பகுதியில் பிரதம உத்தியோகத்தர்களின் கீழ் கடமையாற்றுகிறார். செயலகப்பகுதி 3 பிரிவுகளாக இயங்குகிறது.

ஆளணிப்பகுதி
சப்பளப்பகுதி
இளைப்பாற்றுப்பகுதி

இம்மூன்று பகுதிகளினதும் திறமையான நிர்வாகத்திற்கு பொறுப்பாக இருந்து அவற்றை வழிநடத்தி வருகிறார்.

1. தினவரவு இடாப்புகளைப் பேணுதல்
2 தற்காலிக தொழிலாளர்களின் தினவரவுகளை அதற்கேற்ற வேதனங்கள் தொடர்பான நடவடிக்கைகளையும் மேற்கொள்ளல்.
3. லீவு இடாப்புக்களைப் பேணுதல், பராமரித்தல்.
4. இளைப்பாற்றுதல் சம்பந்தமான ஏற்பாடுகளை மேற்கொள்ளல்.
5. ஊழியர்கள் தொடர்பான நியமனம் ஒழுக்காற்று நடவடிக்கைகளை மேற்கொள்ளல். ஆகிய கடமைகளை நிர்வாக உத்தியோகத்தர் ஆற்றி வருகிறார்.

## உள்ளகக் கணக்காய்வாளர்கள்

நிறுவனத்தினால் மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் எல்லாம் சம்பந்தப்பட்ட ஏடுகளில் சரியான முறையில் பதியப்பட்டுள்ளனவா எனவும் கொடுப்பனவுகளும் பெறுவனவுகளும் சரியான மதிப்பீட்டின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்டுள்ளனவா எனவும் உறுதிப்படுத்தும் நிறுவனத்தின் பேணப்படுகின்ற காசுப்புத்தகம் உட்பட சகல பதிவேடுகள், ஆவணங்கள், உறுதிச் சீட்டுகள், பற்றுச்சீட்டுகள் என்பவற்றை பரிசோதனை செய்து நிர்வாகத்திற்கு வேண்டிய ஆலோசனைகளை வழங்குவது கணக்காய்வாளரின் கடமையாகும்.

இதனைவிட பௌதீகரீதியான சோதனைகளையும் கணக்காய்வாளர் மேற்கொள்ளவேண்டியவர் ஆவர். இந்நடவடிக்கைகளினால் பொறுப்பு வாய்ந்தவர்களினால் செய்யப்படுகின்ற மோசடிகளும் கவலையீனமான தவறுகளும் இலகுவாக கண்டுபிடிக்கப்படுகின்றன.

## கணக்காளர் (நிதி)

கணக்குப்பகுதி, செலவினப்பகுதி, களஞ்சியப்பகுதி ஆகிய பகுதிகளுக்கு பொறுப்பாக இருந்து இப்பகுதிகளின் சகல நடவடிக்கைகளையும் மேற்பார்வை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்து, கட்டுப்படுத்தி வருகின்றார். சபையினால் மேற்கொள்ளப்படுகின்ற சகல கொடுப்பனவுகளுக்கும் கணக்காளரே பொறுப்பு. ஆணையாளரால் அனுமதிக்கப்பட்ட சகல செலவினங்களையும் சான்றுறுதிப்படுத்தி அதற்கு அங்கீகாரத்தை அளிப்பதுடன் நிறுவனத்தின் கொள்வனவு நடவடிக்கைகளையும் மேற்கொண்டு வருகிறார். இவருக்கு உதவியாளர்களாக கணக்குப்பதிவாளர் பிரதம இலிகிதர்கள் காணப்படுகின்றனர். ஒவ்வொரு ஆண்டு முடிவிலும் அடுத்து வருகின்ற வருடத்திற்கான வரவு செலவுத் திட்டத்தை தயாரித்து சபையில் சமர்ப்பிக்க வேண்டியது கணக்காளரின் கடமையாகும்.

### கணக்குப்பதிவாளர்

இவர் கணக்குப் பகுதிக்கு பொறுப்பாக இருக்கிறர். இப்பகுதியில் மேற்கொள்ளப்படும் எல்லா செவுகளுக்கும் பதிவுகளை மேற்கொண்டு கணக்கு காட்டுதல் கணக்கு அறிக்கைகளை தயாரித்தல், காசுப்புத்தகங்களையும், வருமான புத்தகங்களையும் சமப்படுத்துதல் கட்டுப்பாட்டுக் கணக்குகளை தயாரித்து அவற்றிலிருந்து முடிவுக் கணக்குகளை தயாரித்தல் ஆகிய கடமைகளை கணக்குப் பதிவாளர் மேற்கொள்கிறார்.

### பிரதம லிகிதர்

இவர் செலவினப் பகுதிக்கு பொறுப்பாக அமர்த்தப்பட்டுள்ளார். ஒவ்வொரு பகுதியினதும் (அவற்றுக்கான) கொடுப்பனவுச் சீட்டினைப் பெற்று செலவினங்கள் சரியான முறையில் செய்யப்பட்டுள்ளதா என சரிபார்த்தல், உறுதிப்படுத்தப்பட்ட கொடுப்பனவுக்கான காசோலைகளை வழங்கல் ஆகியன இவரின் கடமைகளாகும்.

### கணக்காளர் (வருமானம்)

சோலைவரிப்பகுதி, மின்சார இறைவரிப்பகுதி நானாவித இறைவரிப் பகுதி, காசாளர் பகுதி ஆகியவற்றை உள்ளடக்கிய வருமானப்பகுதியின் தலைவராக கணக்காளர் காணப்படுகிறார். இவர் ஆணையாளரினால் வழங்கப்பட்ட அதிகாரக்கையளிப்புக்கேற்ப இப்பகுதிகளில் நேரடி மேற்பார்வையாளராக கடமை புரிகிறார். சபைக்கு கிடைக்கவேண்டியுள்ள சகலவிதமான வருமானங்களையும் மதிப்பீடுசெய்தல் அவற்றை அறவிடுதல், பணத்தை ஏற்றுக்கொள்ளல் என்பன இவரின் கடமைகளாகும். இக்கடமைகளை சோலைவரி நிர்வாக உத்தியோகத்தர், இறைவரிப்பரிசோதகர்கள் பிரதம எழுதுநர்கள், காசாளர்கள் ஆகியோரின் உதவியுடன் நிறைவேற்றிக் கொண்டிருக்கிறார்.

### சோலைவரி நிர்வாக உத்தியோகத்தர்

சோலைவரி வருமானம் தொடர்பான நிர்வாக அலுவலர்களுக்கு பொறுப்பாக நிர்வாக உத்தியோகத்தர் காணப்படுகிறார். ஒவ்வொரு வரி இறுப்பாளர் தொடர்பாகவும் அவர்கள் செலுத்தவேண்டிய வரியினை மதிப்பீடு செய்தல், அது தொடர்பான வேலைகளை ஊழியர்களிடையே பகிர்ந்தளித்தல், சோலைவரி அறிவிப்புகளை வரி யிறுப்பாளர்களுக்கு அனுப்புதல் அறவிடுதல் சம்பந்தமான நடவடிக்கைகளை மேற்கொள்ளல் என்பன இவரின் கடமைகள் ஆகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இறைவரிப் பரிசோதகர்

இவர் தமக்கு அளிக்கப்பட்ட அதிகாரத்திற்குட்பட்ட வகையில் வரிகளை அறவிடுதல் சம்பந்தமான எதிர் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறார்.

## பிரதம எழுதுநர்கள்

இவர்கள் அவ்வப்பகுதியில் பதிவு வேலைகளை மேற்கொள்வதுடன் அங்கு கடமையாற்றுகின்ற எழுதுநர்கள், சுருக்கெழுத்தாளர்கள் ஆகியோரை மேற்பார்வை செய்தல், அவர்களுக்குரிய வேலைகளை பகிர்ந்து ஒதுக்குதல் ஆகியன இவர்களின் கடமைகளாகும்.

## காசாளர்

காசு கையாளல் நடவடிக்கைகளுக்கு பொறுப்பாக காசாளர் இருக்கிறார். இவர் கணக்காளரினால் உறுதிப்படுத்தப்பட்ட வருமானங்களை காசாகவும், காசோலையாகவும் பெற்று எண்ணி சரிபார்த்து வங்கியில் இடுவதுடன் உறுதிப் படுத்தப்பட்ட செலவினங்களுக்கான கொடுப்பனவுகளையும் (காசு) மேற்கொள்கிறார்.

## சுகாதார வைத்திய அதிகாரி

யாழ் மாநகர எல்லைக்குள் செயற்படுத்தப்படும் சகலவிதமான சுகாதார நடவடிக்கைகளுக்கும் பொறுப்பாக சுகாதார வைத்திய அதிகாரி காணப்படுகிறார். இவர் நிர்ணயிக்கப்பட்ட தனது இலக்கினை அடைந்துகொள்ளும் விதத்தில் இப் பகுதியை வழிநடாத்துகிறார். இப்பகுதியில் நடவடிக்கைகளுக்காக குறிப்பிட்டளவிற்கு செலவினங்களை மேற்கொள்வதற்கான அதிகாரமும் இவருக்கு வழங்கப்பட்டுள்ளது. சுகாதாரப் பகுதியின் தலைவர் என்ற ரீதியில் இவர் பின்வரும் கடமைகளை ஆற்றுகிறார்.

1. சுகாதாரப் பகுதியில் இயங்குகின்ற உபபகுதி உத்தியோகத்தர்களின் வேலைகளை மேற்பார்வை செய்தல், அவர்களுக்கு ஆலோசனை வழங்கல்.

2. மாநகரசபை எல்லைக்குள் அமைக்கப்பட்டிருக்கும் சிகிச்சை நிலையங்களுக்கு சென்று கர்ப்பிணிகள், குழந்தைகள், பாலூட்டும் தாய்மார் ஆகியோரின் உடல் நிலையைப் பரிசோதித்து அவர்களின் குறைபாடுகள் பிரச்சினைகளை தீர்த்துவைக்கும் வகையில் மருந்துகளை சிபார்சு செய்வதுடன் வேண்டிய ஆலோசனைகளை வழங்குதல்.

3. வெளிக்கள வேலையாட்களையும் மேற்பார்வையாளர்களையும் (எதிர்பாரா வகையில்) வேலைத்தளத்திற்கு சென்று பரிசோதனை செய்தல்.

4. சகல ஊழியர்கள் தொடர்பாகவும் எழுகின்ற பிரச்சினைகளை தமது மட்டத்தில் தீர்த்து வைத்தல். ஆணையாளரின் கவனத்திற்கு கொண்டு செல்லல்.

5. சுகாதாரப் பகுதிக்கு தேவைப்படுகின்ற மருந்துவகைகள், உபகரணங்கள் என்பவற்றை பெற்றுக்கொள்வதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளல். இது தொடர்பாக செஞ்சிலுவைச் சங்கம் போன்ற தொண்டர் ஸ்தாபனங்களுடன் தொடர்புகளைப் பேணுதல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

6. உயர் மட்டத்தில் சுகாதார மாநாடுகள் கருத்தரங்குகள் என்பவற்றுற்கு ஒழுங்கு செய்தல், கருத்துக்களை வழங்குதல்.

சுகாதார வைத்திய அதிகாரியின் நேரடி மேற்பார்வையில் கீழ் நிர்வாக உத்தியோகத்தர், நோய் தடுப்பு மேற்பார்வையாளர்கள், பிரதம ஆயுர்வேத மருத்துவர், உணவுப் பரிசோதகர்கள், பிரதம சுகாதார பரிசோதகர், பொது சுகாதார சௌக்கிய சகோதரி, சுகாதாரக்கல்வி உத்தியோகத்தர் ஆகியோர் காணப்படுகின்றனர். இவர்கள் தங்களுக்கென ஒதுக்கப்பட்ட வேலைத்திட்டங்களை கீழுள்ளவர்களின் உதவியோடு நிறைவேற்றி வருகிறார்கள்.

## நிர்வாக உத்தியோகத்தர்

சுகாதார வைத்திய அதிகாரி பிரிவின் நிர்வாகத்திற்கு பொறுப்பாக இருந்து பின்வரும் நிர்வாகக் கடமைகளை ஆற்றி வருகிறார்.

வெளிக்கள வேலையாட்களின் அறிக்கைகள் தொடர்பாக ஏற்ற நடவடிக்கைகளை மேற்கொள்ளல், தொழிலாளர்களின் தினவரவு இடாப்புகளை பேணுதல்.

தற்காலிக தொழிலாளர்களின் தினவரவுகளை பதிந்து அதற்கேற்ற வேதனக் கொடுப்பனவுக்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.

விடுமுறை (லீவு) இடாப்புகளைப் பேணுதல்.

தொற்றுநோய் சம்பந்தமான அறிக்கைகளை பேணுதல். அது தொடர்பான கடிதத் தொடர்புகளைப் பேணுதல்.

சகல செலவினங்கள் சம்பந்தமான கட்டண இடாப்புகளைத் தயாரித்தல்.

ஊழியர் தொடர்பான ஒழுக்காற்று நடவடிக்கைகளை மெற்கொள்ளல்.

## பிரதம சுகாதாரப் பரிசோதகர்

சுகாதாரப் பகுதியில் வெளிக்கள சுத்திகரிப்பு நடவடிக்கைகளுக்கு பொறுப்பாக பிரதம சுகாதார பரிசோதகர் காணப்படுகிறார். வெளிக்கள வேலைகளை திட்டமிட்டு அவ்வவ் உத்தியோகத்தர்களுக்கு பகிர்ந்தளித்தல், சந்தைகள். பொது இடங்கள் ஆகியவற்றில் சுகாதார நடவடிக்கைகளை மேற்கொள்ளல், வேலைத்தலங்களுக்கு நேரடியாகச் சென்று மேற்பார்வை செய்தல்.

விஷேட தேவைகள் நெருக்கடிகள் ஏற்படும்போது அவை தொடர்பாக விஷேட வேலைத்திட்டங்களைப் வகுத்துக் கொள்ளல். அகதி முகாம்களை பார்வையிட்டு அங்குள்ள குறைகளை கண்டறிதல். சுத்திகரிப்பு நடவடிக்கைகளுக்கு தேவைப்படும் உபகரணங்கள் கிருமிநாசினி ஆகியவற்றிற்கான கணக்குகளைத் தயாரித்தல். ஆகிய கடமைகளை சுகாதார பரிசோதகர்கள், கங்காணிமார், சந்தை மேற்பார்வை யாளர்கள் ஆகியோரின் உதவியுடன் நிறைவேற்றி வருகிறார்.

## பிரதம ஆயுர்வேத மருத்துவர்

இவர் யாழ். மாநகரசபையின் சித்த மருத்துவ சேவை தொடர்பான அனைத்து நடவடிக்கைகளையும் பொறுப்பேற்று கவனித்து வருகிறார். யாழ் மாநகராட்சி மன்ற



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மத்திய ஆயுர்வேத மருத்துவசாலையில் பிரதம வைத்தியராகவும் மத்திய ஆயுர்வேத வைத்தியசாலை உட்பட ஏனைய கிளை வைத்தியசாலைகளினதும் பிரதம நிர்வாகியாகவும் ஆயுர்வேத மருத்துவர் கடமையாற்றுகிறார். ஆயுர்வேத வைத்தியசாலைக்கு தேவைப்படுகின்ற மருந்து வகைகளை கொள்வனவு செய்வதற்கான நடவடிக்கைகளை சுகாதார வைத்திய அதிகாரி மூலமாகவும் எடுத்து வருகிறார். இவற்றைவிட சித்த மருத்துவ மாணவர்களுக்கும் சுகாதார சேவையாளர்களுக்கும் பயிற்சிகளை வழங்கிவருகிறார். தற்போது மூலிகை வளர்ப்புத் திட்டம் ஒன்றை அமைத்து நிர்வகித்து வருவதுடன் அதனை அபிவிருத்தி செய்யும் நடவடிக்கைகளையும் மேற்கொண்டு வருகிறார்.

பிரதம ஆயுர்வேத மருத்துவருக்கு உதவியாக உதவி மருத்துவர்கள், மருந்து கலப்பவர்கள், மருந்துக் களஞ்சியக் காப்பாளர்கள், மூலிகைத் தோட்டக் காப்பாளர்கள் ஆகியோர் கடமையாற்றுகிறார்கள்.

## பொது சுகாதார சௌக்கிய சகோதரி

இவர் தாய் சேய் நலன் பிரிவிற்கு பொறுப்பாக இருந்து சௌக்கிய சேவை நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறார். மாநகர எல்லைக்குள் இருக்கும் மகப்பேற்று விடுதிகளை தாய், சேய் நலச்சிகிச்சை நிலையங்களைப் பராமரித்தல். நிர்வகித்தல், குழந்தைகளுக்கு இலவசப் பாலுணவு வகைகள் வழங்குவதற்கு ஏற்பாடு செய்தல், மாநகர எல்லைக்குள் இருக்கின்ற குழந்தைகள், கர்ப்பிணிகள் ஆகியோரை இனங்கண்டு பதிவு செய்தல்.

குடும்பக் கட்டுப்பாடு தொடர்பான ஆலோசனைகளை வழங்கல். சௌக்கிய சேவையாளர்களுக்கு வேலைகளைப் பகிர்ந்து ஒதுக்குதல், அவர்களை மேற்பார்வை செய்தல். இச்சேவைகள் தொடர்பான புள்ளிவிபரங்களையும் அறிக்கைகளையும் தயாரித்து சமர்ப்பித்தல்.

சுகாதாரத் தொண்டர்களைத் தெரிவு செய்வதற்கும் அவர்களுக்கு பயிற்சி அளிப்பதற்கும் ஆன நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.

குழந்தைகளுக்கு தடுப்பூசி மருந்துகளை காலத்திற்கு காலம் புகுத்துவதற்கான நடவடிக்கையை மேற்கொள்ளல். ஆகிய கடமைகளை இவர் ஆற்றி வருகிறார். இவருக்கு உதவியாக சுகாதார சேவையினர்களும் தொண்டர்களும் கடமையாற்று கிறார்கள்.

## சுகாதாரக்கல்வி அதிகாரி

தொற்றுநோய்களில் இருந்து பாதுகாப்பு பெற்றுக்கொள்வதற்கு சுகாதார பழக்க வழக்கங்களை கையாளவேண்டிய அவசியத்தை அறிவியல் ரீதியாக மக்களுக்கு உணரவைக்கும் பொருட்டு கீழ்வரும் நடவடிக்கைகளையும் இவர் மேற்கொண்டு வருகிறார்.

1. சுகாதார பிரச்சினைகளை இனங்கண்டு அதனை தீர்ப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2. வட்டாரங்கள் தோறும் சுகாதாரக் குழுக்களை அமைத்து அவர்களினூடாக பிரச்சார நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.
3. தெரிவு செய்யப்பட்ட தொண்டர்களுக்கு பயிற்சி வகுப்புக்களை நடாத்துதல்.
4. காலத்திற்கு காலம் சனசமூக நிலையங்கள், மாதர் சங்கங்கள், ஏனைய சமூக அமைப்புக்களுடன் கலந்துரையாடல்களை நடாத்துதல்.
5. பாடசாலைகளிலும் பொது இடங்களிலும் சுகாதார கல்வி கருத்தரங்குகளை நடாத்துதல்.

இந்நடவடிக்கையினை மேற்கொள்வதற்கான சுகாதார வைத்திய அதிகாரியுடன் கலந்தாலோசித்து அவரின் ஆலோசனைகளுடன் திட்டங்களை மேற்கொண்டு செயற்படுத்தி வருகிறார்.

## யுனிசெப் திட்டப்பகுதி உத்தியோகத்தர்

இவர் யுனிசெப் நிகழ்ச்சிகளை திட்டமிட்டு நடைமுறைப்படுத்தி வருகிறார். இப்பகுதி சுகாதாரப் பகுதியின் ஏனைய திட்டப்பகுதிகளுடன் இணைந்தும் தனித்தும் பல சமூகநல அபிவிருத்தித் திட்டங்களையும் ஊக்குவிப்பு நடவடிக்கைகளையும் சமூக அபிவிருத்தி உத்தியோகத்தர்களின் உதவியுடன் மேற்கொண்டு வருகிறார். கொழும்பிலுள்ள யுனிசெப் அலுவலகத்துடன் தொடர்புகளை மேற்கொண்டு நிதி உதவியை பெற்றுக்கொள்வதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறார்.

## வேலைப்பொறியியலாளர் 1

யாழ் மாநகரசபையின் பௌதீக திட்டமிடல் பிரிவின் தலைவராக வேலைப் பொறியியலாளர்1 காணப்படுகிறார். சிவில் அபிவிருத்தி நடவடிக்கைகளை திட்டமிட்டு மேற்கொண்டு வருகின்றார். அலுவலக நிர்வாகம், நகரத்திட்டமிடல், பொது வசதிகள், காணி கட்டடங்கள் தொடர்பாக பின்வரும் கடமைகளை ஆற்றி வருகிறார்.

1. வேலைப்பகுதியை முகாமை செய்தலும் மேற்பார்வை செய்தலும்.
2. சபைக்குரிய கட்டடங்களை திட்டமிட்டு நிர்மானித்தல்
3. காணி கட்டடங்களின் திருத்தங்களை திட்டமிட்டு மேற்கொள்ளல்.
4. மாநகர எல்லைக்குள் கட்டப்படுகின்ற ஏனைய கட்டடங்கள், வீடுகள் என்பவை தொடர்பாக கட்டடப் படங்களைப் பரிசோதித்து அவற்றுக்கான அங்கீகாரத்தை வழங்குதல்.
5. வீதிகள், ஒழுங்கைகள், வடிகால்கள், பாலங்கள் என்பவற்றை நிர்மானித்தல், திருத்தங்களை மேற்கொள்ளுதல்.
6. தேவையேற்படுகின்றபோது வீதி அகலிப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.
7. தமது வேலைகள் தொடர்பான அறிக்கையினை தயாரித்துச் சமர்ப்பித்தல்.

## வேலைப்பொறியியலாளர் 11

இவர் நீர் வேலைப்பகுதிக்கு பொறுப்பாக இருக்கிறார் அத்துடன் வேலைத்தலம், தீயணைப்புப்படை, மின்தூண்பகுதி ஆகிய பகுதிகள் இவரின் மேற்பார்வையிலேயே இயங்குகின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வேலைப் பொறியியலாளர் 11இன் கடமைகள்

1. நீர் வேலைப்பகுதியில் அலுவலக நிர்வாகத்தை மேற்பார்வை செய்தல்.
2. நீர் விநியோக நடவடிக்கைகளை மேற்கொள்ளல்
3. பொது மக்களுக்கு பிரத்தியேக குழாய் இணைப்புக்கான அங்கீகாரத்தை வழங்குதலும், இணைப்புச் சேவையை ஏற்படுத்திக்கொடுப்பதற்கான நடவடிக்கைகளை மெற்கொள்ளலும்.
4. நீர் விநியோகத் திட்டங்களுக்கான அரசசார்பற்ற நிறுவனங்களால் வழங்கப்படுகின்ற நன்கொடைகளை பெற்றுக்கொள்ளலும் அதற்குரிய திட்டங்களை மேற்கொள்ளுதலும்.
5. அறிக்கையினை தயாரித்து சமர்ப்பித்தல்.
6. தீயணைப்புப் படை, வேலைத்தலம் ஆகியவற்றை நிர்மாணித்து பராமரிப்புச் செய்தல்


## பிரதம நூலகர்

யாழ் மாநகரசபையில் மேற்கொள்ளப்பட்டுவரும் நூலக சேவையின் பிரதம நிர்வாகியாக பிரதம நூலகர் காணப்படுகிறார்.

நூலக நிர்வாகத்தை மேற்கொள்ளுதல் நூலகத்திலுள்ள புத்தகங்களை பட்டியல்களில் பேணுதல், நூலகத்திற்கு புதிதாக சேர்க்கப்படவேண்டிய நூல்களை தெரிவு செய்து அவற்றை கொள்வனவு செய்தல், நூலகத்திற்கு கிடைக்கின்ற நன்கொடைகளைப் பேணுதல், நூல் செயற்கைகளை வகைப்படுத்துதல், சேர்க்கப்பட்ட நூல்களை பிரதான நூலகத்திற்கும் ஏனைய கிளை நூலகங்களுக்கும் பிரித்து அனுப்புதல், கல்விக் கருத்தரங்குகள், சொற்பொழிவுகள் ஆகியவற்றுக்கான ஒழுங்குகளை மேற்கொள்ளல், நூலகம் எதிர்நோக்குகின்ற பிரச்சினைகளை ஆணையாளரின் கவனத்திற்கு கொண்டுவருதல், ஆகிய கடமைகளை பிரதம நூலகர் ஆற்றுகிறார், நூலக உதவியாளர்களும் எழுதுநர்களும் இவருக்கு உதவியாக கடமையாற்றுகிறார்கள்.

**செல்வி ஜெயந்திமாலா மங்களநேசன்**
அரியாலை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



யாழ். மாநகரசபையின் முன்னைய நிலை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்ப்பாண பொதுசன நூலகம்

யாழ் பொதுசன நூலகம் வளர்ந்த கதை மிக விநோதமானது. இப்படி இது இன்றைய நிலையில் இருக்கும் என்று 1933-ம் ஆண்டு யாழ்ப்பாணத்தில் இலவச தமிழ் நூலகத்தை உருவாக்கிய திரு. க. மு. செல்லப்பா அவர்கள் எண்ணியிருக்க வில்லை. கனவுகூட கண்டிருக்க மாட்டார். அவரது அசையாத நம்பிக்கையையும், சளையாத உழைப்பையும் கண்ட மாவட்ட நீதிபதியாக இருந்த திரு. சி. குமாரசுவாமி அவர்கள் 1936-ம் ஆண்டு நூலக ஆர்வம் கொண்ட அன்பர்களை அழைத்து யாழ் மத்திய கல்லூரியில் கூட்டமொன்றை கூட்டி நூலகம் நிறுவவேண்டிய அவசியத்தை எடுத்துரைத்தார். முயற்சி திருவினையாக்கும் என்பதற்கிணங்க ஆஸ்பத்திரி வீதியிலே மின்சார நிலையத்திற்கெதிரே உள்ள வாடகை அறையொன்றில் பிறந்த இலவச தமிழ் நூலகம் கௌரவ நூலகர் ஒருவரையும், பொறுப்பாளர் ஒருவரையும் உத்தியோகத்தர்களாகவும் 844 நூல்களையும், 30 சஞ்சிகைகளையும் கொண்டதாகவும் அமைந்தது. ஏறக்குறைய 50 பேர் நூலக சேவையை தினசரி பயன்படுத்தி வந்தனர்.1935-ம் ஆண்டு தை மாதம் இந்நூலகத்திற்கு நல்ல காலம் பிறந்தது. யாழ் நகரசபைத் தலைவராக இருந்த திரு. ஆர். ஆர். நல்லையா அவர்கள் அனாதரவாக இயங்கிவந்த இந்நூலகத்தை நகரசபை பொறுப்பேற்று நடத்துவதற்காக முன்வந்தார். அக்காலத்தில் நகரசபை அலுவலகம் கச்சேரியில் இருந்துவந்த தன்மையினால் பிரதான வீதியில் ஓர் வாடகை வீட்டில் இந்நூலகம் குடியேறியது.

1936-ம் ஆண்டு நகரசபை மண்டபம் அமைக்கப்பட்டதும் இந்நூலகம் மண்டபத்துக்கெதிரிலுள்ள கட்டிடத்தில் கொண்டுவரப்பட்டு சற்று விரிவான முறையில் செயல்படத் தொடங்கியது. நிரந்தர நூலகர் ஒருவரும் நியமிக்கப்பட்டார்.

1952-ம் ஆண்டு தொடக்கம் நூலகம் நாளொருமேனியும் பொழுதொரு வண்ணமுமாக வளரத்தொடங்கியது. காலஞ்சென்ற மாநகரசபை முதல்வர் திரு. சாம். ஏ. சபாபதியினதும், வணக்கத்துக்குரிய குரு ரி. எம். எவ். லோங் அவர்களினதும் விடாமுயற்சியின் பயனாகவும் நூலகம் வளரும் சக்தியுடையது என்பதைப் பொது மக்கள் உணர்ந்தனர். உணர்த்தப்பட்டனர் என்றால் சாலப் பொருந்தும். களியாட்ட விழாக்களின் சீட்டிழுப்பு மூலமும் பெருந்தொகையான பணம் பொது மக்களிடம் இருந்து வசூலிக்கப்பட்டது. வெளிநாட்டு நிறுவனங்களினது உதவியும் நாடப்பட்டது. மாநகர பிதாக்களாக இருந்த திரு. ரி. எஸ். துரைராசா, திரு. அல்பிரட் துரையப்பா, இணைகாரியதரிசியாக இருந்த திரு. ரி. முருகேசபிள்ளை, திரு. அ. விசுவநாதன் ஆகியோரது பெயர்கள் இங்கு முக்கியமாகக் குறிப்பிடப்படவேண்டியன. 1953-ம் ஆண்டு சேர்க்கப்பட்ட நிதிகள் யாவும் "யாழ்ப்பாண மத்திய நூல்நிலைய நிதி" என்ற பெயரின் கீழ் கொண்டுவரப்பட்டு வருமான வரி விதிவிலக்கும் பெறப்பட்டது. இவ்வாண்டிலேதான் திராவிட கட்டிடக் கலையில் விற்பன்னரான திரு. வி. எம். நரசிம்மராவ் இன்றைய நூலாக கட்டிடத்தின் மாதிரிப் படத்தை வரைந்தளித்தார். நூலகவியலின் வல்லுநரான ரங்கநாதனின் நூலக உள்ளமைப்புச் சம்பந்தமான ஆலோசனைகளும் பெறப்பட்டன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலக்கியத்தில் வரும் பஞ்சபாண்டவர்களைப்போல, இந்நூலகக் கட்டிடத் திற்கென ஐவர் 1954-ம் ஆண்டு அடிக்கல் நாட்டினர். ஆசிய நிறுவனமும் ரூபா 104,115ஐ நூலகத்திற்கென வழங்கியது. இதையடுத்து இந்தியத் தூதுவர் ரூபா 10,000/-ஐ அன்பளித்தார்.

1959-ம் ஆண்டு நூலகத்தின் வரலாற்றிலே ஓர் பொன்னாள். மாநகர பிதாவாக இருந்த திரு. அல்பிரட் துரையப்பா அவர்கள் இதுகாலவரையும் வசதிக்குறைவு களுடன் இயங்கி வந்த நூலகத்தை இப்பொழுது இயங்கிவரும் நூலகக் கட்டிடத்துக்கு மாற்றினார். இக்கட்டிடத்தின் முதற்பகுதியை இரவுபகலென்று பாராது கட்டிமுடித்து நூலகத்தை இவ்விடம் கொண்டுவராவிட்டிருந்தால் இன்றைய நூலகம் இவ்வளவு துரித முன்னேற்றம் அடைந்திருக்க முடியாது. கட்டிட வேலையும் ஸ்தம்பித்து நின்றிருக்கும்.

அனுபவம் மிக்க நூலகர் ஒருவருடன் பயிற்சிபெற்ற பட்டதாரி ஒருவர் 1964ம் ஆண்டு நியமிக்கப்பட்டதால் நூலக நடைமுறைகளில் சில முன்னேற்றமான தன்மைகள் புகுத்தப்பட்டன. சிறுவர் நூலகம் தோன்றியது; அமெரிக்க நூலகம் அன்பளிக்கப்பட்டது; உடனுதவும் பகுதி தனியாக அமைக்கப்பட்டது. புத்தக விநியோக முறையில் நவீன முறைகள் கையாளப்பட்டன. கோபுரங்கள் மூன்றும் முடியும் தறுவாயில் இருக்கின்றன. விபுலானந்தரின் யாழ் நூலில் உள்ள யாழ்கள் கட்டிட ஜன்னல்களை அலங்கரிக்கின்றன.

சுமார் 4000க்கு மேற்பட்ட அங்கத்தவர்கள் புத்தக இரவல் பெறும் பகுதியை பாவனை செய்கின்றனர். சராசரி 30க்கு மேற்பட்ட அங்கத்தவர்கள் மாதாமாதம் இப்பகுதியில் அங்கத்துவம் பெறுகின்றனர்.

எமது நூலகம் பின்வரும் 5 (ஐந்து) பெரும் பகுதிகளைக் கொண்டதாக அமைந்துள்ளது.

1. வாசிகசாலை
2. புத்தக விநியோகப் பகுதி
3. உடனுதவும் பகுதி
4. சிறுவர் பகுதி
5. அமெரிக்கப்பகுதி.

### 1. வாசிகசாலை

எல்லா மக்களும் எதுவித கட்டணமும் இன்றி இப்பகுதியைப் பாவிக்கலாம். இப்பகுதி நூற்றுக்கு மேற்பட்ட உள்நாட்டு வெளிநாட்டு மாதாந்த, வார, தினசரி சஞ்சிகைகளையும் பத்திரிகைகளையும் கொண்டதாக அமைந்துள்ளது. இது காலை 8மணி தொடக்கம் மாலை 8மணி வரை ஞாயிற்றுக்கிழமை, அரசாங்க விடுமுறை தவிர்ந்த ஏனைய நாட்களில் திறந்திருக்கும்.

### 2. புத்தக விநியோகப் பகுதி

இப்பகுதியைப் பாவனை செய்யும் வாசகர்கள் யாழ் மாநகரசபை எல்லைக்குள் வசித்தால் ரூபா ஐந்து (ரூபா5/-) சீவிய சந்தாவாகக்கட்டி அங்கத்துவம் பெறலாம். யாழ் மாநகரசபை எல்லைக்குள் வியாபாரமோ, உத்தியோகமோ செய்தாலும் மேற்படி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொகையைக் கட்டி அங்கத்துவம் பெறலாம். மாநகரசபை எல்லைக்கு அப்பாலுள்ள எவரும் எமது நூலகத்தில் அங்கத்துவம் பெறலாம். இவர்கள் சேர்ப்புப் பணமாக ரூபா ஐந்துடன் (ரூபா5/-) மாதப்பணமாகிய ஒரு வருடப்பணம் ரூபா பன்னிரண்டு (ரூபா. 12/-)ம் ஒரேமுறையில் கட்டினால் இப்பகுதியில் அங்கத்துவம் பெறலாம். மாநகரசபை எல்லைக்கு அப்பால் இருப்பவர்களுக்கும் எமது நூலக சேவையைப் பயன்படுத்த இது வழிவகுக்கிறது. அங்கத்துவத்துக்கான அனுமதிப்பத்திரம் நூலகத்தில் பெற்றுக்கொள்ளலாம். இவர்களுடைய அங்கத்துவப் பத்திரம் பின்வருபவர்களில் ஒருவரினால் அத்தாட்சிப்படுத்தப்பட்டு பொறுப்பேற்கப்பட வேண்டும்:

1. பாராளுமன்ற உறுப்பினர்
2. மாநகரசபை உறுப்பினர்
3. நூலகக்குழு உறுப்பினர்
4. வைத்தியத்தொழில் அல்லது சட்டத்தொழில் செய்யும் ஒருவர்
5. சமாதான நீதவான்
6. ஆண்டுச் சிவில் பட்டியலில் பெயருள்ள அரசாங்க ஊழியர்
7. ஒரு உயர்தரப் பாடசாலை அதிபர்
8. ஆண்டு ஒன்றுக்கு இரண்டாயிரத்து நானூறு ரூபாவுக்குக் குறையாத சம்பளமுள்ள, சபையின் உத்தியோகத்தர்.

இவர்களுடைய அங்கத்துவப் பத்திரம் முறையாக நிரப்பப்பட்டு அங்கத்துவப் பணம் கட்டிய பற்றுச்சீட்டு நூலகத்தினிடம் கொடுக்கப்பட்டால் பற்றுச்சீட்டு, அவர்கள் கொடுத்த பெயர், விலாசம் சரியெனக் காண்பதற்காக அனுப்பப்படும். கிடைத்த பற்றுச்சீட்டை மீண்டும் நூலகத்தினிடம் கொண்டுவந்து சமர்ப்பித்தால் ஒருவருட கால எல்லைக்குப் பாவிக்கக்கூடிய இரண்டு அங்கத்துவ அட்டைகள் கொடுக்கப்படும். இதைக்கொண்டு ஒருவர் இரண்டு புத்தகங்களை ஒரு நேரத்தில் இரவல் பெற்றுக் கொள்ளலாம். இப்புத்தகங்கள் இரண்டு வாரத்துக்கு வைத்திருப்பதற்கு அங்கத்தவர்களுக்கு அருகதையுண்டு. இரண்டு கிழமைக்கு மேற்பட்டு இரவல் பெற்ற புத்தகங்களை அங்கத்தவர் வைத்திருந்தால் ஒரு புத்தகத்துக்கு, ஒரு நாளைக்கு சதம் ஐந்து வீதம் தண்டப்பணம் கட்டவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படும்.

அப்படி தாம் எடுத்துச்சென்ற புத்தகங்களை குறிப்பிட்ட அங்கத்தவர் வாசித்து முடிக்காவிடில் தாம் எடுத்துச்சென்ற புத்தகங்களை மேலும் இரண்டு வாரங்களுக்கு நீடித்துத்தரும்படி, நூலகப் பொறுப்பாளருக்கு குறிப்பிட்ட கால எல்லைக்கு முன்பு எழுத்துமூலம் அறிவித்தல் கொடுக்கவேண்டும். தாம் எடுத்துச்சென்ற புத்தகங்களின் தலையங்கம், தமது அங்கத்துவ எண், புத்தகங்கள் திருப்பிக்கொடுக்கவேண்டிய திகதி ஆகிய முழு விபரங்களும் அவர்களது அறிவித்தலில் அடங்கியிருக்க வேண்டும். கால எல்லை நீடிக்கப்பட்டு மீண்டும் அவை எப்பொழுது நூலகத்தில் திருப்பிக் கொடுக்கவேண்டும் என்ற விபரம் அஞ்சல் அட்டை மூலம் குறிப்பிட்ட அங்கத்தவருக்கு அறிவிக்கப்படும். தாம் விரும்பிய புத்தகம் விநியோகப்பகுதியில் இருந்தும் தமக்குக் கிடைக்கவில்லையென்றால் அப்புத்தகத்தின் பெயர், தலையங்கம் ஆகிய விபரங்களை நூலகத்தில் இருக்கும் ஒதுக்கிவைத்த புத்தகங்கள் என்ற அஞ்சல் அட்டையில் எழுதிக் கொடுத்தால் அவை வந்தவுடன் குறிப்பிட்ட அங்கத்தவருக்கு இதுபற்றி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறிவித்தல் கொடுக்கப்படும். அவருக்காக மூன்று நாட்களுக்கு மாத்திரம் அவை ஒதுக்கி வைக்கப்பட்டிருக்கும். புத்தக விநியோக நேரம் காலை 8 மணியிலிருந்து மாலை 6 மணி வரையும் நடைபெறும்.

## உடனுதவும் பகுதி

இங்குள்ள புத்தகங்கள் யாவும் அப்பகுதியிலேயே பாவிக்கப்பட வேண்டும். இதற்கு அங்கத்துவப்பணம் எதுவும் கட்டத்தேவையில்லை. இப்பகுதியிலுள்ள புத்தகங்களைத் தொடர்ந்து பாவிக்க விரும்பும் பாவனையாளர் ஒவ்வொருவருக்கும் அங்கத்துவ அட்டை ஒன்று வழங்கப்படும். இது தொடர்ச்சியாக வழங்கும் அங்கத்துவ எண்ணாகும். இந்த அங்கத்துவ அட்டையில் குறிப்பிடப்பட்ட அங்கத்தவர் தாம் ஒவ்வொரு நாளும் எடுத்துப் பாவிக்கும் புத்தகத்தின் ஆசிரியர் பெயர், தலையங்கம் முதலியவற்றை எழுதுவதுடன் தமது சுருக்கக் கையொப்பத்தையும் இடுவார். ஒருவர் எத்தனை புத்தகங்கள் வேண்டுமானாலும் பாவிக்கலாம். ஆனால் தாம் எடுக்கும் புத்தகங்களின் விபரம் ஒவ்வொரு முறையும் பதியவேண்டும். பாவித்த புத்தகங்கள் யாவும் அங்குள்ள பொறுப்பதிகாரியிடம் கொடுக்கப்பட்டு அவரின் கையொப்பம் பெறவேண்டும். இதனால் குறிப்பிட்ட பாவனையாளர் பாவித்த புத்தகத்தில் ஏற்படும் நஷ்டங்களுக்கு பொறுப்பில்லாதவராக ஆக்கப்படுகிறார். பொறுப்பதிகாரிகள் புத்தகங்களை அவையவை உரிய இடத்தில் வைப்பதனால் புத்தகம் வைக்கப்படுவதுடன் பாவனையாளர்களுக்கும் புத்தகம் திரும்பி வைக்கும் சிரமமும் இல்லாது போகிறது. இப்பகுதி காலை 8-00 மணியிலிருந்து நண்பகல் 12-00 மணிவரை திறக்கப்படும். பின்பு மாலை 1-00 மணியிலிருந்து 8-00 மணிவரை திறக்கப்படும்.

## சிறுவர் பகுதி

மாநகரசபை எல்லைக்குள் வசிக்கும், ஐந்து வயதுக்கும் பதினான்கு வயதுக்கும் உட்பட்ட பிள்ளைகள் ரூபா மூன்று (ரூபா. 3/-) சேர்ப்புப் பணமாகக் கட்டினால் இப்பகுதியில் அங்கத்துவம் பெறலாம். இப்பகுதி ஞாயிற்றுக்கிழமை, அரசாங்க விடுமுறைத் தினங்கள் தவிர்ந்த ஏனைய நாட்களில் மாலை 2-00 மணியிலிருந்து 6-00 மணிவரை திறந்திருக்கும். போயாவுக்கு முந்திய நாளும், போயாவிலும் காலை 10-30இல் இருந்து நண்பகல் 12-00 மணிவரையும், பின்பு மாலை 2-00 மணியிலிருந்து 6-00 மணிவரையும் திறந்திருக்கும். ஒரு சிறுவருக்கு ஒரு புத்தகம் மாத்திரம் பதின்னான்கு நாட்களுக்குப் பாவிக்கக் கொடுக்கப்படும்.

## அமெரிக்கப்பகுதி

எமது நூலக அங்கத்துவ எண்ணுடன் இப்பகுதியிலும் இரண்டு புத்தகங்கள் இரவல் பெற்றுச் செல்லலாம். இரண்டு வாரங்களுக்குள் திருப்பிக்கொடுக்கப்பட வேண்டும். அப்படியில்லாவிடின் இரவல் பெறும் பகுதியிலுள்ளது போன்று ஒரு புத்தகத்துக்கு நாளொன்றுக்கு சதம் ஐந்து தண்டப்பணமாக அறவிடப்படும். இப்பகுதி காலை 10-30ல் இருந்து மாலை 6-00 மணிவரையும் திறந்திருக்கும். சனிக்கிழமைகளில் மாலை 2-00 மணியிலிருந்து 6-00 மணிவரையும் திறக்கப்பட்டிருக்கும். ஞாயிற்றுக் கிழமை, அரசாங்க விடுமுறை தினங்களில் பூட்டப்பட்டிருக்கும். நண்பகல் 12-00 மணியிலிருந்து 1-00 மணிவரை நண்பகல் உணவுக்காக மூடப்பட்டிருக்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பதினையாயிரத்துக்கு மேற்பட்ட நூல்கள் மாதத்தில் பாவனைக்கு எடுத்துச் செல்லப்படுகின்றன. எமது புத்தகத்தொகை இப்பொழுது 35,000க்குக் கிட்ட நெருங்குகிறது. புத்தகங்களுக்கும் சஞ்சிகைகளுக்குமாக ரூபா 20,000/- வருடாவருடம் மாநகரசபை செலவிடுகிறது. உத்தியோகத்தர்களின் தொகை பதினைந்தாகக் கூடியுள்ளது.

தென்கிழக்காசியாவிலேயே தலைசிறந்த நூலகம் என இது மிளிரவேண்டும் என்பது பலரின் அபிலாஷையும் பேரவாவும் ஆகும். கட்டிடம் பூர்த்தியானதும் உருவத்தில் நூலக வட்டாரத்தில் தலைநிமிர்ந்து நிற்கும். சேவையில், அவற்றின் பாவனையில், உள்ளடக்கத்தில் ஏறுபோன்று பீடுநடை போடவேண்டுமெனின் பொதுமக்களாகிய உங்கள் கைகளில்தான் தங்கியுள்ளது. போதிய நல்லாதரவும், நிதியுதவியும் இந்நூலகத்திற்கு அளிக்கப்பட்டால் உங்கள் கனவு நனவாகும் காலம் வெகுதூரத்தில் இல்லை என்பதைத் திட்டவட்டமாகத் துணிந்து கூறலாம்.

(மீள் பிரசுரம், 1970ற்கு முன்னர் உள்ள நிலை)

*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ். நகரின் பொழுதுபோக்குச் சாதனங்கள்

- *யாழ்வாணன்*

நாகரீக வளர்ச்சியின் பேறாக, கிராமங்கள் பல நகரங்களாகப் பரிண மித்துள்ளன. நகரம் என்ற பொருள் மக்களின் பல தேவைகளையும் பூர்த்தி செய்யக்கூடிய இடம் என்ற கருத்தைத் தரும். அரசியல், சுகாதாரம், போக்குவரத்து வசதிகள் மக்களின் தொடர்புகளை இணைக்கக்கூடிய நிலையங்கள் என்பன நகரங்களில் இருப்பதால் வசதி குறித்து கிராமத்து மக்கள் பலர், நகரங்களில் குடியேறுவது இயற்கையான நியதியாகும். இவ்வாறு மக்கள் குடியேறிய ஒரு நகரமாக யாழ்ப்பாணம் அமைந்த போதிலும் இதன் பூர்வீகம் இலங்கையின் சரித்திரத்துடன் வெகுவாகத் தொடர்புகொண்டிருப்பதை நாமறிவோம்.

சரித்திரத் தொடர்பு மாத்திரமன்றி பண்டுதொட்டு கல்வி, கலை, கலாச்சாரம் ஆகியவற்றில் இலங்கையின் மற்றைய நகரங்களுக்கு முன்னோடியாக யாழ்ப்பாண நகரம் திகழ்கிறது. காலதேச வர்த்தமானத்திற்கமைய இன்று நகரங்கள் பல, விஞ்ஞானத்துடன் இணைந்து முன்னேறுகின்றன. இதனால் பட்டினங்கள் பலவிதமான தொழிலகங்களினாலும், அலுவலகங்களினாலும், மக்கள் புதிதுபுதிதாக அமைக்கின்ற நகரங்களினாலும் நெருக்கமான நிலைக்குத் தள்ளப்படுகின்றனர். இதனால் சுகாதாரநிலை பாதிக்கப்படாத வகையில் நகரப்பரிபாலனத்தார் இடங்களை அனுசரித்து வசதிகளை ஏற்படுத்தி மக்கள் நலன்களைக் கவனிக்கின்றனர். இதனால் நகரம் ஓரளவு பேணப்படுகிறது. எனினும், மக்களின் மனஅமைதியே யாவற்றிலும் சிறந்தது என்பதை உணரவேண்டியது அவசியமாகும். காலைமுதல் மாலைவரை கடமைசெய்து ஓய்ந்து செல்கின்ற மனிதன் ஓய்வுபெறவேண்டியது அவசியமாகும். இந்த ஓய்வின் மூலம் அவன் நிம்மதியைத் தேடிக்கொள்ளமுடியும். இதற்குரிய சாதனங்கள் ஒரு பட்டினத்திற்கு அவசியமென்பது பெறப்படும்.

யாழ்ப்பாண நகரம் ஏனைய பட்டினங்களிலும் பார்க்க பரந்ததாகவும், அளவுக் குட்பட்ட குடிசனங்களைக் கொண்டதாக அமைந்திருப்பதனாலும் பொழுதுபோக்குக்கு அவசியமான சாதனங்களை நிர்மாணிப்பதற்கு நகரசபையினருக்கு அனுகூலங்கள் பல உள்ளன. பொதுவாக முக்கிய பொழுதுபோக்குச் சாதனமாக இங்கு ஆறு பட மாளிகைகள் அமைக்கப்பட்டுள்ளன. இவை தனிப்பட்டவர்களின் லாபகரமான தொழிலாக அமைந்துள்ளபோதும், நகர மக்களினதும் பிறவூர் மக்களினதும் பொழுதுபோக்குச் சாதனமாக மிளிர்வதற்கு மாநகர நிர்வாகத்தின் கண்காணிப்பு முக்கியமானதாகும்.

தமிழர்களின் தலைநகர், இலங்கையின் இரண்டாவது பெரிய நகர் என்றெல்லாம் பெருமை பேசும் நம் மத்தியில், நவீன வசதிகள் அடங்கிய குளிர்ச்சி ஊட்டப்பட்ட படமாளிகைகள் இல்லாதது விசனிக்கத்தக்கதே. இங்கு காட்டப்படும் தமிழ்ப் படங்களில், 'காதல்', சண்டைப்படங்களே அதிக நாட்களுக்கு ஓடுகின்றன. முன்பு ஹிந்திப்படங்கள் ஆக்கிரமித்திருந்த இடத்தை ஆங்கிலப் படங்கள் இப்போது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கைப்பற்றியுள்ளன. இரண்டு தியேட்டர்களில் ஆங்கிலப் படங்களே அதிகமாக ஓடுகின்றன. ஆங்கிலப்படங்களை மக்கள் விரும்புவதற்கு இரண்டு மணித்தியாலங்கள் மாத்திரம் அவை காட்டப்படுவதும் ஒரு காரணம் ஆகும்.

தியேட்டர்களில், புகைபிடித்து அவற்றைப் புகை மண்டலமாக்குவதும், மற்றை யோருக்கு இடைஞ்சல் ஏற்படுத்துவதுமான பழக்கம் தற்போது மாநகர நிர்வாகத்தின் வேண்டுகோள்கள், நடவடிக்கைகள் மூலம் ஓரளவு குறைந்துள்ளது. இதுமட்டுமன்றி, தியேட்டர் நிர்வாகம், பணம் சேர்க்கும் நோக்கத்துடன், அளவுக்கு அதிகமான ஆசனங்களைப் போட்டு இரசிகர்களுக்கு இடைஞ்சல் கொடுப்பதும் தவிர்க்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கதாகும்.

நகரத்தில் வாழ்கின்ற இளைஞர்களினது உடற்பயிற்சிக்கு இன்றியமையாத சாதனமாக அமைந்துள்ளது யாழ். விளையாட்டரங்கமாகும். சரித்திர காலச் சின்னமாக விளங்கும் யாழ்ப்பாணக் கோட்டையருகே நகர் காவலர் நிலையத்திற்கு வடக்கே இஃது அமைந்துள்ளது. நல்ல காற்றோட்ட வசதியும் ஏக காலத்தில் பல்லாயிரக் கணக்கான மக்கள் விளையாட்டுக்களை ரசிக்கக்கூடிய விஸ்தீரணமான இடமாகவும் அமைந்துள்ளது. இது கல்லூரிகளின் பொதுப்போட்டிகள், பொலிஸ் அணிவகுப்பு, பல்வேறு விளையாட்டுப் போட்டிகள் ஆகியன நடைபெறும் கேந்திரஸ்தானமாகவும் விளங்குகின்றது.

ஒரு நாட்டின் கலைவளர்ச்சி, அந்நாட்டவரின் பண்பாட்டின் மூலவேராகும். இந்த நோக்கத்தை அடிப்படையாகக் கொண்டு திறந்தவெளியரங்கம் கடந்த 1965ம் ஆண்டில் அமைக்கப்பட்டு தமிழ்பேசும் மக்களின் கலை கலாச்சாரம் ஆகியனவற்றின் வளர்ச்சிக்கு உதவுகின்றது.

இளம்கலைஞர்களைப் பொதுமக்களுக்கு அறிமுகப்படுத்துவதை முக்கிய குறிக்கோளாகக் கொண்டு யாழ். மாநகரசபை, பௌர்ணமிதினக் கலை நிகழ்ச்சிகளை நடத்தி வருவது போற்றுதற்குரிய பணியாகும். மாநகரசபையின் இக் கலைப்பணி காரணமாக, இளம்கலைஞர்கள் பிரபல்யமடைவதுடன், பொதுமக்களும், கலை நிகழ்ச்சிகளை இலவசமாக அனுபவிக்க முடிகிறது. அகில இலங்கையிலும் பொது மக்களுக்காக இலவச கலை நிகழ்ச்சிகளை முதன்முதல் பௌர்ணமி தினங்களில் நடாத்திய பெருமை யாழ். மாநகர நிர்வாகத்தினருக்கே உரியது. வட இலங்கையில் நாடகம் வளரவில்லையெனக் குரல் கொடுப்போர்களுக்கு கடந்த நான்கு ஆண்டுகளில் திறந்தவெளி அரங்கில் மாத்திரம் சுமார் எழுபத்தைந்து நாடகங்கள் மேடை யேறியுள்ளன என்பதை இச்சந்தர்ப்பத்தில் ஞாபகப்படுத்துவது சாலவும் பொருத்தமான தாகும். தெளிந்த குளத்தின் வடக்கே அழகுற அமைக்கப்பட்ட இவ்வரங்கம் ஒவ்வொரு பௌர்ணமி நாட்களிலும் நாடகங்கள், நடனங்கள், இசைக்கச்சேரிகள் ஆகியவற்றை நடாத்திப் பல்லாயிரக்கணக்கான மக்களைக் களிப்படையச் செய்கிறது.

அடுத்து அறிவுத்துறை விருத்தியே நாட்டின் அத்திவாரம் என்பதை உணர்ந்த மாநகர நிர்வாகம், பொதுசன நூலகமொன்றினை அமைத்துள்ளது. கலையம்சம் மிளிர்ந்த கட்டிடத்திலே அமைந்துள்ள இந்நிலையத்தில் பல்வேறுபட்ட அறிஞர்களும்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாணவர்களும் பொதுமக்களும் படித்துப் பயனடையத்தக்க நூல்கள், சஞ்சிகைகள், பத்திரிகைகள் என்பன உள்ளன. சிறுவர்களுக்கென்று தனியான வாசிகசாலை, நூலகத்தின் ஒரு பகுதியாகவுள்ளது. இது எமது சிறார்களின் அறிவைப் பெருக்க வாய்ப்பளிக்கின்றது.

இவை மாத்திரமன்றி, யாழ்ப்பாண நகர மக்கள் நல்ல காற்றை நுகரவும், நிம்மதியாக மாலை வேளையைக் கழிக்கவும், இயற்கையாகக் கடற்கரையுள்ளது ஒருபெரும் பாக்கியமாகும். சூரியன் சாழியும் வேளைகளில் நூற்றுக்கணக்கான மக்கள் கடற்கரைக்குச் சென்று அமைதி பெறுகின்றனர். அத்துடன் மக்கள் தூண்டில் போட்டு மீன் பிடித்தும் பொழுதைப் போக்குவதையும் காணலாம்.

நகர மண்டபத்தின் எதிரே அமைக்கப்பட்டுள்ள பூங்கா எழில்மிகு மலர்ச்செடிகளுடனும், கவர்ச்சிகரமான நீர்த் தொட்டிகளுடனும் விளங்குகின்றது. சிறுவர்கள் களிப்படைந்து ஆடக்கூடிய விளையாட்டுச் சாதனங்களும் அங்கே அமைந்துள்ளன. பூங்காவைத் தேடிவரும் மக்கள் அன்றாட செய்திகளைக் கேட்கவும், இசை இன்பத்தை நுகரவும் தக்கதாக வானொலிச் சாதனம் அமைக்கப்பட்டுள்ளது.

இவை மட்டுமன்றி யாழ். முற்றவெளி, அரசியல் கூட்டங்கள் நடாத்த வசதியாக உள்ளது. யாழ். நகர மண்டபம், நாடகங்கள், நடன அரங்கேற்றங்கள், இலக்கியக் கூட்டங்கள் நடாத்தப் பயன்படுத்தப்படுகிறது.

இத்தகைய சாதனங்கள் ஓரளவிற்கு மக்களைத் திருப்திப்படுத்துகின்றன வாயினும் வளர்ச்சி அடைந்துள்ள ஏனைய நகரங்களோடு ஒப்பிட்டுப் பார்க்கும்போது நாம் இன்னும் சில காரியங்களை எதிர்காலத்தில் மேற்கொள்ளவேண்டிய அவசியத்தை உணர்கிறோம். முக்கியமாக நம் நகரத்தில் வாழுகின்ற இளைஞர்கள் நீச்சல் பயிற்சி பெற்றிருக்கவேண்டும். நீரில் நீந்துவது சிறந்த உடற்பயிற்சியாகும். நகர சபையினர் நீச்சல் தடாகமொன்றினை நிர்மாணிக்க முன்வரவேண்டும். அத்துடன் தற்போதைய யாழ். நகரமண்டபம், விழாக்கள், நாடகம் ஆகியன நடாத்த உதவிய போதிலும், நவீன வசதிகளடங்கிய நாடக மண்டபமொன்றினையும், இலக்கியக் கூட்டங்கள் நடாத்துவதற்கு, நகர மண்டபத்தினை இலவசமாக அளிக்கவும் யாழ். மாநகர நிர்வாகம் முன்வரவேண்டும். அப்போதுதான், யாழ்ப்பாண நகரத்தின் ஒவ்வொரு பிரஜையும் எமது பாரம்பரிய கலை, கலாச்சாரத்தை அறிந்து கொள்ளவும் அவற்றைப் பேணி வளர்க்கவும் வாய்ப்பேற்படும்.

(மீள் பிரசுரம், 1970ற்கு முன்னர் உள்ள நிலை)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# URBAN DEVELOPMENT COUNCIL

## முன்னைநாள்
## நகரசபைத் தலைவர் உபதலைவர்கள்

| | PAST CHAIRMEN<br>தலைவர் | PAST VICE CHAIRMEN<br>உபதலைவர் |
|---|---|---|
| 1923 | ஏ. கனகரத்தினம் | ஆர். ஆர். நல்லையா |
| 1924 | ஏ. கனகரத்தினம் | ஜே. கே. சண்முகம் |
| 1925 | ஏ. கனகரத்தினம் | கே. சோமசுந்தரம் |
| 1926 | ஏ. கனகரத்தினம் | ஆர். செவ்வந்திநாதர் |
| 1927 | ஏ. கனகரத்தினம் | வி. எஸ். எஸ். குமாரசாமி |
| 1928 | ஏ. கனகரத்தினம் | வி. எஸ். எஸ். குமாரசாமி |
| 1929 | ஆர். செவ்வந்திநாதர் | ஆர். சுப்பிரமணியம் |
| 1930 | ஆர். செவ்வந்திநாதர் | ஜே. எ. ஜே. திசவீரசிங்கி |
| 1931 | ஆர். செவ்வந்திநாதர் | எம். ஆசைப்பிள்ளை |
| 1932 | ஆர். நல்லையா | ஆர். சுப்பிரமணியம் |
| 1933 | ஆர். நல்லையா | ஆர். சுப்பிரமணியம் |
| 1934 | ஆர். நல்லையா | கே. ஐயாத்துரை |
| 1935 | ஆர். நல்லையா | எஸ். பதஞ்சலி |
| 1936 | ஆர். நல்லையா | எஸ். பதஞ்சலி |
| 1937 | சாம் அ. சபாபதி | கே. வி. சின்னத்துரை |
| 1938 | சாம் அ. சபாபதி | கே. வி. சின்னத்துரை |
| 1939 | சாம் அ. சபாபதி | கே. ஐயாத்துரை |
| 1940 | க. பொன்னம்பலம் | எஸ். எம். அபூபக்கர் |
| 1941 | ஆர். சிவகுருநாதர் | சி. எஸ். அருளானந்தம் |
| 1942 | கே. ஐயாத்துரை | வி. சுப்பையா |
| 1943 | கே. ஐயாத்துரை | சி. எஸ். அருளானந்தம் |
| 1944 | க. பொன்னம்பலம் | கே. வி. சின்னத்துரை |
| 1945 | க. பொன்னம்பலம் | எஸ். ஆர். தளையசிங்கம் |
| 1946 | க. பொன்னம்பலம் | கே. வி. சின்னத்துரை |
| 1947 | க. பொன்னம்பலம் | ஜே. பற்றிக் |
| 1948 | க. பொன்னம்பலம் | ஆர்.சி. மன்மதராஜன் |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ். மாநகரசபை வரலாற்றில் முக்கிய மைல்கற்கள்

28-07-1906

யாழ்ப்பாண பிரதேசசபை யாழ்ப்பாணம் கச்சேரியில் உருவாகியது. மாகாண அதிபதியாக இருந்தவருடன் மாகாண வைத்திய அதிகாரியும், மாகாண மராமத்துப் பொறியியலாளரும் மகா தேசாதிபதியினால் நியமிக்கப்பட்ட 3 அங்கத்தவர்களுமாக 6 பேர் அங்கத்துவம் வகித்தனர். கூட்டம் ஒவ்வொரு மாதமும் முதற் சனிக்கிழமையில் கூட்டப்பட்டது.

29-09-1906

சபைச் செயலாளர் ஒருவர் மாதம் ரூபா. 125/- சம்பளத்தில் அமர்த்தப்பட்டார்.

01-01-1907

பொது மராமத்துப் பகுதியில் இருந்து வடிகால்கள், பிரதான வீதிகள் என்பவற்றைச் சபை தனது பரிபாலனத்தின் கீழ் கொண்டுவந்தது. சபைச் செயலாளருடன், மராமத்து அத்தியட்சகர், பியோன், பதிவக உத்தியோகத்தர் உட்பட நால்வரே சபை ஊழியர்களாகக் கடமையாற்றினர். 04 சதவீதம் சோலைவரியாக அறவிடப்பட்டது.

04-01-1908

03 சதவீதம் சோலைவரியாக அறவிடப்பட்டது.

07-03-1908

புகையிரத நிலையத்துக்குச் செல்லும் இரு வீதிகளுக்கு முதன்முதல் வெளிச்சம் அளிக்கப்பட்டது.

16-12-1909

பெரிய கடையிலுள்ள சந்தைக்கு சீமெந்து போடப்பட்டது.

19-05-1910

மேலும் 05 விளக்குகள் போடுவதற்குச் சபை நடவடிக்கை எடுத்தது. வாகனங்களைப் பரிசோதனை செய்வதற்குப் பரிசோதகர் ஒருவர் நியமிக்கப்பட்டார்.

14-02-1914

மேலும் பல விளக்குகள் பொருத்தப்பட்டன.

29-01-1916

வெளிப்புறமுள்ள 01 சதுர யாருக்கு ஒரு சதமும், உட்புறமுள்ள 02 சதுர யாருக்கு சதம் 05-ம் குத வாடகையாக அறவிடப்பட்டது.

மத்தியகல்லூரி விளையாட்டு மைதானம் மாதம் ரூபா. 02/- வாடகைப் பணத்துக்கு வழங்கப்பட்டது.

ரூபா. 1000/- பிணைப்பணமாகக் கட்டும்படி சபைச் செயலாளர் பணிக்கப்பட்டார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

01-01-1917 சுகாதாரப் பரிசோதகர்களுக்கு வருடம் ஒன்றுக்கு ஆறு ஆங்கில றில் உடுப்புக்கள் வழங்கப்பட்டன.

13-10-1917 யாழ்ப்பாண நகரம் மத்திய வட்டாரம், கிழக்கு வட்டாரம், மேற்கு வட்டாரம் என மூன்று பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டது.

01-01-1923

நகரசபை ஒன்று யாழ்ப்பாணத்தில் அமைக்கப்பட்டது. 08 வட்டாரங்களையும், 8½ சதுரமைல் விஸ்தீரணத்தையும் 42,436 மக்களையும் கொண்டதாக இருந்தது. திரு. அ. கனகரெத்தினம், திரு. ஆர். ஆர். நல்லையா முறையே தலைவராகவும் உப தலைவராகவும் கொண்ட சபை ரூபா. 129,391. 18 சதம் வருமானமாகப் பெற்றது. இத்துடன் 05 நியமிக்கப்பட்ட அங்கத்தவர்களையும் கொண்டதாக இருந்தது.

1932

இவ்வருடத்தில் நகரசபையின் விஸ்தீரணம் 8½ சதுர மைல்களில் இருந்து 07¾ சதுரமைல்களாகக் குறைக்கப்பட்டது. 46,200 மக்களையும், 8 வட்டாரங்களையும் 4 நியமன அங்கத்தவர்களையும் கொண்டிருந்ததோடு ரூபா. 404,996.87 வருமானமும் பெற்றுக் கொண்டிருந்தது.

1935 தமிழ் இலவச நூலகம் யாழ் நகர சபையினால் பொறுப்பேற்கப்பட்டது.

1936

யாழ் நகர மண்டபம் சுமார் 3 லட்சம் ரூபா செலவில் கட்டி முடிக்கப்பட்டு தலைவராக இருந்த திரு. ஆர். ஆர். நல்லையாவின் வேண்டுகோளிற்கிணங்கத் தேசாதிபதி சோளட்வேட் ஸ்ரப்ஸ் அவர்களினால் ஆனிமாதம் 9-ம் திகதி திறந்துவைக்கப்பட்டது.

1944

எட்டு வட்டாரங்களைக் கொண்டதாக இருந்த நகரசபை பன்னிரண்டு வட்டாரங்களாகப் பிரிக்கப்பட்டது. விஸ்தீரணம் 7¾ சதுர மைல்களாக இருந்தது. சனத்தொகை 50,500ஆக உயர்ந்தது.

திரு சி. பொன்னம்பலம் தலைவராகவும், திரு கே. வி. சின்னத்துரை உபதலைவராகவும் கடமையாற்றினர்.

01-01-1949

நகரசபை, மநகரசபை அந்தஸ்தைப் பெற்றது. வட்டாரங்களும் 12ல் இருந்து 15 ஆக உயர்ந்தது. திரு. சாம் ஏ. சபாபதி மாநகரசபை முதல்வராகவும் எஸ்.எஸ்.நவரெத்தினம் உதவி முதல்வராகவும் தெரிவு செய்யப்பட்டனர்.

1960 15 வட்டாரங்களாக இருந்த யாழ். மாநகரசபை 17 வட்டாரங்களாகப் பிரிக்கப்பட்டது.

29-05-1966 யாழ். மாநகரசபை கௌரவ உள்ளூராட்சி அமைச்சரினால் கலைக்கப்பட்டது.

30-09-1966 விசேட ஆணையாளர்களின் ஆட்சிக்கு யாழ். மாநகரசபை பொறுப்பாக்கப்பட்டது.

05-12-1967 கௌரவ பிரதம அமைச்சர் திரு. டட்லி சேனநாயக்கா அவர்களால் யாழ்ப்பாண புதிய சந்தைக்கான அடிக்கல் நாட்டப்பட்டது.

(மீள் பிரசுரம் 1970ற்கு முன்னர் உள்ள நிலை)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பொன்விழா நிகழ்வில் ஒன்றான 5மைல் சைக்கிள் ஓட்டப்போட்டியினை
ஆரம்பித்துவைக்கும் நிகழ்வு



முதல்வர் அவர்கள் அரியாலை மகப்பேற்று நிலையத்தினை திறந்துவைக்கும் நிகழ்வு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ் நூலகம்– இருவீரத் துறவிகள்



ஈழமணித் திருநாட்டிலே மணிமுடியாகத் திகழ்வது யாழ்ப்பாணம். எழில் நகராகிய யாழ்நகர் இசைக்கு பரிசாகப் பெற்ற வரலாறோ பெரிது, காலமோ சிறிது. தென் கிழக்காசியாவிலே யாழ் நூலகம் தலை சிறந்தது என புகழாரம் பெற்றது. இதற்கு வித்திட்ட சிலரில் ஒருவர் யாழ் மண்ணை உயிராக நேசித்த பெருமகனார் பிதா லோங் அடிகள் என்றால் அது மிகையாகாது.

1981.06.01ம் நடு இரவில் யாழ் நூலகத்திற்கு இட்ட தீ பன் மொழி அறிஞர் தாவீது அடிகளைச் சுட்டது. இருபெரும் வீரத்துறவிகளின் நிகழ்வுகள் யாழ் நூலக வரலாற்றிலே முத்திரை பதித்துள்ளன என்பது வெள்ளிடைமலை. யாழ் மாநகர சபை பொன்விழா கோலாகலமாக மலரும் இவ்வேளையில் யாழ் நூலகத்தைப் பற்றி மலையளவு கூறமுடியாவிடினும் கடுகளவு ஆகிலும் நாம் நன்றி பெருக்குடன் நினைவு கூருவது எம் நிகழ்கால, எதிர்கால சந்ததியினருக்கு வழிகாட்டுவதாகும்.

**நூலகம்:–**

'கற்றது கைமண் அளவு கல்லாதது உலகளவு' என்ற உண்மை நூலகத்தில் படிப்போருக்குத் துலாம்பரமாக துலங்கும். பொன்னை இழந்தாலும், அன்பு நெஞ்சங்களை இழந்தாலும், அறிவு என்னும் அரும்பெரும் செல்வத்தை இழக்கமாட்டோம் என்பதை அநுபவங்கள் நமக்குப் பெரிதும் உணர்த்துகின்றன. அறிவொளியை ஏற்றும் நவீன கணனி உலகில் வியத்தகு சாதனங்கள் பல உள. அவற்றில் முதன்மை வகிப்பது நூலகம் *(Library)* என்பது கல்விமான்களின் ஆணித்தரமான கருத்து. இதை அறிவுக்கதிரோன், காலக்கண்ணாடி, உலகவரலாற்றுக் காப்பகம், நாளைய மனிதனை உருவாக்கும் சக்திக் கொண்ட ஆய்வுகூடம் என்றெல்லாம் அழைப்பர். அதுமட்டுமல்ல சுதந்திர வீரர்களை கலைஞர்களை, நாவல், வரலாற்று, ஆசிரியர்களை, கவிஞர்களை, கலை, விஞ்ஞான, நிபுணர்களை உலகம் வாழ வழிகாட்டும் ஞானத்தீபங்களை, இங்கு ஒரு நொடிப்பொழுதில் சந்திக்கலாம்., சிந்திக்கலாம். பண வசதியற்றிருப்பினும், அறிவுப்பசி உடையோரை பண்டிதராக்கும் சக்தி நூலகத்திற்குண்டு. நேரத்தை வீணாக்காமல் நற்பொழுது போக்க உதவுவதுடன் உடல் உள நோய் தீர்க்கும் வல்லமையும் இதற்குண்டு. யாழ் நூலகத்திற்கு 1954.03.29இல் பிதாலோங் அடிகளினால் அடிக்கல் நாட்டப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**பிதாலோங் அடிகள்:-**

வாழ்ந்தவர் கோடி, மறைந்தவர் கோடி, மக்கள் மனதில் நிலைத்தவர் சிலரே. இந்த வரிசையில் விரல் விட்டு எண்ணக்கூடியவர்களில் யாழ்மண்ணைத் தம் உயிருக்கு மேலாக நேசித்த பெருமகனார் பிதா லோங் அடிகளார் என்றால் அதுமிகையாகாது.

இவரை யாழ் மக்கள் காலமெல்லாம் சிரந்தாழ்த்தி, கரங்கூப்பி நன்றிப்பெருக்குடன் நினைவு கூரக் கடமைப்பட்டுள்ளோம். யாழ் புனித பத்திரிசியார் கல்லூரியின் தன்னிகரில்லாத அதிபராக பிதா T.M.F. லோங், O.M.I, M.A, (Cantab) அடிகள் 1936-4954 வரை அதிசிறப்புப் பணியாற்றினார். இவரின் கல்வி, சமூக மாபெரும் பணியைப் போற்றி இலங்கை அரசு 22.05.1990இல் முத்திரை வெளியிட்டுக் கௌரவித்தது.

யாழ் நூலகம் தென் கிழக்காசியாவின் மணி முடியெனத் திகழ, பிதா லோங் அடிகள் மேற்குலக நாடுகளுக்குச் சென்று தமது தொப்பியை நீட்டியாசகம் செய்து நற்கைங்கரியத்திற்காக அன்று ஒரு கோடி ரூபா நிதியத்தைத் திரட்டி ஒப்படைத்தார். 'நல்லதொரு நூலகம் சிறந்த தொரு பல்கலைக்கழகம்' என்பதைச் செயல் உருவப்படுத்திய மாமனிதரை மதித்து 20.12.1975 இல் 'நன்றி மறவல்' (BE GRATEFUL) என்பதற்கு ஏற்ப யாழ்.புனித பத்திரிசியார் கல்லூரிப் பழைய மாணவர் சங்கத்தினர் (S.P.C-O.B.A) வைத்திய கலாநிதி J.P.C பிலிப்ஸ் J.P தலைமையில் உந்துசக்திமிக்க செயற்குழுவின் கடின முயற்சியினால் யாழ் நூலகத்தின் நுழைவாயிலில் பேரறிஞர் லோங் அடிகளின் சிலையை நிறுவி யாழ் அரசாங்க அதிபராகவிருந்த திருமிகு அன்ரன் அல்பிரட் அவர்களினால் திறக்கப்பட்டு விழா சிறப்பாக நடைபெற்றது. அன்றைய நிகழ்வு இன்றும் என் உள்ளத்தில் பசுமையாகக் காட்சியளிக்கின்றது.

பிதா லோங் அடிகளின் அசையாத சிலை யாழ் நூலகம் எரிந்த பின்னும் சரிந்த பின்னும் இன்றும் காத்து நிற்கின்றது. யாழ் நூலகம் மீண்டும் புதுப்பொலிவோடு துலங்க அரசு கட்டியெடுப்பதுடன் அதற்கு வித்திட்ட பிதா லோங் அடிகளின் சிலையை அவ்விடத்தில் மீண்டும் நிறுவுதல் வேண்டும்.

**நூலக வரலாறு:- (1934-1981)**

1933ம் ஆண்டில் யாழ்ப்பாண நிர்வாகம் நகர சபையின் கீழிருந்தது. எழில் நகராகிய யாழ் நகரின் கிழக்குப் பகுதி முன்னர் பிரபுக்கள் குடியிருப்பு என அழைக்கப்பட்டு தற்பொழுது சுண்டுக்குளிப்பகுதியில் பழைய பூங்கா (OLD PARK)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Oh our loving friends! you are too thirst
One day we'll get together along the Jaffna roads
And We'll sing 'War is dead and peace is born'
And we'll forget the wounds of past.

We never want thunder of cannon balls
We love to enjoy the divine ringings of Churches' and Kovils' bells
We never want the tragic cry of war-wounded and killed
In our city-hospital we love to hear pleasant cry of newly born babies.

We'll happily plough and plant new seeds
We'll freely sail and fish in our lagoon and seas
For a fresh and free future in our beautiful city of Jaffna
We pray the God of a Peaceful Dawn of East.

**K.Valethanchan**
**Chief S.K**
**JMC**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




தந்தை செல்வா சதுக்கம் திறப்புவிழா நிகழ்வு




நூல்நிலைய திறப்புவிழா நிகழ்வு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அழகாய்க் காண்பாய்

ஆக்கம்

மாதனையூர்

செந்தமிழ்த்திலகம் செந்தமிழ்ச்செல்வன்

பண்டிதர் கு.க.சிங்காரவேலு

(இளைப்பாறிய அதிபர்)

பொன்விழாக் காணுயாழ்க் குடாநா டுற்ற
பொலிவாரும் மாநகர சபையே உன்றன்
கொன்னாரும் புகழதனை எடுத்து ரைக்கக்
குறுமுனியும் கூசுவரே எனினும் ஓங்கும்
உன்னாரும் சிறப்பதனைப் பாடு மாசை
உதித்திடவே நல்லூரில் வாழ கின்ற
தன்னாரும் நிகரில்லாச் சண்மு கத்தான்
தாளிணையை வேண்டியிதைச் சாற்ற லுற்றேன்.

சீராரும் ஈழவள நாட்டி லுற்ற
சிரமெனவே பொருந்தியுயர் சபைய தாகி
ஏராரும் ஐம்பது ஆண்டுப் பூர்த்தி
இயைந்திடுமு வாண்டின்முன் பெற்றா யேனும்
போராடும் சூழ்நிலையில் நாங்கள் வாடிப்
பொறுத்திருந்தோம் இவ்வருடம் நினதுஆசி
நேராகக் கிடைத்திடவே நிகரில் லாத
நிலைதனிலே கொண்டாடு கின்றோம் இன்று

எண்ணவரு பிரிவுஇரு பத்து மூன்று
என்றுமே உனையுயர்த்து மெண்ணங் கொண்ட
கண்ணியமார் அங்கத்தவரும் அஃதே
காணரிய மாளிகையே யுனனவைவழைெ இல்லம்
புண்ணியன் சாம்சபா பதிமு தல்வன்
போற்று ரவிராஜ் வரையில் உயர்பி தாக்கள்
நண்ணுபுகழ் நாகரத் தினந்தொ டக்கம்
நலமார்கந் தையன்வரை கனிஸ்ட ராவர்.

அன்பர் வழி படுசமய ஆல யங்கள்
ஆற்றலளி கலைக்கூடம் அதிலும் கூட
இன்பமதாய் விளையாடும் இனிய பூங்கா
ஈடிணையில் கல்வியளி எண்ணில் தானம்
உன்மேனி உறுபாதை பொலிந்து காணும்
ஊறிலாச் சிறுபாதைக் களவே இல்லை
என்பாகி உயிர் இழப்போர் தம்மைக் காக்கும்
ஏந்துபுகழ் மருத்துவ மனையோ நூறு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கன்னிமட வார்கள்சேர் கடைய நேகம்
காதலர்சேர் தொலைபேசி தந்தி இல்லம்
கின்னரமார் மொழிகாதைக் குளிர வைக்கும்
கேட்போரின் காதையடை பேரி ரைச்சல்
குன்றமென உயர்ந்ததிரு மனைகள் எங்கும்
கூறுதமிழ்ப் பெரியாரின் சிலைகள் தூபி
தன்னாரும் நிகரில்லா வீர தீரம்
தாங்கியநற் சங்கிலியன் சிலைய மைக்கும்

தன்கடமை செய்பணிக்கோ புரம டிக்கும்
தளராத பலநீதித் தலங்கள் தோன்றும்
மண்பெருமை காட்டுசிறைச் சாலை யொன்று
மாநிலத்திற் சிறந்திடுகச் சேரி ஏகம்
என்மக்கள் எனப்போற்று கலைஞ ரானோர்
எழிலாரும் நடனசபா எங்கும் சேரும்
உன்பாடு முடிந்ததென உலகம் தூற்ற
ஊர்ச்சடலம் சுடுகாடு இடுகா டுண்டு.

மக்கள்பொருள் பொங்குபல சந்தை யுண்டு
மாடறுக்கும் களம்படமா ளிகைக ளெங்கும்
எக்காலும் நீர்வழங்கு தாங்கி ஒன்று
எழிலாரும் திறந்தவெளி யோர ரங்கு
தொக்குவரு விருந்தினர்சேர் விடுதி தாங்கும்
தொலையாத குப்பைவா கனம நேகம்
மிக்கபல பொருள்சேரும் நிலையை யெண்ணார்
விரிகனலை அழித்திடுதீப் படையு மோடும்

அறிவைவளர் நிலையமாய் அவனி போற்ற
அழகுடனே விளங்குபொது நூல கந்தான்
வறியவராம் மக்களுக்கு உதவு கின்ற
வட்டாரம் தோறுமுறு மகப்பே றில்லம்
செறிபுகழோ டுறுமுன்றன் சீரைக் கண்டு
தேவர்கள்தம் கோன்அளகா புரியின் வேந்தன்
குறித்துவரு கண்ணூறால் குலைந்த தன்றோ
குலவுபுகழ் தமிழ்விழாக் கொலைக ளோடு

கொழும்பினையும் மிஞ்சுமெனக் கோபங் கொண்ட
கொள்கையிலார் தாம்சேர்ந்து கொள்ளி வைக்க
எழும்புகைதான் உலகமதை மறைக்கக் கல்வி
ஏந்துநூல் நிலையமொடு நகரம் வெந்த
தழும்பதுதான் சரோஜினியந் தோனி யார்நற்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தனையரையும் வருந்தவவர் வீறு கொண்டு
செழுமையுறு உன்னழகைக் கண்டு அல்லால்
சினந்தணியோம் எனவிருந்த காலை தன்னில்

பகைவரது செயல்பரிபா லனத்தைத் தாக்கப்
பக்குவமாய் இடம்பெயர்ந்து பாங்க ருற்ற
நகைமுகத்து முருகனது பதிநல் லூரில்
நடமாடு மணமண்ட பத்துப் பின்னர்
தகைமைபெறு பண்டாரிக் குளத்து இப்போ
தாம்தலைவர் ரவிராஜ்கந் தைய னோடு
சிகையெனவே இலங்கையொடு உலகம் ஏத்தச்
சீராக மக்கள்பணி செய்கின்றார்கள்.

முடங்கியிருந் திடுமுனது நிலையை மாற்ற
மூகராய் வாழாது செயலிற் காட்டத்
திடம்பெறுநல் லெண்ணமது கொண்டு தாய்தான்
சிறந்திடவே நற்பணிகள் எவையும் செய்யத்
தடங்கடலாய்ச் சேர்ந்தார்கள் தமிழ ரெல்லாம்
தப்பாது அவர்செய்கை தரணி போற்ற
அடங்கியிராய் ஐம்பதாம் ஆண்டு அல்ல
ஆயிரமாம் ஆண்டினையும் அழகாய்க் காண்பாய்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திரும்பிய காலம் சிந்திக்கவேயில்லை

யாராலும் முடியாது யாருக்கும் இயலாது
தீராத ஆர்வத்தால் தன்னையே கருதாது
பேராளன் கலைஞானி தேடிய தேடல்கள்
பாராளும் தமிழுக்குப் பதக்கம் சூட்டிற்று.

தமிழர்தம் தொன்மையை நிருபண மாக்கிடத்
தனியாகவே நின்று உழைத்த மாமனிதன்
அமிழ்தான தமிழென்றும் சிரஞ்சீவி யாய்வாழ
ஆவணப் படுத்திய தொண்டுக்கு யார்நிகர்?

ஒருபுறம் சுவடிகள், ஒருபுறம் நாணயம்,
ஒருபுறம் சிற்பங்கள், ஒருபுறம் ஓவியம்,
ஒருபுறம் தகவல்கள், ஒருபுறம் கலசங்கள்,
ஒருபுறம் கருவிகள் பெருக்கிய கலைஞன்.

குரும்பை நகர்தந்த கரும்பு மனிதன்
விரும்பிய இலக்கினை எட்டிய புனிதன்
அரும்பிய ஆசையைக் கூறிய போதும்
***திரும்பிய காலம்** சிந்திக்க வேயில்லை!

இப்படி நடக்குமென யார் கண்டது?
இவருக்குப் பட்டங்கள் எத்தனை வழங்கினும்
இவரது முகவரி இனியாருக்குத் தெரியும்?
இவருக்குத் தனியாக முகவரி வேண்டும்!

நல்லதொரு ஜீவன், வல்ல பண்பாளன்,
நாடறிந்த கலைஞன், நற்றமிழ் உயிரான்,
நல்லையிலே சுவர்க்கம், நனைந்த செய்தியால்
நந்தமிழ் அன்னை வினாவாகிப் போனாள்?

காலம் கருதிய வேளையில் அவரது
கனவுகள் நனவாக வில்லை! தமிழ்
ஞாலம் அவர்பணி தொடரும் வரைகலை
ஞானியோ சாந்தி அடைவதில்லை!

புத்தி ஜீவிகளும் பூத்த கலைஞர்களும்
சித்தி பெற்றவரும் சிறப்புப் பெற்றவரும்
பத்திக் குரியவரும் பண்புக் குரியவரும்
நித்திய * **பீடமொன்று** நிறுவிட வேண்டும்

**அளவையூர் கே.எஸ்.சிவஞானராஜா**
**2001.12.30**

(* **திரும்பிய காலம்**- தற்காலம்) * **பீடமொன்று**~ கலைஞானி ஆவணக் காப்பகம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



முன்னாள் முதல்வர் திரு. நடராஜா ரவிராஜ் அவர்களுடன் உறுப்பினர்கள்




மாநகர முதல்வர், உறுப்பினர்களுடன் நிர்வாக உத்தியோகத்தர்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்ப்பாண நகரில் நீர் நிலைகளின் அபிவிருத்தி வாய்ப்புக்கள்

பொ. பாலசுந்தரம்பிள்ளை, மீரா நவரத்தினம்

நகரங்கள், கிராமங்கள் உரு வாக்கம், அவற்றின் உருவவியல், செயற்பாடு மற்றும் அழகிய பண்பைக் கொடுப்பதில் குறித்த பிரதேச குடியிருப் புக்களில் அங்கு காணப்படும் நீர் நிலைகள் முக்கிய பங்கு வகிப்பதனை உலக ரீதியாகக் காணமுடிகின்றது. உலகின் பல பெரிய, சிறிய நகரங்களின் வளர்ச்சி, உள்ளூர் நீர் நிலைகளை மைய மாகக் கொண்டோ அல்லது நீர் நிலை கள் நகரங்களின் கவர்ச்சி மையமாகவோ விளங்குவதைக் காணலாம். இலங்கை யில் கண்டி நகரை எடுப்போமாயின் நகரின் மையத்தில் அமைந்துள்ள ஏரி, நகரை அழகு படுத்துவதுடன் சுற்றுலாத் துறை, பொழுது போக்குத்துறைகளில் ஒரு சிறப்பான பங்கினை வகிப்பதனைக் காணலாம். கொழும்பு நகரில் பேய்ரா வாவி (Beira lake) அண்மைக் காலத்தில் விருத்தி செய்யப்பட்டு வருவதையும், மேலும் விருத்தியாக்கப்பட வேண்டும் என்ற ஆலோசனைகள், அபிவிருத்தித் திட்டங்கள் முன்வைக்கப்பட்டிருப்பதையும் அறியக்கூடியதாக உள்ளது.

யாழ்ப்பாண நகரம் இன்று சுமார் 1,25,000 மக்களையும், மாநகரசபை நிர்வாகப் பரப்பு 20.2 சதுர கிலோமீற்றரை யும் கொண்டு காணப்படுகிறது. இது 23 வட்டாரங்களைக் கொண்டிருந்தது. எனினும் இன்று வட்டாரமுறையில் தேர் தல் நடைபெறாது நகரம் முழுவதும் ஒரு தேர்தல் அலகாகவுள்ளது. நிர்வாக வச திக்காகப் பழைய வட்டார அடிப் படை யில் தரவுகள் பேணப்பட்டு வருவதால் இங்கு தரவுகள் வட்டார அடிப்படை யிலேயே நோக்கப்படுகின்றன. குளங்களின் எண்ணிக்கை, நீர் பரந்திருக் கும் பரப்பு, நீர்க் கொள்ளவு போன்றன இன்றைய நிலையைவிடக் கடந்த கால் நூற் றாண்டுக்கு முன்னர் சிறப்பாக இருந் தமைக்குச் சான்றுகள் உண்டு. யாழ்ப் பாண மாநகரசபை உள்நாட்டு நீர் நிலைகளைப் பேணுவதற்குத் தெளிவான கொள்கைகள், செயற்பாடுகள் எதனை யும் நீண்டகாலமாகவும், ஆழ நோக்கிலும் கடைப்பிடிக்காமையும், மற்றும் இப்பிரதேச மக்களின் நீர்த் தேவையைப் பூர்த்தி செய் வதற்குக் குளங்கள் பயன்படுத்தப் படாமையும் அவற்றின் விருத்தியின் மைக்குக் காரணமாக அமைகின்றன. மாறாக யாழ்ப்பாண மாநகரசபையினால் நகரக் குப்பை, கூழங்கள், கழிவு, உலோகங்கள் ஆகியவற்றை ஒதுக்கும் இடங்களாக இக்குளங்கள் பயன் படுத்தப்படுவதும், நிலமற்ற வறிய மக்கள் தமது வாழ்விடங்களை அமைப்பதற்கான இடங்களாக இத்தகைய நீர்ப்பரப்புக்களை அண்டிய பகுதிகளைத் தெரிவு செய்தமையும் காணலாம். தொடர்ந்தும் இக்குளங்கள் இத்தகைய பல்வேறுபட்ட கழிவுப் பொருட்களினால் நிரப்பப்பட்டு வருவதோடு விடுபட்டுள்ளது. தரம் குறைந்த நிலங்களாக உருமாறி வருவதையும் காணலாம். அட்டவணை 1இல் யாழ்ப்பாணநகரப் பகுதிக்குள் காணப்படும் உள்நாட்டு நீர் ஏரிகளின் விபரங்கள் தரப்பட்டுள்ளன.

நகரில் இன்று 30ற்கு மேற்பட்ட குளங்கள் காணப்பட்டாலும் இவற்றில் கூட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எந்தவொரு குளமும் நன்னிலையிலோ, சிறந்தமுறையில் பேணிப்பாதுகாக் கப்பட்டோ சுத்தமான நீரைக்கொண்டதாகவோ காணப்படவில்லை. ஆனாலும் இவைகள் நன்னீரைக் கொண்ட குளங்களாக இருப்பது குறிப்பிடத்தக்க அம்சமாகும். இவைகள் நீண்டகாலமாகக் கவனிப்பாரற்று விட்டதனால் சவர் படர்ந்தும், சேறு சகதிகளாக (Muddy) மாறியிருப்பதனைப் பல குளங்களில் காணமுடிகின்றது.

**அட்டவணை 1**

**யாழ்ப்பாண நகரப் பகுதிக்குள் காணப்படும் உள்நாட்டு நீர் நிலைகள்**

| வட். இல. | வட்டாரங்கள் | குளங்களின் எண்ணிக்கை | குளங்களின் பெயர் | பரப்பு ஏக்கரில் |
|---|---|---|---|---|
| 01 | கோட்டை | 2 | ★ புல்லுக்குளம் | 3.7 |
| | | | ★ வட்டக்குளம் | 0.63 |
| 04 | கதிர்றல் | 1 | தேவரீர் குளம் | 3.6 |
| 05 | மத்தியூஸ் | 2 | ∴திட்டிக்குளம் | |
| 06 | கொய்யாத்தோட்டம் | 3 | வண்ணான்குளம் | 0.63 |
| 08 | கொழும்புத்துறை | 4 | மறவம் குளம் | 1.5 |
| | | | பால்குளம் | 3.75 |
| 09 | அரியாலை கிழக்கு | 1 | வண்ணான்குளம் | 0.77 |
| 10 | அரியாலை மேற்கு | 1 | நெடுங்குளம் | 1.75 |
| 11 | கலைமகள் | 2 | வண்ணான்குளம் | 0.31 |
| 12 | நல்லூர் | 2 | இலந்தைக்குளம் | 2.0 |
| | | | உப்புக்குளம் | 1.95 |
| 13 | சுண்டிக்குளி | 2 | நீர்நொச்சித் தாழ்வுக்குளம் | 0.9 |
| | | | பரப்பன் குளம் | 1.7 |
| 14 | ஸ்ரேசன் | 1 | நான்மார்க்கட்டுக் குளம் | 3.25 |
| 15 | கைலாய பிள்ளையார் | 3 | பண்டாரக்குளம் | 2.0 |
| | | | ஜமுனா ஏரி | 0.95 |
| | | | மருதடிப் பிள்ளையார் கோவில் குளம் | 1.9 |
| 17 | ஆஸ்பத்திரி | 2 | ∴நரியின் குண்டுக்குளம் | - |
| 18 | பசார் | 1 | ஆரியகுளம் | 3.25 |
| 19 | புதிய பள்ளிவாசல் | 2 | பிராமணக் கட்டுக்குளம் | 1.95 |
| 20 | நாவாந்துறை | 1 | வண்ணான்குளம் | 1.35 |
| 21 | பழைய பள்ளிவாசல் | | அம்மச்சியாகுளம் | 1.3 |
| 22 | வண்ணார்பண்ணை மேற்கு | 1 | கன்னாதிட்டிக்குளம் | 4.0 |
| 23 | வண்ணார்பண்ணை கிழக்கு | 1 | வண்ணான்குளம் | 1.9 |
| | | | கல்லுக்குளம் | - |
| | | | ∴நெடுங்குளம் வண்ணான்குளம் | |
| | | | துடும்பைக்குளம் | |
| | | | வண்ணான்குளம் | |
| | | | கோவில்குளம் | |
| | | 32 | நரிக்குண்டுக்குளம் | |

**∴ மீட்சிக்குட்பட்ட குளங்கள்**
**மீட்சி நடைபெறும் குளங்கள்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குளங்கள் நீர்த்தாவரங்களால் (Water Plants) குறிப்பாக, பாசி (Moss), சல்வீனியா (Salvenia) வகைத் தாவரங்கள், கோரைப்புற்கள் (Cyprus), தாமரை போன்றவற்றால் முழுமை யாகவோ அல்லது ஒரு பகுதியாகவோ மூடப்பட்டிருப்பதனைக் காணலாம். நீரும் தடித்ததாகவும், பல சந்தர்ப்பங்களில் பாசி நிறைந்து பச்சைக் கூழாகவும் இருப்ப தனைக் காணக்கூடியதாகவுள்ளது. ஸ்ரான்லி வீதியிலுள்ள வண்ணான்குளம் இத்தகைய பண்புகளைக் கொண்டுள் ளமை குறிப்பிடத்தக்க அம்சமாகும். இன்று யாழ்ப்பாண நகரில் நுளம்பு உற்பத்திக்கும், தொற்று நோய்களைத் தோற்றுவிக்கும் இடங்களாகவும் மற்றும் மக்களின் சுகாதாரத்தைப் பாதிப்பன வாகவும் இக்குளங்கள் காரணமாக அமைகின்றனவா? என எண்ணத் தோன்று கின்றது. யாழ்ப்பாண நகரில் அமைந் துள்ள குளங்களில் பெரும்பாலானவை இந்துக் கோவில்களை அண்டி இருப்ப தனைக் காணக் கூடியதாகவுள்ளது. வண்ணார்பண்ணை கிழக்கு, மேற்குப் பகுதிகளில் அமைந்துள்ள கோவில் குளம், நரிக்குண்டுக் குளம், ரக்கா வீதியிலுள்ள மருதடிப் பிள்ளையார் கோவில் குளம் என்பன கோயில்களுடன் இணைந்தவையாகும். சில காலங்களுக்கு முன்னர் இக்கோயில்களின் சில உற்ச வங்கள் இக்குளங்களில் நடைபெற்றன. இன்று கோயில் தேவை களுக்கு அவற்றின் அருகாமையிலுள்ள இக் கோயில் குளங்களின் பயன்பாடு குறை வாகவும் பயன்படுத்தக்கூடிய நிலை யில்லாமையும் குறிப்பிடத் தக்கதாகும். நகரில் மக்கள் குறைவாகவும் ஓரளவு விவசாய நடவடிக்கைகள் இடம் பெற்றிருந்த காலத்தில் கால்நடைகளின் குடிநீர்த் தேவைக்கும், சலவைத் தொழி லுக்குமே இவை அதிகமாகப் பயன்படுத் தப்பட்டு வந்தன. அன்றும், இன்றும் நகர்க் குளங்களில் பல சலவைத் தொழிலுக் காகப் பயன்படும் நோக்கமே கூடுதலாக இருந்தமையால் பல குளங்கள் 'வண் ணான் குளம்' என்றே இன்றும் அழைக்கப் பட்டுவருகின்றன. இன்று ஓரிரு குளங்கள் தவிர ஏனையவை சலவைத் தொழி லுக்கே தகுதியற்றவை யாகும். அத்துடன் இங்குள்ள எந்தவொரு குளமும் மக் களால் குளிப்பதற்குப் பயன்படுத்தப் படுவதில்லை என்பது குறிப்பிடத்தக்க அம்சமாகும்.

யாழ்ப்பாண நகரம் சமதரை யாகவும் வடக்கிலிருந்து தெற்கு நோக்கி ஒரு மென்சரிவைக் கொண்டதாகவும், நகரின் தென்மேற்கு (ஓட்டுமடம்), தென்கிழக்கு (செம்மணி)ப் பகுதிகள் தாழ்வான பகுதிகளாகவும் இருக்கின்றன. எனவே இத்தகைய தரைத்தோற்ற அமைப்பை அடிப்படையாகக்கொண்டே வடிகாலமைப்புக்கள் அமைதல் வேண்டும். குறிப்பாக, சரிவின் தன்மையுடன் (Slope Gradient) இணைந்ததாக வடிகாலமைப்புக் கள் மனிதனால் அமைக்கப்படும்போது வெள்ளம் விரைவாகக் கடலைச் சென்றடைய முடியும். யாழ்ப்பாண நகரில் உள்ள குளங்கள் நகரில் இயற்கை வடிகால் அமைப்புடன் ஒருங்கிணைந்து இருந்தமை யையும், இருப்பதனையும் விளக்கப்படம் எடுத்துக் காட்டுகின்றது. இதனால் மழைக்காலங்களில் மழைநீர் முதலில் குளங்களில் சேர்ந்து நிறைந்த பின் வாய்க்கால்களின் மூலம் குளத்திலுள்ள நீர் ஒன்றிலிருந்து ஒன்றுக்குச் சென்று இறுதியில் கடலைச் சென்றடையும் பண்பைக் கொண்டுள்ளது. இத்தகைய வடிகால் ஒழுங்குகள் (Drainage Patterns) வடகிழக்கிலிருந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தென்மேற்குத் திசையில் சரிந்து இறுதியில் கடலை அடையுமுகமாக அமைந்துள்ளன. ஆயினும் இங்குள்ள நகர வடிகால் அமைப்புச் சீரானமுறையில் இயங்க வில்லை என்பதனை அவதானிக்க முடிகிறது. வாய்க்கால்கள் இன்று நீர்வடிகால் பண்பை இழந்துள்ளதாலும், எல்லைக்காணி உடமையாளர்களும் தமது எல்லைகளை வெளிநோக்கி நகர்த்துவதிலும் நடைபாதைகளை அமைத்ததாலும், வாய்க்கால்களின் அகலம் சுருக்கமடைந்து செல்வதுடன் வடிகால் ஒழுக்குகள் தடைப்படுவதும் சில சந்தர்ப் பங்களில் அவை முற்றாக இல்லாமல் போகும் நிலைமைகளும் ஏற்படுகின்றன. உதாரணமாக ஆரியகுளத்திலிருந்து தெற்கே கடலை நோக்கிச் செல்லும் வாய்க்கால்கள், தேவரீர் குளத்திலிருந்து குருநகர் கடலை நோக்கிச் செல்லும் வாய்க்கால்கள் என்பனவற்றில் இத்தகைய தன்மைகளை அவதானிக்கலாம்.

புவிச்சரிதவியல் ரீதியாக மயோசின்கால சுண்ணக்கற்படிவுகளையும், கரையோரப் பாகங்களில் அண்மைக் காலப் படிவங்களையும் கொண்ட யாழ்ப்பாண நகரின் நீர்த்தேவை முழுமையாகத் தரைக்கீழ் நீரிலிருந்தே பெறப்படுவதனால் நகரின் தரைக்கீழ் நீர்வளத்தைப் பேணுவதற்கு நகரின் குளங்கள் விருத்தியாக்கப்பட்டுத் தூய நீரைப் பேணிவைத்தல் அவசியமாகும். கோடையில் வற்றி மழைகாலங்களில் நீர் நிரம்பும் குளங்கள், வடிகால்கள் மக்கள் கழிவுப் பொருட்களைக் கொட்டும் பகுதிகளாக மாறிவருவதுடன் இதனால் நீர் அசுத்த மடைதல் மட்டுமல்லாது தரைக்கீழ் நீருக்கான நீர் உட்புகவிடும் செயன்முறை யும் (Infiltration) பாதிக்கப்படுகின்றது. மேலும் யாழ்ப்பாண நகரில் உள்ள வாழ்விடங்கள் ஒவ்வொன்றும் அனேகமாகக் கிணற்றைக் கொண்டு காணப்படுவதுடன் மக்கள் இக் கிணற்றை நம்பியே வாழ்வதால் இக் கிணற்று ஊற்றுகள் (Springs) வற்றாதிருக்க இக்குளங்களில் தேங்கிநிற்கும் நீரே துணைபுரிகின்றது.

யாழ்ப்பாண நகரமானது வடகீழ்ப் பருவப் பெயர்ச்சிக் காலத்திலேயே மழைவீழ்ச்சியைப் பெற்றாலும் குறிப்பாக ஒக்டோபர், நவம்பர், டிசம்பர் மாதங்களில் ஏற்படும் அமுக்க, இறக்க நிலைமைகளினாலேயே அதிகளவான 1200 மில்லிமீற்றர் மழை வீழ்ச்சி பெறப்படுகின்றது. இக்காலங்களில் சில நாட்களுக்கு அடைமழை பெய்வதுடன் ஏற்கெனவே பரவலாகப் பெய்த மழையின் மூலம் தரைக்கீழ் நீர்மட்டம் வழக்கமாக இருப்பதைவிட உயர்ந்து காணப்படுவதால் ஊடுவடிதலின் விகிதம் (Rate of Infiltration) குறைவடைந்து மேற்பரப்பு வெளியோடையின் அளவு (Surface run-off) அதிகரிக்கின்றது. இச் சந்தர்ப்பத்தில் தான் வெள்ளப்பெருக்கு ஏற்படுவதுடன் வடிகால்கள் மழை நீரை வெளியேற்றுவதில் சிரமத்தை எதிர்நோக்குகின்றன. இத்தகைய வெள்ள நீர் வழிந்தோடிக் கடலை அடைவதற்காக அமைக்கப்பட்ட வடிகால் அமைப்புக்கள் தடைப்பட்டும் சீரற்றிருப்பது காரணமாகத் தேங்கி நிற்கின்றன. குறிப்பாகப் பொம்மைவெளி, சூரியவெளிப்பகுதி போன்ற தாழ் நிலங்களில் உள்ள வாழ்விடப்பகுதிகளிலும் போக்குவரத்து வழிகளிலும் நிற்கும் நீரை வெளியேற்றும் உடனடித் தேவைக்காக வீதிகளையும் அவைக்கான ஒழுங்கற்ற, சட்டரீதியற்ற முன் வெட்டிவிட்டு நீரை வெளியேற்றும் பண்பைக் காணக்கூடியதாகவுள்ளது. ஆனால் குறிப்பாக போக்குவரத்துகள்,


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கட்டடங்கள், மதிற்சுவர்கள் அவைக்குட்பட்டுப் பாதிக்கின்றன.

ஒரு இடத்துக்குரிய காலநிலைத் தன்மையை நிர்ணயிப்பதில் (Topo-Climatology) உள்ளூர் நீர் நிலைகளின் பங்கு முக்கியமானது. இந்த வகையில் யாழ்ப்பாணநகரம் பல குளங்களைக் கொண்டிருப்பதால் இக்குளங்களைச் சிறந்த முறையில் பாதுகாப்பதன்மூலம் குளங்களை அண்டிய பிரதேசங்களில் நகரின் பொது வானிலை, கால நிலையிலும் பார்க்க ஒப்பீட்டு ரீதியில் மிதமான இடத்திற்குரிய காலநிலை, வானிலைத் தன்மைகளைக் கொண்டு காணப்படும் இடங்களாக மாற்றலாம் யாழ்ப்பாண நகரப் பகுதி சராசரியாக வெப்பம் பெறுவதுடன் வருடத்தின் பெரும்பாலான காலங்கள் வெப்பம், புழுக்கம், வரட்சி, சோளகக்காற்று, புழுதி போன்ற வானிலை, காலநிலைத் தன்மைகளைக் கொண்டிருப்பதால் இத்தகைய குளங்களை நன்முறையில் பேணிப் பாதுகாப்பதன் மூலம் அவை அமைந்திருக்கும் சுற்றாடலின் நிலைக் கடினத்தன்மைகளைத் தளர்த்துவதற்கு அல்லது குறைப்பதற்குத் துணை புரிவதுடன் மக்களை மேற்குறிப்பிட்ட அசௌகரியங்களிலிருந்து ஓரளவு விடுவிக்க முடியும். குளங்களைச் சூழ இயற்கையாகவே மரங்கள் இருப்பதும் மேலும் செயற்கையாக மரங்களை நடுவதன் மூலமும் இக்காலநிலையின் செல்வாக்கின் மேலும் பரப்பினை சிறிது தூரம்வரை விஸ்தரிக்க முடியும். உதாரணமாக, ரக்காவீதி மருதடிப் பிள்ளையார் கோயிலுடன் இணைந்துள்ள குளமும் அதனை அண்டி நிற்கும் மருத மரங்களும் இடத்திற்குரிய குளிர்ச்சியான காலநிலை நிலவுவதற்குக் காரண மாகின்றன. இத்தகைய சாதகத்தன்மை காலப்போக்கில் ரக்கா வீதியில் சிறிய சந்தை அமைப்பொன்றை ஏற்படுத்தியுள்ளதை இன்று அவதானிக்கக் கூடியதாகவுள்ளது.

இவற்றைத் தவிர நகரிலுள்ள குளங்களின் நன்கு வரையறுத்து எல்லைப்படுத்தப்படாமலும், பயன்பாட்டிற்குட்படுத்தப்படாமலும் இருப்பதனால் எல்லைகளை அண்டி வாழும் மக்கள் தமது காணிகளைச் சிறிது சிறிதாக விஸ்தரித்து மேலும் காணியற்ற வறிய மக்கள் இந்நீர் நிலைகளை அண்டிய பகுதிகளை அத்துமீறிப் பிடிப்பதுடன் நாட்டாண்மையின் பின்னணியிலும் இத்தகைய அத்துமீறல்களை மேற்கொண்டு சேரிக் குடியிருப்புக்களை அமைத்துள்ளனர். மடத்தடியிலுள்ள தேவாீர் குளப் பகுதியிலும், கன்னாதிட்டிக் குளத்தை அடுத்துள்ள பகுதியிலும், மற்றும் பல குளங்களிலும் இத்தகைய அத்துமீறிய குடியிருப் புக்களைக் காணக் கூடியதாக உள்ளது. குளங்களைச் சுற்றியுள்ள நிலப் பகுதிகளை மக்கள் இன்று ஆக்கிரமித்துக் கொண்டு வருவதால் குளங்களிற்கான வழிகள் அடைக்கப்பட்டுக் குளங்களை இலகுவில் அடையமுடியாத நிலை காணப்படுகிறது. எனவே இக்குளங்கள் சரியாக எல்லைப்படுத்தப்படாமையும். பாதுகாக்கப்படாமையும், ஒழுங்கான முறையில் நிரப்பப்படாமையும் காரண மாக அவை நகரின் வளர்ச்சிக்கும் நகரின் சூழலினைப் பாதுகாப்பதற்கும் தடையாக அமைகின்றன.

பின்வரும் வழிமுறைகளைக் கையாளுவதன் மூலம் யாழ்நகரின் குளங்களைப் பாதுகாக்கலாம். அவையாவன:


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1) குளங்களிற்கான நீர்ப்பரப்பினை வரையறுத்து, எல்லைகளை உறுதிப்படுத்துதல்.
2) குளங்களுக்கான எல்லைகளைச் சீமேந்துச் சுவரினால் அமைத்தல்.
3) குளங்களை அண்டிய பகுதிகளில் ஏற்படுத்தப்படும் அத்துமீறிய குடியிருப்புக்களைத் தடுத்தல்.
4) பொதுமக்கள் குப்பை, கூழங்களை அகற்றுமிடமாகக் குளங்களைப் பயன்படுத்தலைத் தடுத்து நிறுத்தல்.
5) பொதுமக்கள், கால்நடைகள் என்பன நீரை அசுத்தப்படுத்துவதை நிறுத்துதல்.
6) பொதுச்சொத்தான குளக் காணியைத் தனிப்பட்டவர்கள் அபகரிப்பதற்குச் சமூகம் இடமளிக்காதிருத்தல்.

யாழ்ப்பாண நகரில் பல குளங்கள் இருந்தாலும் இக்குளங்களை இயன்ற வரையில் நன்னிலையில் வைத்திருப்பதும், பேணிப்பாதுகாப்பதும் முக்கியமானதொன்றாகும். எனினும் நகரின் ஓரிரு குளங்களை விருத்தி செய்வதன் மூலம் நகரை அழகுபடுத்தவும் மற்றும் சுற்றுலா, பொழுதுபோக்குத் துறையை விருத்தி செய்வதுடன் நகரச் சூழல் மாசுபடுவதையும் தடுக்க முடியும்.

நகரின் மத்தியில் வண்ணான்குளம் (கஸ்தூரியார் வீதி) அமைந்து காணப்பட்ட போதும் குளத்தின் பெரும் பகுதி ஏற்கெனவே நிரப்பப்பட்டு ஆறு கடைகள் மேற்கிலும் ஆறு கடைகள் வடக்கிலும் அமைக்கப்பட்டும், வாகனங்கள் நிறுத்தப்படும் இடமாகவும் பயன்படுத்தப்படுகின்றது. 1960றகு முன்னர் இக்குளத்தின் மேற்குக்கரையில் மருத மரங்கள் நின்றதுடன் சிறப்பான ஒரு குளச்சூழல் நிலவியதற்கு இக் குளத்திற்கு முன்னர் அமைந்திருந்த Lake View Hotel சான்றாக அமைகின்றது. காலப்போக்கில் இக்குளம் நீண்ட காலமாகக் கவனிக்கப்படாது விட்டதனால் சதுப்பு நிலமாக இன்று காட்சியளிக்கின்றது. இக்குளத்தின் இன்றைய நிலையையும் மற்றும் அப்பகுதியின் அபிவிருத்திச் சேவையையும் நோக்குமிடத்து இக் குளத்தினை மீள அபிவிருத்தி செய்வதற்கு முயற்சி எடுப்பதிலும் பார்க்க முழுப்பகுதியையும் நிரப்பி நகர அபிவிருத்தியை முன்னெடுப்பதே சிறந்ததாகும். இப்பகுதியில் வர்த்தக, போக்குவரத்துத் தேவைக்குக் கூடிய நிலம் தேவைப்படுவது குறிப்பிடத் தக்கது. இதனைக் கருத்திற் கொண்டு இவ்வண்ணான் குளத்தை மீட்சிசெய்து யாழ்ப்பாண நகர மினிபஸ் நிலையம் ஒன்றை அமைப்பதற்கு யாழ்ப்பாண நகர சபையினால் திட்டம் ஒன்று தீட்டப்பட்டுள்ளது. இத்திட்டத்தின்கீழ் மின்சார நிலைய வீதியையும் கஸ்தூரியார் வீதியையும் இணைக்கும் நோக்கத்துடன் புதிய பாதை ஒன்றும் அமைக்கப்படவுள்ளது. இத் திட்டத்தினை 1988ஆம் ஆண்டு ஆரம்பிப்பதற்கு யாழ்ப்பாண மாநகரசபை திட்டமிட்டிருந்த போதும் உள்நாட்டுக் குழப்பங்களால் இச் செயற்றிட்டம் இன்னமும் ஆரம்பிக்கப் படவில்லை. இக் குளத்தினைவிட நகரின் வியாபாரப்பகுதியில் காணப்படும் ஆரிய குளம், புல்லுக்குளம், கன்னாதிட்டிக்குளம் என்பன விருத்தி செய்யக்கூடிய வாய்ப்பினைக் கொண்டிருக்கின்றன. அடுத்து ஆரியகுளம் ஒப்பீட்டு ரீதியில் விருத்தியாக்கக்கூடிய வாய்ப்பினைப் பெற்றுள்ளது. இது 1.3 ஏக்கர் பரப்பைக் கொண்டு பெரிய நீர் நிலையாக இருப்பதுடன் நகரின் இயற்கை வடிகால் ஒழுங்கில் முக்கிய இடத்தினைப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெற்றுள்ளது. திருநெல்வேலி, நல்லூர்ப் பகுதியிலிருந்து தெற்கு நோக்கி வடியும் அரசடி அம்மாச்சியாகுளம், இலுப்பையடி வாய்க்கால் வழியாகச் சென்று யாழ்ப்பாண பொலிஸ் நிலையத்திற்குக் கிழாக்காகக் கடலை அடைகின்றது. ஆரியகுளத்திற்குக் கிழக்கே அத்தியடி மருதடிப் பகுதியிலிருந்து மேற்கு நோக்கி ஓடும் நீர் அத்தியடிக் கால்வாயின் ஊடாக ஆரியகுளத்தை அடைகின்றது. அண்மை ஆண்டுகளில் யாழ்ப்பாண நகரப்பகுதியில் குடியிருப்புப் பகுதிகளைச் சுற்றிச் சீமெந்து மதில் அமைக்கப்பட்டு வருவதனாலும் இயற்கையான வடிகால் ஒழுங்கு பெரு மளவு தடைப்பட்டுள்ளதைக் காணலாம். இதனால் மழைநீர் வளவுகளிலேயே தேக்கப்பட்டு அல்லது ஓட இடமில்லாது சிற்சில இடங்களில் தேங்கி நிற்பதனையும் காணலாம். உதாரணமாக ஆரியகுளத்தின் இயற்கை நீரேந்து பரப்புக்குட்பட்ட குரு நகர்க் கோயில் நிலப்பகுதி நீர்வழிந் தோடுவதற்கு வடிகாலாற்று அங்கு பெருமளவு நீர் மழை நாட்களில் தேங்கி நிற்பதைக் காணலாம். இதனால் இக்கோயிலைச் சூழவுள்ள மக்கள் பல சிரமத்திற்குட்படுவதைக் காணமுடிகின்றது.

ஆரியகுளத்தின் இன்றைய நிலையை நோக்கின் இதன் மேற்குப் பக்கம் பருத்தித்துறை வீதியாகவும், சீமேந்து அரணைக்கொண்டும் விளங்குகின்றது. ஆனால் வடக்கு, தெற்கு, கிழக்குப் பகுதிகள் நல்ல முறையில் அரண் செய்யப்படவில்லை. சில இடங்களில் மதிற் சுவர்களையும், சில இடங்களில் வேலிகளையும், சரிந்த பூவரசுமரங் களையும் கொண்டுள்ளது. இம் மூன்று பகுதிகளும் அப்பிரதேசத்தின் குடியிருப் புக்களின் பின்புறமாக இருப்பதால் அழகு குறைவாகவும் கழிவுப்பொருட்கள், குப்பை, கூழங்கள், மற்றும் மலசல கூடங்களைக் கொண்டு காணப்படுவதும் தெரிகின்றது. தெற்குப் பகுதி குளக்க ரையை அண்டி, ஒரு நூல் நிலையம், வைரவர்கோயில் என்பன அமைந்துள்ள துடன் குளத்திற்கும், ஸ்ரான்லி வீதிக்கும் இடையில் வெற்றுநிலம் காணப் படுகின்றது. மேற்கில் 4 மருதமரங்கள் காணப்படுகின்றன. மேற்குப் பகுதியில் வடபாகத்திலிருந்த மரங்கள் அண்மையில் பட்டுவிட்டதனாலும் தற்போது அப்பகுதி யில் நிழலற்றும், வெப்பமாகவும் உள்ளது. இக்குளத்தின் வடமேற்குப் பகுதியில் மேலும் மீன் ஏற்றி, இறக்கல், மீன்பெட்டிகள் அடுக்கப்பட்டிருப்பதன் காரணமாக வெடில் வீசுவதால் பருத்தித் துறைவீதியால் செல்லும் மக்கள் பெரும் அசௌகரியத்திற்கு உள்ளாகின்றார்கள். தெற்குப்பக்கத்தில் அரச மரங்கள், ஆலமரங்கள் என்பன இருப்பதால் இப்பகுதி குளிர்ச்சியாகவுள்ளது. வடக்குக் கிழக்குப் பகுதிகளின் எல்லை அண்டி ஆங்காங்கே வீட்டுக்குப்பை கூழங்கள் குளக்கரையில் கொட்டப் படுவதனால் குளத்தின் சில பகுதிகள் குப்பைகள் நிறைந்து காணப்படுவதும், நீர் அசுத்த மடைந்து வரும் நிலையும் தென் படுகின்றன. இக் குளம் நீண்ட காலமாகத் தூர் அகழாததன் காரணமாக தூர் படிந்து இதன் கொள்ளளவும், நீரின் ஆழமும் குறைவாக உள்ளன. நீர் நிற்கும் காலங்களில் நிலத்தின் படுக்கை சேற்றுத்தன்மை கொண்டதாகவும் காணப்படுகின்றது. இதைத் தவிர நீர் அசுத்தமாகவும், பாசிநிறைந்து பச்சைக் கூழாகவும் காட்சி அளிப்பதுடன் தாமரை மற்றும் சல்வீனியாவகைப் பூண்டுகளால் மூடப்பட்டுள்ளது. ஒட்டுமொத்தமாகப் பார்ப்பின் இக்குளமும் அதன் சூழலும் நீண்டகாலமாகக் கவனிப்பாரற்று இருந்தாலும், மக்கள் சூழல் பண்பிற்கு முக்கியத்துவம் கொடுக்காமையாலும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அசுத்தமும் அழகுத்தன்மையும் அற்றுக் காணப்படுகின்றன.

ஆரியகுளம் அபிவிருத்தி செய்யப் படுவதற்கான வாய்ப்புக்களைக் கொண் டுள்ளது. அதாவது சூழல், சுற்றாடல், நகரப்பொழுது போக்குத் தேவைகளைக் கருத்திற் கொள்ளும் இடத்து விருத்தி செய்வதற்கான வாய்ப்புகளைப் பெற் றுள்ளது. இக் குளத்தினை அழகு படுத்துவதன் மூலம் நகர மக்களின் பொழுதுபோக்குத் தேவைகளிற் சிறு பகுதியாவது நிறைவேற்ற முடியும் என நம்பப்படுகிறது. இன்று யாழ்நகரில் எந்த இடத்திலாவது நீரை அடிப்படையாகக் கொண்ட பொழுது போக்குவசதிகளோ, விளையாட்டுத் துறைகளோ இல்லாதது கவனிக்கத்தக்க அம்சமாகும்.

யாழ் நகரம் காக்கைதீவிலிருந்து கொழும்புத்துறைவரை ஏறத்தாழ 10 கிலோ மீற்றர் நீளமான கடற்கரையைக் கொண்டிருந்தும் இதில் 100 மீற்றர் தூரமாவது மக்களின் பொழுதுபோக்கு வசதிகளைக் கொண்டிராமை நகரப் பொழுதுபோக்கு வசதியின் பின்னடை வையே எடுத்துக்காட்டுகிறது. இவ்விடம் குப்பை, கூழங்கள் நிறைந்த சேற்றுக் கடற்கரையாகவோ அல்லது பாதுகாப்புக் காக முட்கம்பிகள், வலைகள் கொண்ட கடற்கரையாகவோ இருப்பதனால் பொழுதுபோக்கு வழிகளுக்குத் தடையாக வுள்ளது. மேலும் ஆரியகுளத்தின் நீர் தூய்மைப் படுத்தப்படுமிடத்து அக் குளத்தைச் சூழவுள்ள குடியிருப்புக் களின் கிணற்று நீர் சுத்தமடைய வழிபிறக்கலாம். மேலும் குளத்தின் செல்வாக்கால் குளத்தைச் சூழவுள்ள பிரதேசங்கள் ஏனைய பகுதிகளிலும் பார்க்க ஓரளவு ஒப்பீட்டளவில் குளிர்ச் சியான இடத்திற்குரிய காலநிலைத் தன்மையைக் கொண்ட பிரதேசமாக வாய்ப்புண்டு. மேலும் இக் குளப்பகுதியை விருத்தி செய்யுமிடத்து வடக்கு, கிழக்குக் கரையோரப் பகுதியில் வாழும் மக்களின் காணிகளின் பிற்பகுதிகளுக்குப் பாதை அல்லது வழிமுகப்புக்கிட்டவும் சந்தாப்பம் உண்டு. தொகுத்து நோக்கும்போது இக் குளத்தினை விருத்தி செய்யுமிடத்து இக் குளக்கரையோரத்திலுள்ள காணிகளின் ஆதனப் பெறுமானம் அதிகரிக்கப் படுவதுடன் கவர்ச்சியான நகரமையமாக இது விருத்தி அடைவதற்கு வாய்ப் புகளையும் கொண்டுள்ளது.

இக் குளத்தின் விருத்திருக்குப் பின்வரும் நடவடிக்கைகள் மேற் கொள்ளப்பட வேண்டும்.

1) இக்குளத்தைச் சுற்றி நான்கு பக்கமும் அரண் அமைத்து இக்குளத்திற்குரிய நிலப்பரப்பினை உறுதிப்படுத்த வேண்டும்.

2) இக் குளத்தைச் சுற்றிவரும் முறையில் ஒரு சுற்றுப்பாதை அமைக்கப்பட வேண் டும். குளத்தில் நீரைத தேக்கத்தக்க வகையில் தூர்,அமைக்கப்பட்டு சிறு வள்ளங்கள் களிப்பு ஓடங்கள் (Plea sure Boats) விடயக்கூடிய அளவிற்கு ஆழமாக்கப்பட வேண்டும்.

3) வடக்கு - கிழக்கு கால்வாய் வழியாக வரும் கழிவுநீர் குளத்தைச் சென்றடை வதைத் தடுக்கவேண்டும்.

4) குளத்து நீர் துப்புரவானதாகவும், தெளிவானதகவும் மாற்றப்படவேண்டும.

5) குளத்தில் காணப்படும் நீர்த்தாவரங்கள் யாவும் அகற்றப்பட்டு மேலும் சிறு ஓடங்கள் இறக்குவதற்கேற்ற இறங்கு துறை தெற்கு அல்லது தென்மேற்கு மூலையில் அமைக்கப்பட வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

6) மேலும் இக்குளத்தைச் சூழவுள்ள நிலப்பகுதி மின்ஒளி விளக்குகளால் அலங்கரிக்கப்பட்டு அழகிய நிலக் காட்சியைக் கொண்டு காணப்பட வேண்டும். குளத்தைச் சுற்றி மக்கள் அமர்வதற்கு ஆசனங்கள் அமைக்கப் பட வேண்டும்.

மேற்குறிப்பிட்ட முறையில் குளத்தின் அபிவிருத்தித் திட்டம் நடைமுறைப் படுத்தப்பட்டால் யாழ்நகர மக்கள், குறிப்பாக ஆரியகுளம், சிறாம்பியடி, அத்தியடி, ஆனைப்பந்தி மக்கள் கூடியளவு நன்மைபெற வாய்ப்பு உண்டு. எனவே இத்திட்டத்தை மேற்கொண்டு ஆரியகுளத்தை அழகுபடுத்த யாழ்பாண மாநகரசபையும் ஏனைய நிறுவனங்களும், நகரமக்களும் கூடிய ஈடுபாடு காட்ட வேண்டும். ஆரியகுளத்தைப் போலவே நகரில் காணப்படும் சிறியளவான அல்லது பெரியளவான குளங்கள் அபிவிருத்திக்கு உட்படுத்தப்படல் வேண்டும். இத்தகைய செயற்பாடுகளை மேற்கொள்ள முடியாதவிடத்து ஓரிரு குளங்களையாவது விருத்தி செய்வதற்கு யாழ் மாநகர சபையோ நகர அபிவிருத் திச்சபையோ சூழல் அதிகாரசபை என்பனவோ கூடிய கவனம் செலுத்த வேண்டும். நகரின் பிரபல வர்த்தக நிறுவனங்கள், கம்பனிகள் சில குளங் களை எடுத்து அபிவிருத்தி செய்ய முன்வர வேண்டும். கொழும்பு நகரிலுள்ள பல வீதிச் சுற்று வளையங்களைப் (Roundabouts) பிரபல கம்பனிகள் எடுத்துப் பராமரித்து வருவது குறிப்பிடத் தக்கதாகும். இந்த வகையில் நகரின் மத்திய பகுதியிலுள்ள புல்லுக்குளம், கன்னாதிட்டிக்குளம் என்பனவற்றை மக்கள் பயன்படுத்தக்கூடிய பொழுதுபோக்குமை யங்களாக மாற்றுதல் நகரின் வளர்ச்சிக்கு மேலும் துணைபுரியும் எனலாம்.

புல்லுக்குள விருத்தி நீண்டகாலமாகப் பேசப்பட்டுச் சில முயற்சிகள் மேற் கொள்ளப்பட்டாலும் குறிப்பாக 1960 களிலிருந்து விருத்தி செய்ய எடுத்த முயற்சிகள் வெற்றியளிக்காமை குறிப்பிடத்தக்க அம்சமாகும். 3.7 ஏக்கர் பரப்பைக் கொண்ட இக்குளம் யாழ்நகரின் முற்றவெளிக்கு அண்மையில் அமைந்து இருப்பதுடன் அதனைச் சூழவுள்ள இடங்கள் பூங்கா, விளையாட்டுமைதானம், கலையரங்குகள், சினிமாப்பட மாளிகை கள், கடற்கரை போன்ற பொழுதுபோக்கு, மற்றும் கல்விநிறுவன வசதிகளைக் கொண்டு காணப்படுகின்றது. இத்தகைய அம்சங்கள் இக்குளத்தின் விருத்திக்கு ஆதாரமாகவுள்துடன் யாழ்ப்பாண நகரத்தை முக்கிய சுற்றுலாத்துறை இடமாக வளர்த்தெடுக்கக் கூடிய வாய்ப்புக்களை இனிவரும் காலங்களில் ஏற்படுத்த முடியும்.

நகரின் மத்திய பாகத்தில் கன்னாதிட்டிக்குளம் ஏறத்தாழ 5 ஏக்கர் பரப்பளவைக் கொண்டிருப்பதுடன் இதனையும் விருத்தி செய்வதற்கான வாய்ப்புக்கள் காணப்படுகின்றன. இக் குளத்தின் தென்பாகம் தவிர்ந்த ஏனைய பாகங்கள் மக்களின் வேறுபட்ட பயன்பாடுகளுக்குட்படுகின்றது. குளத்திற்குத் தெற்கே ஏறத்தாழ 1 ஏக்கர் நிலம் மீட்சி செய்யப்பட்டு விளையாட்டு மைதானம் ஒன்று அமைக்கப்படவுள்ளது. இவ்வாறு தொடர்ச்சியாக நடவடிக் கைகளை மேற்கொண்டு மக்களுக்காகப் பொழுதுபோக்கு, மையமொன்று ஏற்படு வது குறித்த சூழலுக்கு ஏற்ப அமையும் எனலாம்.

இவ்வாறு நீர் நிலைகளைப் பொழுது போக்கு நிலையங்களாக மாற்றும்போது ஏற்கனவே அமைக்கப்பட்ட வடிகால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமைப்பின் வெள்ளநீர், கழிவுநீர் என்பன குறிப்பாக, குளங்களுக்குச் செல்லாமல் தடுப்பது அவை கடலுக்குள் சென்றடைவதற்கு வேறுமார்க்கங்களும் கண்டறியப்பட வேண்டும். அத்துடன் ஏற்கனவே அடைக்கப்பட்டு இன்று தூர்ந்தும், சீரற்றும் காணப்படும் வடிகால்களைச் சிறந்த முறையில் அமைப்பதுடன் இவ்வடி கால்களை அசுத்தமாக்கும் நடவடிக்கை களுக்கு எதிராக யாழ்ப்பாண நகரசபை கடுமையான சட்ட ஒழுங்குகளை மேற்கொள்ள வேண்டும். இவ்வாறான நடவடிக்கைகள் மூலம் வெள்ள நீர் கழிவு நீர் என்பவற்றினால் நகரில் ஏற்படக்கூடிய பிரச்சிகள் தீர்க்கப்படுவதுடன் நகரினை அழகாகவும் தூய்மையாகவும் வைத் திருக்க முடியும்.

யாழ்ப்பாண நகரின் நீரப்பயன் தொடர்ந்து அதிகரித்துக் கொண்டு செல்லும் அதேசமயம் நகர மக்கள் இந்நீரைப் பெறுவதற்குத் தரைக்கீழ் நீரையே நம்பி இருப்பதனால் எதிர் கால நீர்த் தேவையினைச் சமாளிக்கக் கூடிய வகையில் கிடைக்கும் நீரைப் பாதுகாப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். இந்தவகையில் கிடைக்கும் நீரை மீளவும் தரைக்குச் செலுத்துவதற்கான (Recharge) சிறந்த சாதனமாக இக்குளங்கள் காணப்ப டுவதால் ஆண்டு தோறும் அவற்றின் கரைகளில் படியும் நுண்கழிவுகளை (Desilting) அணைகளை உயர்த்துவதன் மூலம் நீர் கொள்ளளவையும் ஊடுவடி தலின் அளவையும் அதிகரிக்க முடியும். யாழ்ப்பாண நகரத்தின் பொருளாதாரத்தில் கைத்தொழில்துறை சிறுபங்கினையே வகித்தாலும் நீரை முக்கியமாகக் கொண்ட கைத்தொழில்கள் விருத்திய டையும் போது நீரைப் பெறுவ தில் இத்தகைய நீர் நிலைகளின் பங்கு முக்கியமானதாகும். மேலும் இக்குளங் களின் அபிவிருத்திக்கு உட்படுத்துவதன் மூலந்தான் இந்நகரக் குளங்களை, மக்கள் பயன்படுத்தக்கூடிய பொழுது போக்கு மையங்களாகவும் மாற்ற முடியும். இத்த கைய அபிவிருத்தி மையங்களைக் கருத்திற்கொண்டு யாழ்ப்பாண நகரின் குளங்களைப் பயன்படுத்தல், பாது காத்தல் தொடர்பான சில சட்டதிட் டங்கள், உபவிதிகள் என்பவற்றை யாழ்ப் பாண மாநகரசபை, நகர அபிவிருத்திச் சபை, சூழல் அதிகாரசபை போன்றன இனிவரும் காலங்களிலாவது நடை முறைப்படுத்த முன்வருவதன் மூலமே நகர அபிவிருத்தியையும் முன்னெடுத்துச் செல்ல முடியும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உசாத்துணை நூல்கள்

1. பொ. பாலசுந்தரம்பிள்ளை :- யாழ்ப்பாண மாநகர அபிவிருத்தி: சில திறமுறைகள், யாழ்ப்பாணப் புவியியலாளன். இதழ் 4. 1986/87.

2. யாழ்ப்பாண மாநகரசபை உபகுழு அறிக்கை - 1987.

3. Jaffna Public Works Programme The Urban Development Authority Sri Lanka, 1981.

***Prof P. Balasundarampillai.***
B.A. Hons (Cey) Ph. D. (Durham)
Head, Dept. of Geography,
University of Jaffna.

***Miss Meera Navaratnam B. A (Hons)***
Temporary Asst. Lecturer,
Department of Geography.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்ப்பாண நகரில் நீர் நிலைகளின் அபிவிருத்தி வாய்ப்புக்கள்

01. புல்லுக்குளம்.
02. வட்டக்குளம்.
03. தேவரீகுளம்.
04. மறவம்குளம்.
05. வண்ணான்குளம்.
06. பால்குளம்.
07. வண்ணான்குளம்.
08. நெடுங்குளம்.
09. உப்புக்குளம்.
10. வண்ணான்குளம்.
11. நெடுங்குளம்.
12. நீர்நொச்சித்தாழ்வுக்குளம்.
13. பிரப்பங்குளம்.
14. நாயன்மார்கட்டுக்குளம்.
15. பண்டாரக்குளம்.
16. வண்ணான்குளம்.
17. அம்மாச்சிக்குளம்.
18. பிராமணகட்டுக்குளம்.
19. மருதடிப்பிள்ளையார் கோயில்
20. ஆரியகுளம்.
21. கன்னாதிட்டிக்குளம்.
22. வண்ணான்குளம்.
23. கல்லுக்குளம்.
24. நரிக்குண்டுக்குளம்.
25. வண்ணான்குளம்.
26. கோயில்குளம்.
27. துடுப்பைக்குளம்.

## ***யாழ்ப்பாண நகரக் குளங்களின் பரம்பலும் வடிகாலமைப்பும்***






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மாநகரசபை உறுப்பினர் மு.தவநாதன் மங்கள விளக்கேற்றல் அருகில் ம.மங்களநேசன்



துணைவேந்தர் பொன். பாலசுந்தரம்பிள்ளை அவர்கள் மங்ளக விளக்கேற்றல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# யாழ். மாநகரசபை சுகாதாரப்பகுதி அன்றும் இன்றும்

இலங்கையின் வரலாற்றில் அதிமுக்கியமான நகரங்களுள் ஒன்று யாழ்ப்பாணம். ஈழத்தமிழர்களின் தலைநகரமாகவும் புகழ்பூத்த கல்விமான்களின் பிறப்பிடமாகவும் அமைந்து, உலகத் தமிழர் வரலாற்றில் தனியிடம் பெற்ற நகர் இது. நான்காவது அகில உலகத் தமிழாராய்ச்சி மகாநாடு நடத்தப்பட்ட நகரம். எத்தனையோ போர்களையும், அழிவுகளையும் சந்தித்தபின்பும் களைக்கமால் மீளவும் புத்துயிர்ப்புடன் துளிர்த்தெழும் நகரம், நீதிமன்றம், முக்கிய அரச அலுவலகங்கள், ஆசியாவின் இரண்டாவது மிகப் பெரிய நூலகம், கல்லூரிகள் போன்ற நகரின் இதயப்பகுதி அழித்தொழிக்கப்பட்ட நிலையில் இன்று மீளவும் கட்டியெழுப்பட்டு வருகிறது. கால்வைக்கமுடியாத கண்ணிடிவெடிகள், சுதந்திரமாக நடமாடமுடியாத பாதுகாப்பு வலயங்களுக்கு மத்தியிலும் தன் உறுதியைத் தளரவிடாது வியத்தகுமுறையில் புனருத்தாரணம் பெற்றுவரும் நகரம். இத்தகைய பின்னணியில் இன்ரோன்ன இடர்களுக்கு மத்தியிலும் இன்று மாநகர சபையின் சுகாதாரப்பகுதி, மக்களுக்கு ஆற்றிவரும் சேவைகள் கருத்தில் கொள்ளப்பட வேண்டும்.

கடந்த ஐம்பது ஆண்டுகளாவும் சுகாதாரச் சேவை சுகாதார வைத்திய அதிகாரியின் தலைமையின் கீழ் செவ்வனே நடத்தப்பட்டுவருகிறது. நகரத்தின் சுகாதாரம் நன்கு பேணப்படவேண்டிய அவசியத்தை உணர்ந்து, சுகாதாரப்பகுதியின் சேவைகள் மிகவும் சிறந்தமுறையில் நடாத்தப்பட்டு வருகின்றன. பொதுசன சேவையில் மகத்தானதும், சகல குடும்பங்களும் சுகவாழ்வுக்கான அடிப்படை அறிவூட்டிப் பராமரித்துவருவதுமான சுகாதார சிகிச்சை நிலையங்கள், ஆரோக்கியமும் சந்தோஷமுமான நல்ல சமுதாயத்தை உருவாக்கும் காரணிகளில் மிகவும் முக்கியமான ஒன்றாக, எமது மாநகர சபையின் சுகாதாரப் பிரிவில் பொறுப்புடன் நடத்தப்பட்டு திறம்பட நிர்வகிக்கப்பட்டு வருகின்றன.

தற்பொழுது மாநகர எல்லைக்குள் கர்ப்பிணித் தாய்மார்களின் பிரசவ விடுதிகள் மூன்றும் சிறப்பாக இயங்குகின்றன. இன்னும் மூன்று பிரசவ விடுதிகள், இப் போர்கால சூழ்நிலை காரணமாக பொம்மைவெளி, அரியாலை, கண்டி வீதி, பாஷையூர் முதலிய இடங்களில் தற்காலிகமாக மூடப்பட்டுள்ளன. கர்ப் பிணித் தாய்மார்கள் சிகிச்சைக்காகவும் பிரசவத்திற்காகவும் போதனா வைத்திய சாலையை நாடவேண்டிய நிலமை ஏற்பட்டது. நாட்டின் நெருக்கடியான சூழ்நிலைகளாலும் இடப்பெயர்வுகளாலும், இயங்கிவரும் பிரசவவிடுதிகளிலும், முன்னரைவிடப் பிரசவங்கள் குறைந்த அளவிலேயே நடைபெற்றன. இத்தகைய நிலைமைகளை மாற்றி, மூடப்பட்ட பிரசவ விடுதிகளை மீண்டும் திறந்து சேவைநல்க துரிதகதியில் ஆவன செய்யப்பட்டு வருகின்றன. அதன் முன்முயற்சியாக, மூடப்பட்ட கலைமகள் வீதி, அரியாலை மகற்பேற்று நிலையம் மீண்டும் திறக்கப்பட்டு நடத்தப்பட்டு வருகின்றது என்பதை மகிழ்ச்சியுடன் அறியத்தருகின்றோம். ஏனைய மகற்பேற்று நிலையங்களான மடத்தடி, யூபிலி மகற்பேற்று நிலையமும், நாவலர் வீதி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மகப்பேற்று நிலையமும், முன்பிருந்தே தொடர்ந்து குடும்பநல சேவையாளர்கள், பொதுச்சுகாதார சாரணிய சகோதரியின் பங்காற்றலுடன் திறம்பட இயங்கிவருவது குறிப்பிடத்தக்கது. இவைகளைவிட கர்ப்பிணித்தாய்மார்களின் பாராமரிப்பு, குழந்தைகள், முன்பள்ளிச்சிறார்கள், பாலூட்டும் தாய்மார்கள், வெளிநோயாளர்கள் சிகிச்சைப்பிரிவுகள் முன்னரைவிட மக்களுடன் அதிக தொடர்புகொண்டு, சகலவித சேவைகள் அதிகரிக்கப்பட்ட நிலையில் சிறப்பாக நடைபெறுகின்றன.

வீட்டுத்தரிசிப்புகளை குடும்பநல உதவியாளர்கள் செய்கின்றார்கள். வீட்டுத்தரிசிப்பில் முக்கியமாக கர்ப்பிணித்தாய்மார்களை இனம் கண்டு, தேவையான ஆரம்ப சுகாதார அறிவுரைகளையும், பராமரிப்புகளையும் நல்குகின்றனர். முன்பள்ளிச்சிறார்கள், குழந்தைகள், பாலூட்டும் தாய்மார்களையும், பதிவேடுகளில் பதிந்து, அவர்களை ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கு வரவழைத்து சிகிச்சைகள் கிடைக்கப்பெறுவதில் உதவி செய்தும், அவர்களுக்குத் தடுப்பூசி மருந்துகள் கொடுத்துக் கவனிப்பதில் முக்கியபங்கும் வகிக்கின்றனர். இப்பொழுது ஒன்பது ஆரம்ப சுகாதாரப் பராமரிப்பு நிலையங்கள் நிர்வகிக்கப்படுகின்றன.

1) நல்லூர் ஆரம்ப சுகாதாரப் பராமரிப்பு நிலையம்

2) அரியாலை கலைமகள் வீதியில் அமைந்துள்ள பிரசவவிடுதியில் இயங்கும் நிலையம்.

3) கந்தர்மடம் அரசடிவீதியின் ஆரம்ப சுகாதார நிலையம்.

4) வண்ணார்பண்ணை நாச்சிமார்கோவிலடி ஆரம்ப சுகாதார பராமரிப்பு நிலையம்.

5) நாவலர்றோட் கீரிப்பிள்ளையார் கோவிலடியிலுள்ள, பிரசவவிடுதியில் நாவாந்துறை மக்களுக்காக இயங்கும் நிலையம்.

6) நாவலர்றோட் கீரிப்பிள்ளையார் கோவிலடி பிரசவவிடுதியில் கொட்டடி, நகரப்பகுதி மக்களுக்காக இயங்கும் நிலையம்.

7) மடத்தடி, பிரதானவீதியின் ஜூபிலி ஹோல் பிரசவவிடுதியில் இயங்கும் நிலையம்.

8) குருநகர் அரசாங்க வைத்தியசாலையில் நடாத்தப்படும் நிலையம்.

9) கண்டிவீதியில் சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையில் நடாத்தப்படும் நிலையம்.

முன்பு மாதத்திற்கொருதடவை இயங்கிவந்த சிகிச்சை நிலையங்கள் இப்போ மாதத்திற்கு இருதடவைகள் நடாத்தப்பட்டுவருகின்றன. இந்நிலையங்களில் கர்ப்பிணித்தாய்மார்களைப் பிரிசோதித்துப் பராமரித்தல், குழந்தைகள், முன்பள்ளிச் சிறார்களுக்குத் தடுப்பு மருந்தேற்றல், பாலூட்டும் தாய்மார்களுக்கும் போஷாக்குக் குறைந்த பிள்ளைகளுக்கும் திரிபோஷா, கோண்சோயா முதலியன வழங்குதல், முதலியன செயல்படுத்தப்படுகின்றன. அத்துடன் இங்கு குடும்பநலத்திட்டச் செயல்முறைகளும் செயல்படுத்தப்பட்டுவருகின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாநகரசபை சுகாதாரப் பகுதியின் சுகாதாரக் கல்விச் செயற்பாடுகள் பின்வருவன:-

1) சிகிச்சை நிலையங்களில் சுகாதாரக்கல்வி
2) பாடசாலைகளில் இறுதிவகுப்பு மாணவர்களுக்கான கட்டிளமைப் பருவத்தினருக்கான விசேஷ சுகாதாரக்கல்வி நிகழ்வுகள். (பாலியல் நோய்கள், பருவகாலப் பிரச்சனைகள், ஏனைய சமூக சுகாதாரப் பிரச்சனைகள்).
3) சுகாதாரக்கல்வி மையங்களில் சுகாதாரக் கல்விச்செயற்பாடுகள்.
4) உணவுச்சாலையில் பணிபுரிவோருக்கான சுகாதாரக்கல்விச் செயற்பாடுகள்.
5) சனசமூக நிலையங்களிலே சுகாதாரக்கல்விச் செயற்பாடுகள்.
6) மகளிர்தினம், உலக சுகாதாரவாரம், எயிட்ஸ்தினம், சூழல்தினம் போன்ற முக்கிய தினங்களில் விசேஷ சுகாதாரக்கல்வி நிகழ்வுகள்.
7) தொண்டர்களுக்கான பயிற்சி நெறிகள்.

எதிர்காலத்தில் சுகாதாரக்கல்வி செயற்திட்டங்களில் மேலும் பல படிகள் முன்னேற்றம் காணப்படல் அவசியமாகும். மேலே குறிப்பிட்ட விஷயங்களுடன் யுனிசெவ் உதவியுடன் இன்னும் முன்னேற்றம் காணச் சீரிய திட்டங்கள், ஆலோசனைகள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.

Unicef உதவியுடன் நான்கு போஷாக்கு நிலையங்கள் நடாத்தப்பட்டன. இத்திட்டத்தின்படி, இலைக்கஞ்சி வழங்குதலும், பால்மா, ஜீவாகாரம் போன்ற சத்துணவு வழங்கும் திட்டங்கள் சென்ற ஆண்டுகளில் நடைபெற்றன. இப்பொழுது Unicef இன் உதவியுடன் சமூகமட்டத்தில் பாடசாலை விலகிய பிள்ளைகளைத் தெரிவுசெய்து அவர்களுக்குப் பயிற்சி வகுப்புக்கள் நடாத்தி மாநகரசபை எல்லைக்குள் மக்களை இனம்கண்டு சுகாதாரப்பணிகளைத் தொடர்ந்து நடாத்தி வருகின்றோம். சுகாதாரப் பணியாளர்களுக்கும் உள்ளகப்பயிற்சி வகுப்புகள் நடாத்திவருகின்றோம்.

நாம் UNDPயின் உதவியால் எமக்குக்கிடைத்த அம்புலன்ஸ் வண்டியை யாழ்ப்பாண மக்களின் அவசர மருத்துவத் தேவைகளுக்காகப் பயன்படுத்தி வருகின்றோம். இந்த வாகனத்தின் உதவிபெற்று நோயாளர்களை உடனேயே வைத்தியசாலைக்குக் கொண்டுசெல்ல முடியும். இது ஏழை மக்களுக்கு ஒரு வரப்பிரசாதமாக அமைந்துள்ளது.

எமது சுகாதாரப் பரிசோதகர்களுக்கும், சுகாதாரப் பாதுகாவலர்களுக்கும் ஆறு பகுதிகளாகப் பிரிக்கப்பட்டு, ஒவ்வொரு பகுதிகளுக்கும் சென்று, வீடுகள் தரிசித்து, மக்களின் சுகாதாரப் பிரச்சினைகளைக் கேட்டறிந்து, அந்தந்தப் பகுதிகளில் இருக்கும் தொற்றுநோய்களைப்பற்றி விளக்கம் செய்து, சுகாதாரச் சீர்கேடுகளைத் தவிர்ப்பதற்கு முக்கிய பங்காற்றுகிறார்கள். சாப்பாட்டுக்கடைகள், உணவு விடுதிகள், தேனீர்ச்சாலைகள், பாண்வெதுப்பகங்கள் என்பனவற்றைத் தரிசிப்பதும், அங்குள்ள குறைபாடுகளைக் கண்டறிந்து, அவற்றைப் போக்குவதற்கு உரிமையாளர்களுடன் கதைத்து குறைகளை நிவிர்த்திசெய்து அயராது உழைக்கின்றார்கள். வியாபார

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஸ்தாபனங்களுக்கு உரிமம் வழங்குவதும் சுகாதாரப் பரிசோதகர்களின் உதவியுடன் செயற்படுத்தப்பட்டுவருகின்றது. போதைவஸ்துப்பாவனை, கசிப்பு உற்பத்தி, பாவனை முதலிய சமூக சீரழிவுகட்கும் கருத்தரங்குகளை நடாத்தி, மக்கள் மத்தியில் ஓர் விழிப்புணர்ச்சியை ஏற்படுத்தி, இவற்றை ஒழிப்பதற்கான நடவடிக்கைகளையும் எடுத்துவருகிறார்கள். கட்டாக்காலி நாய்களைப் பிடித்து அழிப்பதும், வளர்ப்புநாய்களுக்குத் தடுப்பூசி ஏற்றுதலும் கிரமமாகச் செய்து வருகிறார்கள்.

ஆட்களில்லா வீடுகளிலும், தெருவோரங்களிலும், காவி ஒழிப்புத்திட்டத்தைச் செயற்படுத்தி, ஈ, நுளம்பு போன்ற நோய்காவிகளை ஒழிப்பதற்கு உதவியாகப் பற்றைகளை வெட்டுவிப்பதிலும், குப்பைகளை அகற்றுவதிலும் கண்ணும் கருத்துமாக இருந்து வருகிறார்கள். இதன் பயனாக பலவிதமான தொற்றுநோய்கள் பரவாமல் தடைசெய்யப்பட்டிருக்கின்றது என்பதை மிகவும் பெருமையுடன் தெரிவித்துக்கொள்கின்றோம்.

மாநகரசபை சுகாதாரக்குழுத் தலைவரின் ஊக்கத்தால் ஒரு நடமாடும் சுகாதார சேவையையும் மேற்கொள்ளுகின்றோம். இது மாதாமாதம் நடைபெறும் சேவையாகும். இதற்குப் பொதுமக்களின் ஒத்துழைப்பு மிகவும் வேண்டப்படுகின்றது.

முன்பு சுகாதாரப் பகுதியில் இணைந்திருந்த சுகாதாரப் பொறியியல் பகுதி இப்பொழுது தனித்து இயங்குகின்றது. நகரசுத்திகரிப்பு, சந்தைகள், கான்கள் துப்பரவுசெய்தல் முதலியன மிகவும் திறம்பட அவர்களாற் செயல்படுத்தப்பட்டு வருகின்றது. இதற்காக குப்பை அகற்றும் வண்டில்களுடன், (Tractor) ட்ராக்டர் வண்டி முதலியனவும் உபயோகப்படுத்தப்படுகின்றன.

மனிதர் புழங்காத இடங்கள், சோதனைச்சாவடிகளை அண்மித்த மதவுகள் கான்கள் முதலிய நடைமுறைச் சிக்கல்கள் நிறைந்த பகுதிகளிலும், நமது சுகாதாரப்பகுதி ஊழியர்கள் உயிர் ஆபத்துக்களையும் பொருட்படுத்தாது, அடைபட்ட வடிகால்களைச் சுத்தப்படுத்திக் கழிவுகளை அகற்றி, ஆற்றிய அளப்பரிய சேவைகளினால் இப்பொழுது நகரம் சீர்திருத்தப்பட்டு, தொற்றுநோய்கள் முன்னரைவிடக் குறைந்து காணப்படுகின்றது. இன்றைய நாட்களில் கழிவுகள் அகற்றுவதற்கு ஒரு Gulley Emptier உம் உபயோகப்படுத்தப்பட்டு வருகின்றது.

இவ்வாறாகப் பல்வேறு மேடு பள்ளங்களையும் கடந்து ஐம்பது ஆண்டுகளைப் பூர்த்தி செய்துள்ள மாநகரசபையின் சுகாதாரப்பகுதி அதன் வரலாற்றில் ஒரு வளமான பொற்காலத்தைப் பெற்றிருந்தது. பின் தாங்கமுடியாத அழிவுகளைச் சந்தித்து இப்பொழுது மீண்டும் புதுப்பொலிவுடன் துளிர்விட்டுப் புதுயுகம் நோக்கி வீறுநடை போட்டுக்கொண்டிருக்கின்றது. புது ஆக்கங்களைச் செவ்வனே நிறைவேற்றி இதன் சேவைகளை மேலும் மேலும் வளம் பெறச்செய்து, மக்கள் நலம்பெற, வாழ்வு செழிக்க வாழ்த்துவோமாக!

**வைத்திய கலாநிதி ம. மரியதாசன்**
சுகாதார வைத்திய அதிகாரி,
மாநகரசபை,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ் மாநகர சபையின் குடிநீர் விநியோகத் திட்டம்

மக்களின் இன்றியமையாத தேவைகளில் ஒன்றாகிய குடிநீர் வசதியை மாநகர சபை எல்லைக்குள் வசிக்கும் மக்களுக்கு வழங்கும் நோக்குடன் 1952ம் ஆண்டு குருநகரில் அமைந்துள்ள தாங்கியிலிருந்து அப்பகுதி மக்களுக்கு நீர் விநியோகம் செய்யப்பட்டது. அத்துடன் பனிக்கட்டித் தொழிற்சாலைக்கும், போதனாவைத்தியசாலைக்கும் குருநகர் தாங்கியிலிருந்து நீர் வழங்கப்பட்டது. இதற்கான நீர் திருநெல்வேலி பம் நிலையத்திலிருந்து 150 மி.மி ஏ.சீ குழாய் மூலம் பெற்றுக் கொள்ளப்பட்டது. இக்காலப்பகுதியில் பாஷையூர் நாவாந்துறை பகுதிக்கு பவுசர் மூலம் நீர் எடுத்துச் செல்லப்பட்டு ஒரு குடம் நீர் 5 சதத்திற்கு வழங்கப்பட்டது,இக்காலப்பகுதியில்

இதன் பின் 20.10.1963ல் கோண்டாவில் பம் நிலையத்திலிருந்து 300 மி.மி ச.ஐ குழாய் மூலம் 5 கி.மீ. தூரத்திலுள்ள பிரதான தாங்கியில் நிரப்பப்பட்டு அதிலிருந்து கொழும்புத்துறை, பாஷையூர், யாழ் நகர் மத்திய பகுதி நாவாந்துறை, கொய்யாத்தோட்டம் ஆகிய பகுதிகளில் வாழும் மக்களுக்கு 813 நீர்க்கம்பங்களூடாக நீர் வழங்கப்பட்டது. காலை 6.00 தொடக்கம் இரவு 10.00 மணி வரை 500,000 கலன் நீர் மக்களுக்கு வழங்கப்பட்டது. இதனால் 70,000 க்கும் மேற்பட்ட மக்களுக்கு குடிநீர் தேவை பூர்த்தி செய்யக்கூடியதாய் இருந்தது.

1968ம் ஆண்டு காலப்பகுதியில் மக்களின் தேவைகளை கருத்தில் கொண்டு நீர் கம்பங்களின் எண்ணிக்கை 1413 ஆக அதிகரிக்கப்பட்டது. அத்துடன் வீடுகளுக்கான குழாய் இணைப்புக்களும் வழங்கப்பட்டது. இக்காலப்பகுதியில் 1400 வீடுகளுக்கு இவ்வாறு நீரிணைப்பு வழங்கப்பட்டது. இக்காலப்பகுதியில் கோண்டாவில் பம்நிலையத்திலுள்ள கிணறுகளின் தன்மை மாற்றமடையுமென நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபை ஆலோசனை வழங்கியதன் பேரில் நீர் வழங்கும் நேரம் காலை ஒரு மணித்தியாலமாகவும் மாலை ஒரு மணித்தியாலமாகவும் குறைக்கப்பட்டது.

1987ம் ஆண்டு காலப்பகுதியில் நாட்டின் அசாதாரண சூழ்நிலைகாரணமாக நீர்க்குழாய்கள், நீர்க்கம்பங்கள் சில சேதமடைந்தமையால் நீர் வழங்குவதில் சிறிது தடங்கல் ஏற்பட்டது. பின் நீர் குழாய்கள் திருத்தப்பட்டு சீரான நீர்விநியோகம் செய்யப்பட்டது.

1990ம் ஆண்டு யாழ் குடாநாட்டுக்கான மின்சாரம் முற்றாக நிறுத்தப்பட்டமையால் எமது நீர் விநியோகத்திட்டமும் பெரும் சிரமங்களை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எதிர்நோக்கத் தொடங்கியது. இக்காலப்பகுதியில் திருநெல்வேலி பம்நிலையத்திலிருந்து 3" நீர் இறைக்கும் இயந்திரத்தின் ஊடாக ஆரியகுளம், ஸ்ரான்லி வீதி, அத்தியடி, சிறாம்பியடி ஆகிய பகுதி வாழ் மக்களுக்கு காலை 1 மணித்தியாலமும், மாலை 1 மணித்தியாலமும் நீர் வழங்கப்பட்டது.

அத்துடன் புனித யாகப்பர் ஆலயத்தில் பொது மக்களுக்கு குடிநீர் விநியோகம் செய்யப்பட்ட அமைப்பு எம்மால் பொறுப்பேற்கப்பட்டு விஸ்தரிக்கப்பட்டு குருநகர், இராஜசிங்கம் வீதி, மத்தியூஸ் வீதி மக்களுக்கு காலையும் மாலையும் நீர் கம்பங்களூடாக நீர் வழங்கப்பட்டது.

குருநகர் பாங்சால் வீதியில் அமைந்திருக்கும் புதமைமாதா ஆலயத்தில் அமைக்கப்பட்டிருந்த நீர்த்தாங்கி எம்மால் பொறுப்பேற்கப்பட்டு விஸ்தரிக்கப்பட்டு பாங்சால் வீதி, டேவிட் வீதி, ஓடக்கரை வீதி, மவுன்காமல் வீதி, கொண்டடி வீதி ஆகிய இடங்களிலுள்ள மக்களுக்கு காலையும் மாலையும் நீர்கம்பங்களூடாக நீர்விநியோகிக்கப்பட்டது. அத்துடன் இக்காலப்பகுதியில் வீதியோரங்களில் நன்னீர் வரக்கூடிய இடங்களில் 30 குழாய்க் கிணறுகள் அமைக்கப்பட்டு கைப்பம்பிகள் மூலம் குடிநீர் விநியோகிக்கப்பட்டது.

1995ம் ஆண்டு வலிகாமப் பகுதி மக்கள் இடம்பெயர்ந்து 1996ம் ஆண்டு மீண்டும் வந்த பின்னர் 1999ம் ஆண்டு காலப்பகுதியில் ஜீ.ரி.சற். உதவியுடன் அவசர நீர்விநியோகத்திட்டமாக தண்ணீர் தொட்டிகள் அமைத்து பண்டாரவளவிலுள்ள எமது அலுவலக கிணற்றிலிருந்து பவுசர் மூலம் நீர் வழங்கப்பட்டு வந்தது. அத்திட்டம் நடைபெற்றுக்கொண்டிருக்கும் போது சேதமடைந்த நீர்க்குழாய்கள் திருத்தம் செய்யப்பட்டு 1998ம் ஆண்டு காலப்பகுதியில் குருநகர் பகுதியில் எக்கோ திட்டத்தின் ஊடாக 71 நீர்க்கம்பங்களூடாக நீர்விநியோகிக்கப்பட்டது. இக்காலப்பகுதியில் வீட்டு இடிபாடுகளுக்குள் குழாய் அகப்பட்டிருந்தமையால் புதிதாக குழாய்கள் பொருத்தப்பட்டன.

யாழ்ப்பாணம் பொது வைத்தியசாலைக்கு நீரின் அவசியத்தன்மை கருதி தனிப்பட்ட குளாய் மூலம் நாளாந்தம் நீர் வழங்கப்பட்டு வருகின்றது. அதே போன்று யாழ் நகர் வரும் பெரும் எண்ணிக்கையான பொது மக்களின் நலன் கருதி நகரை அண்டிய பகுதிக்கும் பேருந்து தரிப்பு நிலையத்துக்கும் நீர்மானி பொருத்தி வைத்தியசாலைக்கான தனிப்பட்ட குழாய் மூலம் 09 நீர்க்கம்பங்களூடாக காலை 6.00 மணி தொடக்கம் மாலை 6.00 மணிவரை குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. தற்போது புனரமைப்பு செய்யப்படும் யாழ் பொது நூலகத்துக்கும் தனிப்பட்ட இணைப்பு வழங்கப்பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜீ.ரீ.சற். நிறுவனத்தின் உதவியுடன் பலகோடி ரூபா செலவில் புனரமைப்பு செய்யப்பட்ட திருநெல்வேலி, கோண்டாவில் பம்நிலையங்களில் மின்பிறப்பாக்கிகள் பொருத்தப்பட்டு சம்மேசிபிள் பம் மூலம் நீர் இறைக்கப்பட்டு தற்சமயம் குருநகர் தாங்கியிலிருந்து 71 நீர்க்கம்பங்களூடாகவும் பிரதான தாங்கியிலிருந்து 399 நீர்க்கம்பங்களூடாகவும் நீர் விநியோகிக்கப்பட்டு வருகின்றது. அத்துடன் வீடுகளுக்கு தனிப்பட்ட இணைப்புக்களும் வழங்கப்பட்டு வருகின்றது. கடந்த கால வன்செயல் களினால் முற்றாக அழிந்து போயுள்ள நீர் விநியோகம் சம்பந்தமான வரைபடங்கள் தற்போது மீள வரையப்பட்டுக்கொண்டிருக்கின்றன.

மாநகர சபை எல்லைக்குள் சிறிய நீர்விநியோகத்திட்டங்கள் மூலம், சட்டநாதர் கோயில் நீர்த்தாங்கி, நாயன்மார்கட்டு நீர்த்தாங்கி, கச்சேரி நல்லூர் வீதி நீர்த்தாங்கி ஆகியவற்றுக்கு நீர் வழங்கப்படுகிறது. அரியாலை சித்திவிநாயகர் நீர்த்தாங்கி, கொழும்புத்துறை நீர்த்தாங்கி, பொம்மைவெளி குடியேற்றத்திட்ட நீர்விநியோகம் என்பவற்றில் 1995ல் இடம்பெயர்வினால் மொம்மை வெளி நீர்விநியோகத்திட்டமும் 2000ம் ஆண்டு மே மாதம் ஏற்பட்ட அசாதாரண சூழ்நிலை காரணமாக அரியாலை, கொழும்புத்துறை நீர்த்தாங்கிகள் மூலமான நீர்விநியோகத்திட்டமும் இன்று வரை செயற்படுத்த முடியாத நிலையில் உள்ளன.

சட்டநாதர் சிவன் கோயில் நீர்த்தாங்கிக்கு 2 கோஸ் பவர் மின்மோட்டார் மூலம் நீர் நிரப்பப்பட்டு காலை 7.30 தொடக்கம் 8.00 மணி வரை நீர் விநியோகிக்கப்படுகின்றது. இத்தாங்கியிலிருந்து பருத்தித்துறை வீதி, யமுனா வீதி, செல்லர் வீதி, ஏ.பி.சீ. ஒழுங்கை ஆகிய பகுதி மக்களுக்கு 14 நீர்க்கம்பங்களூடாக நீர்விநியோகம் நடைபெறுகின்றது.

கச்சேரி நல்லூர் வீதி நீர்த்தாங்கிக்கு மின் மோட்டார் மூலம் நீர் நிரப்பப்பட்டு காலை ஒரு மணித்தியாலமும் மாலை ஒரு மணித்தியாலமும் நீர் வழங்கப்பட்டு வருகின்றது. இத்தாங்கியிலிருந்து கச்சேரி நல்லூர் வீதி, ஆசீர்வாதப்பர் வீதி, வைரவர் கோவில் வீதி, நொத்தாரிசு வீதி, கனகரத்தினம் வீதி, கலைமகள் வீதி ஆகிய மக்களுக்கு நீர் விநியோகம் செய்யப்படுகின்றது.

நாயன்மார்கட்டு தாங்கிக்கு 2001ம் ஆண்டு தொடக்கம் 5கே.வீ. மின்மோட்டார் மூலம் பண்டாரவளவில் அமைந்துள்ள கிணற்றிலிருந்து 90 மி.மீ.குழாய் மூலம் நீர் நிரப்பப்பட்டு காலை 30 நிமிடம் செம்மணி வீதி, இராஜேஸ்வரி வீதி, அரசடிப்பிள்ளையார் கோயில் வீதி, ஏ.வீ றோட் ஆகிய பகுதி மக்களுக்கு நீர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விநியோகம் செய்யப்படுகின்றது.

பொது மக்களின் நலன் கருதி வீடுகளில் நடைபெறும் விசேட வைபவங்களுக்கு குடிநீர் தாங்கி வைத்து பவுசர் மூலம் நீர் வழங்கப்படுகின்றது. இதற்கான செலவு குறிப்பிட்ட பயன்பெறும் மக்களிடமிருந்து அறவிடப்படுகின்றது. அத்துடன் சில அரச பொது நிறுவனங்களுக்கும் நீர்விநியோகம் செய்யப்படுகின்றது.

**க.இராமச்சந்திரன்**
**நீர்வேலைப் பொறியியலாளர்**
***மாநகராட்சி மன்றம்***
***யாழ்ப்பாணம்.***

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




மாநகர முதல்வருடன் வருமாவ வரி பரிசோதகர்கள்




மாநகர முதல்வருடன் காவல் கடமையாளர்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புனித நகரமாக்கப்பட வேண்டிய நல்லூர்

- பேராசிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளை

எமது நாட்டிலுள்ள முருகன் திருத்தலங்களுள் நல்லூர் கந்தசுவாமி கோயில் முக்கியதோர் இடத்தைப் பெறுகின்றது. கதிர்காமம், செல்வச்சந்நிதி, வெகல், உகந்தை ஆலயங்கள் கிராமச் சூழலில் அமைந்துள்ளன. நல்லூர் ஆலயம் நகர்ச் சூழலில் அமைந்திருப்பது குறிப்பிடத்தக்க அம்சமாகும். இதனால் இங்கு வரும் அடியார்கள் சாதாரண நாட்களிலோ, விழாக்காலங்களிலோ தங்குவதற்கு மடங்கள் அல்லது தங்குமிட வசதிகள் அமைத்துக் கொடுக்கவேண்டிய தேவை பெருமளவில் ஏற்படவில்லை. எனினும் விழாக்காலங்களில் அடியார்கள் ஆலயத்துக்கு இலகுவாகச் சென்றடையக் கூடிய பாதை ஒழுங்கும் போக்குவரத்து வசதியும் மற்றும் அடிப்படை வசதியும் இருக்க வேண்டும். மற்றும் அடியார்கள் கோயிற் புறத்தே வசதியாக திரண்டு நிற்பதற்கும் அகலமான வெளிவீதிகளும் ஒழுங்கமைக்கப்பட்ட திறந்த நிலப்பரப்பும் தேவையாகும்.

இலங்கையில் பல நகரங்கள் இன்று புனித நகரங்களாக விருத்தி செய்யப்பட்டுள்ளன. கதிர்காமம், மகியங்கனை, அனுராதபுரம் போன்றன இவ்வகையில் அடங்கும். திருக்கோணேஸ்வரம் புனித பிரதேசமாக்கப்படவில்லை. வடக்கு - கிழக்கில் எந்தவொரு சைவத்திருத்தலமும் புனித பிரதேசமாகப் பிரகடனப்படுத்தவோ அபிவிருத்தி செய்யப்படவோ இல்லை. நல்லூர் ஆலயமும் இதன் சுற்றுப்புறமும் சமய நோக்கிலும், வரலாற்று நோக்கிலும் தமிழர்களின் முக்கியமான தலமாகும். இதனால் இப்பிர தேசத்தை ஒரு புனித நகரமாக வரையறை செய்து இதன் பொருளாதார, பௌதீகப் பண்புகளை அபிவிருத்தி செய்வது தேவையாகிறது. இப்புனித நகருள் அடங்கும் பரப்பு ஆய்வுகள் மூலம் தீர்மானிக்கப்படலாம்.

ஒவ்வொரு நகரத்திலும் அதன் சமூக, கலாசார, பொருளாதார செயற்பாடுகளை முன்னெடுப்பதற்கு அங்கு நடைபெறும் விழாக்கள் உதவியாக அமைகின்றன. உதாரணமாக கண்டி நகரில் நடைபெறும் வருடாந்த எசல பெரஹரா அந்நகருக்கு சமய, கலாசார முக்கியத்துவத்தைக் கொடுப்பதுடன் சர்வதேச உல்லாசப் பயணிகளையும் அது அங்கு ஈர்ப்பதாக உள்ளது. இது அந்நகரின் பொருளாதார செயற்பாட்டில் குறிப்பிடத்தக்க பங்கு வகிப்பதைக் காணலாம். இதேபோன்று நல்லூர் ஆலயத்தின் வருடாந்த உற்சவமும் யாழ்ப்பாண நகரின் சமய கலாச்சார பொருளாதார செயற்பாடுகளில் முனைப்பானதொரு இடத்தை வகிக்கக்கூடிய வழியை நாம் உருவாக்கலாம். இலங்கைச் சைவ மக்கள் மாத்திரமல்லாமல் சர்வதேச ரீதியாக வாழும் முருகனடியார்கள் இங்கு வருவதைத் தூண்டும் முறையில் செயற்பாடுகளை முன்னெடுக்கலாம்.

ஆலயச் சுற்றாடலின் இன்றைய பௌதீகநிலை மேலும் அபிவிருத்தி செய்யப்படும் போதுதான் உற்சவத்தின் சிறப்பும் ஆலயச் சூழலின் பண்பும் பெருமளவுக்கு பொலிவுபெற்று விளங்கும். நல்லூர்ச் சுற்றாடலின் பௌதீக அமைப்பில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமைந்துள்ள வீடுகள். கட்டிடங்கள் ஆகியன சைவ கலாசார விழுமியங்களையும் திராவிட கட்டிடக்கலையையும் பிரதிபலிப்பதாக அமைவது சிறந்தாகும். இன்று இப்பண்புகள் காணப்படினும் மென்மேலும் அபிவிருத்தி தேவைப்படுகின்றது.

நல்லூர் ஆலயச் சூழலின் பாதை வலைப்பின்னலை நோக்குமிடத்து, பாதைகள் போதியனவாக இல்லை. ஆலயத்தை மையமாகக் கொண்டு போக்குவரத்துப் பாதைகள் சுற்று வடிவிலோ, சதுர வடிவிலோ கதிர் வீசல் வடிவிலோ அமையவில்லை. பொருத்தமான போக்குவரத்து பாதையமைப்பு ஆலய செயற்பாட்டை இலகுவானதாக்கும். உதாரணமாக மதுரை மீனாட்சி அம்மன் கோவிலும் அதனைச் சூழவுள்ள வீதி அமைப்பும் சிறந்த நகர் திட்டமிடலைச் சித்திரிப்பதாக நகர திட்டமிடலாளர்கள் கருதுகின்றனர். இங்கு பாதைகள் ஆலயத்தை மையமாகக் கொண்டு அடுக்கடுக்காக அமைக்கப்பட்டிருப்பதால் மக்கள் இலகுவாக ஆலயம் சென்றடைய முடிவதுடன் நகரச் செயற்பாடுகளும் ஒழுங்காக இடம்பெற வழிவகுக்கின்றன. இதேபோன்று நல்லூர் ஆலயத்தைச் சுற்றியும் போக்குவரத்துப் பாதைகள் விருத்தியாக்கப்பட்டு இங்கு வரும் அடியார்கள் நடமாட்டத்தை நன்முறையில் ஒழுங்கமைக்கலாம். அண்மையில் சங்கிலியன் வீதிக்கும் பருத்தித்தறை வீதிக்கும் இடையில் அமைக்கப்பட்ட புதியபாதை இதற்கு உதவுவதாக அமைகிறது. போக்குவரத்தை மேலும் சீர்செய்ய பின்வரும் பாதைகள் அமைப்பதும், விருத்தி செய்யப்படுவதும் அவசியமாகின்றது.

1. கோயிலின் வடக்கு வீதியிலிருந்து சங்கிலியன் வீதி வரை ஒரு பாதை அமைய வேண்டும்.

2. அரசடிச் சந்திக்கும் கோயில் வீதிக்கும் இடையிலிருந்து ஓர் அகலமான பாதை மேற்கு நோக்கிச் சென்று அரசடி திருநெல்வேலிப்பாதையை அடையக் கூடிய வழியில் அமையவேண்டும்.

3. நல்லூர் தெற்கு வீதியிலிருந்து செட்டித்தெருவீதியை, அடையக்கூடிய ஒரு பாதை அமையவேண்டும்.

4. நல்லூர்க் கோயில் முகப்பிலும் கல்யாண மண்டபத்திற்கு அண்மையிலும் பருத்தித்துறை வீதியிலுள்ள 'ட' வளைவுகள் போக்குவரத்துக்கு இடைஞ்சலா கவும், விபத்துக்கள் ஏற்படக்கூடிய சாத்தியக் கூறுகளைக் கொண்டிருப்பதாலும் இவ்வளைவுகளின் தன்மை குறைக்கப்படல் வேண்டும். அல்லது மாற்றுப் பாதை கள் அமைத்து போக்குவரத்துக்கள் திசை திருப்பப்படல் வேண்டும்.

5. நல்லூர்க் கோயில் முகப்பிலிருந்து முத்திரைச் சந்தை முடக்குவரை பருத்தித்துறை வீதி அகலமாக்கப்பட்டு, பாதாசாரி நடைபாதை கொண்ட பெருஞ்சாலையாக மாற்றின் கோவிலின் முகப்பு பார்வை அழகாகக் காணப்படும். இப்பாதைகள் அமைக்கப்படும் இடத்து கோயிலை அடையும் வழிகளும் அதிகரிக்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆலய வீதி அடியார்களை உள்ளடக்கக் கூடியதாகவும், தேர், சப்பறம் போன்ற இரதங்கள் தடங்கலின்றி இலகுவாக ஓடக்கூடியதாகவும் அமைந்திருப்பது கட்டாய தேவையாகும். நல்லூர்க் கந்தசுவாமிக் கோயில் வீதிகள் ஓரளவுக்கு அகலமாக இருப்பினும் அதன் மேற்கு வீதி, குறிப்பாக பருத்தித்துறை வீதிக்கு வடக்காகவுள்ள வீதி, மிக ஒடுக்கமாக அமைந்திருப்பது சுவாமி வீதி வலம் வருவதற்கும் அடியார்களின் நடமாட்டத்திற்கும் இடைஞ்சலாக இருக்கிறது. இதனால் சனநெரிசல் ஏற்படும் நிலை தென்படுகிறது. ஆகவே இவ்வீதி, அகலமாக்கப்படல் வேண்டும்.

ஆலய உற்சவ காலங்களில் வர்த்தக, கலாசார கல்விக் கண்காட்சிச் செயற்பாடுகள் இங்கு இடம்பெறுவது வழக்கம். அடியார்களின் ஆலய வழிபாடு, ஆலயச் சூழலில் நடமாட்டம் போன்றவற்றுக்கு இடைஞ்சல் இல்லாத முறையில் மேற்குறித்த செயற்பாடுகளை வெவ்வேறு இடங்களில் அமைத்து, நன்குகந்த முறையில் நிலம் ஒதுக்கப்பட்டு பயன்படுத்தப்படும்போது இச்செயற்பாடுகள் கோவிலின் புனிதத் தன்மையைப் பாதிக்காது.

மேற்குறித்த கருத்துக்கள் கருத்திலெடுக்கப்பட்டு நல்லூர் புனித நகரமாக விருத்தியாக்கப்படும்போது, நல்லூர் ஆலயத்தின் சுற்றுப்பிரகாரச் செயற்பாடுகளும் அடியார்களின் வழிபாடும் ஒழுங்காகவும் சீராகவும் அமையமுடியுமெனக் கொள்ளலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்ப்பாணப் பிரதேசத்தில் முஸ்லிம்கள்

பேராசிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளை

யாழ்ப்பாணப் பிரதேசத்தில் வாழும் முஸ்லிம்கள் நீண்ட வரலாற்றைக் கொண்டவர்களாக இருக்கிறார்கள். யாழ்ப்பாணத் தமிழ் அரசர் காலத்திலிருந்து இப்பிரதேச வர்த்தக நடவடிக்கைகளில் இவர்கள் ஈடுபட்டிருப்பதனை அறியமுடிகின்றது. மேலும் இவர்கள் தமது மார்க்க கலாசாரத் தனித்துவங்களைக் பேணிக்கொண்டு, இப்பிரதேச மக்களுடன் பல்துறைகளில் இணைந்து செயலாற்றி வந்துள்ளார்கள். யாழ்ப்பாணப் பிரதேசத்தில் ஆரம்ப முஸ்லிம் குடியிருப்புக்கள் உசன், சாவகச்சேரி, மீசாலை, நயினாதீவு, நல்லூர் அலுப்பாந்தி போன்ற இடங்களில் இருந்ததாகக் கூறுவர். பின்னர் பல்வேறு காரணங்களால் இப்பகுதிகளிலிருந்த முஸ்லிம் குடியிருப்புக்கள் முக்கியம் இழந்து காலப்போக்கில் யாழ்ப்பாணம் நகர சோனகத்தெருவே பிரதான முஸ்லிம் குடியிருப்பாக மாறியது. யாழ்ப்பாணப் பிரதேசத்தில் பல இடங்களில் சோனக என்று தொடங்கும் பல குறிச்சிப்பெயர்கள் காணப்படுகின்றன. இவற்றுள் சில முஸ்லிம்களின் பழைய வரலாற்றுத் தொடர்புகளைப் பிரதிபலிக்கின்றன.

தற்பொழுது யாழ்ப்பாணப் பிரதேசத்தில் (யாழ்ப்பாணம், கிளிநொச்சி மாவட்டங்கள்) 15,000க்கு மேற்பட்ட முஸ்லிம்கள் இருக்கின்றனர். இப்பிரதேசத்தில் முஸ்லிம்களின் எண்ணிக்கை 1871-1940க்கு இடைப்பட்ட காலத்தில் 5,000க்குக் குறைவாகவும், 1940-1960க்கும் இடைப்பட்ட காலத்தில் 10,000-15,000க்கும் இடைப்பட்டதாகவும் இருந்தது.

யாழ்ப்பாணப் பிரதேசத்து முஸ்லிம் மக்களின் 1871-1981க்கும் இடைப்பட்ட கால குடிசனப் புள்ளிவிபரம் அட்டவணை 1இல் காட்டப்பட்டுள்ளது.

அட்டவணை 1

குடிசனக் கணிப்பு

| ஆண்டு | முஸ்லிம்களின் குடித்தொகை | மொத்தக் குடிசனக் கணிப்பு இடை அதிகரிப்பு விகிதத்தில் | மாவட்ட குடிசன தொகை அதிகரிப்பு வீதத்தில் |
|---|---|---|---|
| 1871 | 2456 | - | + 3.8 |
| 1881 | 2821 | + 14.9 | + 9.4 |
| 1891 | 2953 | + 4.7 | + 7.7 |
| 1901 | 3158 | + 6.9 | + 8.6 |
| 1911 | 3641 | + 15.3 | + 1.6 |
| 1921 | 3862 | + 6.1 | + 27.2 |
| 1946 | 5610 | + 45.5 | + 15.5 |
| 1953 | 6713 | + 19.9 | + 24.9 |
| 1963 | 8980 | + 33.8 | + 14.6 |
| 1971 | 15520(11000) | + 72.8(18.4) | |
| 1981 | 14169 | .09(28.8) | + 18.1 |

மூலம்: இலங்கை குடிசனக் கணிப்புகள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1871இலிருந்து ஒவ்வொரு குடிசனக் கணிப்பு இடைக்காலத்திலும் முஸ்லிம்களின் குடிசனத் தொகை அதிகரித்து வந்துள்ளது. 1946க்கு பின்னர் இவர்களது அதிகரிப்பு வீதம் உயர்வாக இருக்கிறது. முஸ்லிம் மக்களின் குடிசன வளர்ச்சி வீதப்போக்கு இம்மாவட்ட மக்களின் குடிசன வளர்ச்சி வீதப் போக்கிலும் சற்று உயர்வாக இருக்கின்றது. இதனை அட்டவணை 1ன் நிரல் 3னையும் 4னையும் ஒப்பிட்டு நோக்குகையில் காணமுடிகிறது. யாழ்ப்பாண மாவட்டத்தில் 1971ல் 15520 முஸ்லலிம்கள் இருந்தனரெனக் குடிசனப் புள்ளிவிபர அறிக்கை தெரிவிக்கின்றது. இவ்வறிக்கையை நுணுகி ஆராயும் பொழுது இவ்வாண்டுக்குரிய முஸ்லிம்கள் பற்றிய விபரம் பிழையாக இருக்கின்றதென கருத இடமுண்டு. 1963ல் 8980 பேராக இருந்த முஸ்லிம்களின் எண்ணிக்கை 1971-ல் 15520ஆக அதிகரித்து பின்னர் 1981-ல் 14169 பேராகக் குறைவடைந்துள்ளது. 1971-ல் இலங்கை முஸ்லிம்களின் எண்ணிக்கை 9787 பேராகவும் இந்திய முஸ்லிம்களின் எண்ணிக்கை 589 பேராகவும் இருந்தன. இவர்களுடன் ஏனைய முஸ்லிம்களின் குடிசன விபரங்களைச் சேர்க்குமிடத்து 1971-ல் யாழ்ப்பாண முஸ்லிம்களின் எண்ணிக்கை 11000வரை தான் வருகிறது. 1963-71 ஆண்டுகளுக்கு இடைப்பட்ட காலத்தில் ஏற்பட்ட 72.8 வீத அதிகரிப்பை நியாயப்படுத்தக்கூடிய சான்றுகள் இல்லை. இக்காலப்பகுதியில் குறிப்பிடத்தக்களவு முஸ்லிம் குடியுள் வரவோ அல்லது மதமாற்றமோ நிகழவில்லை. 1971ஆம் ஆண்டு மாவட்டக் குடிசன கணிப்பு விபரங்களை கிராம மாவட்டத்தில் ஆராய்ந்த பொழுது சில தவறுகள் இருப்பதனைக் காணக் கூடியதாக இருக்கின்றது. 1971-ல் 15520 முஸ்லிம்கள் இருந்தனரெனக் கொண்டாலும் 1981-ல் 14169 பேராகக் குறைவடையக் காரணங்கள் இருக்கவில்லை. ஆகவே 1971-ல் யாழ்ப்பாண மாவட்டத்தில் 11000 முஸ்லிம்கள் இருந்தனரெனக் கொள்வதே பொருத்தமாகும். அட்டவணை 1-ல் மாற்றத்திற்குள்ளான குடிசன விபரங்கள் அடைப்புக்குறிக்குள் காட்டப்பட்டுள்ளன.

1981-ல் யாழ்ப்பாண மாவட்டத்திலிருந்த 14169 முஸ்லிம்களுள் 12342 பேர் நகரப்புறங்களிலும் 1827 பேர் கிராம புறங்களிலும் வாழ்ந்தனர். நகர கிராம வீதங்கள் முறையே 87.1 ஆகவும் 22.9 ஆகவும் இருந்தன. யாழ்ப்பாண மாவட்ட நகரங்களில் வாழும் முஸ்லிம்களுள் 88.5 வீதத்தினர் யாழ்ப்பாண நகரத்திலும் மிகுதி 11.5 வீதத்தினர் ஏனைய பன்னிரண்டு நகரங்களிலும் காணப்பட்டனர். 1981-ல் யாழ்ப்பாண நகரத்துக்கு வெளியே முஸ்லிம்கள் சாவகச்சேரியில் 681 பேரும், பருத்தித்துறையில் 193 பேரும், நெல்லியடியில் 88 பேரும், சங்கானையில் 88 பேரும் இருந்தனர். ஏனைய குடாநாட்டு நகர்கள் ஒவ்வொன்றும் 50க்குக் குறைவான முஸ்லிம்களைக் கொண்டிருந்தன.

கிராமிய முஸ்லிம்கள் குறிப்பாக மண்கும்பான் வெள்ளைக்கடற்கரை பள்ளிவாசல் குடியிருப்பிலும் பூநகரியில் நாச்சிக்குடா, பள்ளிக்குடா கிராமங்களிலும் இருந்தனர். வெள்ளைக்கடற்கரையில் அமைந்துள்ள முஸ்லிம் கிராமம் அண்மைக்காலத்தில் துரிதமாக வளர்ச்சிபெற்றுவருகின்றது.

1981-ல் யாழ்ப்பாண நகரில் 10925 முஸ்லிம்கள் இருந்தனர். இத்தொகை நகர மொத்த குடிசனத்தொகையில் 9.24 வீதமாகும். நகரில் முஸ்லிம் தொகையில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

84.3 வீதத்தினர் சோனகதெரு குடியிருப்புப் பகுதியிலும், 8.2 வீதத்தினர் பசார் வட்டாரத்தை உள்ளடக்கிய பெரும்தெருப் பகுதியிலும் மிகுதி 3.8 வீதம் நகரின் பல பகுதிகளிலும் சிதறி வாழ்கின்றனர்.

நகர வட்டார அடிப்படையில் முஸ்லிம்களின் குடிசனத்தொகைச் சார்பு முக்கியத்துவத்தை நோக்கின், அது புதிய பள்ளிவாசல் வட்டாரத்தில் 06.8 வீதமாகவும், பழைய பள்ளிவாசல் வட்டாரத்தில் 71. வீதமாகவும் பசார் வட்டாரத்தில் 12.3 வீதமாகவும், நாவாந்துறை வட்டாரத்தில் 34.9 வீதமாகவும், கோட்டை வட்டாரத்தில் 7.1 வீதமாகவும் இருந்தது.

நகரில் சோனகதெருப் பகுதியில் வாழும் முஸ்லிம்கள் யாழ்ப்பாணப் பாரம்பரியத்தைக் கொண்டவர்களாக இருக்கின்றனர். பசார் பகுதியில் வாழும் முஸ்லிம்கள் கொழும்பு, வெளிமாவட்டத் தொடர்பு கொண்டவர்களாகவும், அண்மைக் காலங்களில் குடியேறியவர்களாகவும் காணப்படுகின்றனர். பிரதான வீதிப்பகுதி, தீவுப்பகுதி, பூநகரிப் பகுதிகளில் வாழும் முஸ்லிம்கள் தென்னிந்திய கீழக்கரை முஸ்லிம்களுடன் தொடர்பு பட்டவர்களாகக் காணப்படுகின்றனர். இஸ்லாமிய மார்க்கத்தின் ஓர் உபபிரிவைச் சார்ந்த தாவூதி போறாக்கள் இந்தியாவில் குஜராத் பகுதியில் இருந்து இங்கு வந்து வியாபார செய்பவர்களாக இருக்கிறார்கள். யாழ்ப்பாண நகரத்தில் ஏறக்குறைய 300 தாவூதி போறாக்கள் இருக்கின்றனர். இவர்களது சமய நடவடிக்கை ஆஸ்பத்திரி வீதியில் அமைந்திருக்கும் பள்ளிவாசல் பகுதியுடன் காணப்படுகின்றது.

யாழ்ப்பாணப் பிரதேசத்தில் வாழும் முஸ்லிம்களில் மிகப் பெரும்பான்மையினர் நகரப்பகுதிகளில் வாழ்வதால் இவர்கள் நகரச்சார்புத் தொழில்களையே செய்து வருகின்றனர். கிழக்கிலங்கை, மன்னார் முஸ்லிம்களைப் போன்று விவசாயம். மீன்பிடித் துறைகளில் ஈடுபடுவோர் மிகவும் அரிது. நாச்சிக்குடா, பள்ளிக்குடா, வெள்ளைக் கடற்கரை, பள்ளிவாசல் குடியிருப்பு ஆகிய இடங்களில் வாழும் முஸ்லிம்களில் ஒரு சிறு பகுதியினர் மீன்பிடியில் ஈடுபட்டுள்ளனர். யாழ்ப்பாண நகர முஸ்லிம்கள் குறிப்பாக வியாபாரத்திலும், சேவை கைத்தொழிலிலும் ஈடுபட்டுள்ளனர். இவர்கள் வியாபாரத்தில் பல்வேறு மட்டங்களில் காணப்படுகின்றனர். பெரிய, நடுத்தர, சிறிய, நடைபாதை வழியோடி வியாபாரிகளாகக் காணப்படுகின்றனர். குறித்த சில பொருட்களின் வர்த்தகத்தில் இவர்கள் முக்கியத்துவம் பெற்றுள்ளனர். நகை, இரும்பு, கண்ணாடி, மணிப்பொருட்கள், சாய்ப்புச் சாமான்கள், இறைச்சி ஆகிய பொருட்களின் வர்த்தகத்தில் பிரதான இடத்தைப் பெற்றுள்ளனர். நகர நடைபாதையில் புடவை, தைத்த ஆடைகள் விற்பனையில் முஸ்லிம்கள் குறிப்பாக வெளியூர் முஸ்லிம்கள் கூடுதலாக ஈடுபட்டிருப்பதைக் காணலாம். வழியோடி வியாபாரத்திலும், பழம் பொருட்கள் சேகரித்தலிலும் முஸ்லிம்கள் முக்கியமாகவுள்ளனர். வியாபாரத்துக்கு அடுத்து சேவைக் கைத்தொழிலில் கூடுதலாக ஈடுபட்டுள்ளார்கள். உடுபுடவை தைத்தல், மெத்தைசார் மறுசீரமைப்புத் தாழில் (Upholstery) தகர வேலைகள், தோல் வேலைகள், குடை திருத்தல், திறப்பு வெட்டுதல் போன்ற துறைகளில் முஸ்லிம்கள் கூடுதலாக ஈடுபட்டுள்ளார்கள். யாழ்ப்பாண நகர தையல் கடைகள் பல முஸ்லிம்களாலேயே நடாத்தப்படுகின்றன. ஏறக்குறைய நானூறுக்கு மேற்பட்ட தையல் தொழிலாளர்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவர்கள் மத்தியில் இருப்பதாகக் கணிக்கப்பட்டுள்ளது. தையல் தொழிலில் பெண்களும் பிள்ளைகளும் பங்குகொள்வது முக்கிய அம்சமாகும். யாழ்ப்பாண நகருக்குள் 15க்கு மேற்பட்ட மெத்தைசார் மறுசீரமைப்பு நிலையங்கள் இருக்கின்றன. இவையாவும் முஸ்லிம்களால் நடாத்தப்படுவதும் அங்கு வேலை செய்வோரில் பெரும் பான்மையினர் முஸ்லிம்களாக இருப்பதும் குறிப்பிடத்தக்கதாகும்.

யாழ்ப்பாண நகர முஸ்லிம்கள் மத்தியில் அரச தொழில் புரிவோர் மிகக் குறைவாக இருக்கின்றனர். அரச தொழில் புரிவோரில் பெரும்பான்மையினர் ஆசிரியர்களாக இருக்கின்றனர். மற்றும் தொழில்களில் சிறிதளவு எண்ணிக்கையினர் காணப்படுகின்றனர். ஆசிரியத் தொழிலில்தான் சிறிதளவு எண்ணிக்கையான முஸ்லிம் பெண்கள் வேலை செய்வதைக் காணமுடிகின்றது. வேறு தொழில்களில் முஸ்லிம் பெண்களின் பங்களிப்பு மிகக்குறைவென்றே கூறலாம்.

யாழ்ப்பாண முஸ்லிம் மக்கள் பல்வேறு சமூக பொருளாதாரப் பிரச்சினைகளை எதிர்நோக்குகின்றார்கள். இவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளுள் மிகமுக்கியமானது காணி, வீட்டுப்பிரச்சினைகளாகும். இவர்கள் வாழும் சோனகதெருப் பகுதி சன நெருக்கடி மிக்கதாக இருப்பதால் வாழ்இடங்கள் அமைப்பதற்குத் தேவையான காணியைப் பெறுவது மிகவும் கடினமாக இருக்கின்றது. பரம்பரை பரம்பரையாகக் காணி துண்டாடப்பட்டு இனித் துண்டாட முடியாத அளவிற்குச் சிறிதாகி விட்டது. அனேகமான வீட்டு காணித்துண்டுகள் ஒரு பரப்புக்கும் குறைவானதாக இருக்கின்றது. அரைக்கால் பரப்புத்துண்டுகளும் பெருமளவில் காணப்படுகின்றன. இதனால் நிலப் பெறுமானம் மிக உயர்வாக இருப்பதுடன் நிலமாற்றங்களின் வீதமும் மிக உயர்வாக இருக்கிறது. மேலும் குறிப்பிடத்தக்க மக்கள் குத்தகைக் காணிகளில் குடியிருக்கும் பண்பும் பரவலாகக் காணப்படுகின்றது. ஆகவே முஸ்லிம் மக்களின் காணி, வீட்டுப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு சில நடவடிக்கைகள் மேற்கொள்வது முக்கியமாகும். காலத்திற்குக் காலம் மேற்கொள்ளப்பட்ட பல நடவடிக்கைகள் அவ்வளவாக வெற்றி யளிக்கவில்லை. வட்டக்கச்சி அரச குடியேற்றத்திட்டம், பள்ளிக்குடா அரச குடியேற்றத் திட்டம், முள்ளியான் குடியேற்றத்திட்ட முயற்சிகள் அநேகமாகத் தோல்வியுற் றன. 1971-ல் ஏற்படுத்தப்பட்ட பொம்மைவெளி குடியேற்றத்திட்டம் ஓரளவு வெற்றிபெற்றுள்ளதெனலாம். பொம்மைவெளி யாழ்ப்பாண நகரத்துள் இருந்ததாலும் சோனகதெருவுக்கு அண்மித்து இருந்ததால் பொம்மைவெளியில் ஏற்படுத்தப்பட்ட முஸ்லிம் குடியேற்றத்திட்டத்தில் போய் குடியேறியோர் ஓரளவு நிலையாக வாழ்கிறார்கள். குடியேற்றம் அமைந்த இடம் தாழ்நிலமாக இருப்பதால் மழை காலத்தில் நீர் தேங்குகின்றது. இதனால் நவம்பர், டிசம்பர் மாதங்களிலிருந்து மார்ச் மாதம் வரை நீர் தேங்குவதுடன் நிலம் சதுப்புத்தன்மை அடைகின்றது. ஆனைக்கோட்டைப் பகுதியில் இருக்கும் மண்மேடுகளிலிருந்த மண்ணைக் கொண்டு வந்து பொம்மைவெளிப் பகுதியில் நிலமட்டத்தை உயர்த்த முடியும். அரசாங்கமும் குடியேற்றவாசிகளும் இணைந்து செயற்பட்டால் இப்பிரச்சினையைத் தீர்க்க முடியும். பொம்மைவெளி குடியேற்றத்திட்டத்தின் விஸ்தரிப்பின் மூலம்தான் யாழ்ப்பாண முஸ்லிம் மக்களின்- குறிப்பாக ஏழை மக்களின் வீடு இல்லா பிரச்சினையைத் தீர்க்க முடியும். இதற்கு பொம்மைவெளிச் சூழலின் பௌதிக பண்பாட்டுத் தன்மைகள் விருத்தியாக்கப்பட வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சோனகதெருப்பகுதியை நவீன முறையில் புணருத்தாரணம் செய்வதன் மூலம் அப்பகுதியை விருத்தி செய்யலாம். புதிய பாதைகள் நல்ல வடிகாலமைப்பு, பழைய கட்டடங்களுக்குப் பதிலாக புதிய கட்டடங்கள் அமைத்தல் மூலம் சோனகதெருவுக்குப் புதிய தோற்றம் கொடுப்பதன் வாயிலாக இப்பகுதியில் வாழும் முஸ்லிம் மக்களின் வாழ்க்கைத் தரத்தை, குறிப்பாக வீட்டுவசதிகளை விருத்தியாக்கலாம்.

யாழ்ப்பாண முஸ்லிம்கள் யாழ்ப்பாண நகரப் பகுதியில் கூடுதலாக இருந்தும், நகரில் பல கல்லூரிகள் இருந்தும், இவர்கள் கல்வித்துறையில் அதிகளவு முன்னேற்றம் காணாதிருப்பது கவலைக்குரிதொன்றாகும். முஸ்லிம்கள் நெருக்கம் மிக்க பகுதியில் வாழ்வதாலும், வியாபாரம் மூலம் கூடுதலாக உழைக்கலாம். சம்பாதிக்கலாம் என்ற எண்ணம் இவர்கள் மத்தியில் உயர்வாக இருப்பதாலும் கற்றவர்கள் தங்கள் தொழில்கள் மூலம் குறைவாக உழைக்கிறார்கள் என்ற கருத்தினாலும் முஸ்லிம் மாணவர்கள் தங்கள் கல்வியை இடைநிறுத்துகின்றனர். யாழ்ப்பாண நகர முஸ்லிம்கள் மத்தியில் கல்வியை இடைநிறுத்துவதற்கு வறுமை முக்கிய காரணம் இல்லையெனக் கூறப்படுகின்றது. இவர்கள் மத்தியில் மத்தியதர வகுப்பினர் சிறியவர்களாக இருப்பதும் முஸ்லிம்களில் பெறுமானங்கள் சமூகத்தில் பரவாததுமே கல்வி வளர்ச்சிக்குத் தடையாகவுள்ளன. அண்மைக் காலத்தில் கதீஜா மகளிர் மகா வித்தியாலயத்தின் மூலம் பெண்களின் கல்வித்துறையில் ஏற்பட்டு வரும் முன்னேற்றம் நல்லதொரு போக்காகும். இவர்களின் கல்வி முன்னேற்றத்திற்கான பல நடவடிக்கைகள் எடுக்கப்படல் வேண்டும். அத்துடன் ஒஸ்மானியாக் கல்லூரியின் முக்கிய பங்கினையும் உணர்ந்து அதனை முன்னேற்றுவதில் கருத்துச் செலுத்த வேண்டும்.

யாழ்ப்பாண நகர முஸ்லிம்களுக்குத் தற்பொழுது ஒரு கிராம சேவகர் பிரிவுதான் யாழ்ப்பாண உதவி அரசாங்க அதிபர் பிரிவில் இருக்கின்றது. இப்பிரிவில் மேலும் பல கிராம சேவகர் பிரிவுகள் அமைக்கப்பட வேண்டும். யாழ்ப்பாண உதவி அரசாங்க அதிபர் பிரிவில் புதிய பள்ளிவாசல், பழைய பள்ளிவாசல், பொம்மைவெளி என்று முஸ்லிம்களைப் பெரும்பான்மையாகக் கொண்ட மூன்று கிராம சேவகர் பிரிவுகள் அமைக்கப்படல் வேண்டும். அண்மைக் காலத்தில் அரசாங்க செயற்பாடுகள், நிதி ஒதுக்கீடுகள், வேலை வாய்ப்புகள் போன்றன கிராமசேவகர் பிரிவுகளின் அடிப்படையில் செய்யப்படுவதாலும் பல சந்தர்ப்பங்களில் கிராமசேவகர் பிரிவுகளின் குடிசனத்தொகை கவனத்துக்கு எடுக்கப்படாது கிராமசேவகர் பிரிவுகளின் எண்ணிக்கை முக்கியமாகக் கொள்ளப்படுவதாலும் கூடுதலான கிராமசேவகர் பிரிவுகளின் பிரிவுகள் அமைத்தல் நன்று. கடந்த வருடம் நாட்டின் எல்லா மாவட்டங்களிலும் கிராமசேவகர் பிரிவுகளின் எண்ணிக்கை 100வீதத்தால் அதிகரித்தால் அதிகரிக்க, யாழ்ப்பாண மாவட்டத்தில் கிராமசேவகர் பிரிவுகளின் எண்ணிக்கை 50வீதத்தால் மாத்திரமே அதிகரித்தது. யாழ்ப்பாண நகர முஸ்லிம் மக்களின் கல்வி, கலாசார நடவடிக்கைகளை மேம்படுத்துவதற்கு இஸ்லாமிய நாடுகள் கொடுக்கும் பண உதவியை அடிப்படையாகக் கொண்டு தொழில் நுட்பக் கல்வி நிலையங்கள் பயிற்சி நெறிகளை ஆரம்பிக்கலாம். குறிப்பாக உடுபுடவை தைத்தல், ஆடைவெட்டுதல் போன்ற துறைகளில் ஏற்கனவே இந்நகர முஸ்லிம் மக்கள் பயிற்சி பெற்றவர்களாக இருப்பதால், இத்துறையில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தரமான மேற்பயிற்சி கொடுப்பின் கூடிய அளவு முன்னேற்றத்தை ஏற்படுத்தலாம். முஸ்லிம் பெண்களின் முன்னேற்றத்திற்கான பல நடவடிக்கைகளை சர்வதேச இஸ்லாமிய சங்கத்தின் உதவியுடன் மேற்கொள்ள முடியும்.

யாழ்ப்பாண நகர முஸ்லிம்களின் சிறந்த எதிர்காலத்திற்குத் திட்டமிட்ட முறையில் அவர்கள் மத்தியில் காணப்படும் காணி, வீடடுப்பற்றாக்குறை, கல்வியில் பின்தங்கிய நிலை போன்றவற்றைத் தீர்க்கவேண்டும். மேலும் வர்த்தகத்துறையில் அதுவும் குறித்த ஒரு சில பகுதிகளில் தமது நடவடிக்கைகளை வைத்திராது நகர வர்த்தக, நிர்வாகசேவை (குறிப்பாக மருத்துவம், சட்டம், வங்கி போன்ற ) எல்லா துறைகளிலும் தமக்குரிய பங்களிப்பினைச்செய்ய முற்பட வேண்டும்.

முஸ்லிம்கள் யாழ்ப்பாணத்தில் சிறுதொகையினராக வாழ்ந்தலும், அவர்கள் மத்தியில் சரியான தலைமைத்துவம் உருவாகுவதன் மூலம், அவர்கள் தேசிய, பிரதேச, உள்ளூர் அரசியல் நடவடிக்கைகளில் இப்பகுதி மக்களுடன் இணைந்து செயலாற்றுவதன் மூலமும் யாழ்ப்பாணத்தின் அபிவிருத்தியை முன்னெடுத்துச் செல்லலாம் என்பதும் குறிப்பிடத்தக்கது. ◆

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வல்ல உலகை ஆளும் இசை

ஒரு நாட்டினது கலாச்சாரப் பண்பாட்டுக் கோலங்களுடன் இசைவுடையது இசையாகும். இசையானது நாதமாக, அகத்திலும், புறத்திலும் ஒலித்தவண்ணம் இருப்பதன் பொருட்டு ஆயகலைகளுள் இசை முதன்மைப்படுத்தப்படுகிறது. அகம் என்று சொல்லும் போது ஆன்மார்த்தமாகக் கருதப்படும். சமச்சீரான இதயச் செயற்பாடும், சீரான குருதிச்சுற்றோட்டமும் அநாகத நாதத்தினைத் தோற்றுவிக்கிறது. ஒவ்வொரு மனிதனிடத்தும் இந்த நாதம் ஒலித்தவண்ணமேயுள்ளது. ஆனால் பலர் உணர்வதில்லை. எந்த மனிதன் தனக்குள்ளே ஒலித்துக்கொண்டேயிருக்கும் அநாகத நாதப் பிரவாகத்தை உணர்கிறானோ அவன் ஞானியாகின்றான். வேறொரு நாமத்தில் கூறுவதாயின் 'நாதயோகி' என்று கூறலாம். புற உலகிலே பூமியின் சுழற்சியால் 'புவிநாதம்' உண்டாகின்றது. இந்த அகநாதமும், புவிநாதமும் யாரிடத்தில் ஈர்ப்புப் பெறுகின்றதோ அதுவே இசையாகின்றது. இதனாலன்றோ, மீன்களும் பாடுகின்றன. குயில்களும் பாடுகின்றன. வண்டுகளும் பாடுகின்றன. இயற்கையே மனிதனைப் பாடவைத்தது.

வண்டுகள் துளைத்த மூங்கில்கள் பாடும் போது மனிதனின் வாயானது மௌனித்திருக்க நியாயமில்லை. இயற்கையும் பாடிற்று. மனிதனும் பாடினான். இறைவன் வெளிப்பட்டான். படைத்தவனே மயங்கினான். உலகம் அசைந்தது. மழை மொழிந்தது. குளிர்ந்தது. உலகமே இரம்மியமானது. சூரியர், சந்திரர் கட்டுப்பாட்டினைக் கற்றுக் கொடுத்தனர். மனிதனும் கட்டுப்பாட்டுக்குள் வளர விரும்பினான். மனிதம் வளர்ந்தது. பண்பாடு வளர்ந்தது. ஆரோக்கியமாகச் சிந்தித்த மனிதன் அழகியல் அம்சங்களிடம் சரணடைந்தான். தெய்வீகமாகச் சிந்தித்த காரணத்தால் அழகியல் கலைகள் நீடித்த ஆயுள் பெற்றன. தெய்வீகக் கலைகளாகப் போற்றப்பட்ட இசை, நடனம், சித்திரம், ஓவியம், சிற்பம், கவிதை யாவும் மனிதனால் வரவேற்கப்பட்டன. இன்று இவையாவும் தனித்தனியாக மேம்பாடடைந்தும், வெல்லப்பட்டும் வருகின்றன.

இசையைப் பொறுத்த வகையில் பயன்படுத்தும் சாதனங்களும் சரி, சந்தர்ப்பங்களும் சரி, யாவுமே அதன் வளர்ச்சிக்கும், பயன்பாட்டிற்கும் சாதகமாகவே வழிவிடப்படுகின்றது. ஆதலால் உளவியல் ரீதியாகவும், உலகளாவிய ரீதியிலும் அதனை ஆராய்வது இன்பம் பயப்பதாகும். எடுத்துக்காட்டுக்கள் மூலமாகப் புரிந்திடுவது சாத்தியமானதால், அவற்றை இப்போது அணுகுவாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"நாடவல்ல பனுவல்மாலை ஞானசம்பந்தன் சொன்ன
பாடல்பத்தும் பாடவல்லார் பாவம் மறையுமே"

(திருநெடுங்களப் பதிகம்)

"தேற்றித் தென்ன னுடலுற்ற தீப்பிணியாயின தீரச்
சாற்றிய பாடல்கள் பத்தும் வல்லவர் நல்லவர் தாமே"

(திருநீற்றுப் பதிகம்)

"ஆனசொல் மாலையோதும் அடியார்கள் வானில்
அரசாள்வர் ஆணை நமதே"

(கோளறு திருப்பதிகம்)

"நாடுளார்க்கிறை ஞானசம்பந்தன் சொல்
நவின்றெழு பாமாலைப்
பாடலாயின பாடுமின் பக்தர்கள்
பரகதி பெறலாமே"

(திருக்கேதீஸ்வரப் பதிகம்)

"ஏத்தவல்லார் தமக் கிடுக்கணில்லையே"

(நமச்சிவாயத் திருப்பதிகம்)

"மாசில் வீணை...... போன்றதே ஈசனெந்தை இணையடி"

(திருநாவுக்கரசர்)

"வாழ்த்த வாயும் நினைக்க மடநெஞ்சும்
தாழ்த்தச் சென்னியும் தந்த தலைவன்"

(திருநாவுக்கரசர்)

"நெக்கு நெக்கு நினையவர் நெஞ்சுளே
புக்குநிற்கும் பொன்னார் சடைப் புண்ணியன்"

(திருநாவுக்கரசர்)

"ஓசை யொலி யெலா மானாய் நீயே"

(திருநாவுக்கரசர்)

"பாடுவார் பசி தீர்ப்பாய்
பரவுவார் பிணி களைவாய்"

(சுந்தரர்)

"ஏழிசையாய் இசைப்பயனாய்"

(சுந்தரர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

" நாளும் இன்னிசையால் தமிழ்பரப்பும்
ஞான சம்பந்தனுக் குலகவர் முன்
தாளம் ஈந்தவன் பாடலுக் கிரங்கும்
நன்மை யாளனை"

(சுந்தரர்)

"சொல்லிய பாட்டின் பொருளுணர்ந்து சொல்லுவார்"
பல்லோராலும் ஏத்தப்படுவார்கள்

(மணிவாசகர்)

"ஆதியும் அந்தமும் இல்லா அரும்பெருஞ்
சோதியை யாம்பாடக் கேட்டேயும் வாள்தடங்கண்
மாதே வளருதியோ? வன்செவியோ? ..."

(திருவெம்பாவை)

"அறவா நீ ஆடும் போது உன் அடியின் கீழ் இருந்து
பாட வேண்டும்"

(சேக்கிழார்)

கேட்கும் ஒலிகளெல்லாம் நந்தலாலா— நின்தன்
கீதம் இசைக்குதையே நந்தலாலா"

(பாரதியார்)

"ஓதாமல் ஒருநாளும் இருக்க வேண்டாம்"

(உலகநீதி)

"நல்லூரைக் கும்பிட்டு நீ பாடு அதனாலே
நாட்டிலுள்ள பிணிகள் ஓடும்"

(யோகர் சுவாமிகள்)

மேற்போந்த எடுத்துக்காட்டுக்கள் யாவும் வாலிதாம் இன்பம் தரும் மனிதப்பிறவிக்குரிய பேறுகளை, இசையின் மூலமாக எய்த முடியும் என்பதை ஒருகணம் சிந்திக்க வைக்கிறது. உளவியல் ரீதியாகவும், சமுதாயரீதியாகவும், மருத்துவ ரீதியாகவும், உலகளாவிய ரீதியாகவும் இசையானது தனது ஆதிக்கத்தினை வியாபகம் செய்து வருகின்றது. உளவியல் ரீதியாக நோக்குங்கால்,

இறந்தகாலப் பகுதிகளை (சென்றகாலம்) தலைவணங்கச் செய்கின்றது. நிகழ்காலப் பகுதிகளை வரவேற்கச் செய்கிறது. எதிர்காலப் பகுதிகளுக்கு அணிமிக்கச் செய்கின்றது. கலாச்சார விழுமியங்களுடன், பண்பாட்டம்சங்களுடன் இசையானது சுகித்திருப்பதனால், மேலைத்தேயத்தினைப் போலல்லாது கட்டுப்பாடான உளவியல் வெளிப்பாட்டுடன் கூடிய பயன்களை அள்ளித்தந்துள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(1) தனிப்பட்ட, குடும்ப, கிராமிய, சமுதாய ரீதியாக நல்லுறவுகளை ஸ்திரப்படுத்தி வருகின்றது.

(2) ஆரோக்கியமான மனோநிலைகளைப் பண்படுத்தி வருகின்றது.

(3) ஒழுக்க வயப்பட்ட சமுதாயத்தைத் தீர்க்கமாகக் கட்டியெழுப்பும் கடமையில் தலைமைதாங்கிய பேறுக்கு உரித்தாகி வருகின்றது.

(4) உடலியல் சார்ந்த, உலகியல் சார்ந்த, மருத்துவத் தேவைகளுக்கு வேண்டிய நிவாரணியாகத் திகழ்ந்து வருகின்றது.

(5) எதிரிகளைக் கூட நண்பர்களாக்கி உணரவைக்கின்றது.

(6) உளக்கவியினை உற்பத்தி செய்கின்ற இதயங்களை இனங்காணச் செய்கிறது.

(7) மனோதர்மக் கருவூலங்களை வெளிக்கொணர வழிபுரிகிறது.

சமுதாய ரீதியாக நோக்குங்கால், இசையாளன் ஒருவரை சமுதாயம் மிக விரைவாக அங்கீகரிக்கின்றது. திருஞானசம்பந்தர் மூன்று வயதிலே "தோடுடைய செவியன்" எனப் பாடியபோது அவர் தெய்வீக அந்தஸ்துக்குரியவரானார். அவரைச் சமுதாயமே வணங்கிற்று. இந்நிலை தொடர்வதனால்போலும், ஆலயங்களில் பண்ணோடு இயைந்த திருமுறைகளைப் பாடவல்ல பக்திமான்கள் சிறந்த ஒரு அடியாராக, மனிதராக அங்கீகரிக்கப்படுகின்றார். இஃதும் ஒரு இசைப்பயனைப் புரிந்திட ஆவனபுரிகிறது. அங்கீகரிக்கப்பட்ட மனிதனின் பின்னால் பக்திச் சமுதாயம் திரள்கின்றது. திரள்கின்ற சமுதாயம் நல்வழிகளைப் பின்பற்றுகின்றது. மேலும், இசையானது:-

(1) சமுதாயக் கட்டமைப்பின் ஆரோக்கியத்தைப் பேணுகின்றது.

(2) இன, மத, மொழி, பேதமற்ற ஒற்றுமைப்பண்பினை வளர்க்கின்றது. (ஐ.நா.சபையில் M.S. இன் இசையரங்கு)

(3) பாமரர் வரை ஊடுருவிப் பண்பாட்டுப் பக்குவத்தை உருவாக்குகிறது.

(4) முரட்டுத்தன மனங்களை நெகிழ வைக்கின்றது.

(5) பிரிந்த உள்ளங்களுக்கிடையில் தூது செல்கின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

06) பொதுப் பணித்துறையில் ஈடுபடும் அனைவருக்கும், மருத்துவ சிகிச்சை யளித்து வரும் வைத்தியர்களுக்கும், மருத்துவ சிகிச்சை பெருபவர்க ளுக்கும் ஆத்மதிருப்தியை வழங்கி வருகிறது.

07) மாசற்ற சூழலை, இயற்கையோடிசைந்து வழங்குகிறது.

08) பயிர்வளம், சோலைவளம், பால்வளம், கனிவளம், கருவளம், வைகறைவளம், பூமிவளம் ஆகிய நிறைவுத் தன்மையைச் சுரக்கிறது.

09) தோஷங்களுக்கு விதிவிலக்களிக்கின்றது. (குன்னக்குடியின் வயலின் இசைமூலம் நிருபிக்கப்படுகிறது.)

10) மொத்தத்தில் புனித பூமியை அடுத்த சந்ததிக்கு ஒப்படைக்கின்றது.

11) சமாதானத்தின் ஊடகமாகத் திகழ்கிறது.

12) பூமியின் சுழற்சிக்கு இதமளிக்கின்றது.

13) எல்லாவற்றையும் படைத்த இறைவனுக்கே சமர்ப்பணமாகிறது.

யாவற்றையும் நோக்குங்கல், இசையானது உலகினை ஆளுகின்ற வலிமையான ஒரு ஊடகம். அதனுள் அகப்பிடாதோர் யாருளர்? அதனால் தோல்விக்கு இடமேமில்லை.

**கே. எஸ். சிவஞானராஜா**
சங்கீத ஆசிரியர்
யாழ். ஸ்கந்தவரோதயக் கல்லூரி,
கந்தரோடை, சுன்னாகம்.
2001-01-07

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# யாழ் மாநகரசபை நிதிவள மீளாய்வு

# அறிக்கை

உள்ளூர் அதிகாரசபைகள் இடையறா வழியுரிமை, பொது இலச்சனையுடன் கூடிய கூட்டிணைந்த அமைப்புக்கள் ஆகும். இவற்றில் மனித, பௌதீக, நிதிவளங்களைக் கூடுதலாகக் கொண்டிருக்கும் சேவை நிறுவனங்கள் மாநகரசபைகளேயாகும்.

நகர அபிவிருத்தி கருதுகோள் அடிப்படையில் வரியிறுப்பாளர்களுக்கு உச்ச திருப்தியை அளிக்கத்தக்க வகையில் அவற்றின் வருமானங்களும் செலவுகளும் ஒருங்கிணைக்கப்பட வேண்டியவை ஆகும். இதனடிப்படையிலேயே ஆண்டுதோறும் உள்ளூர் அதிகாரசபைகள் தமக்கென வரவு செலவுத் திட்டமொன்றை ஆக்கி அனுமதித்து அதற்கமைவாக நிதி நடவடிக்கைகளை முன்னெடுத்து அபிவிருத்தித் திட்டங்களையும் செயற்படுத்தி வருகின்றன.

வீதிவரிகள், வாடகைகள், உரிமக்கட்டணங்கள் என ,வரிகள் அறவிடப்படுகின்றபோதும் வரிக் கட்டமைப்பு பலமாக இருக்கும்போதுதான் அவற்றால் வரியிறுப்பாளர்களுக்கு சிறப்பாக சேவையாற்றமுடியும் என்பது மறக்கமுடியாத உண்மையாகும்.

யாழ். மாநகரசபை கடந்த இரண்டு தசாப்த காலமாக பிரதேசங்களில் அடிக்கடி நடைபெற்று வந்த அனர்த்தங்களினால் கூடுதலான வள இழப்பீடுகளுக்குள்ளான பாதிப்புக்குள்ளாகி வந்தமையால் பல சிரமங்களை எதிர் கொள்ள வேண்டியிருந்த போதிலும் தொடர்ந்தியங்கும் கோட்பாட்டால (Going Concern) சிறிதும் வழுவாது முடிந்தளவு தன் பிரதேச மக்களுக்கு சேவையாற்றி வந்துள்ளது.

இச்சபை தனது வெள்ளிவிழாவை 1974இல் வெகு சிறப்பாகக் கொண்டாடியமையை இங்கு நினைவுபடுத்துவதுடன் அக்காலகட்டத்தில் மக்கள் பிரதிநிதித்துவம் இருந்த சபை இயங்கிவந்த காலகட்டமாகும். அதேபோல் பொன்விழா ஆண்டு கொண்டாடும் காலகட்டத்திலும் மக்கள் பிரதிநிதித்துவம் கிடைத்திருப்பது குறிப்பிடத்தக்கது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெள்ளிவிழா மலரில் அன்றைய மாநகரக் கணக்காளரினால் 'நிதி மீளாய்வு' என்ற தலைப்பில் ஆங்கிலத்தில் எழுதிய கட்டுரையில் தரப்பட்ட ஆரம்பகால நிதித் தகவல்கள் இங்கு எனது கட்டுரைக்கும் தேவையான தகவல்களை வழங்கியுள்ளன.

## வருமான செலவின போக்கு

| ஆண்டு | மீண்டுவரும் செலவு | மூலதனச்செலவு | மொத்த அரசிறை வருமானம் |
|---|---|---|---|
| 1950 | 728000.00 | 145000.00 | 841350.00 |
| 1955 | 1040500.00 | 75350.00 | 1155800.00 |
| 1960 | 1878900.00 | 368000.00 | 2009000.00 |
| 1965 | 2120060.00 | 114750.00 | 2699750.00 |
| 1970 | 3735300.00 | 341500.00 | 3904850.00 |
| 1983 | 47965250.00 | 3084000.00 | 47247500.00 |
| 1985 | 43174250.00 | 1492000.00 | 51816000.00 |
| 1990 | 53678000.00 | 9863000.00 | 59391000.00 |
| 1995 | 50874500.00 | 1776500.00 | 53588000.00 |
| 2000 | 70966500.00 | 17589200.00 | 98044000.00 |

மேலே தரப்பட்ட புள்ளிவிபரங்கள் 1950இல் இருந்து ஐந்து வருட இடைவெளியில் 2000ம் ஆண்டுவரை ஒப்பீட்டு ரீதியில் கொடுக்கப்பட்டுள்ளன. மொத்த அரசை வருமானங்களை 1950இல் இருந்து 2000ம் ஆண்டை நோக்கும் போது 117 தடவைகள் கூடியுள்ளதை காணக்கூடியதாகக் உள்ளது.

இதேபோல் மூலதனச் செலவுக்கு வருடாந்தம் உதவுதொகை கூடிக்கொண்டே போகின்றது என்பதை பின்வரும் புள்ளிவிபரம் எடுத்துக்காட்டுகின்றது.

## மூலதனச் செலவுக்கு உதவுதொகை

| ஆண்டு | மூலதனச் செலவுக்கு உதவுதொகை |
|---|---|
| 1950 | 1669140.00 |
| 1955 | 2263670.00 |
| 1960 | 4264000.00 |
| 1965 | 7274000.00 |
| 1970 | 9510000.00 |
| 1975 | 10521000.00 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | |
|---|---|
| 1980 | 11630000.00 |
| 1985 | 13030300.00 |
| 1990 | 15881050.00 |
| 1995 | 19047400.00 |
| 2000 | 37289200.00 |

## திரண்டநிதியின் போக்கு

| ஆண்டு | மேலதிகம் | பற்றாக்குறை |
|---|---|---|
| 1950 | - | 31650.00 |
| 1955 | 39950.00 | - |
| 1960 | - | 237900.00 |
| 1965 | 464940.00 | - |
| 1970 | - | 171950.00 |
| 1983 | - | 3801750.00 |
| 1985 | 7149750.00 | - |
| 1990 | - | 4150000.00 |
| 1995 | 937000.00 | - |
| 2000 | 9488300.00 | - |

மாநகர சபையின் திரண்ட நிதியை நோக்கும் போது 1983, 1990 ஆகிய ஆண்டுகளைவிட ஏனைய ஆண்டுகளில் மொத்தச் செலவினத்திலும் பார்க்க கூடிய வருமானம் அறவிடப்பட்டுள்ளதை அவதானிக்கக் கூடியதாக உள்ளது.தற்போது நாட்டில் ஏற்பட்டுள்ள சமாதானம் மேலும் மேலும் எமது சோலைவரி நிலுவை, வாடகை நிலுவை, ஏனைய அரசிறை நிலுவைகளை அறவிடுவதோடு சபையின் வருமானங்களை மீளாய்வு செய்து அறவிடும் போது எமது மாநகரசபை புத்தொளி பெற்று புதிய நகரமாக மிளிர வாய்ப்புண்டு. அத்அத்தோடு சபை வருமானம் தவிர்ந்த ஏனைய அரசசார்பற்ற நிறுவனங்களான யுனிசெப் (UNICEF)இ ஜிரிசற் (GTZ)இ யுஎன்எவ்பிஏடி (UNRBA) போன்ற நிறுவனங்களும் இம்முறை கூடிய நிதியை உதவமுன்வந்துள்ளன. இந்தப் பொன்விழா ஆண்டோடு மாநகர சபை புதுப் பொலிவுறும்.

பொன்விழா மலரில் நிதிவள மீளாய்வு தவல்களை அளிப்பதிலும் இக்கால கட்டத்தில் இச்சபையில் கடமையாற்றும் பாக்கியம் எனக்கு அளிக்கபட்டதற்கு எல்லாம்வல்ல நல்லூரானை நன்றியுடன் நினைவு கூர்ந்து இப் பொன்விழா எல்லாவகையிலும் பொலிவுடன் விளங்க வாழ்த்துகிறேன்.

நன்றி. **வே. ம. சுப்பிரமணியம்,**

கணக்காளர்,

யாழ். மாநகரசபை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




யாழ் மாநகரசபை நிதியிலிருந்து கட்டப்பட்ட அரியாலை காந்தி சனசமூக நிலையம்



புதுப்பொலிவுடன் அரியாலை மகப்பேற்று நிலையமும் சித்த வைத்தியசாலையும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மன்றம் அன்றும் இன்றும்

1949ம் ஆண்டு ஜனவரி மாதம் மாநகரசபை அந்தஸ்தினைப் பெற்று மக்களால் தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதிகளைக் கொண்ட சபை உருவாக்கப்பட்டது. அச்சபையின் முதலாவது முதல்வராக சாம். ஏ. சபாபதி அவர்கள் பதவியேற்று 15 அங்கத்தவர்களுடன் சபை இயங்கியது. 15ஆக இருந்த வட்டாரங்கள் 17 வட்டாரங்களாக பிரிக்கப்பட்டு 7¾ சதுரமைல்கள் கொண்ட நகரம் 1968இல் மேலும் ¾ சதுரமைல் விஸ்தீரணம் ஆக்கப்பட்டு,8½ சதுரமைல்களாக்கப்பட்டு 23 வட்டாரங்களாக பிரிக்கப்பட்டுள்ளது. 1949 - 1974ற்குட்பட்ட காலப்பகுதிகளிலேயே நகரம் பல முன்னேற்றங்களைக் கண்டிருந்தது. இருந்தும் நாட்டில் ஏற்பட்ட அனர்த்தங்களால் பல இழப்புக்களையும் சந்தித்துள்ளது.

1977இல் ஏற்பட்ட வன்முறைச் சம்பவங்களுக்கு தொடக்கவிழா நடாத்தியது போல், நகரின் மத்தியில் மிகவும் கம்பீரமாகவும், கட்டிடக்கலைக்கு சான்று பகிர்ந்தும் அமைந்திருந்த சந்தைக்கட்டிடம் தீயிட்டுக் கொழுத்தப்பட்டது. இனவாதப்பசிக்கு மாநகரசபையின் எத்தனையோ சொத்துக்கள், ஆவணங்கள் பலியாகியது. கலைவடிவமாக அமைக்கப்பட்ட கல்விப் பொக்கிஷமான நூல் நிலையம் 1981இல் திட்டமிட்டு தீயிடப்பட்டது. 1988 - 1989 காலப்பகுதியில் மாநகராட்சி மன்ற கட்டிடம் முற்றாக அழிக்கப்பட்டது. திறந்த வெளியரங்கு, மணிக்கூட்டுக்கோபுரம் என்பன சேதமடைந்தன.

மக்கள் பிரதிநிதிகளால் இயங்கி வந்த மாநகராட்சி மன்றம் 1983இன் பிற்பாடு விஷேட ஆணையாளர்களினால் நிர்வகிக்கப்பட்டு வந்தது. சிவில் நிர்வாகம் சீர்குலைந்துள்ள வேளையிலே பல இடர்பாடுகளுக்கு மத்தியில் தனது சேவைகளை குறையின்றி வழங்கிவந்தமை உத்தியோகத்தர்களது திறமையென்றால் மிகையாகாது.

1990 - 1995 வரையான காலப்பகுதியில் சுகாதாரசேவை குறிப்பாக சுகாதார வைத்திய சேவை வைத்திய கலாநிதி தெய்வேந்திரன் அவர்களினால் வெளிநாட்டு உதவி வழங்கும் நிறுவனங்களின் பங்களிப்போடு மக்களுக்கு வழங்கப்பட்டமையும், நாம் மறந்துவிட முடியாத ஒரு விடயம்.

1998இல் மக்களால் தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதிகளைக் கொண்ட சபையானது மீண்டும் செயற்படத் தொடங்கியது. கருத்துவேறுபாடுகள், கொள்கைவேறுபாடுகள் இருந்தாலும் சபையில் அங்கம்வகித்த நான்கு கட்சிகளைச் சார்ந்த உறுப்பினர்களும் ஏகமனதாக செயற்பட்டனர் என்பதற்கு தீர்மானங்கள் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டு வந்தமை சான்றாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துரதிஷ்டவசமாக நிர்வாகிகலுக்கிடையே எழுந்த முரண்பாடுகள் காரணமாக பலவேலைத்திட்டங்கள் முன்னெடுத்து செல்லப்படுவதில் தடைகளும், தாமதங்களும் ஏற்பட்டது. நிதியுதவிகள் ஏதும் இல்லாது வரிப்பணம் வாடகைப்பணம் மூலம் பெறப்படும் நிதியில் மட்டும் வேலைத்திட்டங்களை முன்னெடுக்கமுடியாத நிலை தோன்றியது.

அரசியல் சதுரங்கத்தில் பார்வை மாநகரசபையும் விட்டு வைக்கவில்லை அரசினால் ஒதுக்கப்பட்டு வழங்கப்படவேண்டிய நிதிகள் திட்டமிட்டு தமிழ் அரசியல் வாதிகளாலேயே தடுக்கப்பட்டது, வேதனைக்கும், வெட்கத்திற்குமுரிய விடயம். மாநகராட்சி மன்றத்தின் உடமைகள், ஆவணங்கள் யுத்தகாலத்தின் போது அழிந்து போயும் காணாமல் போயும் அபகரிக்கப்பட்டும் உள்ள உண்மைகள் யாருக்கும் தெரியாமல் உள்ளது. ஆதலால்தான் சபை பற்றி வீண்விமர்சனங்களும், உண்மைக்குப் புறம்பான விடயங்களும், விகடகவிகளாலும், உண்மை நிலை தெரியாத சில வாசகர்களாலும் பத்திரிகை மூலம் வெளிவந்து கொண்டிருக்கின்றன. மாநகராட்சி மன்றத்திற்கு வேண்டிய வசதிகள், உதவிகள் வழங்காது புறக்கணிக்கப்பட்டு வந்ததென்பதே உண்மையான விடயம்.

இனிவரும் காலங்களிலாவது நகரத்தின் முன்னேற்றத்திற்கும், நிர்வாக வளர்ச்சிக்கும், எந்தவொரு அரசியல் தலையீடும் தடையாக இல்லாது நன்நோக்கோடு செயற்பட்டு நமது நகர முன்னேற்றத்திற்காக வேறுபாடுகள் இன்றி உழைப்போமாக.

நன்றி.

மு. தவநாதன்
கௌரவ உறுப்பினர்,
மாநகராட்சி மன்றம்,

யாழ்ப்பாணம்,
04-04-2002.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எழில் மிகுந்த யாழ்நகர்

வி. கந்தவனம்.

எழில் மிகுந்த யாழ் நகர்
எங்கள் ஈழத் தமிழ்நகர்
பொழியும் வையப் புகழிலே
பொழியும் தேவர் திருநகர்!

உயர்ந்த பண்பு உயிரென
உற்ற தமிழ்தன் மூச்சென
இயைந்த கலைகள் உடலென
இலங்கு மழகு யாழ்நகர்!

சான்ற அன்பு பார்வையாய்
சமய நெறிகள் நடையதாய்
ஆன்ற மானம் உடையதாய்
அடக்கம் அறிவு படையதாய்

மன்னர் மன்னன் செல்வியாய்
வன்னத் தேரில் வருவதோர்
கன்னியான யாழ் நகர்
கண்ணைப் பறிக்கும் அழகதோ!

கோயில் உள்ளப் பான்மையை
கோட்டை உறுதி மேன்மையை
ஆய கல்விக் கூடங்கள்
ஆழக் கல்வி காட்டுமே!

நேரம் வீணிற் போவதை
நின்று காட்டும் கோபுரம்
ஊருக் குற்ற தோண்டினை
உணர்த்தும் நகரச் செயலகம்

உலக ஞான ஒளியினை
ஊட்டும் ஒப்பில் நூலகம்
கலையரங்க மிவற்றினால்
கவர்ச்சி மிக்க யாழ் நகர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குடை பிடிக்கும் மரங்களும்
கொடிகள் ஆல வட்டங்கள்
பிடிக்கும் கோபு ரங்களும்
பிறங்கி நீண்டு நிற்கவும்

வண்ண மாட மனையெலாம்
மலர்கள் தூவி யார்க்கவும்
பண்ணைத் தென்றல் சாமரை
பக்கம் நின்று வீசவும்

தென்னை பனைகள் சோலைகள்
திரிந்து சேர்த்த தேன்வகை
பன்னி ராக வண்டினம்
பறந்து பாடிப் பெய்யவும்

ஓதை ஒலிகள் ஓங்கவும்
தீதில் மக்கள் தேங்கவும்
பாதை யாம்பட் டாடையில்
பவனி கொள்ளும் யாழ்நகர்

ஆறில் லாத ஊருக்கு
அழகு பாழென் றான்றவர்
கூறும் கூற்றுப் பொய்யெனக்
கொழிக்கு மழகு யாழ்நகர்

**மீள்பிரசுரம் 1970 இற்கு முன்னர் உள்ள நிலை**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மாண்புமிகு நகரபிதாவும், கௌரவ உறுப்பினர்களும்.

### *தமிழர் விடுதலைக்கூட்டணி* (TULF)

01) மாண்புமிகு நகரபிதா செல்லன் கந்தையன்
02) கௌரவ சின்னத்தம்பி இரத்தினசபாபதி
03) கௌரவ செல்லையா விஜயரட்ணம்
04) கௌரவ தங்கராஜா முகுந்தன்
05) கௌரவ சண்முகரத்தினம் அரவிந்தன்
06) கௌரவ கதிரேசு பரராஜாசிங்கம்
07) கௌரவ மகாதேவா கருணாநிதி
08) கௌரவ சந்தியோ மார்சலின்

### *ஜனநாயகமக்கள் விடுதலை முன்னணி* (PLOTE)

01) கௌரவ முத்துக்குமாரு தவநாதன்
02) கௌரவ சபாபதிப்பிள்ளை ஜெயச்சந்திரன்
03) கௌரவ கந்தசாமி விக்னேஸ்வரன்
04) கௌரவ குமாரவேலு சுதாகரன்
05) கௌரவ கந்தசாமி கருணானந்தன்
06) கௌரவ ஜெனாலாப்தீன் முகமட் பசீர்

### *ஈழமக்கள் ஜனநாயகக்கட்சி* (EPDP)

01) கௌரவ மோசஸ் எவேட்ஸ்
02) கௌரவ துரைராஜா இளங்கோ
03) கௌரவ மாணிக்கம் கனகரத்தினம்
04) கௌரவ கிங்ஸ்லி கணேசன்
05) கௌரவ கணபதிப்பிள்ளைஐயா துரைரத்தினம்
06) கௌரவ மைக்கேல் ஜெசுதாசன்

### *ஈழமக்கள் புரட்சிகர மக்கள் முன்னணி* (EPRLF)

01) கௌரவ தம்பிஐயா சுபத்திரன்
02) கௌரவ மனுவல் மங்களநேசன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## யாழ். மாநகரசபை

இந்து விடுதிக் குண்டுவெடிப்பில் 11-09-1998 அன்று படுகொலை செய்யப்பட்டவர்கள்



மா. ஈஸ்வரம் - W. E



சு. பத்மநாதன் A.O
(நிர்வாக உத்தியோகத்தர்)



பொ. பத்மராஜா

திருமதி மல்லிகா ராஜரட்ணம்

11-09-1998

பொன்விழா நேரத்தில் இவர்களை நினைவு கூருகின்றோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ். நகரம் இனிமையின் சிகரம்

பாணம் நல்ல பாணமாம் - யாழ்
பாணம் நல்ல பாணமாம்
ஏழிசை வல்லோன் யாழிசைப் பாணம்
ஏற்ற பரிசாம் யாழ்நகரம்

சங்கிலி மன்னன் வெற்றி கண்ட
சரித்திரப் புகழ் பெறும் நகரமாம்
சங்கத் தமிழர்கள் சக்கர வர்த்திகள்
சாதனைகளுடன் ஆண்ட தொல் நகரமாம்

யாதி, மத வேற்றுமை யற்று
ஞாலம் காக்கும் சேவைகள் புரியும்
ஈழத்தமிழரின் இணையற்றமா நகரமாம்
பழமை வாய்ந்த இனிமையின் சிகரமாம்

வளங்கள், நலன்களும், திறன்களும் இணைந்து
வாழ்வின் நெறி முறை வளர்க்கும் மன்றமாம்
உயிராய் தமிழைப் போற்றும் யாழ்நகராம்
உயர் கலைகள் நிறைந்த தேன் நகராம்.

**நன்றி.**

- ஆக்கம் -

**ஜோர்ச் ஜெஸ்ரின்**
கொழும்புத்துறை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொலிவிழந்த பட்டினம்

'நாமிருக்கும் நாடு நமதென்பறிந்தோம் - இது
நமக்கே உரிமையாம் என்பதறிந்தோம்'

என்பது வரகவி பாரதியின் உணர்வலைகள்.

யாழ். நகர் தமிழர்தம் வாழிடம், ஈழத்து முக்கிய பட்டினங்களில் ஒன்று. உலக்கை தேய்ந்து உளிப்பிடியான கதைதான் எங்கள் பட்டினத்தைப் பொறுத்து அமைந்துவிட்டது.

வளர்ச்சிப்படிகளில் கால்பதிக்க வேண்டிய நகரம் பொலிவிழந்து தரும் காட்சி வேதனைக்குரியது. சுதந்திர உணர்வினை நசுக்க வந்த பேரினவாதிகளால் தன்னிலை இழந்து தன்நாமம் கெட்ட கதியாகிவிட்டது.

மாநகரசபைக் கட்டிடம் இருந்த இடம் தெரியாது சிதைந்து ஒழிந்தது. அதனை அண்டிய எழில்மிகு சுப்பிரமணியம் பூங்கா அழிந்து போனது. அண்மித்தாக இருந்த நூலகம் எரியூட்டப்பட்டது. இவ்வாறு படிப்படியாக விழுந்த இதய இடிகளால் நகரம் வளர முடியவில்லை. இருந்த நிலையைத்தானும் காப்பாற்றிக்கொள்ள முடியவில்லை.

ஒரு நகரத்தின் வளர்ச்சிப்படிக்கு ஆக்கபூர்வமான திட்டமிடல் அவசியமாகின்றது. சேவைக்கென்றே தம்மை முழுமனதாக அர்ப்பணித்துக் கொண்டு யாவரும் கேளீர் என்ற தொன்மத் தமிழின் சித்தாந்தத்தைச் சிரமேற்கொள்ள வேண்டும்.

தலைசிறந்த கல்விக்கூடங்களை உள்ளடக்கி உள்ளது நகரம். அங்கு பயிலும் மாணவச் செல்வங்கள் பல்வேறு பயிற்சிகளைப் பெறுவதற்கு பொது விளையாட்டரங்கு பேணப்பட வேண்டும். சுதந்திரமாக அதனைப் பயன்படுத்தும் உரிமையும் உடையதாக வேண்டும்.

கல்வி வளம் பெருக தமிழனின் இதயமாகவிருந்த நூலகம் சாம்பரானது துரதிர்ஷ்டமே. தென்கிழக்காசியாவில் சிறந்த நூலகம் எனப் போற்றப்பட்ட நிலையம் பல்வேறு வகைப்பட்ட அறிவுக்களஞ்சியங்களை இழந்து சலித்தது. அதன் தேவையும், முக்கியத்துவமும் கருத்திருத்தி முனைப்போடு புனர்ஜென்மம் எடுக்கப் பாடுபட வேண்டும். தொலைநோக்கோடு பல்வகைப்பட்ட நிலையங்களையும் அமைக்க ஒரே குரலில் செயற்பட வேண்டிய அவசியம் ஏற்படுகின்றது.

கணனி யுகத்தில் வாழும் நாம் காட்டாற்று செல்லல் போல் காலத்தை வீணடிக்கக்கூடாது. விரைந்து வளர வேண்டிய கடப்பாடும் கடின உழைப்பும் தேவைப்படும் காலமிது.

தகவல் சேவையின் திருவிடமாக அமைந்த அஞ்சலகம் அழிந்து ஒழிந்தது. வானுற உயர்ந்த ஒரே ஒரு கட்டிடமான வீரசிங்கம் மண்டபமும் சிதைவுற்று, இன்று திருத்தப்பட்ட நிலையில் இருப்பது சற்று ஆறுதலளிப்பதாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வீதிகள் குன்றும் குழியுமாக இருப்பதைப் போக்க கரிசனைகொள்ள வேண்டும். போக்குவரத்தின் சீராக்கம், அவை வகைப்படுத்தப்பட்ட நிலையங்களாக்கல் என்பன நகரின் வனப்பை மேலும் மெருகூட்டும்.

பரந்து பச்சையாகக் கிடக்கும் முற்றவெளி பயன்பாட்டில் உச்சநிலைக்கு தீர்க்கமான ஆலோசனைப் பேறுகளோடு உருவாக்கம் பெறவேண்டும்.

கலைவளம் மிக்க மக்களின் தலைநகரில் கலையரங்குகள் சீரிய வசதிகளோடு செப்பனிடப்பட வேண்டும். மாநகரசபையால் நிர்வகிக்கப்படும் கல்யாண மண்டபம் சுயமாகவும் சுதந்திரமாகவும் இயக்கம் பெற முயற்சிகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

வளர்ந்த நாடுகளில் அமைந்துள்ள அங்காடிகள் போல் யாழ்நகரில் அங்காடிகள் பொருத்தமான இடங்களில் அமைய வேண்டும். ஒட்டுமொத்தமாக நகரின் பொலிவிற்கு திட்டமிடல் அவசியமாகின்றது. தொலைநோக்குச் சிந்தனையோடு. வரலாற்றுப் பின்னணிகள் பேணப்படுவதோடு மக்கள் வசதிகள் மதிக்கப்பட்டு பொலிவுபெற வேண்டும்.

சங்கிலியன் தோப்பிற்கு தலைமைச் செயலகம் நகர்ந்தபோது அதற்கு அண்மையில் அழகுற வடிவமைக்கப்பட்ட கிட்டுபூங்கா பேணிப்பாதுகாக்கப்பட வில்லை. அதன் பராமரிப்பும், புனரமைப்பும் இன்றியமையாதது. சிறுவர்க்கும் பெரியோர்க்கும் ஆறுதலளிக்கும் இடமாக அமையும்.

மத்திய பேருந்து நிலையத்திலிருந்து தலைமைச் செயலகத்திற்கு போக்குவரத்து வாய்ப்பு தனித்துவமாக இயங்க வைப்பதும் அவசியமானதொன்றே. இது மாநகரசபையின் நிர்வாகத்தின் கீழ் நடைபெறுவதுகூட வரவேற்கக்கூடியதாகும்.

தென்னிலங்கைப் பட்டினங்கள் போல் சகல வளப்பொலிவுடனும் மீண்டும் கட்டியெழுப்பப்படவேண்டிய அவசியம் ஏற்பட்டிருக்கின்றது. மாநகரசபைக்கு நாற்றிசையும் வரவேற்பு வளைவுகள் அமைந்தாற்கூட தமிழர்தம் கலையுணர்வு பளிச்சிடுமன்றோ! ஒன்றுபட்டு நன்று பல செய்ய, சொல்லளவில் அல்லாது செயலளவில் செயற்படுவோம். சொற்களிலும் செயல்கள் உரத்த குரலிற் பேசுமல்லவா?

நன்றி.

**திரு. கோ. சி. வேலாயுதம்** (SLES)
இளைப்பாறிய முன்னாள் கல்விப் பணிப்பாளர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இந்து விடுதி தகர்க்கப்பட்ட நிலையில்




புனருத்தாரணம் செய்யப்பட்ட இந்து விடுதி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுப்பவைசர் சுந்தரம்பிள்ளை

அன்று ஞாயிற்றுக்கிழமை, காலை 5.30 மணிக்கு எழும்பிய சுந்தரம்பிள்ளை பம்பரமாக நின்று வேலைக்குச் செல்ல ஆயத்தமானார். மனைவி இராசம்மா "இந்த மனிசனுக்கு சனி, ஞாயிறு என்று இருக்கோ மாதம் முப்பத்தொரு நாளும் வேலை. அதுவும் காலை 5.30க்குப் புறப்பட்டால் மாலை 6.00 மணிக்கு வீடு வந்து சேருகின்றார். எல்லாருக்கும் எட்டு மணித்தியால வேலை, இவருக்கு 12 மணித்தியாலம் வேலையாம். ஓவரைம் ஏதென் தருவினமோ என்று கேட்டால், மாதம் 20 மணித்தியாலம் தான் என்று சொல்லுகிறார். "சுப்பவைசர் சுந்தரம்பிள்ளைக்கு இராசம்மாவின் நாளாந்த சுப்ரபாதம் காதில் விழுகின்றது. இவளோடு கதைத்தால் வீண்சண்டை என நினைத்த சுந்தரம்பிள்ளை வேலைக்குச் செல்வதற்கு சைக்கிளை எடுக்கின்றார். சைக்கிள் சத்தம் கேட்ட இராசம்மா தேநீரோடு ஓடிவந்து 'இதைக் குடிச்சுப்போட்டு போங்கோ' என்று குடுக்க வாங்கிப் பருகிவிட்டு சைக்கிளில் புறப்பட்டார் சுந்தரம்பிள்ளை.

சைக்கிள் ஓடிக்கொண்டிருக்க அவர் மனம் மட்டும் சிந்திக்கின்றது. இண்டைக்கு ஆறு மணி சிப்ற் மாறேக்கை யாரேன் வராமல் விடுவினமோ தெரியாது. பம் ஓடேல்லை எண்டால் அதுவும் நான்தான் பதில் சொல்ல வேண்டும். எஞ்சினுக்கு ஓயில் பார்க்க வேண்டும். பாத்தாங்களோ தெரியாது. பம்பர்மார் தான் பார்க்க வேண்டும். அவங்கள் சாட்டுப்போக்கு சொல்வாங்கள் என்று நினைத்துக்கொண்டிருந்த சுந்தரம்பிள்ளையை ஆமிக்காரன், 'ஐயா எங்கை போறியள்' என்ற கேள்வி சுயநினைவிற்குக் கொண்டு வந்தது. 'இந்தாருங்கோ ஐ.சி.' வாங்கிப் பார்த்த ஆமி தலையாட்ட மீண்டும் சைக்கிளை மிதிக்க ஆரம்பித்தார் சுப்பவைசர் சுந்திரம்பிள்ளை. சைக்கிள் சில்லு இடிக்குது என்று இறங்கிப் பார்த்தார். சில்லு காத்துப் போயிருந்தது. உருட்டிக்கொண்டு சென்று ஒரு சயிக்கிள் கடையை தேடிப்பிடித்து ஒட்டி முடிய காலை 7.00 மணி ஆகிவிட்டது. மீண்டும் சயிக்கிளை மிதிக்க ஆரம்பித்தார். அவரின் சிந்தனை மீண்டும் ஆரம்பித்தது. இண்டைக்கு எஞ்சினியர் பம் நிலையத்திற்கு வாறன் எண்டு சொன்னவர், வந்தாரோ தெரியாது. வந்தாலும் சைக்கிள் காத்துப்போட்டுது என்று சொன்னால் இவர் இப்படித்தான் ஒவ்வொருநாளும் பிந்தி வாறார் போலைகிடக்கு. இண்டைக்கு இவர் எனக்கு வண்டில் விடுகிறார் என நினைப்பார் என்று நினைத்தபடி திருநெல்வேலி பம் நிலையத்தினுள் சென்று சைக்கிளால் இறங்கிய சுந்தரம்பிள்ளைக்கு தூக்கிவாரிப் போட்டது போல் இருந்தது எஞ்சினியரின் "குட்மோனிங்" என்ற சொல். பதிலுக்கு "குட்மோனிங்" சொல்லிவிட்டு உள்ளே சென்றார். ஏன் இவ்வளவு லேற் என்ற கேள்விக்கு மெல்லச் சிரித்தார். இவருக்கு சொன்னாலும் விளங்காது, தேவையில்லாமல் விளக்கம் குடுக்கப் போய் மாட்டிக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொள்ளலாம், இருந்துவிட்டேன். இண்டைக்கு பழைய வாய்க்கால் ஒன்று திருத்தவேணும், கெதியாய் கந்தோருக்கு வரச்சொல்லிவிட்டு எஞ்சினியர் சென்றுவிட்டார். கோண்டாவில் பம்நிலையம், திருநெல்வேலி பம்நிலையம் ஆகியவற்றில் செய்ய வேண்டிய வேலைகளை ஒழுங்கு செய்துவிட்டு கந்தோரை நோக்கிப் புறப்பட்டார் சுப்பவைசர் சுந்தரம்பிள்ளை. சைக்கிளிலை செல்லச்செல்ல அவர் மனம் சிந்திக்கத் தொடங்கியது. எல்லாரும் மோட்டர் சைக்கிளிலை சந்தோசமாகத் திரியினம், நாங்கள் நாவாந்துறையிலிருந்து கொழும்புத்துறை வரை சைக்கிளிலை போறம். ஆகத்தாறது நூற்றிப் பன்னிரண்டு ரூபா. அதைத் தரேக்கை நியாயம் கதைக்கினம். நேற்றும் ஒரு பிரச்சினை. யாரோ தேநீர் கடைக்காரன் கொஸ் போட்டு தண்ணி எடுத்தானாம், அதுவும் எங்களுக்கு தட்சணை தாறவையாம். பைப்பிலை என்ன நடந்தாலும் எங்கடை தலையிலை தான் கட்டுவினம். நாங்கள் என்ன சொன்னாலும் எஞ்சினியர் கேட்கமாட்டார். மேல்மட்டத்தை பந்தம்பிடிக்க எங்களைத்தான் உரிப்பார் என்று நினைத்தவாறு கந்தோரில் வந்திறங்கிய சுப்பவைசர் உள்ளே சென்றார். உள்ளே சென்று எஞ்சினியருடன் கதைத்துவிட்டு வெளிவேலைக்குப் புறப்பட்ட சுப்பவைசரை, சீசீ கூப்பிட்டார். "இண்டைக்கு இரண்டு வீட்டிணைப்புக்கொடுக்க வேணும். இதுக்காக இரண்டுபேர் காவல் இருந்தவை. நான் தான் அவையளை வீட்டை போங்கோ, சுப்பவைசர் வருவார் எண்டு சொன்னனான்" என்றார். உடனே எஸ்.கே மூலம் சாமான்களையும் தொழிலாளர்களையும் கூட்டிக்கொண்டு புறப்பட்டார் வெளிவேலைக்கு.

சைக்கிளில் புறப்பட்ட சுப்பவைசருக்கு பழைய நினைவுகள் வந்தன. "முந்தியெண்டால் வீட்டுத்தொடுப்புக் கொடுத்தால் எல்லாத் தொழிலாளர்களுக்கும் நல்லவிருப்பம், தண்ணி சாப்பாடு நல்லாத் தருவாங்கள். இப்பவெண்டால் திண்ட கையாலையும் காகமும் துரத்திறாங்கள் இல்லை. நாங்கள் ஆருக்கேன் அவசரமாய் தண்ணிகுடுக்க வெளிக்கிட்டால் கந்தோரிலை இருக்கிறவை 'உவர் ஏன் அவதிப்படுகிறார், உவருக்கு ஒன்றும் இல்லாமல் கிடக்கே' என்று கதைக்கிறவை. நாங்கள் பொக்கற் காசிலைதான் இப்ப தேத்தண்ணி குடிக்க வேண்டுமென்று உவைக்குத் தெரியுமோ. இண்டைக்கு எஸ்.கேட்டை சாமான் எடுக்கேக்கை ஏதோ புறுபுறுத்தவர், ஏனெண்டு விளங்கேல்லை. உவரும் சரியான மூலக்கொதிக்காரன். அவரிலையும் கோவிக்கேலாது, அவருக்கும் வேலை அதிகம் என்றும், வேலை அனைத்தையும் முடித்துக்கொண்டு மெயின்ராங்கைப் பார்க்க வேண்டும் என்றும் நினைத்துக் கொண்டு புறப்பட்டார். 'வாச்சர்மார் நிக்கிறாங்களோ தெரியாது. எப்பகேட்டாலும் இப்பதான் தேத்தண்ணி குடிக்கப் போனனான் என்டு சொல்லுவாங்கள். சரி பாவங்கள் எண்டு ஒளிக்கிறத்துக்கு ஓட்டைவிட்டால் அவங்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒட்டைக்குள்ளாலை புகுந்தே போயிடுவாங்கள். ஏதேனும் பிரச்சினை வந்தால் அவங்கள் ஏதாவது சாட்டுச் சொல்லி தப்பிவிடுவாங்கள். நான் தான் மாட்டிக் கொள்ள வேண்டும்' என்று நினைத்துக் கொண்டு மெயின் ராங்கினுள் சென்ற சுப்பவைசர் பூங்கன்றுகள் எல்லாம் வாடியிருப்பதைக் கண்டு, ஏன் தண்ணீர் ஊற்றவில்லை எனக்கேட்ட போது வாச்சர் 'நான் தொழிலாளியாக இருந்து விட்டு நேற்றுத் தொடக்கம் வாச்சராக புறமோசனில் வந்தனான், நான் தண்ணி ஊற்றமாட்டன்' என்று சொன்னதைக் கேட்டு சுப்பவைசரின் மனம் வேதனைப்பட்டது. வாச்சராக வரும்வரை எத்தனை ஐயா போடுவாங்கள், வாச்சராய் வந்தவுடன் நியாயம் கதைக்கினம். தொழிலாளர்கள் எல்லாரும் சுயநலக்காரர்கள் என நினைத்தார் சுப்பவைசர். அண்டைக்கும் ஒரு தொழிலாளியைக் கேட்டனான் 'அவசரமான வேலை' ஒருக்கால் மேசன் வேலை செய்யச்சொல்லி. அவன் அதற்கு எனக்கு மேசன் வேலை தெரியாது எனக் கூறிவிட்டான்.' ஆனால் வெளியில் மேசன் வேலை செய்யும் போது நான் கண்டனான். 'காலையிலே வேலைக்கு வந்து கையொப்பம் வைத்துவிட்டு மாலையிலே கையொப்பம் இட்டுச்சென்றால் போதும். வேலைசெய்ய ஒருவருக்கும் விருப்பமில்லை என்ற நிலைப்பாடு எல்லாத் தொழிலாளிக்கும்' என நினைத்துக்கொண்டு கந்தோரில் வந்திறங்கிய சுப்பவைசர் அடுத்தநாள் வேலைக்குத் தேவையான சாமான்களை ஒழுங்கு செய்துவிட்டு மாலை 5.00 மணிக்கு கையொப்பமிட்டுவிட்டு சுப்பவைசர் வீடு நோக்கிப் புறப்பட்டார். அவரின் மனம் மீண்டும் சிந்தனையில் மூழ்கியது. 'நான் எனக்கு ஏற்படுகின்ற பிரச்சினை எல்லாத்தையும் எஞ்சினியருக்குச் சொல்லலாம். ஆனால் சொன்னாலும் அவருக்கு விளங்குவது இல்லை. அப்ப ஆணையாளருக்கோ அல்லது மேயருக்கோ என்னெண்டு விளங்கப் போகுது' என நினைத்துக் கொண்டு சென்றார் சுப்பவைசர் சுந்தரம்பிள்ளை.

**சுபம்**

**(யாவும் கற்பனை)**

**ஆக்கம்**
**க.இராமச்சந்திரன்**
**நீர்வேலை பொறியியலாளர்**
**மாநகராட்சி மன்றம்**
**யாழ்ப்பாணம்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முத்தமிழ் வித்தகர்

# சுவாமி விபுலானந்தர்

நமது இலங்கையில் சிறப்பாகத் தமிழர்களுள் அ ப ரிய தொண்டு செய்த பெரியார்களுள் தலை சிறந்து முதலிடத்தைப் பிடித்த ர் சுவாமி விபுலானந்த அடிகளே. அடிகளார் தமது வாணாள் முழுவதும் இலங்கையிலும் தமிழ் நாட்டிலும் பெருந் தொண்டாற்றியமைக்காக, மக்கள் புகழ் ட கின்றனர். அவர் நமது நாட்டிலும் தமிழ் நாட்டிலும் போற்றப்படுகின்றார். அவரை பற்றி பேராசிரியர் காலஞ்சென்ற செல்வநாயகமவர்கள் ஆறு பெரிய நூல்களை ற்றும் புலவர் மணி பெரிய தம்பிப் பிள்ளையால் விபுலாநந்தர் மீட்சிப்பத்தும், திரு.க.நா செல்வராச ஒரு பிள்ளைத்தமிழும், கவிஞர் செ.குணரத்தினம் அவர்களால் விபுலாநந்தர் எனும் நூலும் அன்றி, 1992இல் முதுபெரும் புலவர் வை.க.சிற்றம்பலம் அவர்களால் ஒரு அடிகளார் நான் மணி மாலையும் பாடப்பட்டுள்ளன.

(விபுலானந்தரின்) அவரது ஆய்வுக்கட்டுரைகள் கல்வித்திணைக்களத்தினால் வெளியிடப்பட்டுள்ளன. நமது சமுதாயத்திற்காக அவர் செய்த தொண்டுகள் அளப்பரியன. இவ்வளவு பெரிய அறிஞரை எப்படி எனனால் எழுதமுடியும்? விபுலானந்த அடிகளால் இலங்கைத் தமிழரும் இலங்கையும் புகழேணியில் நிற்கக் காண்கிறோம். அடிகளோ இமயத்திற்கு சமமான பேரறிஞர்.

விபுலானந்தர் அவர்கள் 1909 ல் மட்டக்களப்பு -புனித மிக்கேல் கல்லூரியில் கேம்பிரிச் சீனியர் பரீட்சையில் சித்தியடைந்து ஆசிரியரானார்.பின்பு கொழும்பில் பயிற்சி பெறும்போதே, தக்க ஆசிரியரிடம் சங்க இலக்கிய இலக்கணங்களைக் கற்று மதுரை பண்டிதத் தேர்வில் முதலாவதாக சித்தியடைந்தார்.

தாம் அவதரித்த காரேறு மூதூராம் காரைதீவுக்குத் தன்னாலான தொண்டுகளைச் செய்யவும் எண்ணினார். பயிற்சி பெற்றும் பண்டிதராகியும் மூன்று பாசையிலும் மிக்கவரான (விபுலானந்தரின்) மயில்வாகனனின் புகழ் யாழ்ப்பாணத்தை எட்டியது. அதனால் அவர் யாழ்/புனித சம்பத்திரியார் கல்லூரியால் அழைக்கப்பட்டு விஞ்ஞான பாட ஆசிரியராகச் சேர்க்கப்பட்டார். கடமையிற் கண்ணுங்கருத்துமாய் இருந்த பண்டிதர் மயில்வாகனனார், யாழ்ப்பாணத்தில் எங்கும் கல்லூரிகள்,எங்கும் கோவில்கள், எங்கும் கல்விமான்களிருக்கக் கண்டு ஆனந்தங் கொண்டார்.

தாங் கண்ட யாழ்ப்பாணம் பற்றி அவர் சுவையாகப் பாடிக்காட்டிய செய்யுளை இங்கு தருகிறேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொல்லியல் வழுவாச் சைவநூற் புலவர்
தூநெறித் தமிழுரையாளர்
நல்லியற் புலவர் இசை தரும் புலவர்
நாடக நவிற்றிடும் புலவர்
சொல்லியன் தொகை நூல்
வான நூல் தருக்கம்
தோமறு கணித நூல் முதலாம்,
பல்கலைப் புலவர்க்கு உறைவிடமாகும்
பரந்திசை யெய்தும் யாழ்ப்பாணம்.

என்பது அச்செய்யுள் ஆகும். ஒழுக்கத்தினாலும் கல்வியாலும் தூய்மையும் வாய்மையும் பேணிய விபுலாநந்தரின் நெஞ்சத்திலிருந்து ஊற்றெடுத்ததே இந்தப் பாமலர் என்பதை நாம் அறிதல் வேண்டும்.

கல்விமானாகிய ஆறுமுகநாவலரின் அரிய சேவையைப் பாராட்டும் பண்பு மிக்கவர் விபுலானந்தர். அவர் யாழ்ப்பாணத்திலிருக்கும் போதே பல அறிஞர்களின் நட்பினைப் பெற்றுக் கொண்டார். படிப்பிக்கும் போதே லண்டன் விஞ்ஞானமானிப் பட்டத்தில் (B.S.C) சித்தியடைந்தார். அதனால் அக்கல்லூரியிலும் மாற்றிடங்களிலும் உச்சப்புகழ் அடைந்தார்.

இவர் ஆனைப் பந்தியடியில் விவேகாநந்த சபையை அமைத்துப் பணிசெய்தார். கலைப்புலவர் நவரத்தினம், மானிப்பாய்த் திருவிளங்கம் முதலானோரின் நட்பை இதன் மூலம் பெற்றார். 1920-1928 வரை மானிப்பாய் இந்துக்கல்லூரியில் அதிபராயிருந்து சிறந்த கல்வியாளர் உதயமாகக் காலாயிருந்தார். அத்தொண்டினால், அவரது நினைவு நாள் வருடா வருடம் கொண்டாடப் படுகின்றது.

மானிப்பாய் இந்துவிலிருக்கும் போதே மருதனார் மடம் இராமநாதன் கல்லூரியில் தமிழ் பேராசிரியாயிருந்த நவநீதகிருஷ்ண பாரதியின் நட்பைப் பெற்று அவர் (நவநீதகிருஷ்ணபாரதி) இயற்றிய உலகியல் விளக்கம் என்னும் நூலை ஆங்கிலத்தில் மொழி பெயர்த்தார். அக்காலத்தில் கொழும்பு வந்த சிவானந்த மகரிஷியிடம் விபுலானந்தர் என்னும் உயர்ந்த பட்டத்தைப் பெற்றார். தமது குருவின் ஞாபகமாக மட்டக்களப்பு கல்லடி உப்போடையில் சிவானந்த வித்தியாலயத்தை உண்டாக்கினார். பெண்களுக்கென்று 'சாரதா வித்தியாலத்தையும் உண்டாக்கினார். ஸேக்ஸ்பியரின் நாடகநூலை மொழிபெயர்த்து 'மதங்க சூளாமணி' என்னுஞ் சிறந்த நாடக நூலை வெளியிட்டார்.

அதனாற் பெரும் புகழ் படைத்த அடிகளார் 'முத்தமிழ் வித்தகர்' என்று அறிஞராற் போற்றப்பட்டார். அவரின் பன்மொழியறிவினாலும், பேச்சு வன்மையினாலும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கையிலன்றி பல சமய, கல்வி சபைகளைத் தலைமை தாங்கி நடாத்தினார். அண்ணாமலைப் பல்கலைக் கழகந் தொடங்குவதற்கும் முயற்சி செய்ததும் அடிகளாரே. அங்கே முதன் முதலமைக்கப்பட்ட தமிழ்துறைக்கு பேராசிரியராயமர்ந்தவரும் அவரே. அங்கேயிருந்தபோதே மகாகவி சுப்பிரமணிய பாரதியாரின் கவிதைகளை அச்சிடுவதற்கு முன்னோடியாக இருந்தவரும் அவரே.

மானிடரின் ஏழு பருவங்களையும் விளக்கிய கவிதையும், [illegible]து இசையாசிரியர் கந்தசாமிப் பிள்ளைமீது பாடிய 'கங்கையில் விடுத்த ஓலை' என்னும் கவிதையும் "ஈசனுவக்கும் இன்மலர்" மூன்றும் எக்காலத்திலும் எல்லோராலும் வரவேற்கப்படக்கூடிய பொக்கிஷங்களாகும்.

சிலப்பதிகாரத்தை ஆதாரமாகக் கொண்டு யாழ் நூலை இயற்றி 1947ல் திருக்கோளம் பூதூரில் அரங்கேற்றினார். அதனால் எங்கும் வரவேற்கப்பட்டார். எனவே அவரை நாமும் போற்றுவோமாக.

செல்வி. வலஜி சிவஞானராஜா
யா/ஸ்கந்தவரோதயக் கல்லூரி,
கந்தரோடை,
சுன்னாகம்
2002.01.07.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பண்டைக்கால யாழ்ப்பாணம்

வி. கந்தவனம் (பீ. ஏ.)

## 1. பெயர்

யாழ்ப்பாணக் குடாநாட்டின் பண்டைப்பெயர் நாகதீவம் ஆகும். நாகர் வாழ்ந்த நாடாக அக்காலத்தில் யாழ்ப்பாணம் விளங்கியதால் இப் பெயர் இயல்பாகவே எழலாயிற்று. மகாவம்சத்தில் முதலாம் அதிகாரத்தில் யாழ்ப்பாணக் குடாநாடு நாகதீவ என்னும் பெயராற் குறிக்கப்பட்டுள்ளது. புத்தர் புகழ் போற்றும் தமிழ்க் காவியமாம் மணிமேகலை குறித்துச் செல்லும் நாகநாடும் யாழ்ப்பாணமேயாம். சேர் போல் பீரிஸ் என்பவர் மகாவம்சம் உணர்த்தும் குறிப்புக்களாலும் வல்லிபுரம், கந்தரோடை முதலிய இடங்களிற் கண்டெடுக்கப்பட்ட புதைபொருட்களாலும் யாழ்ப்பாணத்தின் ஆதிப் பெயர் நாகதீவம் என்பதனை நன்கு தெளிவாக்கிவிட்டனர்.

நாகதீவம் மூன்று பிரிவுகளாக அமைந்திருந்தது. மேற்குப் பகுதி மணிபல்லவம், மணிநாகதீவம், மணிபுரம் என்ற பெயர்களால் அழைக்கப்பட்டது. மத்திய பகுதி சிங்களத்தில் வலிகம என்றுந் தமிழில் அப்பொருளையே கொண்ட மணலூர், மணற்றி, மணற்புரம் என்றும் வழங்கப்பட்டது. பதினான்காம் நூற்றாண்டில் எழுந்த சேகராசசேகரம் என்னும் நூலில் இப்பகுதி மணவை என்று குறிக்கப்பட்டிருக்கின்றது. கிழக்குப் பகுதி எருமை தீவு என்றும், எருமை முல்லைத் தீவு என்றும் பெயர் பெற்றிருந்தது.

நாகதீவம் யாழ்ப்பாணமாக மாறியவரலாறு திட்டவட்டமாகத் தெரியவில்லை எனினும் கைலாயமாலை யாழ்ப்பாணம் யாழ்ப்பாண வைபவமாலை ஆகிய நூல்களில் யாழ்பாடி ஒருவர் இந்நிலப்பரப்பை, அன்றி இதன் ஒரு பகுதியைப் பரிசாகப் பெற்றதனால் யாழ்ப்பாணம் என்ற பெயர் வரலாயிற்று என்று குறிக்கப்பட்டுள்ள கதையையும் வரலாற்று ஆசிரியர்கள் முற்றாகத் தவிர்க்கவொருப்பட்டாரில்லை. இக் கதைக்குச் சான்றாக இருப்பவை ஒரு சில பாடல்களே. சம்பவம் நடந்த இடமும் காலமும் குளறுபடியாகவுள்ளன. கி. மு. இரண்டாம் நூற்றாண்டில் அனுராதபுரத்தைத் தலைநராகக் கொண்டு ஈழநாடு முழுவதையும் ஆண்ட சோழநாட்டு இளவரசன் ஏலேலசிங்கன் என்பானிடம் தொண்டை நாட்டிலிருந்து வந்த அந்தகக் கவிவீரராகவனென்னும் யாழ்பாடி குடாநாடு முழுவதையும் பரிசாகப்பெற்றுத் தன்னரசு நிலைநாட்டியமையின் அது பின்னை நாளில் யாழ்ப்பாணம் என வழங்கலாயிற்று என்ற மயில்வாகனப் புலவர் கூற்றை முதுப் தமிழ் புலவர் ஆ. முத்துத்தம்பிப்பிள்ளை அவர்கள் ஆதரிக்கின்றனர். கி. பி. ஒன்பதாம் நூற்றாண்டில் நாகதீபத்தையாண்ட செயதுங்கன் என்பான் பரிசில் பெற வந்தோர் யாழ்பாடிக்கு (அவர் அந்தரகரல்லர்) நாகதீபத்தின் ஒரு பகுதியைப் பரிசாகக் கொடுத்தான் என்றும் அப் பகுதியில் யாழ்ப்பாணன் தன் சுற்றத்தாருடன் குடியேறியதனால் அது யாழ்ப்பாணம் ஆயிற்றென்றும் அப் பெயர் பின்னாளில் குடாநாடு முழுவதற்கு முரித்தாய் விட்டதென்றும் முதலியார் செ. இராசநாயகம் அவர்கள் கருதுவர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவற்றுடன், சோழர் காலத்தில் ஈழநாடு முழுவதும் நாற்பத்தொன்பது கோட்டங்களாகப் பிரித்து ஆளப்பட்ட தென்றும் அவற்றுள் வடபாலில் 'ஏழ்பனை' என்ற பனை மிகுந்த கோட்டமொன்றி ருந்ததென்றும் 'ஏழ்பனை' 'யாழ்பனை' யாகத் திரிந்து பின்னாளில் யாழ்ப்பாணம் ஆயிற்றென்றுங் கூறும் தமிழ்நாட்டு அறிஞர் ஒருவரின் ஆராய்ச்சியும் நோக்கற்பாலது.

## 2. குடி

யாழ்ப்பாணத்தின் தொல்குடிகள் நாகர் எனப்படுவர். இதற்குப் பல சான்று கள் உள. இவ்வினத்தார் வாழ்ந் தமை குறித்தே நாகதீவம், நாக நாடு என்னும் பெயர்கள் யாழ்ப்பாணத்துக்கு வரலா யிற்று என்பதனை முன்னர் கண்டோம். நாகர் இப்பகுதியில் மட்டுமன்றி இலங்கையின் பிற பகுதிகளிலும் இந்தியா, பேமா ஆகிய நாடுகளின் சில பகுதிகளிலும் அக்காலத்தில் வாழ்ந்து ஆட்சிசெலுத்தினர். இலங்கையின் மேற்கிலுள்ள கல்யாணி அல்லது களனியாவில் நாகர் வாழ்ந்தமை பற்றி மகாவம்சம் கூறுகின்றது. இவர்கள் நாக வழிபாடுடையவராதலின் நாகர் எனப் பட்டனர். யாழ்ப்பாணத்தில் நாக வழிபாடு அக்காலத்தில் மேலோங்கி இருந்தமையை நாகர் கோயில் என்னும் இடப்பெயரும் எடுத்துக்காட்டுகின்றது. நயினாதீவில் நாகவழிபாடு இன்றும் இருந்துவருகின்றது. நாகர்களில் எயினர், ஒளியர், மறவர், அருவாளர், பரதவர் எனப் பல பிரிவினர் இருந்தனர். இவர்களுள் மறவர் வாழ்ந்த பகுதியை மறவன்புலவு இன்றும் குறித்து நிற்கின்றது.

நாகர் மக்கட் பெருக்கமும் நாகரிக வளர்ச்சியுமுடையராய் விளங்கி நாகதீவத்தை ஆண்டு வந்தனர். இவர்களுடன் முப்பது மைல் தொலை வினதேயான தென் இந்தியாவில் இருந்து குடாநாடு வந்து அவ்வப்போது குடியேறிய ஆதித்தமிழரும் வாழ்ந்தனர். சில விடயங்களில் நாகர் தமிழருடன் கலந்து வாழ்ந்து பின்னர் நாகர் குலத் தமிழராயினர். எமது மத்தியில் இன்று நிலவும் நாகன், நாகரத்தினம், நாகேசன், நாகமுத்து, நாகி, நாகம்மாள், நாகபூசணி, நாகமலர் என்னும் பெயர்களில் உள்ள நாகரின் பண்டைப் பெயர்த் தொகுப்பின் விளைவேயாம்.

கி.பி. முதலாம் நூற்றாண்டில் இலம்பகன்னர் என்னுஞ் சாதியார் இலங்கையின் வடக்கில் (யாழ்ப்பாணம்) வாழ்ந்தனரென்று மகாவம்சம் கூறுகின்றது. இப் பெயர் நாகர் - தமிழர் கலப்பினாலே தோன்றிய நாகர்குலத் தமிழரைக் குறிக்கும் என்பார் முதலியார் செ. இ. அவர்கள். இலம்பகன்னர் பாண்டி நாட்டிலிருந்து வந்தவர்கள் என்று கருதுவாரும் உளர். கி.பி. மூன்றாம் ஆண்டளவில் இலம்பகன்னர் அனுராதபுரத்திலிருந்து ஆட்சிசெய்யும் அளவுக்கு வலுப்பெற்று விட்டனர்.

கி. பி. ஐந்தாம் நூற்றாண்டளவில் யாழ்ப்பாணத்தில் சிங்களவரும் இருந்திருக் கின்றனர். சிங்களக்குடிகள் கீரிமலையில் வாழ்ந்தமைபற்றி யாழ்ப்பாண வைபவ மாலை குறிப்பிடுகின்றது.

## 3 ஆட்சி

யாழ்ப்பாணத்தில் கி.பி. மூன்றாம் நூற்றாண்டுவரை நாகராட்சியே நிலவியது. இப்பொழுது கந்தரோடை எனப்படும் கதிரமலை நாகஅரசின் இராசதானியாக விளங்கியது. கதிரமலை அரசர்கள் அனுராதபுரத்து தமிழ் - சிங்கள அரசர்கள் வலிமிக்க காலத்தில் திறை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செலுத்தியும் தாம் வலிபடைத்த காலத்தில் அனுராத புரத்தில் இருந்து ஆட்சிசெலுத்தியும் வந்தனர். மகல்லக நாதன், அவனின் மகன் கனிட்டதீசன் (கி.பி. 2ஆம் நூற்றாண்டு) களுநாகன், வொகரிக்கதீசன் (கி.பி. 3ஆம் நூற்றாண்டு), அவன் தம்பி அபயநாகன் முதலிய நாகர்குல அரசர்கள் அனுராத புரத்திலிருந்து அரசாண்டனர் என்பது மகாவம்சத்திலிருந்து அறியக் கிடக்கின்றது.

கி.பி. 3ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியளவில் இலம்பகன்னரும் யாழ்ப்பாணத்தை ஆண்டிருக்கின்றனர். யாழ்ப்பாணத்து சங்கத்தீசன், சங்கபோதி, கோதபயன் என்னும் இலம்பகன்னர் மூவரும் ஒருவர்பின் ஒருவராக அனுராத புரத்திலிருந்து அரசாண்டுள்ளனர். கி.பி. 5ஆம் நூற்றாண்டில் பாண்டு என்னுந் தமிழரசன் அனுராதபுரத்திலிருந்து அரசு செலுத்தியிருக்கின்றான்.

கி.பி. 6ஆம் நூற்றாண்டளவில் பல்லவரும் சிறிதுகாலம் யாழ்ப்பாணத்தை ஆண்டிருக்கின்றனர். பல்லவராயன்கட்டு என்னும் இடப்பெயரும் நன்னி முதலிய மக்கட்பெயரும் இதற்குச் சான்று பகருகின்றன. இரண்டாம் காசியப்பன் மகனாகிய மானவர்மன் என்பான் இந் நூற்றாண்டின் பிற்பகுதியில் இலங்கை முழுவதற்கும் அரசனாகி யாழ்ப்பாணத் தையும் ஆண்டுள்ளான். இக் காலத்துக் குப் பின்னர் இலங்கையின் வட பகுதி தமிழ்த் தலைவர்களால் ஆளப் பட்டமையும் அவர்களை அவ்வப்போது சிங்கள மன்னர் அடக்கி ஆண்டமையை யும் மகாவம்சம் கூறுகின்றது.

கி.பி. 8ஆம் நூற்றாண்டில் யாழ்ப்பாணம் கலிங்கராட்சிக் குட்பட்டது. கலிங்க அரசன் உக்கிரசிங்கன் என்பான் கதிரமலையைக் கைப்பற்றி இலங்கையின் வடபகுதியை ஆண்டான். சிறிது காலத்தின்பின் அவன் கதிரமலையைக் கைவிட்டுச் சிங்கை நகரைத் (வல்லிபுரம்) தலைநகராகக் கொண்டு ஆட்சி செலுத்தினான். உக்கிர சிங்கனின் பின் அவனது மகன் சயதுங்கன் ஆட்சிப் பொறுப்பை ஏற்றான். 9ஆம் நூற்றாண்டில் இலங்கைக்குப் படையெடுத்துவந்த வரகுணபாண்டியன் சயதுங்கனை வென்றான்.

11ஆம் நூற்றாண்டில் இலங்கை முழுவதுமே சோழராட்சிக்குட்பட்டது. இவர்களின் ஆட்சி 1ஆம் குலோத்துங்க சோழன் காலம்வரை 53ஆண்டுகள் இடையிட்ட சில குழப்பங்களுடன் நின்று நிலவியது. இவர்களது இராசதானியாக இருந்த இடங்களுள் பொலனறுவை மிக முக்கியமானது. 12ஆம் நூற்றாண்டின் மத்தியில் சிங்கள மன்னன் பராக்கிரம பாகு யாழ்ப்பாணம் உட்பட இலங்கை முழுவதற்கும் ஏக சக்கரவர்த்தியானான்.

13ஆம் நூற்றாண்டுத் தொடக் கத்திற் கலிங்க விசயவாகு என்பவன் பொலன்னறுவை ஆட்சியை வெற்றி கொண்டான் என மகாவம்சம் கூறும். இவன் காலத்திலிருந்து சிங்கை நகர் அரசர் ஆரியச் சக்கரவர்த்தி என்னும் பட்டத்தைத் தாங்கலாயினர். இவர்கள் சிறிதுகாலம் பாண்டியர்க்குப் பணிந் திருந்து பின்னர் 14ஆம் நூற்றாண்டில் இலங்கை முழுவதிலும் தங்கள் விடைக்கொடியை விளங்கச் செய்தனர். கி.பி. 1344இல் யாழ்ப்பாணம் வந்தடைந்த இபின் பட்டுடா என்னும் மகமதியப் பிரயாணியின் குறிப்புக்களிலிருந்து சிங்கை நகர ஆரியச் சக்கரவர்த்திகள் அக்காலத்திற் பெற்றிருந்த வலிமையை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யும் செல்வாக்கையும் அறிய முடிகின்றது. இக்காலமே யாழ்ப்பாண இராச்சியம் உச்சநிலையெய்தியிருந்த காலமென்பர். ஆரியச் சக்கரவர்த்திகளின் ஆட்சிகாலம் 17ஆம் நூற்றாண்டுவரை நீடித்து நிலவியது. ஆயின், 15ஆம் நூற்றாண்டின் நடுப்பகுதியில் 6ஆம் பராக்கிரமபாகுவின் சேனாதிபதியாகிய செண்பகப்பெருமாள் சிங்கை நகரை அழித்து நல்லூரைத் தலைநகராகக் கொண்டு யாழ்ப்பாணத்தைப் பதினேழு ஆண்டுகள் ஆட்சி புரிந்தான். அதனை அடுத்து ஆரிய சக்கரவர்த்திகள் மீண்டும் ஆட்சிக்கு வந்தனர்.

சங்கிலி இறந்தபின் (கி.பி 1565) யாழ்ப்பாண அரசியலில் போர்த்துக்கேயரின் தலையீடு அதிகமாயிற்று, போர்த்துக்கேயர் வென்றவிடத்தும் ஆரியவரசக்குடும்பத்தில் ஒருவரையே அரசனாக நியமித்து திறைபெற்று வந்தனர். ஆயின், கி. பி. 1619இல் ஆட்சிசெலுத்திவந்த ஆரிய சேகர அரச பரம்பரையின் இறுதி அரசன் கைதியான பின், முன்பு செய்து வந்தது போல அக்குடும்பத்தில் ஒருவனை அரசனாக்காது பிலிப்தே ஒலிவேறா என்பானை யாழ்ப்பாணத்தின் தேசாதி பதியாகப் போர்த்துக்கேயர் நியமித்தனர். அத்துடன் ஏறத்தாழ 600 ஆண்டுகளாக நிலைபெற்றிருந்த யாழ்ப்பாணத் தனியரசும் முடிவுற்றது.

## 4. மொழி

இலங்கையில் அக்காலத்தில் வாழ்ந்த நாகரும் இயக்கரும் 'ஈழு' என்னும் நிறைவற்ற மொழியைப் பேசிவந்தனர். இதனாலேயே இலங்கைக்கு ஈழம் என்ற பெயர் ஏற்படலாயிற்று. நாகரும் இயக்கரும் திராவிட இனத்தைச் சேர்ந்தவரென்று ஒரு சாராரும் திராவிடருக்கும் ஆரியருக்கும் முற்பட்ட ஆதிக்குடிகள் என்று வேறு சிலரும் பற்பல சான்றுகள் காட்டிக்கூறுவர். முரிஞ்சியூர் முடிநாகராஜ போன்ற சில சங்ககாலப் புலவர்களின் பெயர்கள் அவர்கள் நாகர் வகுப்பை சேர்ந்திருக்க வேண்டுமென்பதை உணர்த்துகின்றனர். இதைக் கொண்டு நாகரின் மொழியும் தமிழாகவே இருந்திருக்க வேண்டும் என்று சில ஊகிக்கின்றனர். ஆயின் இது பலகாலப் கலப்பினாலும் நேர்ந்திருக்கக்கூடிய தொன்றாகும். எது எவ்வாறாயினும், தென்னிந்தியா இலங்கைக்கு மிக அண்மையாக உள்ளமையின் இலங்கையைக் கைப்பற்றும் நோக்கமாகவும் சமாதானக் குடிகளாகவும் இலங்கைக்கு மிகப் பழங்காலத்தில் இருந்தே திராவிடர் வரத் தொடங்கி விட்டனர். என்பதில் ஐயமில்லை. கி.மு. 5ஆம் நூற்றாண்டில் விசயனும் அவனது கூட்டத்தாரும் இலங்கைக்கு வருவதற்குப் பன்னெடுகாலத்துக்கு முன்னரேயே இலங்கையில் திராவிடர் தளைத்திருந்தனர் என்பது இத்துறை ஆராய்ச்சியாளர் பலரின் கொள்கையாகும். சிங்களச் சாதியின் ஆக்கத்துக்கு திராவிடர் துணைபுரிந்தும் வந்திருக்கிறார்கள் என்பது டாக்டர் ஜி. சி. மென்டிஸ் அவர்களின் கருத்து.

கி.மு. 2ஆம் நூற்றாண்டில் சேனன், குட்டிகன், ஏலேலன் போன்ற தமிழர்கள் அநுராதபுரத்திலிருந்து ஆட்சி செலுத்தினர். இவர்களைப் பற்றிய குறிப்புக்களிலிருந்தும் பிறதகவல்களில் இருந்தும் தமிழர் அக்காலத்தில் வகித்தநிலை செலுத்திய ஆதிக்கம் பெற்ற செல்வாக்கு என்பவற்றின் மேன்மை புலனாகின்றது. இதனால் தமிழ் மொழியும் உயர் நிலையெய்தியிருக்க வேண்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மென்பது தெளிவு. தமிழ் மொழியும் உயர்நிலையெய்தியிருக்க வேண்டு மென்பது தெளிவு. தமிழ்ப் புலமை சான்ற ஆன்றோர் பலர் அக்காலத்தில் இருந்தனர். ஈழத்துப் பூதந்தேவனார் பாடிய ஏழு பாடல்கள் சங்க நூல்களில் இடம் பெற்றிருக்கின்றன. யாழ்ப்பாணத்தை ஆண்ட அரசர்கள் தமிழை வளர்ப்பதிற் பேரார்வங் காட்டி வந்தனர். 'பாடும் பாவலர்க் கீந்திடவென்றே யெண்ணிப் பொன்முடிப்புக் கட்டி வைத்திடு' மியல்பினராய் அவர்கள் திகழ்ந்தனர். தென்னிந்தியாவிலிருந்துகூடப் புலவர்கள் இங்கு வந்து பரிசில் பெறும் அளவுக்கு யாழ்ப்பாண அரசரின் கொடைவளம் மேம்பட்டிருந்தது.

யாழ்ப்பாண அரசு 13ஆம் நூற்றாண்டிலே தொடங்கியது. இவ்வரசு நிலைத்திருந்த அறுநூறு ஆண்டுக் காலத்தில் தமிழ் நன்கு வளர்க்கப்பட்டது. இந்நூற்றாண்டில் ஆண்ட பரராசசேகரன் என்னும் பட்டந்தாங்கிய குலசேகர சிங்கையாரியச் சக்கரவர்த்தி என்பான் தென்னிந்தியாவிலிருந்து வந்த அந்தகக் கவிவீரராகவரை வரவேற்றுத்தன் னரண்மனையிலிருந்து ஆருருலா என்னும் அருந்தமிழ் நூலைப் பாடுவித்தான். 14ஆம் நூற்றாண்டுத் தொடக்கத்தில் ஆண்ட சிங்கை நகர அரசன் வரோதைய சிங்கையாரியன் தமிழைப் பெருவிருப்புடன் வளர்த்தனன். யாழ்ப்பாணத்துப் புலவர்களையும் தென்னிந்தியப் புலவர்களையுங் கொண்ட தமிழ்ச் சங்கம் ஒன்றை அமைத்துப் புதிய பல நூல்களை ஆக்குவித்தான். அப்புலவர்களால் ஆக்கப்பெற்ற நூல்கள் சரசுவதி மகாலயம் என்னும் பெயர் கொண்ட ஒரு நூல்நிலையத்தில் வைக்கப்பட்டன. இந் நூற்றாண்டில் யாழ்ப்பாணத்தை ஆட்சிசெய்த குணபூஷணச் சிங்கை யாரியச் சக்கரவர்த்திக்கு அடியார்க்கு நல்லார் என்ற புலவர் அமைச்சராக விருந்தனர். இவரே சிலப்பதிகாரத்திற்கு உரைகண்டவர் எனவும் சிலர் கருதுவர். குணப்பூஷணன் பேரனான சயவீர சிங்கையாரியன் என்னும் செகராசசேகர மன்னன் காலத்தில் பல நூல்கள் ஆக்கப்பெற்றன. அவற்றுள் செகராச சேகரம் என்னும் வைத்திய நூல் செகராசசேகர மாலை என்னும் சோதிட நூல் கணக்கதிகாரம் என்னும் கணித நூல் என்பன சிலவாம்.

இக்காலத்திலேயே பண்டிதராச தட்சண கைலாச புராணத்தை இயற்றி னார். கோணேசர் கல்வெட்டினைச் கவிராசர் பாடியதும் குணபூஷணன் காலத்திலேயே என்பர் சிலர்.

குணவீர சிங்கையாரியன் காலத் தில் (கி.பி.15) பரராசசேகரம் என்னும் வைத்திய நூல் ஆக்கப்பட்டது. அவனது பேரன் சிங்கைப் பரராசசேகரனும் தமிழைத் வளர்த்தற்கு ஆவன செய்தான். அவனது தந்தையை வென்ற செண்பகப் பெருமான் கலைத்த தமிழ்ச் சங்கத்தை மீண்டும் கூட்டினான். அரச கேசரி என்னும் பெரும் புலவரைக் கொண்டு காளிதாச மகாகவியின் இரகு வம்சத்தை தமிழாக்குவித்தான். இக்காலத்திலேயே பரராசசேகரன் உலா என்னும் நூலும் இயற்றப்பட்டிருத்தல் வேண்டும்.

16ஆம் நூற்றாண்டின் இறுதியில் போத்துக்கேயரால் பரராசசேகரன் என்னும் பட்டத்துடன் அரசனாக்கப்பட்ட எதிர் மன்னசிங்ககுமாரன் காலத்தில் கைலாயமாலை எழுதப்பட்டது. இது யாழ்ப்பாண வரலாற்றுக்குறிப்புக்கள் பலவற்றைக் கொண்ட ஓர் நூலாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 5. சமயம்

சமயங்களுள் சைவசமயமே பழைமை வாய்ந்தது என்பதனை மொகஞ்சதாரோ, கரப்பா முதலிய விடயங்களில் நிலவிய நாகரீகம் பற்றிய ஆராய்ச்சி நன்கு தெளிவாக்கி விட்டது. ஈழநாட்டின் ஆதிக்குடிகளான இயக்கரும் நாகரும் சிவவழிபாடு செய்து வந்தனர். என்பதற்கு மகாவம்சத்திலும் தேவாரத் திருமுறைகளிலும் சான்றுகள் உள்ளன. 'இராவணன் மேலது நீறு' என்று தேவாரம் பாடுகிறது. நாகருக்குத் திருக்கேதீச்சரம் ஒரு முக்கிய இடமாகத் திகழ்ந்ததை ஆராய்ச்சி உணர்த்துகின்றது.

விசயன் வருகைக்கு (கி.மு. 500) முன்னரே ஈழத்தில் சைவ வழிபாடு இருந்து வந்தது. அவன் பழைய சிவாலயங் களைத் திருத்துவித்தான். என்றும் புதிய பல சிவன் கோவில்களைக் கட்டுவித்தான் என்றும் யாழ்ப்பாண வைபவமாலை கூறும். யாழப்பாணத்தில் 'கீரிமலைச்' சாரலில் திருத்தம்பலை என்னும் இடத்தில் திருத்தம்பலேச்சுரன், திருத்தம்பலேசுவரி கோயில்களையும் அவைகளின் சமீபத்திற் கதிரையாண்டவர் கோயிலையும் விசயன் கட்டுவித்தான்.

கி.மு. 3ஆம் நூற்றாண்டில் தேவநம்பியதீசன் காலத்தில் யாழ்ப்பாணம் வழியாக இலங்கையிற் புத்தசமயம் பரவியது. தேவநம்பியதீசன் புத்தசமயத் தைத் தழுவிப் பல விகாரைகளைக் கட்டுவித்தான். கதிரமலையில் 'பாசினா விகாரை' என்னும் புத்த பள்ளியை அமைப்பித்தான். கதிரமலையரசர்களும் புத்தசமயிகளாய்ப் பல விகாரைகளையும் பௌத்த மடங்களையும் கட்டுவித்தனர். மன்னர் வழிநின்று பெரும்பாலான மக்களும் பௌத்தமதத்தைத் தழுவினர். ஆயின் காலத்துக்குக் காலம் இலங் கையை ஆண்ட ஏலேலன் (கி.மு. 2ஆம் நூற்றாண்டு) தமிழ் மன்னர் காலங்களில் சைவமும் பரவி வளர்ந்தது. 7ஆம் 8ஆம் நூற்றாண்டுகளில் இலங்கையில் வட பகுதிகளிற் சைவம் மேன்மையுற்றிருந்தது. இக் காலங்களில் வாழ்ந்த சம்பந்தரும், சுந்தரரும் திருக்கேதீச்சரத்தான் மீதும் கோணமாலை அமர்ந்தார் மீதும் பதிகங்கள் பாடியருளினர்.

சோழர் ஆதிக்கம் பெற்றிருந்த 10ஆம் 11ஆம் நூற்றாண்டுகளில் மேன்மைகொள் சைவநீதி எங்கும் விளங்கியது. அதனாற் சோழருக்குப் பின் வந்த சிங்கள மன்னர்களும் சைவத்தை ஆதரித்து வளர்க்கலாயினர். அவ்வாறு வளர்த்தவர்களுள் முதலாம் பராக்கிரம பாகுவை முக்கியமாக குறிப்பிடல் வேண்டும். அவன் சைவத்திற்கு ஆற்றிய தொண்டினைச் சூலவம்சம் நன்கு எடுத்துக் காட்டுகின்றது.

13ஆம் நூற்றாண்டில் இருந்து யாழ்ப்பாணத்தையாண்ட ஆரியச் சக்கரவர்த்திகள் சைவத்துக்குந் தமிழுக்கு மாற்றிய தொண்டு அளப்பரியது. கி.பி. 1410இல் ஆட்சிக்கு வந்த குண வீரசிங்கையாரியன் இராமேச்சுரக் கர்ப்பக் கிரகத்தைக் கட்டுவித்தான். அவனது மகன் கனகசூரிய சிங்கையாரியனை வென்ற ஆறாம் பராக்கிரமபாகுவின் சேனாதிபதியாகிய சண்பகப்பெருமாள் கி.பி. 1450இல் நல்லூரில் ஒரு புது நகரை அமைத்தான். இங்கு கந்தசுவாமி கோவிலைக் கட்டுவித்தவனும் இவனே. இவனுக்குப் பின்னராண்ட விசயவாகுவை வெற்றிகொண்டு மீண்டும் ஆட்சிக்கு வந்த கனகசூரியன் நல்லூர் நகரைப் பெருப்பித்து அழகேற்றினான். இவன் மகன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிங்கைப் பரராசசேகரன் தன் ஆட்சிக் காலத்தில் நல்லூர் நகரின் நான்கு புறத்திலும் நான்கு கோயில்களைக் கட்டுவித்தான். நல்லூர் சட்டநாதர் கோயில், வெயிலுகந்த பிள்ளையார் கோயில், கைலாயநாதர் கோயில், வீரமாகாளி அம்மன் கோயில் என்னும் அந்நான்கும் இன்றும் உள்ளன.

♣

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




யாழ் மாநகராட்சி மன்றத்தினால் சேவையில் ஈடுபடுத்தப்படும் யாழ் குடா நாட்டுக்கான ஒரே ஒரு தீயணைக்கும் இயந்திரம்




U.N.D.P. நிறுவனத்தினால் யாழ் மாநகரசபைக்கு வழங்கப்பட்ட "அம்புலன் வாகனம்"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மலர் வெளியீட்டுக் குழு

திரு. இ. இராமலிங்கம் | **Mr. R. Ramalingam**
ஆணையாளர் | Commissioner
மாநகராட்சி மன்றம் | Municipal Council
யாழ்ப்பாணம். | Jaffna.

திரு. இ. இரத்தினசிங்கம் | **Mr. R. Retnasingam**
நிர்வாக உத்தியோகத்தர்கள் | Administrative Officer
சுகாதாரப் பிரிவு | Municipal Council
யாழ்ப்பாணம். | Jaffna.

திரு. த. சுபத்திரன் | **Mr. T. Subathiran**
கௌரவ உறுப்பினர் | Hon. Member
மாநகராட்சி மன்றம் | Municipal Council
யாழ்ப்பாணம். | Jaffna.

திரு. மு. தவநாதன் | **Mr. M. Thavanathan**
கௌரவ உறுப்பினர் | Hon. Member
மாநகராட்சி மன்றம் | Municipal Council
யாழ்ப்பாணம். | Jaffna.

திரு. மனுவல் மங்களநேசன் | **Mr. Manuel-Mangalaneshan**
கௌரவ உறுப்பினர் | Hon. Member
மாநகராட்சி மன்றம் | Municipal Council
யாழ்ப்பாணம். | Jaffna.

திரு. க. கிங்ஸ்லி கணேசன் | **Mr. K. Kingsley Ganeshan**
கௌரவ உறுப்பினர் | Hon. Member
மாநகராட்சி மன்றம் | Municipal Council
யாழ்ப்பாணம். | Jaffna.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொன்விழா ஏற்பாட்டுக் குழு

*தலைவர்*

திரு. செ. கந்தையன்
மாண்புமிகு முதல்வர்
மாநகராட்சி மன்றம்
யாழ்ப்பாணம்.

*ஆணையாளர்*

திரு. இ. இராமலிங்கம்
மாநகராட்சி மன்றம்
யாழ்ப்பாணம்.

*அமைப்பாளர்*

திரு. கிங்ஸ்லி கணேசன்
கௌரவ உறுப்பினர்
மாநகராட்சி மன்றம்,
யாழ்ப்பாணம்.

*உறுப்பினர்கள்*

திரு. ம. கனகரெட்ணம்
கௌரவ உறுப்பினர்
மாநகராட்சி மன்றம்.

திரு. மு. தவநாதன்
கௌரவ உறுப்பினர்
மாநகராட்சி மன்றம்.

திரு. த. சுபத்திரன்
கௌரவ உறுப்பினர்
மாநகராட்சி மன்றம்.

திரு. ம. மங்களநேசன்
கௌரவ உறுப்பினர்
மாநகராட்சி மன்றம்.

திரு. செ. விஜயரெட்ணம்
கௌரவ உறுப்பினர்
மாநகராட்சி மன்றம்.

திரு. க. பரராஜசிங்கம்
கௌரவ உறுப்பினர்
மாநகராட்சி மன்றம்.

திரு. மொகமட் பசீர்
கௌரவ உறுப்பினர்
மாநகராட்சி மன்றம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொன்விழா

வாழ்த்துக்கள்

DEALERS IN ALL KINDS OF ESSENCE
LIQUIDS,
COLOUR, POWDER.
SECNT & OINT MENT ETC.

**Srikanth Essence**

**&**

**Groceries**

161, K.K.S ROAD,
JAFFNA.

பொன்விழா வாழ்த்துக்கள்

# மாருதி ரெக்ஸ்

இறக்குமதி செய்யப்பட்ட
நவீன டிசைன்களில்

* பேபி சூட்ஸ் பேபி புறக்
* சுடிதார், சல்வார்கமிஸ்
* புதிய சாறி வகைகள்
* றெடிமேட் ஜீன்ஸ்,சேட்
* சேட்டிங், சூட்டிங்
* ஸ்கேட் அன் பிளவ்ஸ்
* பட்டுப்புடவைகள்
* பட்டுவேட்டிகள்

இன்னும்பல, பல நியாய விலையில்
பெற்றுக்கொள்ள
அன்றும்! இன்றும்! என்றும்!

**MARUTHI TEX**

(றேடிமேட் ஆடையணிகளின் ராஜமுத்திரை)
இல, 01 பஜார் வீதி, யாழ்ப்பாணம்.
தொ. இல 021- 3080

பொன்விழா

வாழ்த்துக்கள்

சிறந்த தமிழ்ப் படங்கள்
வெளியிடும் ஸ்தாபனம்

# ராஜா டாக்கீஸ்

205, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்

பொன்விழா

வாழ்த்துக்கள்

# விஜய் சில்க்

123, மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.

*Vijay Silk*

123, POWER HOUSE ROAD,
JAFFNA.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொன்விழா சிறப்புற
வாழ்த்துகின்றோம்.

V. M. K. JEWELLERS



தங்கப்பவுன் நகை வியாபாரம்

வீ. எம். கே. ஜூவலர்ஸ்

கண்டி வீதி,
சாவகச்சேரி

---



பொன்விழா சிறப்புற
வாழ்த்துகின்றோம்.

# E. S. PERAMPALAM & Co

*General Merchants,*
*Commission Agents & Importers*
*Dealers In Cycles,*
*Cycle Accessories*
*Sole Agent & Distributors for:*
*LOTUS CYCLE TYRES,*
*TUBES & C. I. C. PAINTS.*
*50, 52 & 54, Kasturiyar Road,*
*Jaffna,*

T.P. 2368, 2988

---

பொன்விழா சிறப்புற
வாழ்த்துகின்றோம்.

YARL TRADES CENTAR

AGENTS FOR BATA

11. Modern Market. Hospital Road.
JAFFNA.

---

பொன்விழா சிறப்புற
வாழ்த்துகின்றோம்.

# ERIC GANESH

OPTICIALANS

V. GANESHALINGAM

(OPTOMETRIST)

**564, 566, Hospital Road,**
**Jaffna.**
**Tele/Fax: 2486**



மூக்குக் கண்ணாடி அகம்,
566, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

சசி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாநகரசபையின் பொன்விழா சிறக்க
வாழ்த்துகின்றோம்.





புத்தம் புதிய மோட்டார் சைக்கிளா?
றீக்கொண்டிசன் மோட்டார் சைக்கிளா?
மற்றும் பற்றறி வகைகளா?
ஒரே இடத்தில் பெற்றுக்கொள்ள
நாடுங்கள்

**யாசோ மோட்டோர்ஸ்**
**அன்**
**ஹாட்வெயார்ஸ்**

இல, 163, 165 ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

மாநகரசபையின் பொன்விழா சிறக்க
வாழ்த்துகின்றோம்.



புத்தம் புதிய மோட்டார் சைக்கிளா?
றீக்கொண்டிசன் மோட்டார் சைக்கிளா?
உதிரிப்பாகங்களா?
மற்றும் பற்றறி வகைகளா?
ஒரே இடத்தில் பெற்றுக்கொள்ள
நாடுங்கள்

**அருள் ஸ்ரீ நாயகர் மோட்டோஸ்**

**அருணா றேடேர்ஸ்**

இல, 106, 108, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

**பொன்விழா சிறப்புற வாழ்த்துக்கள்**

# RUPA VERSATILE TRADES

**பல்பொருள் வாணிபம்.**

**Distributors For:**

SmithKline Beecham Mackwoods Limited,
Gamma Pharmaceuticals <Pvt> Ltd,
Delmage Forsyth & Co. Ltd.

No, 104 A, STANLEY ROAD, JAFFNA.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

VKR

V. K. RAJARATNAM

பொன்விழா வாழ்த்துக்கள்



Dealers in :

Radios, Cassettes,

T.V. Video Decks.



Electric Fans.



Computers.

(Repairs a Specialty)

Telephone: 2056

95, STANLEY ROAD, JAFFNA.

பொன்விழா வாழ்த்துக்கள்

ராஜ் சில்க்ஸ்



70, 71A, நவீன சந்தை, (உட்புறம்)

யாழ்ப்பாணம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாநகரசபையின் பொன்விழாவிற்கு எமது
மனப்பூர்வமான வாழ்த்துக்கள்

NEW KAMAAL CERAMICS

எல்லா வகையான மாபிள் வகைகள்,
எஸ்லோன் பைப்புக்கள் பிற்றிங்ஸ்,
நீரிறைக்கும் மோட்டார் பம்புகள்,
குளாய்க் கிணறு பம்புகள்
பெயின்ட் வகைகள், சுண்ணாம்பு,
கலர் காவி யாவும்
மொத்தமாகவும்
சில்லறையாகவும் கிடைக்கும்.

நியூ கமல் செரமிக்ஸ்

T.P-2085

37, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

மாநகரசபையின் பொன்விழாவிற்கு எமது
மனப்பூர்வமான வாழ்த்துக்கள்

ஆண், பெண், சிறுவர், சிறுமியருக்கான
வெளிநாட்டு, உள்நாட்டு
றெடிமேட் ஆடைகளை
மலிவு விலையில் பெற்றுக்கொள்ள

சியானாஸ்

றெக்ஸ்ரைல்ஸ்
அன்
றெயிலறிங்



எமக்கு வேறு கிளைகள் இல்லை
77, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 2967

பொன்விழாவிற்கு மனப்பூர்வமான வாழ்த்துக்கள்

கல்யாணி கிறீம் ஹவுஸ்

73, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

- ஐஸ்கிறீம் வகைகள்
- சொக்லட் கிறிப்ஸ்
- கல்யாணி ஸ்பெஷல் ஐஸ்கிறீம்
- புருட்சலட் ஐஸ்கிறீம்
- வனிலா ஐஸ்கிறீம்
- சொல்ரட் ஐஸ்கிறீம்
- ஜெலி ஐஸ்கிறீம்
- நட்ஸ் ஐஸ்கிறீம்

மற்றும்

மட்டன் றோல், கட்லட், பற்றிஸ், கேக், மஸ்கட்,
பீடா மற்றும் குளர்பான வகைகள் யாவற்றையும் சுவைத்து
மகிழ நீங்கள் நாடவேண்டிய ஸ்தாபனம்.

Kalyani Cream House

73, KASTHURIIAR ROAD, JAFFNA.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொன்விழா மலர்
மலர வாழ்த்துகின்றோம.

## அம்பிகாபதி

## AMBIHAPATHY FANCY GOODS

கவறிங் கோல்ட் நகைகள்,
மேக்குப்செற், பரதநாட்டிய செற்,
சாறி போடர், லேஸ்,
நூல் வகைகள்

மொத்த சில்லறை விற்பனையாளர்கள்



66, பெரிய கடை,
யாழ்ப்பாணம்

பொன் விழா சிறக்க வாழ்த்துக்கள்

## ஏகாம்பரம் புடவை மாளிகை

*A. Ehamparam*

*Whole sale & Retail Dealers in textiles*

72(9). Grand Bazaar,
Jaffna

பொன் விழா சிறக்க வாழ்த்துக்கள்

## சிவசம்பு களஞ்சியம்

இல, 03, மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.

## க. செ. கைலாசம்பிள்ளை
## அன் சன்ஸ்

சித்த ஆயுர்வேத மருந்துகள்,
அபிஷேகப் பொருள்கள் விற்பனையாளர்.

## C. S. KAILASAMPILLAI
## &
## SONS

Drugs Merchants & Commission Agents

5(76), பெரியகடை,
யாழ்ப்பாணம்.

5(76) > Grand Bazaar,
JAFFNA.

சபையின் பொன்விழாவை
மனதார வாழ்த்துகின்றோம.

## சிவன் மாளிகை லிமிட்டட்

166, கே. கே. எஸ் வீதி.
யாழ்ப்பாணம்.

T.P 021-2996.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொன்விழா வாழ்த்துக்கள்

உங்களது நயம் நம்பிக்கை
நாணயமுள்ள
தங்க வைர நகைகளுக்கு
சிறந்த ஸ்தாபனம்

ஓடர் நகைகள் குறித்த தவணையில்
22 கரட் தங்கத்தில் செய்து கொடுக்கப்படும்
தரம் நாடுவோர் தவறாமல் நாடுமிடம்



# சிறி நதியா நகைமாடம்

01, கஸ்தூரியார் வீதி, ஸ்ரான்லி வீதி சந்தி,
யாழ்ப்பாணம்.

கிளை:
56, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

---

பொன்விழா வாழ்த்துக்கள்

*Modern*
*Fashionable*
*and*
*Honesty Service*
*at*

# NATHIYA Jewellery

*Stanley, Road Junction*
*2, Kasthuriar Road, Jaffna.*

---

பொன்விழா சிறப்புற வாத்துகின்றோம்



நவீன வடிவமைப்புக்களில்
அழகிய
தங்க நகைகளை
செய்து பெற்றுக்கொள்ள
நாடவேண்டிய ஸ்தாபனம்.

# சிறி கருமாரி நகையகம்

தங்கப்பவுன் நகை வியாபாரம்

**ஓடர் நகைகள்**
**குறித்த தவணையில்**
**உத்தரவாதத்துடன்**
**22 கரட்டில்**
**செய்து கொடுக்கப்படும்**

177-D, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
(வின்சர் தியேட்டர் முன்பாக)

---

பொன்விழா சிறப்புற வாத்துகின்றோம்

மென்மைக்கு மெருகேற்றும்
இளமைக்கு எழிலூட்டும்
ஓடர் நகைகள்
குறித்த காலத்தில்
செய்து கொடுக்கப்படும்

# நியூ பிரியங்கா ஜுவலர்ஸ்

தங்கப்பவுண் நகை வியாபாரம்



*177, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.*

**T.P-2148**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாணி ரெக்ஸ்

இல. 81, பெரியகடை, யாழ்ப்பாணம்.

வஞ்சிக்குல மகளிர்
பஞ்சு நிகர் நெஞ்சமதில்
பட்டுப்பளபளக்கும் பட்டாடை
உலகம்

எங்களிடம்

- பேபி சூட்ஸ், பேபி புறக்
- சேட்ஸ்
- ஸ்கேட் அன் பிளவ்ஸ்
- சுடிதார், சல்வார், கமிஸ்
- லாச்சா மற்றும் சாறி வகைகள்

திருமணப்
பட்டுப்புடவைகள் பட்டுவேட்டிகள்

இன்னும் பல நியாயமான விலையில்
பெற்றுக்கொள்ளலாம்.

பல வண்ண வண்ண ஆடைகளை தெரிவு செய்ய யாழ்நகரில் சிறந்த ஸ்தாபனம்



# ஜி. எஸ். லிங்கநாதன் அன் கோ

13-14, பெரியகடை வீதி, யாழ்ப்பாணம்.

# G.S. LINGANATHAN & CO

*13-14, GRAND BAZAR, JAFFNA.*

*The Leading Textile Centre in the Jaffna.*

மாநகரசபையின் பொன்விழாவிற்கு எமது மனப்பூர்வமான வாழ்த்துக்கள் உரித்தாகுக.

ஆண்கள், பெண்களுக்கான வண்ண வண்ண
ஆடைகளின் சாம்ராஜ்யம்



# ரவி அன் ராஜ் சில்க்ஸ்

இல. 77, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.

*T.P- 2469*


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சீமாட்டி

(புடைவைக்கடல்)

அனைத்துப் புடைவைகளின் மொத்த சில்லறை வியாபாரிகள்

பொன்விழா சிறப்புற
வாழ்த்துகின்றோம்



## SEEMATTI

DEALERS IN TEXTILES & FANCY GOODS.

*No, 122, Power House Road, Jaffna.*
*Tel : 021-2196 Fax : 021-2102*

Branch: Mangai Silks, Modern Market,
No, 15, Power House Road, Jaffna.



பொன்விழா சிறப்புற
வாழ்த்துகின்றோம்

## GOPIGA TEX

Specialist in Wedding Sarees,
Salwer Kameez and
Ladies Gents & Chidrens Wear



*No, 5/4, (34), New Market (inside),*
*Jaffna.*

*Tel : 021-2377*



பொன்விழா சிறப்புற
வாழ்த்துகின்றோம்



மங்கையர்க்கான ஆடை வகைகள்
ஆடவர்க்கான உயர் ரக
ஆடைவகைகள்
வண்ண வண்ண டிசைன்களில்
குழந்தைகளுக்கான ஆடைகள்
முகூர்த்தப் பட்டுப் புடவைகள்
சல்வார் கமீஸ் சாறி வகைகள்
இவை அனைத்திற்கும்.

## லலிதா புடவை மாளிகை

இல, 5-6, நவீன சந்தை
யாழ்ப்பாணம்.

இல, B3, சந்தை வீதி,
வவுனியா.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொன்விழா சிறப்புற
வாழ்த்துகின்றோம்

ஆடவர், நங்கையர் விரும்பும்
நவநாகரிகத்திற்கு ஏற்ற
நாளுக்கு நாள் மாறும்
வண்ண வண்ணப் புடவைகளை
எண்ணம்போல தெரிவு செய்திட
யாழ்நகரில் ஏற்றதோர்
வண்ணப் புடவைப் பூங்கா.

**கிருஷிகா**

**ஆடை**

**அகம்**



69யு, நவீன சந்தை(உட்புறம்)
யாழ்ப்பாணம்.

பொன்விழா சிறப்புற
வாழ்த்துகின்றோம்

**ஸ்ரீ ராஜன் பான்சி ஹவுஸ்**

அன்பளிப்புப் பொருட்கள்
அழகுசாதனப் பொருட்கள்,
பாடசாலை உபகரணங்கள்
விற்பனையாளர்கள்.


நவீனசந்தை, யாழ்ப்பாணம்.

**"யாழ்ப்பாணம் மாநகரசபையின் பொன்விழா
ஆண்டு மலர் சிறப்பாக மலர்ந்து மணம் வீசிட
வாழ்த்துக்கள்".**

மன்னார் மாவட்டத்தில் தரமான சித்தமருத்துவ சிகிச்சைபெற நாடுங்கள் நானாட்டான்
பிரதேசசபை ஆயுர்வேத மருத்துவ அதிகாரியான

**மருத்துவர் என். லோகநாதன். B.S.M.S. J.P.**

சித்தமருத்துவ நிபுணர்
மரகதம் கிளினிக்
நானாட்டான்,
மன்னார்.



குறிப்பு :- ஆங்கில மருத்துவ
சிகிச்சையும் வழங்கப்படும்.

சசி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொன்விழா சிறப்புற
வாழ்த்துகின்றோம்

ஆடவர், நங்கையர் விரும்பும்
நவநாகரிகத்திற்கு ஏற்ற
நாளுக்கு நாள் மாறும்
வண்ண வண்ணப் புடவைகளை
எண்ணம்போல தெரிவு செய்திட
யாழ்நகரில் ஏற்றதோர்
வண்ணப் புடவைப் பூங்கா.

**கிருஷிகா**
**ஆடை**
**அகம்**



69யு, நவீன சந்தை(உட்புறம்)
யாழ்ப்பாணம்.

பொன்விழா சிறப்புற
வாழ்த்துகின்றோம்

**ஸ்ரீ ராஜன் பான்சி ஹவுஸ்**

அன்பளிப்புப் பொருட்கள்
அழகுசாதனப் பொருட்கள்,
பாடசாலை உபகரணங்கள்
விற்பனையாளர்கள்.

நவீனசந்தை, யாழ்ப்பாணம்.

"யாழ்ப்பாணம் மாநகரசபையின் பொன்விழா
ஆண்டு மலர் சிறப்பாக மலர்ந்து மணம் வீசிட
வாழ்த்துக்கள்".

மன்னார் மாவட்டத்தில் தரமான சித்தமருத்துவ சிகிச்சைபெற நாடுங்கள் நானாட்டான்
பிரதேசசபை ஆயுர்வேத மருத்துவ அதிகாரியான

**மருத்துவர் என். லோகநாதன். B.S.M.S. J.P.**

*சித்தமருத்துவ நிபுணர்*
*மரகதம் கிளினிக்*
*நானாட்டான்,*
*மன்னார்.*



குறிப்பு :- ஆங்கில மருத்துவ
சிகிச்சையும் வழங்கப்படும்.

சசி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றி நவில்கின்றோம்.

01. பொன்விழாவைக் கொண்டாட வித்திட்ட முந்நாள் முதல்வர் நடராஜா இரவிராஜ், பா.உ., அவர்களுக்கும் அதனை சிறப்பாகக் கொண்டாடிய இந்நாள் முதல்வர் செ.கந்தையன் அவர்களுக்கும்.

02. மலருக்கான ஆசிச்செய்திகளை வழங்கிய சமயப் பெரியார்களுக்கும்

03. வாழ்த்துச் செய்திகளை வழங்கிய மாண்புமிகு ஜனாதிபதி, கௌரவ பிரதம அமைச்சர், ஏனைய அமைச்சர்கள் அரச அதிபாரிகள் ஆகியோருக்கும்

04. தரமான ஆக்கங்களை எழுதி வழங்கிய அறிஞர் பெருமக்களுக்கும்

05. மலரின் முகப்பு அட்டை மற்றும் பிற்பக்க அட்டைகளை குறுகிய காலத்தில் வடிவமைத்து மெருகூட்டித் தந்த நிறுவனத்தினருக்கும்

06. மலரை அழகுற அச்சிட்டு வழங்கிய போஸ்கோ ஆட்ரோன் பிறின்டர்ஸ்க்கும்

07. மலருக்குரிய புகைப்படங்களை வழங்கி உதவியோருக்கும்

08. பொன்விழா மலர் நறுமணம் பரப்புவதற்கு உதவிய அனைவருக்கும்

**எமது உளம் கனிந்த நன்றிகள்**

பொன்விழா ஏற்பாட்டுக் குழு
யாழ்ப்பாண மாநகராட்சி மன்றம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



**தாவீது அடிகள்**

யாழ் நகரின் இதயமென
நிமிர்ந்து நின்றன இரண்டு
கல்விக் கோபுரங்கள்!
ஒன்று எரிந்தது!
மற்றொன்று சரிந்தது!

போஸ்கோ அட்ரோன் பிறின்டேர்ஸ்
Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org